கருநாடக அரசு

# சமூக அறிவியல்

புதுப்பிக்கப் பட்டது

**Social Science**

**(Revised)**

தமிழ் வழி

**TAMIL MEDIUM**

**10**

## பத்தாம் வகுப்பு

**TENTH STANDARD**

இரண்டாம் பாகம்

**PART - 2**

©KTBS
Not to be republished

**KARNATAKA TEXT BOOK SOCIETY(R.)**
100 feet Ring Road, Banashankari 3rd Stage,
Bengaluru - 85

## பொருளடக்கம்


| □. □□ . | விவரம் | ப□□ம் □□ □□ |
| --- | --- | --- |
| | **வரலாறு** | |
| 7. | விடுதலைப் போராட்டம் | 1–6 |
| 8. | காந்தியின்காலம் மற்றும் நாட்டு விடுதலைப் போராட்டம் | 7–27 |
| 9. | விடுதலைக்குப் பின் இந்தியா | 28–34 |
| 10. | 20ஆம் நூற்றாண்டின் அரசியல் பரிமாற்றங்கள் | 35–45 |
| | **அரசியல்** | |
| 4. | உலகப் பிரச்சனைகள் மற்றும் இந்தியாவின் பங்கு | 46–49 |
| 5. | ஐக்கிய நாடுகள் சபை | 50–59 |
| | **சமூக இயல்** | |
| 3. | சமுதாய இயக்கங்கள் | 60–70 |
| 4. | சமூக சிக்கல்கள் | 71–87 |
| | **புவி இயல்** | |
| 8. | கனிமம் மற்றும் ஆற்றல் வளங்கள் | 88–97 |
| 9. | போக்குவரவு மற்றும் தகவல்தொடர்பு | 98–108 |
| 10. | இந்தியாவின் தொழிற்சாலைகள் | 109–115 |
| 11. | இந்தியாவின் மண்வகைகள் | 116–123 |
| 12. | இந்தியாவின் மக்கள் தொகை | 124–128 |
| | **பொருளாதாரம்** | |
| 3. | பணம் மற்றும் கடன் | 129–138 |
| 4. | பொதுமக்களின் நிதி மற்றும் நிதி நிலை அறிக்கை | 139–148 |
| | **வணிக இயல்** | |
| 3. | வணிகம் உலகமயமாக்கல் | 149–154 |
| 4. | நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்பு | 155–160 |


©KTBS Not to be republished

# அத்தியாயம் - 7

# விடுதலைப் போராட்டம்

## இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன :

- இந்திய தேசிய காங்கிரஸ்.
- மிதவாதிகளும் தீவிரவாதிகளும்.
- தேசியம் உதயம்

இந்தியாவில் எற்பட்ட ஆங்கில ஆட்சிக்கு எதிராக பல முறை போராட்டங்கள் வெடித்தன. பல அரசர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக நடத்திய போர்கள் அனைத்தும் அவர்களின் தனிப்பட்ட நலனுக்காகவே எற்பட்டன. கி.பி. 1857 ல் எற்பட்ட முதல் இந்திய விடுதலைப் போருக்குப்பின் பல ஆற்றல் மிகு மாற்றங்களும் சீர்திருத்தங்களும் எற்பட்டன. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு, பத்திரிக்கைத்துறை, பல இயக்கங்களின் தோற்றம் மற்றும் நிர்வாகத்தில் மாற்றம் போன்றவற்றில் மக்கள் பெருமளவில் ஈடுபடு வதை பல மாநிலங்களில் காணமுடிந்தது. இந்திய வெளியீடுகளைக் கட்டுப்படுத்த கி.பி. 1878ல் லிட்டன் பிரபு உள் நாட்டு செய்தி கட்டுப்பாட்டு சட்டத்தை கொண்டுவந்தார். ஒரே மாதிரியான சட்டம் மற்றும் ஒழுங்கை எற்படுத்த ரிப்பன் பிரபு இல்பர்ட் மசோதாவை கொண்டு வந்தார். இதற்கு எதிராக ஐரோப்பிாவில் சில அமைப்புகள் எதிர்க்க முயற்சித்தபோதிலும் இறுதியில் வெற்றிகரமாக செயல் படுத்தப்பட்டது.

இந்தியா முழுவதும் எற்பட்ட போராட்டங்களால் விடுதலைப் போராட்டம் ஒரு சிறப்பான வடிவத்தைப் பெற்றது. ஆயுதப் போராட்டம் ஒரு சிறப்பான வடிவத்தைப் பெற்றது. ஆயுதப்போராட்டங்களை தவிர்க்க ஆங்கிலேயர் போர்த்திறங்களில் சிலவற்றை மாற்றியமைத்தனர். அதன் விளைவாக, ஆங்கில அரசு கி.பி. 1858ல் பேரரசியின் உயர் அதிகாரத்தை பறைசாற்றி இந்தியர் அனைவரும் ஆங்கில குடிமக்கள் என அறிவித்தது. தொடர்ந்து. இந்தியருக்கு சிறப்பான வசதிகளை வழங்க பல நடவடி க்கைகளை ஆங்கில அரசு அறிவித்தது. இம்முன்னேற்றத்தால் ஆங்கிலம் கற்ற புதிய உயர்மட்ட இயல் புடைய தலைமுறையினர் அரசியலமைப்பு முறையில் தங்களின் உரிமைகளுக்காகப் போராட முற்பட்டனர். இது இந்திய தேசிய காங்கிரஸ் தோன்ற வழி வகுத்தது.

## இந்திய தேசிய காங்கிரஸ்

இராஜாராம் மோகன்ராய் காலத்திலிருந்தே இந்தியாவின் இடைநிலை மக்கள் புதிய சவால்களை எதிர்கொள்ள தங்கள் மனங்களை தயார் படுத்திக்கொண்டனர். இந்நோக்கத்திற்காக பல அமைப்புகள் எற்படுத்தப்பட்டன. அவைகளுள் ‘த ஹிண்டு மேளா, த ஈஸ்டு இந்தியா அசோசியேசன், கிழக்கிந்திய சங்கம், பூனா சார்வஜெனிக் சபா மற்றும் ‘த இந்தியா அசோசியேசன், இந்திய சங்கம், போன்றவை முதன்மை வாய்ந்தவைகளாகும். அவைகளின் இலக்கு மற்றும் நலன்கள் குறுகிய எல்லைக்குள்ளிருந்தன. சரியான எற்றநேரத்தில் அவைகள் தேசிய ஒருமைப் பாட்டைப்

©KTBS Not to be republished


பெறும் வாய்ப்புக்காக எதிர் நோக்கி காத்திருந்தன. அவ்வாறான இந்திய முழுமைக்கும் உரிய ஓர் இயக்கத்தை எற்படுத்த ஒரு நல்ல தருணம் வாய்த்தது. கி.பி. 1885ல் ஒய்வு பெற்ற ஓர் ஆங்கில அதிகாரியான A.O ஹுயூம் (A.O Hume) இந்திய தேசிய காங்கிரசை எற்படுத்தினார். அது அரசியல் விழிப்புணர்வயும் நாட்டு நோக்கத்தையும் உருவாக்க பணியாற்றியது.

இந்தியாவில் வேற்றுமைகள் இருந்தாலும் கூட, தேசிய காங்கிரஸ் இந்தியரின் தேசப்பற்றை தட்டியெழுப்ப போராடியது. அது வட்டார மொழிகளில் செய்தி தாட்களை வெளியிட்டு அரசியல் பிரச்சனை குறித்து வாதிடத் தொடங்கியது. அதன் விளைவாக, மக்கள் அரசியல் சூழலையும் அதன் பிரச்சனை களையும் உணரத்தொடங்கினர். காங்கிரசின் ஆற்றல் மிகு வளர்ச்சியை கண்ணுற்ற ஆங்கிலேயர் பிரித்தாலும் சூழ்ச்சிக் கொள்கையை நடைமுறைப்படுத்தினர். அவர்களுடைய திறமையான அறிவின் மூலம் இந்து மற்றும் இசுலாமியர்களை பிரித்தனர். அவ்வாறான சூழலிலும் இந்திய தேசிய காங்கிரஸ் நாட்டுத்தொடர்புடைய பிரச்சனைகளை உரிய முறையில் தீர்த்து வைப் பதற்கு பல ஆக்கப்பூர்வமான திட்டங்களை எற்படுத்தியது.

19 ம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் முரண்பாடுகள் எழுந்தன. திட்டச்செயல், நம்பிக்கைகள் (இலக்குகள்) மற்றும் அவர்கள் மேற்கொண்ட போராட்ட முறை ஆகியவற்றின் அடிப்படையில் போராளிகள் மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் என இருப்பெரும் பிரிவாகினர்.

### மிதவாதிகள் :

காங்கிரஸ் இயக்கம் தோற்றுலிக்கப்பட்ட முதல் 20 ஆண்டு காலம் 'மிதவாதிகள் காலம்' எனப்படுகிறது. ரானடே, சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி மற்றும் கோபால கிருஷ்ண கோகலே ஆகியோர் முதன்மை வாய்ந்த மிதவாதிகள் ஆவர். மிதவாதிகள் ஆங்கிலேயரின் நிர்வாகத்தையும் நடுவு நிலைமையையும் அரசியல் சட்டத்தின் மூலம் அரசின் பார்வைக்கு முன் வைத்தனர். மிதவாதிகள் அப்போது நிலவிய அரசியல் சூழல்குறித்து மக்களிடம் போதித்தனர். அவர்கள் கூட்டங்களை நடத்தியும் பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடியும் தொழில் வளர்ச்சி, படைக்கல செலவை குறைத்தல், கல்வித்தர வளர்ச்சி மற்றும் நாட்டில் நிலவும் எழ்மை குறித்து ஆய்வு மேற்கொள்ள ஆங்கில அரசை வலியுறுத்துதல் போன்றவை களுடன் தொடர்புடைய பல்வேறு கோரிக்கைகளை அரசிடம் சமர்ப்பித்தனர்.



தாதாபாய் நௌரோஜி




கோபால கிருஷ்ண கோகலே

©KTBS Not to be republished

முதன்முறையாக மிதவாதிகள் இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் தீமைகளை சுட்டிக்காட்டி இங்கிலாந்துக்கு இந்திய செல்வங்கள் எவ்வாறு எடுத்துச்செல்லப்படுகிறது என்கிற வடிகால் உண்மைகளையும் மக்கள் மன்றத்தில் அரங்கேற்றினர். தாதாபாய் நௌரோஜி இந்தியச் செல்வங்கள் இங்கிலாந்துக்கு எடுத்துச்செல்லப்படும் முறையை '' வடிகால் கொள்கை'' (Drain Theory) என அழைத்தார். இறக்குமதி அதிகரித்து எற்றுமதிகளை குறைப்பதால் பாதகமான சூழல் எற்பட்டு இந்திய செல்வங்கள் இங்கிலாந்துக்கு சென்றன என்றும் அவர் தன் கருத்தை நிலைநாட்டினார். ஊதியக்கூலியை செலுத்துதல், ஒய்வூதியம் வழங்கல் மற்றும் ஆங்கில அதிகாரிகளின் நிர்வாக செலவுகள் போன்ற பல்வேறு சுமையான வரிகளை இந்தியா செலுத்த வேண்டியதால் இந்திய செல்வங்கள் அனைத்தும் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப் பட்டன. மிதவாதிகளின் காலம் ஒரு பெருந்தன்மை தேசிய காலம் எனவும் அழைக்கபட்டது.

### தீவிரவாதிகள்

மிதவாதிகளின் மென்மை நோக்கம் மீது வெறுப்படைந்த காங்கிரசின் ஒரு குழுவினர் மிதவதிகளை ''அரசியல் பிச்சைக்காரர்கள்'' என்றழைத்தனர். மிதவாதிகளின் சிந்தனைக்குறித்து விமர்சித்து எழுச்சிக் கருத்துக்களை தீவிரமாக பரப்பியவர்கள், தீவிரவாதிகள் எனப்பட்டனர். அரவிந்த கோஷ், லாலா லஜ்பதிராய், பிபின் சந்திரபால் மற்றும் பாலகங்காதரதிலகர் ஆகியோர் முதன்மையான தீவிரவாதிகள் ஆவர்.


அரவிந்த் கோஷ்


பாலகங்காதரதிலகர்


லாலா லஜ்பத்ராய்


பிபின் சந்திரபால்

***வங்கப்பிரிவினை :*** ஆங்கிலேயருக்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்தி ஒரு போராட்டக்கள மையமாக வங்காளம் விளங்கியது. இதனை எடுக்க கர்சன்பிரபு நிர்வாக சிக்கலை மேற்கோள்காட்டி வங்கப்பிரிவினைத்திட்டத்தை அறிவித்தார். இந்து மற்றும் இசுலாமியர் ஆகிய சமூக அடிப்படையில் மேற்கு மற்றும் கிழக்கு வங்காளம் என இருப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இவ்வாறு இரு சமூகங்களிடையே வேற்றுமைகளை எற்படுத்தி விடுதலைப் போராட்டத்தின் தீவிரத்தன்மையை ஆங்கிலேயர் குறைத்தனர்.

ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கையின் ஓர் எடுத்துக்காட்டு என மிகைப்படுத்தி, தீவிரவாதிகள் வங்கப்பிரிவினையை கி.பி.1905ல் மிகக் கடுமையாக எதிர்த்தனர்.

©KTBS Not to be republished

வங்கப்பிரிவினைக்கு எதிராக நாடெங்கும் போராட்டங்கள் வலுவாக எழுந்தன. இப்போராட்டத்தில் சுதேசி இயக்கம் மிகமுக்கிய பங்காற்றியது. மேற்கத்திய பொருட்கள் மற்றும் ஐரோப்பிய பொருட்களை இந்தியாவிற்கு இறக்குமதி செய்ய உதவும் நிறுவனங்கள் மீதும் தடைவிதிக்க சுதேசி இயக்கம் வலியுறுத்தியது. சுதேசி இயக்கத்தினர் இந்தியப்பொருட்களையே பயன்படுத்துமாறு இந்தியருக்கு அறிவுறுத்தினர் இப்போராட்டத்தின் எதிரொலியால், ஆங்கில அரசு பணிந்து கி.பி.1911ல் வங்கப் பிரிவினையை விலக்கிக்கொண்டது.

தீவிரவாதிகள், சிறந்த நிர்வாகம் விடுதலைக்கு நிகரானது அல்ல என்று எடுத்துயம்பினர். திலகர் பெருமான், விடுதலை இந்தியா எனது பிறப்புரிமை அதை எவ்வகையிலேயும் அடைந்தே தீருவேன் என முழங்கினார். இவ்வாறு விடுதலை இந்தியா தீவிரவாதிகளின் தலையாய நோக்கமாயிற்று. அவர்கள் விடுதலைப் போராட்த்திற்கு பொது மக்களை தயார்படுத்தினர். சமய நிகழ்வுகளின் மூலம் அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்க மக்களை அழைத்தார். அவர் தன்னுடைய செய்தி தாட்களில் எழுதிய புரட்சி கட்டுரைகளுக்காக சிறைபிடிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

> ***இதனை அறிக :***
> *திலகர் மக்களிடையே கணபதி பண்டிகை மற்றும் சிவாஜியின் பிறந்தநாள் விழாக்கள் மூலம் நாட்டுப்பற்றைதட்டியெழுப்பினார்.*

### *புரட்சியாளர்கள் :*


புரட்சியாளர்கள் முழுவிடுதலை இந்தியாவை காண விழைந்தனர். அவர்கள் ஆங்கிலேயரை வன்முறையால் மட்டுமே இந்தியாவை விட்டு வெறியேற்ற முடியும் என திடமாக நம்பினர். அவர்கள் இந்தியா மற்றும் அயல் நாடுகளில் தங்களின் இரகசிய கிளைகளை எற்படுத்தினர். அவர்கள் நிதியையும் ஆயுதத்தையும் திரட்டி மக்களுக்கு பயிற்சி யளித்தனர்.

அனுசீலன குழு மற்றும் அபிநவ பாரத் போன்றவை இவ்வகையைச் சார்ந்த குழுக்களாகும். அவர்கள் தங்களுடைய இலக்குகளை அடைய துப்பாக்கிகளையும் வெடி ஆயுதங்களையும் பயன்படுத்தினர். அரசு அவர்களை ஒடுக்க முயற்சி எடுத்துக் கொண்டது. கொலை வெறி முயற்சிக்காக புரட்சியாளர்கள் என குற்றஞ்சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டனர். பலருக்கு மரணத்தண்டனையும் வழங்கப்பட்டது. குதிராம் போஸ், ராம் பிரசாத் பிஸ்மில், அரவிந்தோ கோஷ், வி.டி.சவர்கார், அஸ்வினி குமார தத்தா, பகத்சிங், சந்திரசேகர் ஆசாத், ராய் பிகாரி போஸ், மேடம் காமா மற்றும் ஷிஷாம்ஜி கிருஷ்ணவர்மா, ராஜ்நாராயண போஸ், போன்றோர் புரட்சியாளர்களின் முக்கியத் தலைவர்கள் ஆவர்.

©KTBS Not to be republished



பகத்சிங்



சந்திரசேகர் ஆசாத்



வி.டி. சவர்கார்

வன்முறையில் விடுதலையை அடைய வேண்டும் என்ற புரட்சியாளர்களின் கனவு வெற்றியடையவில்லை. இருந்தாலும் நாட்டு விடுதலை இயக்கத்துக்கு தூண்டும் ஆற்றல் மிகு காரணிகளாக அவர்கள் விளங்கினர். சில தீவிரவாதிகள் பிற்காலத்தில் அவர்களுடைய போராட்டங்களை புரட்சியாளர்களாகவே தொடர்ந்து செயல்பட்டனர். அவர்களுள் முதன்மை வாய்ந்தவர் அரவிந்த் கோஷ் ஆவார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் வெவ்வேறு நிலைகளில் புரட்சியாளர்களின் நிலை பல்வேறு காரணங்களுக்காக சிறப்புற்றன.

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை சரியானழ் சொற்களால் நிரப்புக :

1. இந்திய தேசிய காங்கிரஸ் _________ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
2. வடிகளில் கொள்கையைப் பற்றி எடுத்துரைத்தவர் ________ ஆவார்
3. சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என முழங்கியவர்________
4. பாலகங்காதர திலகர் மராட்டிய மொழியில்______ பத்திரிக்கையை பிரசுரித்தார்.
5. அபினவ பாரதம் என்னும் ரகசிய சங்கத்தை ______ அவர்கள் கொண்டிருந்தனர்.

### II. கீழ்காணும் சொற்றொடர்களில் கோடிட்ட இடங்களில் கொடுக்கப்பட்ட விடைகளில் சரியானவற்றை தேர்ந்து எழுதுக.

1. இந்திய தேசிய காங்கிரசை தொடங்கியவர்________

a) மகாத்மா காந்தி b) ஏ.ஒ.ஹியும்

c) பாலகங்காதர திலகர் d) கோபால கிருஷ்ணகோகலே

2. மராட்டிய பத்திரிக்கையை வெளியிட்டவர்________

a) ஜவஹர்லால் நேரு b) ராங்கபிஹாரிபோஸ்

c) பாலகங்காதர திலகர் d) விடி. சவர்க்கர்

©KTBS Not to be republished

3. முஸ்லீம் லீக் ________ல் ஏற்படுத்தப்பட்டது.

a) 1924　　b) 1922

c) 1929　　d) 1906

4. வங்காள பிரிவினையை ஏற்படுத்திய வைஸ்ராய்________

a) லார்ட் காரன் வாலிஸ்　　b) டல் ஹெளஸி

c) லார்டு கர்சன்　　d) ராபர்ட் கிளைவ்

## III. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடையளி.

1. இந்திய தேசிய காங்கிரசை தோற்கடிக்க ஆங்கிலேயர் எவ்வாறு முயற்சித்தனர்.
2. ஆங்கிலேயருக்கு மிதவாதிகள் வைத்த கோரிக்கைகள் யாவை?
3. வடிகால் கொள்கையைப் பற்றி விவரி.
4. இந்திய விடுதலை போராட்டத்தின் புரட்சியாளர்களை எழுது.
5. விடுதலை போராட்டத்தில் பாலகங்காதர திலகரின் பங்களிப்பைப் பற்றி எழுதுக.
6. வங்காளப் பிரிவினையை திரும்பப் பெற்றதின் காரணங்கள் யாவை?

## IV செயல்பாடுகள்

1. சுதந்திரப் போராட்ட வீரர்களின் படங்களை சேகரித்து ஆல்பம் தயாரிக்க.
2. மிதவாதிகளின் படங்களை சேகரித்து மற்றும் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய புத்தகங்களை படிக்கவும்.

## V *திட்டம்*

பள்ளியில் நாட்டுப்பற்றை வளர்க்கும் நாடகங்களை நடித்து காட்டுக.

* * * *

©KTBS Not to be republished


# அத்தியாயம் 8
# காந்தியின் காலம் மற்றும் நாட்டு விடுதலைப் போராட்டம்

## இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.

- காந்தியடிகளின் வாழ்க்கை
- காந்தியடிகளின் சாதனைகள்
- கிலாபாத் போராட்டம்
- சட்டமறுப்பு இயக்கம்
- வட்டமேஜை மாநாடு
- டாக்டர் பீ.ஆர்.அம்பேத்கர் மற்றும் அவரின் சீர்திருத்தங்கள்
- மகமது அலிஜின்னா
- இந்தியாவில் காந்தியடிகளின் தொடக்கக் காலப் போராட்டம்
- ஜாலியன் வாலாபாக் படுகொலை
- ஒத்துழையாமை இயக்கம்
- வெள்ளையனே வெளியேறுஇயக்கம்
- சுபாஸ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய இராணுவம்
- ஜெயபிரகாஸ் நாராயனன்
- ஜவஹர்லால் நேரு

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் மகாத்மா காந்திஜியவர்கள் மிக முக்கியமான பாத்திரத்தை ஏற்றுநடத்தினார். இவர் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ‘‘காந்தியன் மாதரி’’ அல்லது காந்தியன் விதானத்தை உருவாக்கினார். 1920-47காலத்தில் காந்தியவர்களின் விஷயங்கள் அவருடைய போராட்டத்தின் கொள்கைகள் அடித்தளத்தை உருவாக்கிய காரணத்தாலும் மேலும் அவரின் போராட்ட மாதரி இந்திய நாட்டின் போராட்டத்தின் திசையை பெருந்தன்மையுடன் உருவாக்கிய இக்காலத்தை காந்தியின் காலமென்று அழைக்கிறார்கள்.

## ஆரம்பகால வாழ்க்கை மற்றும் போராட்டங்கள்


தென் ஆப்பிரிக்காவில் இருக்குப்போது காந்தி

பாபு என்று அன்புடன் அழைக்கப்படும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869 அக்டோபர் 2ம் நாள் இன்றைய குஜராத் மாநிலத்திலுள்ள கத்தாவாட் மாவட்டம் போர்பந்தரில் பிறந்தார். இவருடைய தந்தையார் கரம்சந்த் காந்தியவர்கள் ராஜகோட் சமஸ்தானத்தில் திவானாக இருந்தார். தாயின் பெயர் புத்திலிபாய், இவர் காந்தியடிகளுக்கு நீதிகளை எடுத்துக் கூறினார். ஆரம்பக்கல்வியை போர்பந்தரில் முடித்து காந்திதியவர்கள் 1888ல் இங்கிலாந்தில் சட்டப் படிப்பான ‘பார் அட்லா’ முடித்து இந்தியாவுக்கு திரும்பினர். 1893ல் தாதர் அப்துல்லா மற்றும் கம்பனியின் வக்கிலாக பணியாற்ற தென் ஆப்பிரிக்காவில் ‘நடால்’ என்னும் இடத்திற்கு சென்றார். இங்கு காந்தியடிகள் மூன்று மாதங்கள் இருக்க வேண்டியவர் சுமாராக 20 ஆண்டுகள் காலம் அங்கேயே கழித்தார். முக்கியமாக அங்குள்ள கருப்பர் மற்றும் இந்தியர்கள் பற்றி அங்கிருந்த ஆங்கில அரசாங்கம் காட்டிய சகிப்பதன்மையற்ற நிறபேத கொள்மை (Aparthied)

©KTBS Not to be republished

மற்றும் பழங்குடியனரிடம் காட்டிய ஏற்றத்தாழ்வு போன்றவற்றை எதிர்த்தார். இப்போராட்டத்தின் மூலமாக காந்தியடிகள் 'சத்தியகிரகம்' என்னும் புதிய சமுதாய பகிஷ்காரத்தை செய்து அதனுடைய கொள்கைகளை உருவாக்கினார். பெரும்பாலான ஆப்பிரிக்க மக்களுக்கு உள்ள பெருமை என்றால் ''நீங்கள் ஏதும் அறியாத காந்தியை அனுப்பீனீர்கள், நாங்கள் காந்தியை கொடுத்துள்ளோம் என்றனர்.

***இதனை அறிந்துகொள்ளுங்கள் :***

*ஆப்பிரிக்காவில் காந்தி முதன் முதலில் சத்தியகிரகம் அகிம்சை தத்துவங்களின் அடிப்படையில் போராட்டங்களை உருவாக்கினார். நதால் இன்டியன் காங்கிரஸ் என்னும் நிறுவனத்தை ஏற்படுத்தினார். காந்தி முதன்முதலில் 'இன்டியன் ஒப்பினியன்' என்னும் செய்தித்தாளை தொடங்கி அதில் தன்னுடைய எண்ணங்களை வெளிப்படுத்தவும் மக்களின் எண்ணங்களை அறியவும் முற்பட்டார். காந்தி தம்முடைய போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்த போராட்ட பயிற்சிகளைத் தொடங்க காந்தி ஆப்பிரிக்காவில் 'போனிக்ஸ்' மற்றும் 'டால்ஸ்டாய் பார்ம்ஸ்'கள் என்னும் ஆசிரமங்களைத் தொடங்கினார். காந்தியின் நண்பர்கள் காலென்பாக், மனைவி கஸ்த்துரிபா, குழந்தைகள் மற்றும் நண்பர்கள் சேர்ந்த அநேக இந்தியர்கள் காந்திக்கு தோள் கொடுத்து போராடினர். இறுதியில் இவ்விதமாக போராட்டங்களினால் அங்கில அரசு அழுத்தத்தை உணர்ந்த ஆங்கில அரசு உடனடியாக கருப்பு நிற மக்கள் மற்றும் இந்தியர்களுக்கு எதிரான அணைத்து எதிரான கருப்பு மற்றும் நிர்பந்த சட்டங்களை திரும்பப் பெற்றது. தென் ஆப்பிராக்காவில் இருக்கும்போது ஒருமுறை டர்பனிலிருந்து பிரிட்டோரியாவுக்கு இடையில் ரயிலில் பயணம் செய்யும்போது, முதல் வகுப்பு டிக்கெட்டை வாங்கி இருந்தாலும் பலவந்தமாக ரயில் பெட்டியிலிருந்து வெள்ளை அதிகாரி காந்திஜியை வெளியேற்றினார். தென்ஆப்பிரிக்கா காலானிகளில் வசித்து வந்த இந்தியரின் எண்ணங்களை அனுபவத்தில் அறிந்து கொள்ள முடிந்தது. இங்கிலாந்திலும் தீவிர வடிவில் மக்களிடையே பேத-பாவங்கள் மற்றும் எதிர்பார்புகள் தென் ஆப்பிரிக்காவில் நடைமுறையிலிருந்தது என்று அவர்கள் பதிவு செய்துள்ளனர். தென் ஆப்பிரிக்காவில் நீண்ட போராட்டத்திற்கு பிறகு காந்தி 1915ல் இந்தியாவிற்கு வருகைத்தந்தார்.*

## இந்தியாவில் காந்தியின் - ஆரம்பகால போராடங்கள்

இந்தியாவுக்கு வந்த காந்தியடிகள் தம்முடைய அரசியல் குரு கோகுலேயின் வழிகாட்டுதலுடன் இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை, சமூகம் மற்றும் அன்றைய சமூகத்தின் உண்மைகளை அறிந்துகொள்வதன்மூலமாக, ரயிலின் மூன்றாவது வகுப்பு பெட்டியிலேயே இந்தியாவின் தரிசனத்தை செய்தார். 1916ல் அவர் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை தொடங்கியதன்மூலமாக தம்முடைய போராட்டத்திற்கு ஒரு கலாச்சார வடிவத்தை அளித்தார்.விவசாயிகள் தலித்துகள், பழங்குடிமக்கள், தொழிலாளர்கள், ஏழைமக்கள் மற்றும் அவர்களின் பிரச்சனைகளை ஆய்வு செய்தார். 1917ல் காந்திஜி பீகாரின் சம்ப்பாரத்தில், நீல விளைச்சலால் நொந்த விவசாயிகளுக்காக 'சம்பாரணா போராட்டம்' தொடங்கி ஆங்கில அரசுக்கு கோபத்தை உண்டாக்க செய்தார்.

©KTBS Not to be republished

1918ல் அகமதாபாத்தின் பருத்தி ஆலை தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதன் மூலமாக அவர்களுடன் கூடி போராட்டத் தொடங்கிவெற்றி பெற்றார். அதே ஆண்டில் குஜராத்தின் 'கேடா' என்னுமிடத்தில் நடைபெற்ற விவசாயிகள் மீது வரி தொடர்பான போராட்டங்கள் அனைத்திலும் காந்தியவர்கள் சத்தியம், அகிம்சை மற்றும் சத்தியாகிரக வழிகளை அறிமுக்பபடுத்தி பரிசோதித்தார் இதனுடன் இந்தியமக்கள், சாதாரணமக்களின் கூட விவாதத்தை ஆரம்பித்து அதன்மூலமாக விடுதலைப் போராட்டத்தின் உருவத்தை மக்கள் மூலமாகவே மாற்றம் கொண்டுவரும் செயலுக்கு செயலாற்றம் சக்தியை அளித்தார்.

மகாத்மாகாந்தியடிகள் பிரவேசித்ததால் விடுதலைப் போராட்டம் புத்துயிர்பெற்றது. காந்தியிலுள்ள தம்முடைய போராட்டத்தில் 'கண்ணுக்குப் புலப்படாத மறுவடிவம்', 'அகிம்சை' மற்றும் 'சத்தியாகிரகத்தை' போராட்டத்தின் முக்கிய ஆயுதங்களாக பயன்படுத்திக் கொண்டார். தம்முடைய எண்ணங்களை 'ஹரிஜன்' மற்றும் 'யங் இந்தியா' பத்திரிக்கைகளில் வெளிப்படுத்தினார்.

> ***இதனை அறிந்துகொள்ளுங்கள் :***
>
> *காந்திஜி பிரவேசத்துடன் புதிய காங்கிரஸ் தன்னுடைய உறுப்பினர் அனைவருக்கும் விடுதலை அளித்து சாதாரணமக்களையும் ஒரு அமைப்பாக ஆக்கியது. அமைப்பு மேற்கொள்ளும் முடிவுகளுக்கு கட்டாயப்படுத்த உதவியற்ற மற்றும் புதுமையான சட்டமறுப்பு போராட்டம் செயல் திறனை உருவாக்கியது. அது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு அடிமட்ட சமுதாயங்களை வெளிக்கொண்டு உதவிகரமான செயலாக்கங்களை தயாரித்தது. தம்முடைய செயல்திட்டங்களை நிறைவேற்ற ஒரு கோடி ரூபாயை முதலீடாக 'திலகர் சுயாராஜ்ய பண்டு' தொடங்கியது. இவ்வாறு மகாத்மா காந்தியடிகளின் பிரவேசத்துடன் காங்கிரசில் முழுமையான மாற்றத்தை காணலாம். இவ்வனைத்து காரணங்களுக்காக இக்காலத்தை காந்தியின் காலமென்று அழைக்கப்பட்டது.*

### காந்தியடிகளின் போராட்டத்தின் படிப்படியான சாதனைகள் :

***சத்தியாகிரகம் :*** காந்தியடிகளின் போராட்டத்தின் மிகமுக்கியமான முறையே சத்தியாகிரகமாகும். 'சத்தியாகிரகம்' என்னும் சொல்லின் பொருள் சத்தியத்தை வற்புறுத்துவது என்று பொருள் சத்தியத்தை வற்புறுத்துவது அல்லது கட்டாயப்படுத்துவதாகம். ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் கண்டறிந்து பயன்படுத்திய இந்த ஆயுதம், அவருக்கு புதிய சக்தியை உண்டாக்கியது. சத்தியாகிரகம் அகிம்சையை ஆதரித்தது, தவறு, இம்சை, மற்றும் சத்தியமற்ற முறைகளை கண்டித்தது. இவ்வாயுதத்தை இந்திய தேசிய போராட்டத்தில் நிரந்தரமாக பயன்படுத்தினால் இது ஒரு பெறிய சமுதாயதேடுதலாகும்.

***அகிம்சை :*** காந்தியடிகளின் போராட்டத்தின் அடிப்படக் கொள்கையை அகிம்சையாகும். ஆயுதங்கள் பயன்படுத்துவதற்கு எதிராக அகிம்சை மற்றும் சத்தியாகிரகத்தின் மூலமாக ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாக இருக்கவேண்டும் என்று அவருடைய குறிக்கோளாக இருந்தது. ஆங்கிலேயரின் ஆயுதங்களான இராணுவம்,

©KTBS Not to be republished

போலீஸ், சட்டங்கள் போன்றவைகளுக்கு எதிராக சத்தியம், அகிம்சை, உண்ணாவிரதம் என்னும் தாய்நாட்டுப்பற்று ஆயுதங்களை கொண்டு அவர்களை வளைத்தது காந்தியடிகளின் போராட்டத்தின் வரலாற்றுச் செய்தியாகும்.

***இந்து-முஸ்லிம் ஒற்றுமை :*** இந்திய விடுதலை போராட்டத்தில் இந்து-முஸ்லீம் ஒற்றுமை மிகப்பெரும் சக்தியாகிருந்தது. இதனைக் கடைப்பிடித்த மணிதர்யாரென்றால் அது மகாத்மா காந்தியடிகள் ஆவார். விடுதலையைப் பெறுவது மற்றும் எதிர்க்காலத்தில் நாடாக வாழ்வது கடினமே என்பது அவருடைய நம்பிக்கையாக இருந்தது. இந்து மற்றும் முஸ்லீம்கள் இந்திய தாயின் இரண்டு கண்களென்று காந்தியடிகள் கூறினார். இதன் பின்னணியின் அவர் 1919ல் கிலாபத் போராட்டத்திற்கு காங்கிரஸ்கட்சியிலிருந்து ஆதரவை வெளிப்படுத்தினர்.

> *இப்பூமி அனைவரின் தேவைகளை பூர்த்தி செய்வதே தவிர அவர்களுடைய பேராசைகளல்ல - **காந்தியடிகள்.***

## ஒத்துழையாமை இயக்கத்திற்குக் காரணமான நிகழ்வுகள் :

***ஜாலியன் வாலாபாக் படுகொலை :*** ஆங்கில அரசாங்கம் ரௌலட் சட்டத்தை 1919 மார்ச்சில் நடைமுறைக்குத் தந்தது. இதன் மூலமாக ஆங்கிலேயர் இந்திய தேசிய வாதிகளை கட்டுப்படுத்தத் தொடங்கினார். இச்சட்டத்தினடியில் எந்த ஒரு தனிமனிதனும் விசாரணை இல்லாமல் கைது செய்து நீதி மன்றங்களின் மூலமாக குற்றவாளி என்று முடிவு செய்து தண்டனை விதிக்கப்பட்டது. இது இந்திய விடுதலை போராட்டக்காரர்கள். கூட்டங்கள் கூடுவதை குழுக்கள் அமைப்பது மற்றும் தனி மனிதர்களின் சுதந்திரத்தை பறித்துக் கொண்டது. காந்தியடிகள் இதனை எதிர்த்ததினால் ‘சத்தியகிரக் சபை’ என்னும் அமைப்பைத் தொடங்கி போராட்டத்தை ஆரம்பித்தார். மாபெரும் கூட்டம் ஊர்வலம், பகிஷ்கரித்தல் போன்ற வேற்றுமை அரசியல் செயலாக்கங்களை இதன் மூலமாக மேற்கொள்ளப்பட்டது.

ஆங்கில அரசாங்கம் ரௌலட் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்கு எதிராக எதிர்த்து போராட் காங்கிரஸ் முடிவுசெய்தது. காந்தி 1919 ஏப்ரல் 6ல் மிகப்பெரும் அறப்போட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. பஞ்சாபில் டாக்டர் பக்ருத்தீன், டாக்டர். சத்தியபால் போன்றவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து 1919 ஏப்ரல் 13ல் பஞ்சாப்பிலுள்ள அம்ருத்சரஸ் ஜாலியன் வாலாபாக்கில் மக்கள் பைசாக்கி பண்டிகையன்று எதிர்த்து கூட்டம் கூடியது. அம்ருத்தசரஸின் படைத்தலைவர் ஜனரல் டயர் அங்கு கூடிய மக்கள் மீது பத்து நிமிடங்கள் நற்புறமும் துப்பாக்கி சூடு நடத்தினான். அதன் காரணமாக 380 மக்கள் இறந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் படுகாயமூற்றனர். இந்நிகழ்வுக்குப் பிறகு



***ஜாலியன் வாலாபாக் படுகொலை***

©KTBS
Not to be republished

காந்தியடிகள் மற்றும் அநேக இந்தியர்கள், துயரம் அடைந்தனர். இந்நிகழ்வுக்கு பிறகு பஞ்சாபில் இராணுவ ஆட்சி நடைமுறை வந்தது. இப்படுகொலையை எதிர்த்து இரவிந்திரநாத் தாகூர் தம்முடைய 'நைட்வுட்' பட்டத்தை ஆங்கில அரசுக்கு திருப்பியளித்தார். காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க இந்நிகழ்ச்சி காரணமாயிற்று ஒன்று மறியா இந்தியரை போராட்டக் காரர்களென்று படுகொலை செய்த ஜனரல் டயரை இந்தியாவின் புரட்சிக்காரர் உதய் சிங் படுகொலை செய்தார்.

### கிலாபாத் இயக்கம் :

துருக்கியின் சுல்தான்கள் முஸ்லிம்களின் மதத்தலைவர்களாகவும் தம்மை காலிஃகள் என்று அழைத்துக் கொண்டனர். முதல் உலகப் போரின்போது ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்து முஸ்லீம்கள் உலகம் முழுவதும் எதிர்த்தனர். இறுதியில் மகமதுஅலி மற்றும் சவுக்கத் அலி சகோதரர்கள் இந்தியாவில் துருக்கியருக்கான கிலாபத் இயக்கத்தை ஏற்படுத்தினர். இந்துக்களும் இஸ்லாமியர்களும் இணைந்து போராடினால் ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு வெளியேற்ற முடியும் என காந்தியடிகள் உறுதியாக நம்பினார். இவ்வேளையில் இஸ்லாமியர்களின் பங்கு காங்கிரஸ் இயக்கத்துக்கு தேவையென உணர்ந்தார். எனவே தன்னுடைய முழு ஆதரவை கிலாபத் இயக்கத்துக்கு காந்தியடிகள் அறிவித்தார். இது ஆங்கிலேயருக்கு எதிரான நாடு தழுவிய இந்து முஸ்லீம் போராட்டமாக உருவெடுத்தது. காங்கிரசும் பலதேசிய தலைவர்களும் இக்கிலாபாத் இயக்கத்தில் முழுப்பங்கேற்றனர்.

### ஒத்துழையாமை இயக்கம் :

1920 செப்டம்பர் 4ல் இந்திய தேசிய காங்கிரஸ் கல்கத்தாவின் சிறப்புக் கூட் டத்தில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கும் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்து ஆமோதித்தனர். அகிம்சையின் மூலம் சுயராச்சியம் பெறுவது ஆங்கிலேயரின் கொடுங்கோள் ஆட்சியின் மாற்றத்தின் வடிவம், எதிர்காலத்தில் நடைபெறாமலிருக்க எதிர்ப்பது, ஆங்கில ஆட்சியை முழுமையைக எதிர்ப்பது முக்கிய நோக்கமாகும். அதனுடன் ரௌலட் சட்டத்தை ஆங்கில அரசாங்கம் திரும்ப பெற்றுக்கொள்வது மற்றும் புதிய அரசியல் சீர்திருத்தங்களை நடை முறைப்படுத்துவதன் மூலமாக சுயாட்சியை இந்தியாவுக்கு அளிக்க வேண்டும் என்பது முக்கிய கோரிக்கையாகும்.

### ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய செயல்கள்.

1. பள்ளி கல்லூரிகள் மற்றும் நீதி மன்றங்களை புறக்கணித்து மாணவர்கள் இந்த அழைப்புக்கு ஆதரவளித்தனர்.
2. 1919 ஆம் ஆண்டின் சட்டத்திற்குட்பட்டு பிரதேச சட்டசபைகளுக்கு நடைபெறும் தேர்தலை புறக்கணிப்பது.
3. ஆங்கிலேயர் அளித்த கௌரவ பட்டங்களையும் மற்றும் பதவிகளையும் திருப்பியளித்தனர்.
4. உள்ளூர் சபைகளுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தம் பதவிகளை ராஜினாமா செய்தனர்.

©KTBS Not to be republished

5. அரசாங்க செயலாக்கங்களில் பங்கேற்காமல் புறக்கணித்தனர்.

6. வெளி நாட்டுப் பொருட்களை புறக்கணித்தனர்.

இவற்றுடன் ஒத்துழையாமை

இயக்கத்தின் மற்ற முக்கிய செயல் திட்டங்களென்றால் கைத்தறி நெசவுத் தொழிலை முன்னேற்றுவது. மற்றும் காதியை தயாரிப்பது. தேசிய பள்ளிகளை திறப்பது. இந்து மற்றும் முஸ்லீம் இடையே ஒற்றுமையை பேணிவளர்த்தல் தீண்டாமையை போக்குவது. மற்றும் பெண்களை வஞ்சிப்பதை தவிர்க்கும் நிலையை தூரத்தள்ளி அவர்களிடையே ஒற்றுமையை வளர்ப்பது.



ஒத்துழையாமை இயக்கம்

**ஒத்துழையாமை இயக்க சந்தர்ப்பத்தில் உண்டான முக்கிய வளர்ச்சிகள்.**

1. தேசபந்து சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு, ராஜேந்திரபிசாத் முதலிய மூத்த வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலை கைவிட்டனர்.
2. மாணவர்கள் பள்ளிக் கல்லூரிகளை துறந்தனர்.
3. வேட்பாளர்களை தேர்தலுக்கு நிற்கவைக்காமல் காங்கிரஸ் 1919ல் சட்டத்தினடியில் பிரதேசங்களுக்கு இடையே தேர்தலை நிராகரித்தனர்.
4. காசி வித்யாபீடம், குஜராத் வித்யாபீடம், பிஹார் வித்யாபீடம், மற்றும் ஜாமியா மிலியா இஸ்லாம் தேசிய பல்களைச் கழகங்கள் அமைக்கப்பட்டன.
5. இரவிந்திரநாத் தாகூர் தம்முடைய 'நைட்வுட்' பட்டத்தை ஆங்கில அரசாங்கத்துக்கு திரும்ப அளித்துவிட்டார்.
6. பெண்களும் சேர்ந்த சாதாரணமக்களின் காங்கிரஸ் போராட்டத்துக்கு நிதியை அளித்தனர். அயல் நாட்டுப் பொருட்களை விற்பனை செய்யும் கடை களின் முன்னால் முற்றுகை போராட்டத்தை நடத்தினர் மற்றும் அயல்நாட்டு துணிகளை தீயிட்டு கொளுத்தினர்.
7. 1921ல் பிரின்ஸ் ஆப் வேல்லின் அரசுகுமாரன் வருகையை எதிர்த்தனர்.

***ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவுகள் :*** இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்ததால் சில மேன்மையான விளைவுகலை உண்டாக்கியது. முக்கியமாக தேசிய போராட்டம் மக்கள் போராட்டமாகவே உருவானது.

காங்கிரஸ் கூறிய போராட்டங்கள் புரட்சிகரமான அளவுகளை பெற்றது. இந்து முஸ்லிம் உறவை தற்காலிகமாக உண்டாக்கியது. தேசிய போராட்டம், நகரங்களை கடந்து, கிராமிய பிரதேசங்களிலும், பரவத்தொடங்கியது. தீண்டாமை நிவாரணம்


©KTBS Not to be republished

பெண்களிடையே பொதுமக்கள் கூடும் இடங்களில் பிரவேசம் முதலியன கவனிக்க வேண்டிய விளைவுகளை ஏற்படுத்தியது.

***சௌரி சௌரா நிகழ்வு :*** 1922 பிப்ரவரி 5ல் உத்திரபிரதேசத்தின் கோரக்பூர் மாவட்டத்தின் சௌரி சௌரா என்னுமிடத்தில் சுமார் 3000 விவசாயிகளை உட்கொண்ட பெரிய கூட்டம் போலிஸ் நிலையம் முன்பு கூடியது. அவர்களின் முக்கிய நோக்கம் மதுபானக் கடைகளின் முன்னால் முற்றுகைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த காங்கிரஸ் போராட்டக்காரர்களை, சினம் கொண்ட காவல் துறை அதிகாரிக்கு எதிராக எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனை சகித்துக் கொள்ள முடியாத காவலர்கள் அங்கு குடியிருந்த மக்கள் மீது துப்பாக்கியால் சுடத் தொடங்கினார். இதனால் மக்கள் வெகுண்டெழுந்தனர். இவர்கள் காவல் நிலையத்திற்கு தீ இட்டனர். இதனால் உள்ளே இருந்த 22 காவலர்கள் உயிருடன் தீயில் வெந்து கருகிபோயினார். வேறு இடங்களிலும் இவ்வகையான இம்சையான நிகழ்வுகள் நடந்தன. நிலமை எல்லைமீறியதை அறிந்த காத்தியடிகள் மக்களுக்கு இன்னும் அகிம்சை முறையாக போராட்டத்திற்கு தேவையான தயார் மற்றும் நீதி சக்தி குறைபாடு என்று நினைத்தார். இவ்வாறு பிப்ரவரி 12ல் ஒத்துழையாமை இயக்கத்தை கைவிட்டார். காந்தியடிகள் மக்களை தூண்டிவிடுகிறார் என்னும் குற்றத்தின் அடிப்படையில் 1922 மார்ச்சு 18ல் அவரை கைது செய்து 6 வருடங்கள் கடுங்காவல் தண்டனை அளித்து ஆங்கிலேயர்கள் அவரை சிறைக்கு அனுப்பிவைத்தனர். ஆனால் அவருடைய ஆரோக்கியத்தின் காரணமாக இரண்டு வருடங்களுக்குப்பிறகு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். காந்தியடிகளின் இத்தீர்மானத்தினால் அரசியலில் வெற்றிடம் உருவாயிற்று.

***சுயராஜ்ய கட்சி :*** ஒத்துழையாமை இயக்கத்தை திரும்ப பெற்றபின், அதன் விளைவாக காங்கிரிசில் உற்சாகம் குறைந்து காணப்பட்டது. சீ.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு அவர்கள் சட்டசபைகளை பகிஷ்கரிப்பதை இறுதி செய்து அவற்றிற்கு பிரவேசம் செய்யவேண்டும் என்று வாதித்தார்கள். சட்ட சபைகளுக்கு பிரவேசம் செய்து அங்கே நடக்கும் நிகழ்வுகளுக்கு தடைகளை உண்டாக்க வேண்டும் இதனால் விடுதலைப் போராட்டம் இன்னும் பெருமளவில் உறுதிகொள்ளும் என்று வாதிட்டனர்.

1923 செப்டம்பரில் சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு அவர்களினால் சுயராஜ்ய கட்சி உதயமாயிற்று. அதேமார்ச்சு மாதம் அப்துல் கலாம் அஜாத் அவரின் தலைமையில் தில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் சுயராஜ் கட்சியினர் தேர்தலில் போட்டியிட ஒப்புதலை பெற்றனர். 1923 நவம்பரில் நடந்த தேர்தலில் சுயாராஜ் கட்சியினர் 101 இடங்களில் 42 இடங்களில் வெற்றிபெற்றனர்.


மோதிலால்நேரு

## ***மக்கள் சட்ட பங்கம் போராட்டம் ஆரம்பமாகக் காரணமான நிகழ்வுகள்.***

1927ல் ஆங்கில அரசு சைமன் கமிஷனை நியமித்தது. 1919ல் நடைமுறைக்குவந்த இந்திய அரசு சட்டம் (மீன்டோ-சல்ம்ஸ்பர்ட் சட்டம்) நடைமுறை மற்றும் அதன் விளைவுகளை விமர்சிப்பதின் விளைவாக 1928 பிப்ரவரி 3ல் சைமன்கமிஷன் இந்தியாவுக்கு வந்தபோது ‘சைமன் கோ பேக்‘ என்னும் அறிவித்தலோடு பரந்த

©KTBS Not to be republished

எதிர்ப்பை வெளிப்படுத்தினர். மும்பை, லாகூர், மதராஸ், போன்ற இடங்களில் முழு அடைப்பு கடைப்பிடிக்கப் பட்டது.

***லாலா லஜ்பதிராய் அவரைப்பற்றி அதிகளவு விவரங்களை சேகரிக்க.***

ஆங்கில அரசாங்கம் இந்தியர்களுக்கு மறைமுகமான சவால் விடுத்தது. அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சமுதாயங்களுக்கு ஒப்புதலாகும் அரசியலமைப்பை உருவாக்கும் விஷயத்திற்கு தொடர்பான அறிக்கையை தயாரிப்பதே அம்மறைமுக சவாலாகும். இதன் பின்னணியில் 1928ல் மோதிலால் நேரு அவர்களின் தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு நேரு அறிக்கை தயாராகிருந்தது. காந்தியுடன் நேரு அவர்களும் குழுவை வரவேற்றனர். நேருவின் அறிக்கை இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்த்துடன் பேடரல் மாநில துறை, சிறுபான்மையினருக்கு இருந்த தனி சட்டசபை தொகுதி, ஆங்கில பிரதேசங்களை மொழிவாரி பிரதேசங்களாக பிரித்தல், இந்தியருக்கு அடிப்படை உரிமைகளை அளிப்பது, இந்தியாவுக்கு மக்களாட்சியைக் கொடுப்பது போன்றவைகளை சிபாரிசு செய்தது. பிறகு பிரிட்டீஸ் லேபர் கட்சியின் பிரதம மந்திரி ராம்சேமாக டொனால்ட் வைஸ்ராய் லார்டு இர்வின் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தியாவுக்கு டோமினியன் ஸ்டேட்டஸ் முறையை அளிப்பதை பரிசீலனை செய்வதாக குறிப்பிட்டார்.

அதன்பிறகு முக்கிய வளர்ச்சி யென்றால் 1929ல் லாகூர் காங்கிரஸ் மாநாடு கூடியது. இம்மாநாடு இந்திய தேசிய போராட்டத்திற்கு அதிக தீவிரத்தை அளித்தது. ஜவஹர்லால் நேருவின் தலைமையில் நடந்த மாநாட்டில் காங்கிரஸ் மற்றும் தேசிய போராட்டத்தின் முக்கிய நோக்கமான ஜனவரி 26ஐ விடுதலை நாள் என்று அறிவிக்கப்பட்டது. இம்மாநாடு ஆங்கிலேயருக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்டமறுப்பு போராட்டத்தின் முழுமையான பொருப்பை காந்திஜி அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அவ்வரலாற்று நாளின் மகத்துவத்தை எடுத்துக்காட்ட விடுதலை இந்தியாவின் அரசியலமைப்பை 1950 ஜனவரி 26ஐ அங்கீகாரம் செய்தது.

## சட்ட மறுப்பு இயக்கம்

1930 பிப்ரவரியில் காங்கரிசின் பொதுசபை உறுப்பினர்கள் சபர்மதி ஆசிரமத்தில் கூடி சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தத் தீர்மானித்தனர். காந்தி 1930 மார்ச்சு 2ல் 11 அம்சங்களைக் கொண்ட கோரிக்கைகளின் கடிதத்தை வைஸ்ராயிக்கு எழுதினார். ஒரு வேளை அரசாங்கம் இதற்கு தவறினால் வரிசெலுத்துவதுடன் மக்கள் சட்டமறுப்பு இயக்கத்தை தொடர்வதாக காந்தியடிகள் அறிவித்தார். வைஸ்ராய் இக்கடிதத்திலுள்ள கோரிக்கைகளை நிராகரித்தார். அதன் காரணமாக 1930 மார்ச்சு 12ல் தன்னை பின் தொடர்பவர்களுடன் ஆசிரமத்திலிருந்து குஜராத் கடற்கரையில் சுமார் 375



**உப்பு சத்தியாகிரகம்**

©KTBS Not to be republished

கிலோமீட்டர் தூரத்தை கடந்தார். ஏப்ரல் 6ல் காந்தி தண்டியை அடைந்து ஆங்கிலேயருக்கு எதிராக தண்டியில் உப்பை தயாரித்ததின் மூலம் சட்டத்தை மீறினார். சரக்கா (இராட்டினம்) இப்போராட்டத்தில் மிகவும் புகழ் பெற்றது ஆயிரக் கணக்கான மக்கள் காந்தியடிகளுடன் சேர்ந்து போராடத்தில் பங்கேற்றனர். உப்புசத்திய கிரகத்திற்கு பிறகு ஏப்ரல் 6 முதல் 13வரை தேசிய போராட்டவாரம் கடைப்பிடித்தனர்.

சட்டமறுப்பு இயக்க போராட்டத்தில் காந்தியடிகளுடன் பங்கேற்ற விஜயலட்சுமி பன்டிட், கமலாநேரு, வல்லபாய் பட்டேல், இராஜ கோபாலாச்சாரியார், பாபு இராஜேந்திர பிரசாத் முதற்கொண்டு ஆயிரக்கணக்கான மக்களை ஆங்கிலேயர் கைது செய்தனர். இப்போராட்டம் நாட்டின் அனைத்து பாகங்களிலும் பரவியது.

***அறிந்து கொள்ளுங்கள்***

- *சபர்மதிமுதல் தண்டி வரை நடந்த நடைப்பயணத்தில் கருநாடகத்தின் 18 வயது இளைஞர் தருண மைலார மகாதேவப்பாவும் கூட பங்கேற்றது விசேஷமானது.*
- *கருநாடக காங்கிரசும் கூட ஆர்.ஆர்.திவாக்கர், கௌஜலகி ஹனுமந்த ராயரு, கங்சாதார தேஷ்பாண்டே, ஹர்டிக்கர், மஞ்சப்ப மற்றும் கருநாடு சதாசிவராயரை உட்கொண்ட சத்தியகிரக குழுவை ஏற்படுத்தி காருவார் மாவட்டத்திலுள்ள அங்கோலா தாலுக்காவில் உப்பு சத்திய கிரகத்தைத் தொடங்கினர்.*

இதனிடையே இதற்கு முன் கூறியவாறு லண்டனில் இருந்த இந்திய மக்கள் பிரதநிதிகளின் சபை 1930ல் அழைக்கப்பட்டது. இது முதலாவது வட்டமேஜை மாநாடாகும். இதில் இந்தியர்களை தவிர்த்து அரசாங்கம் ஒரேமுகமாக தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது என்பது தெளிவாயிற்று. இம்மாநாட்டில் முதன்முதலாக தீண்டாமை பிரத்தியோகமாக பிரதிநிதிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. இம்மாநாட்டில் பங்கேற்க அச்சந்தர்ப்பத்தில் சிறையிலடைக்கப்பட்ட காந்தியடிகள் மற்றும் பல இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் காங்கிரஸ் மற்றும் காந்தியடிகள் இம்மாநாட்டில் பங்கேற்பதை நிராகரித்தனர். இம்மாநாட்டில் உள்நாட்டு சமஸ்தானங்களின் பிரதிநிதிகள், வெவ்வேறு சமூக அமைப்பின் முக்கிய நபர்களாகியுள்ள டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் எம்.ஆர்.ஜயகர், தேஜ்பகதூர் சப்ரு, மகமது அலிஜின்னா, சீனிவாச சாஸ்த்திரி முதலானவ்ரகள் பங்கேற்றனர். டொமினியன் ஸ்டேட்ஸ் பொருப்பாளர்கள், அரசு மற்றும் மதத்தொடர்பான பிரதிநிதிகள் முதலானவர்கள் இம்மாநாட்டில் பங் கேற்றனர். ஆனால் இந்திய தேசிய காங்கிரஸ் முதலாவது வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்காததின் பின்னணியில் மாநாடு முழுமையடையவில்லை. இந்திய தேசி காங்கிரஸின் மனதை மாற்றி வட்டமேஜை மாநாட்டின் நோக்கங்களை வெற்றி பெறச் செய்யும் பார்வையில் காந்தி மற்றும் வைஸ்ராய் இர்வின் இடையில் ஒப்பந்தம் ஒன்று மார்ச்சு 1931ல் செய்யப்பட்டது. இதனை காந்தி இர்வின் ஒப்பந்தம் என்று இதனை அழைப்பார்கள். இதன்பலனாக காங்கிரஸ் கட்சி சட்டமறுப்பு இயக்கத்தை நிருத்தி,

©KTBS Not to be republished

இரண்டாவது வட்டமேகை மாநாட்டில் பங்கேற்க தீர்மானித்தது. மகமது அலி ஜின்னா மற்றும் டாக்டர் பீ.ஆர். அம்பேத்கர் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர் அவர்கள் தலித் மக்களுக்கு தனி வாக்காளர் தொகுதி ஒதுக்கீடு கோரிக்கையை சமர்ப்பித்தார். இக்கோரிக்கையை காந்தியடிகள் ஒப்புக் கொள்ளவில்லை. இதனால் காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் அவர்களிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டன. எனவே இரண்டாம் வட்டமேஜை மாநாடு எந்த முடிவும் எட்ட முடியாமல் முடிவுற்றது. ஆனால் தலித் இனமக்களின் 'தனி வாக்காளர் தொகுதி' கோரிக்கையை ஏற்பதாக ஆங்கில அரசு அறிவித்தது இதனை எதிர்த்து காந்தியடிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அம்பேத்கரை சமாதானப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக பூனா உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையின் விளைவாக சில தொகுதிகள் தலித் இன மக்களுக்கான தனி தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மதத்தொடர்பான மசோதா 1932ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனை எதிர்த்து மகாத்மா காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். இச்சமயத்தில் அம்பேத்கர் அவர்களின் மனமாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன்பலனாக சாதாரண தொகுதிகளிலும் தலித்கள் போட்டியிடலாம் என முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஆங்கில அரசாங்கம் மையத்தில் ஒன்றுபட்ட அரசாங்கம் மாநிலங்களில் பிராந்திய அரசாங்கங்கள் அமைக்க குறிப்பிட்டது. இதன் பின்னணியில் மூன்றாவது வட்டமேஜை மாநாட்டில் 1932ல் அழைத்தது. அரசாங்கம் வெளியிட்ட ஏற்பாட்டை எதிர்த்த காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்கவில்லை. வட்டமேஜை மாநாட்டின் பலனாக ஆங்கில அரசு 1935ல் இந்திய அரசு சாசனத்தை நடைமுறைப் படுத்தியது. இச்சாசனம் இந்திய ஒருங்கிணைப்பு அமைப்பு மற்றும் பிராந்திய சுயதேவை. வாய்ப்புகளை உண்டாக்கியது. இந்தியருக்கு அரசியல் உரிமைகள் கிடைத்தன. இதனால் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தேர்தலில் போட்டியிட்டன. காங்கிரஸ் அருதிபெரும் பான்மையைப் பெற்றது. ஒருங்கிணைப்பு அரசை அமைத்தது. இந்நேரத்தில் இரண்டாவது உலக மகாபோர் ஆரம்பமானபோது ஐரோப்பாவின் அரசியல் நிலையின் பின்னணியில் இந்தியாவின் வைஸ்ராய் ஒரேகட்சியாக இந்தியாவின் சார்பாக ஜெர்மணிக்கு

எதிராக போர் தொடுக்க அறிவித்தான் இதனை காங்கிரஸ் எதிர்த்தது அமைசரவையிலிருந்து வெளியேறியது. வைஸ்ராயின் முடிவை எதிர்த்து காந்தியடிகள் சுயமாக சத்தியாகிரகத்தை அறிவித்தார். அப்பொழுது இந்தியர்களை திருப்தி படுத்த ஸ்ட்ராபர்டு கிரிப்ஸ் அவரை சமாதானத்திற்காக அனுப்பினர்.


வெள்ளையனே வெளியேறு இயக்கம்


## வெள்ளையனே வெளியேறு இயக்கம் *(1942)*


ஆங்கில அரசாங்கம் இந்திய தலைவர்களுடன் சமாதானம் பேச

அனுப்பப்பட்ட ஸ்டாறபர்டு கிரிப்ஸ் குழு 1942ல் சில சலுகைகளை இந்தியரின் பார்வைக்கு வைத்தது.

இந்தியாவுக்கு ஆட்சியுரிமை நிலைமை மற்றும் ஒரு குழுவை அமைப்பது போன்ற சில ஆலோசனைகளாகும் அவை புதிய அரசியலமைப்பில் இந்தியரின் கூட்டுமுறையை சேர்ப்பது அல்லது சேராமலிருக்கும் சலுகையை அளித்தது. இவ் ஆலோசனைகளை காங்கிரஸ் ஒப்புக் கொள்ளாமல் 'குவிட் இண்டியா' போராட்டத்திற்கு அழைப்பை விடுத்தது ''வேள்ளையனே வெளியேறு'' என்பது குவிட் இண்டியா இயக்கத்தின் நோக்கமாகும்.

காந்தியடிகள் நாட்டுமக்களுக்கு 'செய் அல்லது செத்துமடி' (Do or Die) என்று அழைப்பை விடுத்தார். இவ்வழைப்பின் பின்னணியில் காந்தியடிகள், நேரு, இராஜேந்திரபிரசாத், அப்துல் காலம் ஆசாத், சர்தார் வல்லபாய் பட்டேல், ஆசார்யா கிருபாளனி, கஸ்துரிபா காந்தி, முதலிய தலைவர்களை ஆங்கில அரசாங்கம் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்திய தேசிய காங்கிரசின் ஏறக்குறைய தலைவர்கள் அனைவரையும் சிறையில் அடைத்த காரணத்தினால் இந்திய தேசிய சாங்கிரஸ் அல்லாத குழுமங்கள் முக்கிய நிலவறைகளிலிருந்தன. புதிய தலைவர்கள் உதயமாக இப்போராட்டம் இடமளித்தது.


வல்லபாய் பட்டேல்


மௌலான அப்துல் கலாம் ஆசாத்

இச்சந்தர்ப்பத்தில் போராட்டத்தின் தலைமையை ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இவர் காங்கிரஸின் சமாஜவாதி பிரிவின் முக்கிய தலைவராவார். இவர் தம்முடைய ஆதரவாளர்களுடன் நாட்டின் வெவ்வேறிடங்களில் புரட்சிகரமான செயல்பாடுகளை தொடங்கினார். சமாஜவாதிகள் 'தி ஃபிரிடம் ஸ்ட்ரகல் ப்ரன்ட்' என்னும் தஸ்தாவேஜ் அல்லது ஆவணம் மூலம் தம்முடைய செயல்திறன்களை நடைமுறைப்படுத்தினார். இதன் மூலமாக அவர் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தார். மக்களுக்கு போராட்டத்தில் பங்கேற்க அழைப்புவிடுத்தார். பணத்தை ஒன்று கூட்டினார். இதன் மூலமாக திக்கற்ற போராட்டத்திற்கு ஆதரவு அளித்தவர் இவராகும். இன்பமான செய்தியென்றால் இச்சந்தர்ப்பத்தில் இந்திய விடுதலைக்காக நடைபெற்ற போராட்டம் இந்தியாவின் எல்லையைக் கடந்து வெளிப்பகுதிகளிலும் ஆரம்பமாயிற்று. இந்நிலையில் சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் முயற்சி இணையற்றது. 1937ன் தேர்தல்களுக்குப்பிறகு அரசில் பங்கேற்பதில் முஸ்லீம்லீக் அரசின் அமைப்பிலிருந்து கைவிடப்பட்டது. 1939ல் இந்திய அரசு ஓரேமனதாக இரண்டாவது உலகமகா யுத்தத்திற்கு இந்தியாவை பங்கேற்குமாறு செய்த சந்தர்ப்பதில் அமைச்சரவையலிருந்து காங்கிரஸினர் அனைவரும் வெளியேறியபோது முஸ்லீம் லீக் ''விமுக்தி திவஸ்'' ஐ 'விடுதலை நாள்' கொண்டாடியது. இவ்வாறு முஸ்லீம்லீக் ''இந்தியாவை விட்டு வெளியேறுங்கள்'' இயக்கத்தில் பங்கேற்கவில்லை. அது இந்தியாவின் பிரிவுக்கு குறிப்பை முன்வைத்தது.

©KTBS Not to be republished

*அறிந்து கொள்ளுங்கள்*

***ஈசூர் நிகழ்வு ;*** *மைசூர் சமஸ்தானத்தில் சிவமொக்கா மாவட்டத்தில் சிகாரிபுராவுக்கு அருகில் ஒரு கிராமம் அதன் பெயர் ஈசூர். சுதந்திர போராட்டத்தில் முக்கிய இட்த்தைப் பெற்ற இக்கிராமத்திற்கு 'சுதந்திர கீராமம்' என்ற பெயர் இடப்பட்டது. இங்குள்ளவர்கள் அனைவரும் காந்தி தொப்பியை அணிவார்கள் அதிகாரிகள் கிராமத்திற்குள் நுழைய அனுமதி இல்லை. ஆனால் 1742ல் அங்கு வந்த அதிகாரிகளுக்கு தொப்பி அணிய வற்புருத்தினர். இதனை எதிர்த்த அதிகாரிகளுடன் ஒரு போலிசும் வந்திருந்தான். அவன் அவ்வூர் மக்கள் மீது துப்பாக்கியால் சுட்டான். அதனால் கொதித்தெழுந்த அவ்வூர் மக்கள் அவனைக்கொன்றுவிட்டனர். இதனைவரலாற்றில் ஈசூர் நிகழ்வு என்று அழைப்பார்கள்.*

## உழவர் மற்றும் தொழிலாளர்களின் போராட்டங்கள்

விடுதலைப் போராட்டத்தில் உழவர் மற்றும் தொழிலாளர் அமைப்புகளும் பெரும்பங்காற்றின. அவற்றுள் சில காங்கிரஸ் இயக்கத்தாலும் மற்றும் சில மார்க்சீசிய கொள்கைகளாலும் தூண்டப்பட்டனர். ஆங்கில ஆட்சியின்போது உழவர் பெருங்குடிமக்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் ஐரோப்பா தோட்டப் பண்ணையாளர்கள் ஆகியோருக்கு எதிராக புரட்சிசெய்தனர். அவர்கள் அவரிச் செடியை (இண்டிகோ) பயிரிட சம்பராயண மாவட்டத்தினர் மறுத்தனர். அவர்கள் நிலவரிக்கு எதிராக போராட்டங்கள் நடத்தினர். காந்தியடிகள் சத்தியாகிரகம், மேற்கொண்டு வரியை நீக்குமாறு ஆங்கிலேயரை வற்புறுத்தினர் வரியை ஆங்கிலேயர் ரத்து செய்தனர்.

நாட்டு விடுதலைப் போராட்டத்தின் ஒருபகுதியாக உழவர்களையும் இணைத்துக்கொண்டு காங்கிரஸ் இயக்கம் போராட முயற்சித்தது. சம்பராயணா, கேத்தா மாப்பிள்ளை மற்றும் பிற இடங்களில் ஏற்பட்ட உழவர்களின் போராட்டத்தில் காந்தியடிகள் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தார். ஒத்துழையாமை இயக்கம் சட்டமறுப்பு இயக்கம் மற்றும் வெள்ளையனே வெளியேறு போன்ற இயக்கங்களில் உழவர் பிரச்சனைகள் இணைக்கப்பட்டிருந்தன. கிஸான் சபை அமைப்பு மூலம் பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. அப்போராட்டங்கள் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாகவும் சில சமயங்களில் எதிர்ப்பாகவும் அமைந்தன. தெலுங்கானா விவசாயிகள் புரட்சி ஆந்திரா ரெட்டி பண்ணையாளர்களுக்கு சவாலாக அமைந்தது வங்காள உழவர்கள் எய்த்து பிழைக்கும் நிலப்பிரப்புகளுக்கு எதிராக வெகுண்டெழுந்தனர் மகாராஷ்டிராவில் குறைந்த ஊதியத்திற்கு எதிராக உழவர்கள் போராடினர் இப்போராட்டங்களின் விளைவாக கடன்தள்ளுபடி சட்டம் அறிமுகம் படுத்தப்பட்டது.

## தொழிலாளர்களின் ஆர்பாடங்கள் :

1827ல் தொழிலாளர் இயக்கம் கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் குழுவாக இணைந்து சணல் தொழிற்சாலை, நெசவுத் தொழிற்சாலை, மற்றும் புகைவண்டி நிலையம் ஆகியத் துறைகளில் தங்களின் உரிமைக்காகப் போராடத் தொடங்கினர். இரவில் வண்டி சுமை தூக்கும் தொழிலாளர் சங்களுக்கு அதிகக் கூலியை வழங்குமாறு ஆங்கில அதிகாரிகளுக்கு எதிராக போராட்டம் நடத்தினர். கல்கத்தாவில் அச்சக ஒன்றியம் மற்றும் மும்பை நெசவுத் தொழிலாளர்களும் இணைந்து தேசிய விழிப்புணர்ச்சியை

©KTBS Not to be republished

ஏற்படுத்தினர். சென்னை தொழிலாளர் சங்கம் ஏற்படுத்தப்பட்டது தொடர்ந்து பல தொழிலாளர்கள் சங்கங்கள் தோன்றின தொழிலாளர் இயக்கங்கள் காங்கிரசுக்கு ஆதரவு அளித்தன 1921ல் வாணிக சங்க சட்டம் நடைமுறைக்கு வந்தது.

### பழங்குடியினரின் இயக்கங்கள் :

கிழக்கிந்திய கம்பனியால் கொண்டுவரப்பட்ட வரி மற்றும் வனச்சட்டம் பழங்குடி இனத்தவரை வெகுண்டெழுந்து புரட்சி செய்யத் தூண்டியது. பழங்குடி இனமக்கள் தங்களின் சமயக்காரணங்களுக்காக தங்களுடைய பூர்வீக வரலாற்று பெருமையை நிலைநாட்ட அவர்கள் ஆங்கில குடியேற்றத்தை எதிர்த்தனர். பழங்குடி இனமக்களின் போராட்டங்களில் சாந்தலா மற்றும் முண்டா இயக்கங்கள் மிகவும் புகழ்பெற்றவை.

சாந்தலா பழங்குடி இன புரட்சி இந்தியாவின் எதிர் இயக்கங்களில் முதன்மையானதாகும். சாந்தால பழங்குடி இனமக்கள் வங்காளம் மற்றும் ஒரிசாமலைக் குன்றுகளில் வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயரின் நிரந்தர வருவாய் திட்டம் நடைமுறைக்கு வந்தபோது இவ்வின மக்கள் ஆதரவற்று ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டனர். நிலங்கள் நிலப் பண்ணையாளர்களுக்கு உரியதாயிற்று. நிலப் பண்ணையாளர்கள் பலவழிகளில் பழங்குடி மக்களுக்கு தீங்கை இழைத்தனர். நிலப்பண்ணையாளர்கள் வட்டிக்கு பணம்கொடுப்போர் மற்றும் ஆங்கில அரசு தாள முடியாத அளவுக்கு தொல்லை கொடுத்தது. சாந்தலா மக்கள் அமைதியை நேசிக்கும் மனப்பான்மையை கிழக்கிந்திய கம்பனி ஏய்த்தது. இதனால் வெகுண்டெழுந்த சாந்தலா இனமக்கள் இரகசிய கூட்டங்களை நடத்தி செல்வந்தர் மற்றும் உயர் குடி மக்களின் செல்வங்களை கொள்ளையடிக்க திட்டம் தீட்டினர். மகேஷ்லால் என்ற காவல்துறை அதிகாரியின் செயல்பாட்டால் இப்போராட்டம் மிகவும் தீவிரமடைந்தது. போராட்டக் காரர்கள் காவல் துறை அதிகாரியைக் கொன்றனர். இப்போராட்டம் பாகத், பகத்பூர், மற்றும் ராஜ்மகால் ஆகிய இடங்களில் மிகவும் தீவிரமடைந்தது. அதன் விளைவாக நிலப் பண்ணையாளர்களும் வட்டிக்கு பணம் கொடுப்போர்களும் தப்பிஓடினர். அரசு தன் இராணுவத்தை பயன்படுத்தி புரட்சியை ஒடுக்குவதில் வெற்றிபெற்றது. பல போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். சாந்தலாக்களின் புரட்சி முடிவடைந்தாலும், பல போராட்டங்கள் தோன்ற பேருதவியாக இருந்தது இதேவகையில் கோலர்கள் மற்றும் முன்டர்கள் ஆங்கிலேயர் மற்றும் பண்ணையாளர்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்தினர்.

**கோலர்கள் மற்றும் முன்டர்கள் பற்றி அதி விவரங்களை சேகரியுங்கள்.**

### சுபாஸ் சந்திரபோஸ் :

**பூர்விகம் :** ஒரிசாவின் கட்டக்கை சேர்ந்தவர்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தில் சுபாஸ் சந்திர போஸின் பங்கு ஒரு மைல்கல்லாகும். இந்திய மக்கள் சேவை தேர்வில் (ICS) நான்காவது இடத்தை (Rank) பெற்றார் நாட்டுப் பற்றுக்காரணமாக ஆங்கில அரசின் உன்னத வேலையை உதறிதள்ளி விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். இவரை மக்கள் அன்புடன் நேதாஜி என அழைத்தனர்.



சுபாஸ் சந்திரபோஸ்

©KTBS Not to be republished

காந்தியடிகளின் அமைதியான போராட்டத்திற்கு பதிலாக அயல் நாட்டில் வாழ்ந்து வந்த இந்தியர்களைக் கொண்டு, ஒன்று கூட்டி ஆங்கிலேயருக்கு எதிராக போராடும் முயற்சியிலிருந்தார். இவர் வேறுவேறு நாடுகளின் நகரங்களான வியன்னா, பெர்லின், ரோம், இஸ்த்தான்புல் போன்ற இடங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தாய் நாட்டிற்கு தம்முடைய ஆதாரவை அளிக்க உறுதி பூண்டார். ஐரோப்பாவில் உதித்த கம்யுனிஸ்ட் மற்றும் சமாஜ்வாதி அலை இந்தியாவிலும் காங்கிரஸ் கட்சியையும் கூட மாற்றத்திற்கு உட்படுத்தியது. காங்கிரஸுக்கு உள்ளேயும் கூட தெளிவான சமாஜவாதி இடது சாரியினர் காணப்பட்டனர். இதன் பின்னணியில் இந்தியாவில் 1934 வேளையில் ஜவஹர்லால் நேரு மற்றும் சுபாஸ்சந்திரபோஸ் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் உள்ளேயே காங்கிரஸ் சமாஜவாதி கட்சியை துவக்கினர்.

இந்திய தேசிய காங்கிரஸின் ஹரிபுர மாநாட்டில் காந்திஜியின் ஆதரவுடன் சுபாஸ்சந்திர போஸ் தலைவரானார். ஆங்கிலேயரின் போர் கொள்கை தயாருக்கு தொடர்பான மென்மை போக்கைக் கொண்டுள்ள காந்தியடிகள் மற்றும் ஆங்கிலேருடன் கடினத்தன்மையை கொண்டுள்ள சுபாஸ் அவர்களின் இடையே உள்ள நட்பில் விரிசல் உண்டாயிற்று. காந்தியடிகள் அனைத்து நாடுகளின் உதவியை இச்சந்தர்ப்பத்தில் கோராமலிருந்ததை ஆட்சேபித்தார்.

1938ல் காங்கிரசின் ஹரிபுர கூட்டத்தில் சுபாஸ்சந்திரபோஸ் அவர்கள் காந்தியடிகளின் விரோதத்தின் இடையேயிலும் காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார். அடுத்து வந்த நாட்களில் காந்தியடிகள் மற்றும் போஸ் அவர்களின் இடையே கருத்து வேறுபாடுகள் தீவிர படைந்தன. காங்கிரஸின் உள்ளிருந்த ஆங்கிலேயரை தீவிரமாக பின்தொடர வேண்டுமென சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் செயல்பாடுகள் மற்றும் காந்தியடிகளின் செயல்பாடுகள் பற்றி வெறுப்புற்று காங்கிரஸிலிருந்து வெளியேறி பார்வர்ட்பிளாக் என்னும் புதிய கட்சியைத் தொடங்கினார். இதுகாங்கிரஸுக்கு உள்ளே இருந்து முன்னேற்றம் மற்றும் தீவிரமான ஆசைகளை கொண்டுள்ளது. ஆங்கிலேயர் போருக்கு தயாரவதை மேலும் உலகளாவிய போரில் இந்தியா பங்கேற்பதை சுபாஸ்சந்திர போஸ் அவர்கள் எதிர்த்தார் இதன்பலனாக ஆங்கில அரசு சுபாஸ் சந்திர போஸ் அவர்களை சிறைப்படுத்தியது.

> ***இதனை அறியுங்கள் :***
> *ஜெர்மனியர் வருவதற்கு முன்பே இந்தியாவிடுதலை அடைய வேண்டும். ஐரோப்பாவில் இங்கிலாந்து பெற்ற ஒவ்வொரு அடியும் இந்தியாவில் கண்டிப்பாகக் குறையும்.* ***– சுபாஸ் சந்திரபோஸ்***

ஆங்கிலேயர் விரோதசக்திகளுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக போராட விரும்பி அவர் வீட்டு சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டு ஜெர்மனியை அடைந்தார். ஜெர்மனியின் சர்வதிகாரி ஹிட்லர் அவருக்கு அனைத்து உதவிகளையும் அளிக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். போஸ் அவர்கள் ஜெர்மனியில் இந்திய போர்கைதிகளை ஒன்று கூட்டி ‘ஆஜாத் ஹிந்து ரேடியோ மூலமாக தம்முடைய உரையை இந்தியருக்கு ஒலிபரப்பு செய்தார். போரில் ஜப்பானின் வெற்றியை அறிந்த அதனுடைய உதவியோடு இந்தியாவை விடுவிக்கும் சாத்தியதிதற்கு தொடர்பான இந்தியரை

©KTBS Not to be republished

ஒன்றுகூட்டிய ராஸ்பிஹாரி போஸ் அவர்களுடன் சுபாஸ் அவர்கள் கைகோர்த்தார். ராஸ் பிஹாரி போஸ் அவர்கள் டோக்கியோவில் உருவாக்கிய 'இன்டியன் இன்டிபென்டன்ஸ்லீக்'ன் படைப்பிரிவை இந்திய தேசிய சேனை (INA) என்று அழைத்தார். பிறகு வந்த நாட்களில் ஐ.என்.ஏ. தலைமையை சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டார். சுபாஸ் சந்திர போஸ் அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் 'தில்லிசலோ' என்று அழைப்பை விடுத்தார். எனக்கு இரத்தத்தை கொடுங்கள் உங்களுக்கு விடுதலையை அளிக்க உறுதியளிக்கிறேன். என்னும் அழைப்பை விடுத்தார். இந்திய தேசிய படையில் ஜான்ஸி ரெஜிமென்ட் என்னும் படைப்பிரிவு இருந்தது. கேப்டன் லட்சுமி ஹைகல் தலைமையை வகித்தார்கள்.

> ***இதனை அறியுங்கள் :***
> *இந்தியா மற்றும் 38 கோடி நாட்டு மக்களை விடுதலை அடைய செய் வேன் என்று தாய்நாட்டின் பெயரில் சபதமேற்போர் சுதந்திரம் பெற்றபிறகு சுதந்திர இந்தியாவுக்காக, என்னுடைய கடைசி சொட்டு இரத்தம் சிந்த நான் தயாராகிருப்பேன். –**சுபாஸ் சந்திர போஸ்***

சுபாஸ் அவர்கள் ரங்கூன் மூலமாக ஆங்கிலேயர் கையிலிருந்த தில்லியை வசப்படுத்திக் கொள்ள போர்வியூகத்தை உருவாக்கினார். அச்சமயத்தில் இந்தியாவிலிருந்து ஐ.என்.ஏ.க்கு சேர்க்கப்பட்ட ஆயிரக் கணக்கான, இளைஞர்கள் தில்லியை ஆக்ரமிக்க தயாராகிருந்தனர். இதன் பின்னணியில் சுபாஸ் அவர்களின் கட்டளைப்படி ஆயுத போராட்டத்தை அவர் பர்மா எல்லையில் தொடங்கினார். ஆங்கிலேயர் மற்றும் ஐ.என்.ஏ. இடையில் தீவிரமாக போர்நடைபெற இருந்த சந்தர்ப்பத்தில் சுபாஸ் அவர்கள் திடிரென விமான விபத்தில் உயிர் நீத்தார். பர்மாவின் தலை நகரமான ரங்கூன் ஆங்கிலேயரின் வசமானதால் ஐ.என்.ஏ. படைவீரர்களை ஆங்கிலேயர் சிறைப்படுத்தினர். பின்வந்த நாட்களில் காந்தியவர்களுடன் சேர்த்து காங்கிரஸின் ஏறக் குறைய தலைவர்கள் அனைவரையும், ஐ.என்.ஏ. படைவீரர்களை விடுதலை செய்வதற்கு காந்தியவர்கள் பாடுபட்டார்.

### *டாக்டர் பீ.ஆர். அம்பேத்கர் :*



டாக்டர் பீ.ஆர். அம்பேத்கர்

சமூகத்தில் சமமற்றதன்மையுடைய அரசியல் சுதந்திரம் பொருளற்றது என்று டாக்டர் பீ.ஆர். அம்பேத்கர் திடமாக நம்பினார். இந்தியாவிலுள்ள படிப்படியான முறையிலுள்ள இறுதி நிலையிலுள்ள மனிதனுக்கு சமுதாய மற்றும் பொருளாதார சுதந்திரம் கிடைக்காமலிருந்தால் அரசியல் சுதந்திரத்திற்கு பொருளில்லை. அது மிக பொய்த்தோற்றமாக மிகும் என்று அம்பேத்கர் அவர்கள் அறிந்திருந்தார். அவர் இந்தியாவை ஒரு அரசியல் எண்ணமாக பார்க்காமல் அதன் முழு முகத்தை அறிமுகப்படுத்தினார். இவர் ஜாதி முறையைப் பற்றி ஆய்வுநடத்தி அதனுடைய நாசத்திற்கு போராட்டங்களை உருவாக்கினார். தீண்டாமை அதிகளவு வாய்ப்புகளினால் வஞ்சிக்கப்படுவதை நிருபிக்க 'மஹத்' ஏரி மற்றும் 'காலாராம்'

©KTBS Not to be republished

ஆலய போரட்டங்களை ஏற்படுத்தினார். இவர் மூன்று வட்ட மேஜை மாநாடுகளில் பங்கேற்றார். தன்னுடைய பிரிவுகள் வெவ்வேறு வகையான அலங்கோலங்களினால் விடுதலைப் பெற தேவையான அரிய அறிவுரை, குறிப்புகளை அளித்தார். ஹரிஜனங்கள் மற்றும் தலித்களின் தலைமைத் தொடர்பாக காந்தியடிகள் மற்றும் அம்பேத்கரிடையே வேற்றுமைகள் உண்டாயிற்று, தலித்களின்பாதுகாப்புக்காக தனி தேர்தல் தொகுதிகளை ஒதுக்கியதால் காந்தி மற்றும் அம்பேத்கர் இடையேயான விவதத்திற்கு காரணமாயிற்று. இவர் பரோடா மகாராஜரின் கீழ் திவானாகிருந்தார். மும்பை லெஜிஸ்லேட்டிவ் கௌன்சலில் மற்றும் பிறகு வைஸ்ராய் எக்ஸிகியுடிவ் கௌன்சிலிங் மிகவும் தனி கவனத்துடன் பணியாற்றினார். அம்பேத்கர் காங்கிரஸ் கட்சியில் சேராமல் 'வெளியேற்றப்பட்டோர்' ஆதரசபை என்னும் குழுவையும் மேலும் 'சுதந்திர தொழிலாளர் கட்சி' என்னும் சுதந்திர கட்சியை அமைத்தார் 'கற்றோர் பாரதம்' 'ஜனதா' மூகநாயக, வெளியேற்றப் 'பட்டோர் இந்தியா' ஆகிய பத்திரிக்கைகளை வெளியிட்டார். கம்யூனிஸ்ட் மற்றும் சமாஜவாதி தோரணைகளினால் தூரத்திலிருந்த விவசாய தொழிலாளர் முன்னேற்றத்திற்காக இவர் உழைத்தார்.

சுதந்திர இந்தியாவின் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் இந்தியாவின் அரசியலமைப்பை உருவாக்க வேண்டியிருந்தது. அரசியல்மைப்பு சபையின் தலைவராக டாக்டர் பாபு இராஜேந்திர பிரசாத் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார். அரசியலமைப்பு வரைவு கமிட்டியின் தலைவராக டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களை அரசியலமைப்பு நிர்மான சபைக்கு அனைவரின் ஆதரவோடு தேர்வு செய்யப்பட்டார். அரசியல்மைப்பில் சமமான தன்மையை பிரதிபலித்து தீண்டாமை கடைப்பிடிப்பதற்கு எதிராக சட்டத்தின் பாதுகாப்பை ஏற்படுத்தினர். தீண்டாமை கடைப்பிடிப்பது தண்டனைக்குறியதென்று இந்திய அரசியலமைப்பு கூறுகிறது. சுதந்திர இந்தியாவில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் சட்ட மந்திரியாவார். நவீனம், நியாயமான மற்றும் மேற்கத்திய அறிஞர்களிடமிருந்து ஊக்கத்தைபெற்றார். சுதேசி அரசவேர்கள் பக்கம் நட்பைக் காட்டினார். சாதிமுறையிலிருந்து ஏமாற்றம் உள்ள இந்து மதத்தை தவிர்த்து இந்திய காலாச்சாரத்தின் பாகமாக ஜாதிமற்றும் சமுதாய சீர்கேடுகளை எதிர்த்து பௌத்த மதத்தில் சோந்தார். மார்க்ஸ் வாதம் எவ்வித மாற்றங்களை இரத்தம் மற்றும் இம்சைகளால் கொண்டு வரமுடியுமோ என்று அவர் நம்பினார். அதனை புத்தமதம் அறம், அமைதி மற்றும் அகிம்சையினால் அவற்றை பெறமுடியும் என்று நம்பினார். அவருடைய வாழ்நாள் சாதனைக்காக இந்திய அரசு அவருக்கு மரணத்திற்கு பிறகு 'பாரதரத்னா' என்னும் விருதை அளித்து கௌரவித்துள்ளது.

> ***அறிந்து கொள்ளுங்கள்***
> பத்திரிக்கை இல்லா தலைவன்
> இறக்கைகள் இல்லா பறவை.
> ***டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்***

*அம்பேத்கார் அவர்கள் பெற்ற கல்வி தொடர்பான பட்டங்கள் மற்றும் அவர் எழுதிய நூல்கள் பற்றிய விவரங்களை சேகரியுங்கள்.*

©KTBS Not to be republished


> ***இதனை அறியுங்கள் :***
>
> *மகாராஷ்டிராவின் 'மஹத்' என்னும் ஊரிலிருந்து ஏரி நீரை தீண்டததகாதவர்கள் பயன்படுத்துவதில்லை நீரின் பயன்பாட்டை ஊரின் தீண்டத்தகாதவர்கள் பயன்படுத்துமாறு ஏற்படுத்தப் போராட்டத்தை 'மஹத்' போராட்டமென்று அழைப்பார்கள். அவ்வாறே 'காலராம்' என்னும் ஆலயத்தின் உள்ளே நுழைய தீண்டத்தகாதவர்களுக்கு அனுமதி இல்லை. அங்கும் தீண்டத்தகாதவர்கள் ஆலயத்திற்குள் செல்ல புரட்சி திட்டத்தை அம்பேத்கர் ஏற்படுத்தினார். ஆனால் இவை மக்களிடையே விழிப்புணர்வு போராட்டங்கள் மக்களிடையே வெற்றிபெறவில்லை.*

## ஜவஹர்லால் நேரு :

பன்டித் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஹோம்ரூல் இயக்கத்துடன் விடுதலைப் போராட்டத்தில் பிரவேசித்தார். 1920ல் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் முக்கிய பங்காற்றினார் 1929ல் இந்திய தேசிய காங்கிரஸின் லாகூர் கூட்டத்திற்கு தலைமையேற்றார். அக்கூட்டத்தில் முழுமையான சுயராஜ்ஜியம் நோக்கத்தை அறிவித்தார். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை திரும்ப பெற்றதினால் நேரு அவர்கள் தம்முடைய நிராசையை வெளிப்படுத்தினார்.

நேரு அவர்களின் சிந்தனைகள் அரசியல் செயல்பாடுகளுக்கு புதிய சக்தியை அளி த்தன. இவர் கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களின் பால் ஈர்க்கப்பட்டார். இதன்பலனாக இந்திய தேசிய காங்கிரஸில் இடதுசாரிகளின் நோக்கங்கள் பிரபலமடைந்தன. இதன் பலனாக நேரு மற்றும் சுபாஸ் சந்திர போஸ் அவர்கள் காங்கிரஸ் பொதுவுடையை கட்சியை 1934ல் துவக்கினார்.

நேரு அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸின் 49வது மாநாட்டில் தலைமைதாங்கி நடத்தினார். காங்கிரஸ் அனைத்துலக அளவில் நடைபெற்ற காமன் வெல்த் மாநாடு, போரிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று உரைத்தது. 'சரக்க' மற்றும் 'ஹரிஜன்' இயக்கங்கள் அவ்வளவான விளைவுகளையளிக்க வில்லை யென்று இவர் வாதித்தார். இக்கூட்டத்தில் காந்தியடிகளின் முறையில் அவருடைய கௌரவம் குறைவாகவில்லைவெவ்வேறு இயற்கையான பிரபாவங்களின் விளைவைக் கொண்டு நேரு அவர்கள் அவற்றை பொருத்திக்கொள்வதன் மூலமாக சமமான எண்ணத்தை வெளியிட்டார். இப்பார்வை அவர் கடைப்பிடித்த அயல் நாட்டு கொள்கையான 'கூட்டுசேரா' கலப்பு பொருளாதார முறைகளில் நாம் தெளிவாக கிரகித்துக் கொள்ளலாம்.



ஜவஹர்லால் நேரு

50 வது தேசி காங்கிரஸ் மாநாட்டில் நேரு அவர்கள் தம்முடைய பொதுவுடைமை மற்றும் கம்னியுஸ்ட் கொள்கைகள் பற்றி மென்மையான தோரணையை அறிந்தார். காங்கிரஸ் இன்று இந்தியாவில் முழுமக்களாட்சியாக அமைந்துள்ளது மேலும் மக்க


©KTBS
Not to be republished

ளாட்சிக்காகவே போராடுகிறதையே தவிர்த்து பொதுவுடைமைக்காக இல்லை என்றார். தொழிற் மையம் மற்றும் புதிய இந்தியாவின் சிற்பியாக இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாகிருந்த நேரு அவர்களை நாம் காண்கிறோம். 'இரும்பு மனிதர்' என்று புகழ்பெற்ற இந்தியாவின் முதல் உள்ள நாட்டு மந்திரியாக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் அவருடைய மேற்பார்வையில் இந்தியாவின் அனேக சுதேசி சமஸ்த்தானங்கள் இணைவதற்கு நேரு அவர்கள் காரணமானவர்கள் ஆவர். பிறகு மொழிவாறு பிரதேசங்கள் உருவாக்கியதன் மூலமாக இந்தியாவுக்கு பல்வேறு வகைகளை ஒப்புவதாக தத்துவ அடித்தளம் அமைத்தார். முதலீடு மற்றும் பொதுவுடைமை தத்துவங்களை உட்கொண்ட கலப்பு பொருளாதார கொள்கையை நேரு அவர்கள் நவீன இந்தியாவின் வளர்ச்சிக்கு மைல்கல்லாகிருந்தது. மாபெரும் தொழில்மையம் நாட்டின் வளர்ச்சிக்கு அவசியம் என்று அவர் ஆழமாக நம்பினார். விடுதலைக்குப்பிறகு ஐந்தாண்டு திட்டங்கள் மூலமாக நாட்டின் வளர்ச்சிக்காக கனவு கண்டார். சிறப்பு வரமாக அமைந்த ஐந்தாண்டு திட்டங்களின் மூலமாக அடிப்படை மற்றும் மாபெரும் தொழிற் மயமாக்கலுக்கு இயக்குசக்தியை அளித்தது. இந்திய அணுசக்தியை பெறவேண்டுமெனும் நோக்கத்தினால் எச்.ஜி.பாபா அவர்களின் தலைமையில் அனுகூலமான அடித்தளத்தை அமைத்தார். அயல் நாட்டுக் கொள்கைக்கு தொடர்பாக இந்திய பிரிவுகளின் நீர்ம முறைப்படி விடுபட்டு கூட்டு சேராகொள்கையை கடைப்பிடித்தது. பஞ்ச சீல கொள்கைகள் ஆதாரத்தின் மீது சக்தி அரசியல் காரணங்களினால் தூரத்தில் மிகுந்து அமைதி வாழ்க்கையின் சூத்திரங்களை நடைமுறைக்குக் கொண்டுவர காரணமானவர். 1964ல் இவர் இயற்கை எய்தினார்.

**பண்டித ஜவஹர்லால் நேரு அவர் முதல் பிரதம மந்திரியாக ஏற்படுத்தி அயல்நாட்டுக் கொள்கை பற்றி அதிகளவில் விவரங்/லை சேகரியுங்கள்**

### *மஹமது அலி ஜின்னா*

மஹமது அலிஜின்னா 1906 இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். மேலும் தாதாபாய்நௌரோஜயவர்களின் தனி செயலாளராகவும் செயலாற்றினார். இவர் ஹோஹ்ரூல் லீகில் சேர்ந்தார் 1916ல் அனேக கூட்டங்களில் இந்து மற்றும் இசுலமினியரின் இடையில் ஒற்றுமை அவசியம் என்று கூறினார். முஸ்லீம்களின் அரசியல்வாதி என்றுநிழலாகிருப்பதினால் ஆங்கிலேயரின் வெகுமதியை அவர் எதிர்த்தார். ரௌலட் சட்டத்தை எதிர்த்து அவர் தம்முடைய சட்டசபை ஆலோசனைக் குழுவுக்கு இராஜினாம செய்வதாக கூறினார். வட்டமேஜை மாநாடுகளில் ஜின்னா தான் ஒரு தேசியவாதி முஸல்மான் என்று அறிவித்தார். 1937ல் தேர்தலுக்குப்பிறகு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் கலப்பு அரசாங்கத்தை ஏற்படுத்துவதில் தோல்வியுற்ற ஜின்னா தன்னுடைய செயல்திறனை மாற்றியமைத்துக் கொண்டார். ஆங்கிலேயர்



*ஜின்னா மற்றும் காந்திஜி*

©KTBS Not to be republished

விடுதலை அளிக்கும் சூழ்நிலை நெருங்கும் நிலையில் ஜின்னா பாகிஸ்தான் என வெவ்வேறு வகைகளில் தீவிரமாக்கினார். ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறும் சமயத்தில் நாட்டை பிரித்து பாகிஸ்தானை பெற்றார்.

### *இந்திய பிரிவினை :*

விடுதலைப் போராட்டம் முழுக்க ஒன்றுபட்ட இந்தியாவை அடைவதையே காங்கிரஸ் ஆதரித்தது. ஆனால் மறுகோணத்தில் முஸ்லீம் லீக் தேர்தலின் போது தனித் தொகுதிகளையும் இரு நாட்டு கொள்கைகளிலேயே நம்பிக்கை கொண்டிருந்தது. 1940ல் நடைபெற்ற முஸ்லீம் லீக்கின் லாகூர் மாநாட்டில் ஜின்னா இந்து மற்றும் முஸ்லீம்கள் ஒரே நாடாக இருப்பதற்கு சாத்தியமில்லை என்றார். இரண்டாம் உடகப்போர் முடிந்து இங்கிலாந்தில் லேபர்கட்சி அதிகாரத்திற்கு வந்தது. இது இந்தியாவில் அரசியல் இக்க ட்டை சமப்படுத்தும் செயலை மேற்கொண்டது. இரண்டாம் உலகப்போரின்போது கிரிப்ஸ் குழுவின் ஆலோசனைகளுக்கும் அமைச்சரவை பணிதிட்டங்களுக்கும் ஆதரவளித்தது. இந்து மகாசபை நேரு மற்றும் காந்தியடிகள் ஆகியோரால் பிரிவினை எதிர்க்கப்பட்டது. இந்தியாவுக்கு பெடரல் மாதரி அரசை குறிப்பிட்டது. அரசியலமைப்பு உருவாக்க சபை அழைக்கப்பட்டது மற்றும் இடைக்கால தேசிய அரசை துவக்க சிபாரிசு செய்தது. ஆனால் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் இடையே இடைக்கால அரசு அமைக்கும் முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டது. முஸ்லீம்களுக்காக தனிநாட்டிற்காக 1946 ஆகஸ்ட் 16ல் நேர் செயலாக்க தினம் (Direct Action Day) அழைப்பு அளி த்தது. இதனால் நாடு முழுவதும் வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றன. டாக்டர் பாபு இராஜேந்திர பிரசாத் தலைமையில் சேர்ந்த அரசியலமைப்பு சபையில் முஸ்லீம் லீக் பங்கேற்கவில்லை. இந்து மற்றும் முஸ்லீம் பிரிவினையை உண்டாக்கும் சக்தியை ஆங்கிலேயர் கொண்டிருந்தனர். வங்காள பிரிவினை 1909ன் சட்டப்படி நடைமுறைப் படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயர் தம்முடைய அரசியல் சக்தியை காப்பாற்றிக் கொள்ளும் முயற்சிகள் செய்ததை இங்கு காணலாம் செய்யப்பட்ட பிரிவினையின் தேவைகள் நாடுகளின் சுதேசி பிரிவுகளில் முக்கிய இடத்தை வகித்தது.

காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீகின் தொடர்பு மிகவும் தாழ்நிலையில் கெட்டிருந்தது. இச்சமயத்தில் ஆங்கில அரசு விரைவில் அதிகார உரிமையை மாற்றித்தருவதாக கூறி, 1946 மார்ச்சில் லார்டு மவுன்ட் பேட்டன் அவரை இந்தியாவுக்கான வைஸ்ராயாக அனுப்பியது.

மவுன்ட் பேட்டன் அவர்கள் காந்தியடிகள் ஜின்னா மற்ற இதர தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தியாவை பிரிக்கும் யோசனையை உருவாக்கினார். 1947ல் ஜுலை மாதத்தில் இந்தியா விடுதலை மசோதா சட்ட வடிவை பெற்றது. 1947ல் ஆகஸ்ட் 15 அன்று இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்னும் இரண்டு தனி நாடுகள் உதயமாயின. இந்நாட்களில் குழு இந்நாடுகளின் எல்லைகளை அமைத்தது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக பதவியேற்றார்.

1948 ஜனவரி 30 அன்று பிரார்த்தனை சபைக்கு சென்று கொண்டிருந்தபோது காந்திஜியைப் நாதுராம் கோட்ஸே என்பவன் சுட்டுக் கொன்றான்.

©KTBS Not to be republished

# பயிற்சிகள்

## I. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. காந்திஜி __________ என்னுமிடத்தில் பிறந்தார்.
2. ஜாலியன் வாலாபாக் படுகொலை __________ சட்டத்திற்கு எதிரானது.
3. அலி சகோதரர்கள் நடத்திய போராட்டம் __________
4. முஸ்லீம்களுக்கு தனி நாடு கோரிக்கையை __________ அவர்கள் வெளியிட்டார்.
5. 1929 லாகூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் மாநாட்டில் __________ தலைவராகிருந்தார்.
6. மஹத் மற்றும் காலராம் ஆலய போராட்டத்தை ஏற்படுதிதயவர் __________
7. இந்திய தேசிய ராணுவ ஜான்ஸி பிரிவுக்கு தலைமை தாங்கியவர் __________
6. உப்பு சத்தியாகிரகத்தை காந்தியடிகள் __________ என்னும் இடத்தில் நடத்தினார்.
9. வெள்ளையனே வெளியேறு இயக்கம் __________ நடைபெற்றது.

## II. கோடிட்ட இடங்களில் கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையை தேர்ந்தேழுதுக.

1. முதல் வட்டமேஜை மாநாடு __________ ஆண்டு நடைபெற்றது.

   எ) 1930 பி) 1932 சி) 1931 டி) 1942

2. சுயராஜ்ய கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு __________

   எ) 1924 பி) 1922 சி) 1929 டி) 1906

3. இந்திய தேசிய காங்கிரஸின் ஹரிபுரா மாநாட்டின் தலைமையேற்று நடத்தியவர் __________.

   எ) சர்தார் வல்லபாய் பட்டேல் பி) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
   சி) லாலா லஜிபதிராய் டி) சுபாஸ் சந்திரபோஸ்

4. இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்டவர் __________

   எ) பக்தசிங் பி) சந்திர சேகர ஆஜாத்
   சி) அப்துல் கலாம் ஆசாத் டி) சர்தார் வல்லபாய் பட்டேல்

## III. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடையளி.

1. காந்தியடிகளின் போராட்டத்திற்கு பயன்படுத்திய ஆயுதங்கள் யாவை?
2. ஒத்துழையாமை இயக்கத்தின் நிகழ்ச்சி நிரல்களின் பட்டியல் தயாரிக்கவும்.
3. வங்காள பிரிவுக்கான காரணங்கள் யாவை?

©KTBS Not to be republished

4. சௌரி சௌரா நிகழ்ச்சியை விவரி.
5. உப்பு சத்தியாகிரகம் பற்றி எழுதுக.
6. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் தோல்விக்கான காரணங்கள் யாவை?
7. இந்திய சுதந்திரப்போராட்டத்தில் முக்கியமாக செயல்பட்ட தீவிரவாதிகளின் பெயர்களை எழுது.
8. இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டின் விளைவுகள் யாவை?
9. விடுதலைப் போராட்டத்தில் சுபாஸ் சந்திர போஸின் பங்களிப்பை எழுதுக.
10. இந்திய சுதந்திர போராட்டத்தில் பழங்குடி மக்களின் பங்களிப்பை எழுதுக.
11. நேரு பிரதமராக பதவிஏற்றபின் நாட்டுக்கு ஆற்றிய பணிகள் யாவை?

## IV. செயல்பாடுகள் :

1, விடுதலை போராட்ட வீரர்களின் படங்களை சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும்.
2. இணையத்தில் ஜாலியன் வாலாபாக், தண்டியாத்திரை போன்றவற்றிற்கு தொடர்பான படங்களை சேகரித்து அவற்றிற்கான விவரங்களை எழுதுக.
3. காந்தியடிகளின் சத்தியாகிரகம் மற்றும் அகிம்சையைப் பற்றி பேச்சுப்போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
4. இந்திய விடுதலைப்போராட்டத்தில் சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் எண்ணங்களைப் பற்றி கட்டுரை எழுதுக.

## V. செயல் திட்டம் :

1, விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்ற வகையில் நாடகம், பட்டி மன்றம் போன்ற போட்டிகளை ஏற்படுத்துக.

* * * *

©KTBS Not to be republished

## அத்தியாயம் 9

## விடுதலைக்குப் பின் இந்தியா

### இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.

- இந்திய பிரிவுனைகளின் விளைவுகள்.
- அகதிகளின் பிரச்சனைகள்.
- மாநிலங்களின் மறு சீரமைப்பு.
- அரசு அமைத்தலில் பிரச்சனைகள்.
- சமஸ்த்தானங்களின் இணைவு.

1947 ஆகஸ்ட் 15 இந்தியா தன்பங்குக்கு விழாக்கோலம் பூண்டது அதனுடன் சங்கடமான சந்தர்ப்பமும் ஏற்பட்டது. விடுதலை என்பது கணக்கிலடங்கா மக்களின் தியாகம் மற்றும் வீரர்கள் தம் இன்னுயிரை ஈந்து விடுதலை என்னும் கனியை பறித்தனர்.

நாட்டின் பிரிவினையால் பல்வேறு பிரச்சனைகள் பிறப்பெடுத்தன. இந்த அறை கூவல்களை புதிய அரசு எவ்வாறு எதிர்கொண்டது என்பதை அறிவதற்கு முன் அது உண்டாக்கிய விளைவுகளை சிந்தித்து பார்க்க வேண்டும்.

முதலாவதாக நாட்டின் பிரிவினை புதிய சங்கடங்களை உண்டாக்கியது. நாடு வகுப்பு கலவரங்களால் பாதிக்கப் பட்டது. இரண்டு புதிய நாடுகளால் மில்லியன் கணக்கில் மக்கள் தங்களுடைய புதிய வாழ்க்கையின் நம்பிக்கையால் தம்முடைய நாடுகளை தேர்ந்தெடுக்கத் தொடங்கினர். இந்தியாவுக்கு வந்த வீடிழந்தவர்களுக்கு உணவு மற்றும் அவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை அளிப்பதே மிகப்பெரிய பிரச்சனையாகிருந்தது. பாகிஸ்தானுக்கு சென்றவர்களை விட இந்தியாவுக்கு வந்தவர்கள் எண்ணிக்கை அதிகமாகிருந்தது.

இரண்டாவதாக சுதேசி சமஸ்த்தானங்களை ஒருங்கிணைப்பது மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுத்தது. சுமார் 565 சிற்றரசர்களின் சமஸ்தானங்களில் ஏறக்குறைய சமஸ்தானங்கள் சந்தேகத்தால் தாமதமாக இந்திய ஐக்கியத்துடன் இணைந்து கொண்டன. ஆனால் வடக்கில் காஷ்மீர் ஜனாகட் மற்றும் தெற்கில் ஹைதராபாத், சமஸ்தானங்கள் இணையும் செயலாக்கத்திற்கு எளிதாக ஒப்பவில்லை. சர்தார் வல்லபாய படேல், இதனை ஒரு சவாலாக ஏற்று வெற்றியைப் பெற்றார். இதனால் உள்நாட்டின் பாதுகாப்பு காப்பாற்றப்பட்டது. இதனுடன் தேசிய ஒருமைப்பாட்டை சாதிக்கும் ஒரு புதிய செயலுருவம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

மூன்றாவதாக பிரிக்கப்பட்ட இந்தியாவின் பொருளாதாரத்தின் மீது பெருமளவு தாக்கம் ஏற்பட்டது. வேளாண்மை, தொழிற்சாலை மற்றும் வணிகம் வளையங்களை மறு பரிசீலனை செய்து அவற்றுக்கு ஸ்திரத்தன்மை கொடுக்க வேண்டியதாயிற்று.

இவ்வமைப்புகளை ஆதாரமாகக் கொண்டு சார்ந்துள்ள சமுதாயங்களுக்கு புதிய விதிகளை நடைமுறைப் படுத்துவதன் மூலமாக நம்பிக்கையை உண்டாக்க வேண்டி இருந்தது. ஏனென்றால் புதிய நாட்டில் குடிபேறும் சக்தி சுமார் 250 ஆண்டுகள் அளவில் இந்தியாவின் செல்வவளங்கள் தொடர்ச்சியாக சுரண்டப் பட்டது. தாதாபாய் நவரோஜியவர்கள் தம்முடைய 'வடிகால் கொள்கையில்' இவ்விஷயங்களைப் பற்றி விரிவாக விவாதித்துள்ளார்.

© KTBS Not to be republished

நான்காவதாக இந்தியா தன்னுடைய அரசியல்சாசன சட்டத்தை புதியதாக உருவாக்கம் செய்வது ஒரு அறைகூவலாகிருந்தது. அரசியலுக்கும் மற்றும் ஆட்சிமுறைக்கு சட்டத்தினடியில் இந்திய தன்னுடை ஸ்திர தன்மையை அறிந்து கொள்வதுடன் மக்களுக்காக குடியரசு உதயமாக வேண்டி இருந்தது. டாக்டர். பீ.ஆர். அம்பேத்கர் அவர்களின் தலைமயில் அமைக்கப்பட்ட அரசியல் சாசன வரைவுக்குழு இந்தியாவுக்கு சிறப்பான ஒரு அரசியல் சாசனத்தை உருவாக்கியது. இதன் மூலமாக செயலகம், மக்க ளவை, மற்றவை நீதியகம் போன்ற நிறுவனங்களை உட் கொண்டிருந்தது.

ஐந்தாவதாக இந்தியா நீண்டகாலம் போராடிபெற்ற விடுதலையை எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்ள வேண்டி இருந்தது. இதன் பின்னணியில் தன்னுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளை வலிமையாக்கும் வழிமுறைகளை அறிந்து கொள்ள முனைந்தது இன்று இந்திய இராணுவத்தின் முன்உலக்கின் எந்த ராணுவமும் நிகரில்லை என்று கூறும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

ஆறாவதாக இந்தியா மதம் மற்றும் பாலினம் தொடர்பான வடிவத்தில் சமமற்றதன்மையை நீக்கி புதிய வழிமுறைகளை கண்டு கொள்வது தவிர்க்க முடியததாக இருந்தது. இதனுடன் புதிய நிதிக் கொள்கை ஏற்பாடு, அயல்நாட்டுறவு, போன்ற சவால்களை எதிர் கொள்ள வேண்டியதாயிற்று. இவையனைத்துக்கும் பரிகாரம் தேவை. இந்தியா உலகின் மாபெரும் குடியரசு நாடக மிளிர்கிறது.

**வகுப்புக் கலவரங்கள் :**

உலக வரலாற்றின் போர்களில் உயிரை இழந்தவர்களைவிட அதிக மக்கள் மதத்தொடர்பான கிளர்ச்சிகளில் உயிர் இழந்தனர் என்னும் சொல் உள்ளது. இன்னும் கூட மதத்தொடர்பான நிலையில் நடைபெறும் கிளர்ச்சிகளின் அனைத்து சமூகங்களிலும் நிரந்தரமான பயம் மற்றும் வருத்தத்தை அளிக்கின்றன. வரலாற்றுக்குத் தொடர்பாக இந்திய நாட்டின் அனுபவங்கள் இதைவிட குறையவில்லை.

இந்தியா பல்வேறு மதங்களைக் கொண்ட ஒரு நாடாகும். அரசியல் காரணங்களுக்காக அன்னியரின் ஆக்ரமிப்புக்கு உட்பட்ட காரணத்தினால் பலமதங்களின் நாடாக வேண்டியதாயிற்று. வரலாற்றில் தவிர்க்க முடியாத நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது. இக்குறைபாடுகளை ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் அவர்கள் கடைப்பிடித்த ''அடித்து ஆளும் கொள்கை'' என்று பொதுமக்களிடையே பிரவேசித்து அரசியலில் விரிவுப் படுத்திக் கொண்டனர். வகுப்பு வாதங்களின் விதைகள் இறுதியில் மதவாதத்தை உண் டாக்கின. இவ்வாறு உண்டான கலவரங்களில் இந்துகள் மற்றும் முஸ்லீம்களினிடையே ஏற்பட்ட மோதல்களால் அனேக துக்ககரமான நிகழ்வுகளை உண்டாக்கின விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் ''இந்து மற்றும் முஸ்லீம்'' என்னும் பிரத்தியோகமான ஏற்றத் தாழ்வுகள் நம்பகத்தன்மையற்ற நிலை தோன்றியது. இதன் பலனாக 1947ல் இந்தியா விடுதலையடைந்தபோது, விசேஷமாக வட இந்தியா இந்துக்கள் காண முடியாத வகுப்புவாத கலவரங்களுக்கு உள்ளாயினர். இலட்சக் கணக்கான இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள் மதக்கலவரங்களில் சுடப்பட்டு மண்ணோடு மண்ணாயினர். சில மாதங்களிலேயே ஐந்து இலட்ச மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் ஆயிரம் கோடிகள் அளவுக்கு சொத்துக்கள் நாசமடைந்தன.

இந்தியா தான் பெற்ற சுதந்திரத்தை 15-8-1947 அன்று தில்லியில் கொண்டாடிய

©KTBS Not to be republished

வேளையில் காந்தியடிகள் நௌகாலி போன்ற இடங்களில் காலவரங்களுக்கு உட்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறுவதில் ஈடுபட்டிருந்தார்.

விடுதலைக்குப் பிறகு இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு ஐந்து பெரும் சவால்கள் இருந்தன. நேரு அவர்களின் முன்னுரிமையின்படி தம்முடைய அனைத்து நிர்வாகம் மற்றும் அரசியல் சக்தியை பயன்படுத்தி சில மாதங்களிலேயே மதக்கலவரங்களை பயங்கரமான காட்சிகள் நேரு அவர்களின் மதசார்பற்ற நாடு என்னும் அமைப்புக்கு முன்னோடியானது. இந்திய மதசார்பற்ற நாடாக தன்னுடைய அரசியலமைப்பில் கூறிக்கொண்டது. இதன் பின்னணி ஏறக்குறைய முக்கிய காரணமாக அமைந்தது. தனி ஒரு நாடாக பாகிஸ்த்தானின் தோற்றத்தை கான் அப்துல் கபார்கான், மௌலான அப்துல்கலாம் போன்றோர்கள் எதிர்த்தனர். ஆனால் அதனை தடுக்க முடியவில்லை.

இன்னும்கூட வகுப்பு கலவரங்கள் தொடர்ந்து கொண்டுள்ளன. வகுப்புக் கலவரங்கள் அனைத்துலக நாடுகளிலும் நடந்து வருகின்றன. இந்திய அரசியலமைப்பில் மதம்என்பது ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட விஷயமாகும் எனக் கூறுகிறது. மத பேதங்களில்லாமல் கீழ்மட்டத்திலிருந்து நாடு பெருக வேண்டும், மற்றும் முன் னேற்றமடைய வேண்டும் என்பதை இந்திய அரசியல் அமைப்பின் நோக்கமாகும். இந்நோக்கத்தை அனைத்து இந்தியர்களும் அறிந்து வாழவேண்டியுள்ளது.

***அகதிகளின் பிரச்சனைகள் :***

நாடு பிரிவினை அடைந்தபோது அகதிகளின் பிரச்சனைகள் உண்டாயிற்று. 1947ல் விடுதலை அடைந்த சந்தர்ப்பத்தில் மில்லியன்கள் கணக்கில் மக்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையில் தம் வருங்கால வாழ்க்கையின் நிலையைக் கண்டறியும் முயற்சியை மேற்கொண்டனர். தம் தம் பிறந்துவளர்ந்த ஊர்களை விட்டு அனேக மக்கள் தம்முடைய மதத்தினரே அதிக எண்ணிக்கையிலுள்ள நாட்டின் பக்கம் முகத்தைக் காட்டினார். இந்தியாவுக்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை 6 லட்சம் மில்லியன்கள். அகதிகளின் பிரச்சனைகள் சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் பெரும் சுமையான பிரச்சனையாக வளர்ந்து கொண்டே சென்றது. கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளின் பிரச்சனைகள் ஏறக்குறைய 1951 ற்குள் தீர்க்கப்பட்டது.

ஆனால் கிழக்கு பாகிஸ்தானத்திலிருந்து இன்றைய (பங்காளதேஷ்) வரத்தொடங்கிய அகதிகளின் எண்ணிக்கை பல ஆண்டுகள் காலம் வரையில் தொடர்ந்தது. வங்காள பிராந்தியத்திற்கு இணைந்துகொண்டுள்ள கிழ்கு பாகிஸ்தான் விடுதலைக்குப்பிறகு மதவாதிகளை எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று. இதன் பலனாக 1971 வரையில் அகதிகளின் இடம்பெயர்ந்து வந்து கொண்டிருந்தனர். இந்தியா ஆதரித்த 1991வரை வங்காள விமோச்சனா போரின் விளைவாக சுமார் 10 லட்சம் அகதிகள் இந்தியாவுக்கு வந்தனர். இந்திய அரசு மற்றும் மேற்குவங்காளம், அஸ்ஸாம், மேகாலயா, மற்றும் திரிபுரா மாநில அரசுகள் இவ்வகதிகளுக்குத் தேவையாந வசதிகளை ஏற்படுத்தியதன் மூலம் அவர்கள் இந்தியாவில் தம்முடைய வாழ்க்கை வசதிகளை அமைத்துக்கொள்ள உதவியளித்தனர். வங்காளத்திலிருந்து வந்த ஏறக்குறைய அனைத்து அகதிகளுக்கு வங்காள மொழி மட்டுமே அறிந்திருப்பதால் வங்காளத்தில் மட்டுமே நிலைத்திருக்க முயற்சித்தனர். இதன் விளைவாக மேற்கு வங்காளத்தின் பிரதேசங்களில் அதில் மக்கள்

©KTBS Not to be republished

தொகை அழுத்தத்திற்கு உட்பட்டனர். இந்தியாவே 1960ன் வடஅர்த்தம் மற்றும் 1970ன் முதலார்த்தத்தில் தானே பெரிய பொருளாதார சிக்கல்களுக்கு உட்பட்டது.

பஞ்சங்கள் நம்முடைய பொருளாதார நிலையையே பீடித்து உலுக்கி இருந்த போதிலும் அகதிகளின் பிரச்சனைகளை மனிதாபிமானத்தோடு கண்டறிந்து பரிகாரங்கள் செய்யப்பட்டது. அகதிகளின் பெரும் எண்ணிக்கை மற்றும் பிரச்சனைகளை இந்திய பொருளாதாரத்தின் மீது எதிர்விளைவுகளை உண்டாக்கினாலும், இந்தியா மனிதாபமானத்தோடு விட்டுக் கொடுக்கவில்லை.

நேரு அவர்களின் காலத்திலேயே திபேத்திலிருந்து அனேக மக்கள் அக்திகளாக இருந்தியாவுக்கு வந்துகொண்டு இருந்தனர். தோராயமாக சுமார் ஒரு இலட்சத்து இருபத்தாறு ஆயிரம் திபேத்திய அகதிகள் இந்தியாவிற்கு வந்துகொண்டே உள்ளனர். 1960ல் அன்றைய மைசூரு அரசு, மைசூரு மாவட்டத்தில் உள்ள பைலகோப்பா என்னுமிடத்தில் திபேத்திய அகதிகளுக்காக சுமார் 3000 ஏக்கர் நிலத்தை அளித்துள்ளது. இன்று இந்த ஊர் இடம் பெயர்ந்து வந்த திபேத்தியர்களின் முக்கிய மையமாக திகழ்கிறது. இவ்வனைத்து பிரச்சனைகளுக்கிடையிலும் அவர்களுடைய வருகையினால் மொழி மற்றும் பிரதேசங்களை தாண்டி கலாச்சாரம் ஏறக்குறைய தேவையான அளவு பரவிவளர்ச்சியடைந்துள்ளது.

### விடுதலைக்குப்பிறகு புதிய அரசு அமைத்தல் :

1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது தற்காலிக அரசு அமைந்தது. மவுன்ட்பேட்டன் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ஆனார். ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியாவின் முதல் பிரதமமந்திரியானார். அவர் அரசை அமைத்தார். 1950ல் ஜனவரி 26ம் நாள் இந்தியாவின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்பு நடைமுறைப்படுத்திய பிறகு டாக்டர் பாபு இராஜேந்திர பிரசாத் அவர்கள் இந்தியாவின் முதல் குடியரசு தலைவரானார். அரசியலமைப்பு இந்தியாவின் முதன்மையான, மக்களுக்கான, குடியரசென்று அறிவிக்கப்பட்டது. பின்பு அரசியலமைப்பு 42வது திருத்தம் கொண்டுவந்து, மதசார்பற்ற மற்றும் பொதுவுடைமை என்னும் இரண்டு அம்சங்களை 1976ல் சேர்க்கப்பட்டது. இந்திய அரசு சுதந்திரமான அயல்நாட்டு கொள்கையை கடைப்பிடித்து வருகிறது. இந்தியா மக்களவை (பார்லிமென்ட்) மக்களாட்சி முறையில் நடைபெற்று வருகிறது.


> *அறிந்து கொள்ளுங்கள்*
>
> ***மக்களவை மற்றும் மக்களாட்சி* ; உலகின் பல மக்களவை மற்றும் அனுபவங்களை பயிற்சி செய்து மக்களவையின் அமைப்புக் குழு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் கூடிய அவையே சிறப்பானது மற்றும் இறுதியாக வேண்டும் என அபிப்பிராயபட்டு மக்களவை மற்றும் மக்களாட்சி நடைமுறைக்கு தரப்பட்டது. அதிபர் மாதிரியை எதிர்த்தது.**

### சுதேசிய சமஸ்தானங்களின் ஒருங்கிணைப்பு :

ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு செல்லும்போது நாட்டில் 562 சமஸ்த்தானங்களிருந்தன. ஆங்கிலேயர் நாட்டை பிரித்தவுடன் இச்சமஸ்தானங்களின்

© KTBS Not to be republished

முன் மூன்று வாய்ப்புகள் இடப்பட்டது. ஒன்று இந்திய ஒருங்கிணைப்புடன் சேருவது. இரண்டாவது பாகிஸ்தானுடன் இணைவது. மூன்றாவது எந்த நாட்டுடனும் சேராமல் சுதந்திரமாகிருப்பது. இதன் பின்னணியில் 1947ன் ஐக்கியமாகும் சட்டத்தின்படி இந்திய அரசு அனைத்து தேசிய சமஸ்த்தானங்களை இந்திய ஒருங்கிணைப்புடன் சேர்ந்துகொள்ளவாய்ப்பை அளித்து வரவேற்றது. இவ்விதமாக இணைந்தவர்களுக்கு பதிலாக இராச்சியத்தை ஆதரித்து அரசு செல்வத்தை (ஊதியம்) அளிக்க தீர்மானிக்கப்பட்டது. பின்பு 1971ல் இந்த அரசு ஊதியம் மற்றும் இதர பலன்களை அரசு திரும்பப் பெற்றுக்கொண்டது. சமஸ்த்தானங்களை ஒருங்கிணைக்கும் செயலாக்கங்களில் ஜூனாகத், ஹைதராபாத், மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய இம்மூன்று சமஸ்த்தானங்கள் தீவிரமான எதிர்ப்பை தெரிவித்தன. ''இரும்புமனிதர்'' என்று புகழ்பெற்ற இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர் வல்லபாய் பட்டேல் தலைமையின் கீழ் இந்திய சுதேச சமஸ்த்தானங்களை ஒருங்கிணைக்கும் செயலை வெற்றியுடன் நிர்வாகித்தார்.



வல்லபாய் பட்டேல்

***ஹைதராபாத் :*** இச்சமஸ்த்தானம் நீஜாமின் ஆட்சியிலிருந்தது. இவன் சுதந்திரமாக ஆட்சிபுரியும் நோக்கத்துடன் இந்தியாவுடன் இணைய நிராகரித்தான். இதேசமயத்தில் கம்யூனிஸ்ட்களின் தலைமையில் தெலுங்காண விவசாயிகள் ஆயுத போராட்டம் நிஜாம் மற்றும் ஜமிந்தாரர்களுக்கு எதிராக நடைபெற்றுவந்தது. நிஜாமின் கொடுமையான படைகளான ரஜாக்கர்கள் மீது மக்களிடையே பரந்தளவில் எதிர்ப்புகளிருந்தன. அச்சமயத்தில் இந்திய அரசு தன்படைகளை அனுப்பி நிஜாமை தோற்கடித்தது ஹைதராபாத் சமஸ்த்தானத்தை 1948ல் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. சர்தார் பட்டேல் திடமனதுடன் இந்த இக்கட்டுக்கு பரிகாரம் அளித்தார்.

***ஜூனாகட் :*** இதனுடைய நவாப் தன்னுடைய சமஸ்த்தானத்தை பாகிஸ்த்தானுடன் சேர்க்க உடன்பட்டு இணைவு சட்டத்திற்கு கையெழுத்திட்டான். அப்பொழுது குடிமக்கள் அவனுக்கு எதிராக சாலையில் இறங்கினர். இதனை எதிர்த்து போராட முடியாமல் ராச்சியத்தை விட்டு ஓடிவிட்டான் அங்குள்ள திவான் இந்திய அரசாங்கத்துடன் செய்த வேண்டுகோளை அனுசரித்து படைகளை அனுப்பி அமைதியை நிலைநாட்டப் பட்டது. 1949ல் ஜுனாகட் இந்தியவுடன் சேர்க்கப்பட்டது.

***ஜம்மு - காஷ்மீர் :*** ஜம்மு காஷ்மீரின் அரசனாகிருந்த ஹரிசிங் சுதந்திரமாக ஆட்சிநடத்த விரும்பினான் ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்துவிடும் என்னும் பேராசையுடன் பாகிஸ்தான் காஷ்மீர் கணவாய் முஸ்லீம் பழங்குடி மக்களை எதிர்த்துப் போராடுமாறு உற்சாகமூட்டியது. பாகிஸ்தான் படைகளின் ஆதரவான பட்டான் பழங்குடி மக்கள் இந்திய பகுதிகளுக்கு நுழைய முயற்சித்து போதுமான அளவு பிரதேசத்தை ஆக்ரமித்தனர். இந்தியா ஹரிசிங் இந்திய ஐக்கியத்துடன் சேர்வதற்கு சம்மதிக்காமல் இந்திய படைகள் அங்கு பிரவேசிக்க முடியவில்லை. அச்சந்தர்ப்பத்தின் நிலையை உணர்ந்த ஹரிசிங் அக்டோபர் 1947ல் இந்தியாவில் காஷ்மீரை இணைக்க கையெழுத்திட்டான். பிறகு இந்திய படைகள் பாகிஸ்தான் ஆதாரவு படையை

©KTBS Not to be republished

புறமுதுகிடச்செய்தது. இச்சந்தர்ப்பத்தில் இவ்விஷயத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆனால் காஷ்மீரின் ஒரு பகுதி பாகிஸ்தானின் வசத்தில் உள்ளது. இதற்கு எதிராக இந்திய ஐக்கிய நாடுகள் சபைக்கு புகார் அளித்தது. ஐக்கிய நாடுகள் சபை போர் நிறுத்த ஆணையை ஜனவர் 1, 1949 அன்று அளித்தது. பாகிஸ்தான் ஆக்ரமித்த காஷ்மீரின் வட்மேற்கு பிரதேசத்தை 'பாக் ஆரமிப்பு' பிரதேசமென்று இன்றளவும் அழைக்கப்பட்டுவருகிறது. மற்ற அனைத்து சமஸ்தானங்களின் ஒடுங்கிணைப்பை விட காஷ்மீரின் இணை விசேஷமானது மற்றும் சிறப்பானதாகும்.

***பாண்டிச்சேரி :*** விடுதலைக்குபின் பிரெஞ்சுக்காரர்கள் தம்முடைய வசத்திலுள்ள பாண்டிச்சேரி, காரைக்கால் மாஹே மற்றும் சந்திரநாகூரின் மேலுள்ள பிடிப்பை தொடர்ந்தனர். இவை இந்தியாவுடன் சேர்க்க வேண்டுமென்று காங்கிரஸ், கம்யூனிஸ்ட் மற்றும் இதர கட்சிகள், குழுக்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக 1954ல் இப்பிரதேசங்கள் இந்தியாவுடன் சேர்ககப்பட்டன. 1963ல் பாண்டிச்சேரி இந்தியாவின் மைய அரசின் நிர்வாக பிரதேசமாக ஆயிற்று.

***கோவா :*** போர்ச்சுகீசியரின் வசம் தொடர்ந்திருந்த கோவாவை, இந்தியாவுடன் சேர்க்க வேண்டுமென்று நிரந்தரமாக போராட்டங்கள் நடைபெற்றன. கோவாவை அடைய வேண்டுமென்ற ஆணை அளித்தாலும் வளையாத போர்ச்சுகீசியர், ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவிலிருந்து அதிகளவு படைகளை வரவழைத்து போராட்டத்தை கட்டுப்படுத்தி அதிகாரத்தை பலப்படுத்துவதற்கு முயற்சித்தனர். 1955ல் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து சத்தியாகிரகிகள் வந்து கோவாவின் காலனிகளை விட்டு வெளியேற வேண்டுமென்று போராட்டத்தைத் தொடர்ந்தனர். 1961ல் இந்திய படைகள் இடையில் பிரவேசித்து கோவாவை வசப்படுத்திக்கொண்டது. 1987வரை மைய அரசின் நேரடி ஆட்சியின் கீழிருந்த கோவா பிறகு மாநிலமாயிற்று.

### *மொழிவாறு மாநிலங்களின் அமைப்பு :*

விடுதலைப்போராட்டத்தின் சந்தர்ப்பத்தில் ஆரம்பமான இப்போராட்டம் இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகும் தொடர்ந்தது. முக்கியமாக மக்களின் போராட்டமாயிற்று. மக்களுக்கு சிறப்பான நிர்வாகத்தை அளிக்க மக்களின் மொழியை ஆதாரமாகக் கொண்டு பூகோள எல்லைகளை அறிய வேண்டுமென என்னும் அழுத்தம் தீவிரமானது. ஆங்கில மற்றும் சுதேச சமஸ்த்தானங்கள் இரண்டிலும் மக்கள் பேசும் மொழியிலேயே நிர்வாகம் நடைபெறவில்லை. இதன் பின்னணியில் நாடு முழுவதும் மொழிவாறு மாநிலங்களை அமைக்க வேண்டுமென குரல் தீவிரமாயிற்று. விசாலாந்திரா மாநிலம் அமைக்க வேண்டுமென ஆந்திரமகாசபையின் தலைமையின் கீழ் 1952ல் பொட்டி ஸ்ரீ ராமுலு அவர்கள் 58 நாட்கள் உண்ணாவிரதம் நடத்தி உயிரழந்தபிறகு இவ் வேண்டுகோளின் தீவிரத்தை உணர்ந்து, இதன் விளைவாக முதலில் மொழியின் அடிப்படைமாநிலமாக 1953ல் ஆந்திர பிரதேசம் அமைக்கப்பட்டது. 1953ல் அரசாங்கம் மாநில மறுசீரமைப்பு கமிட்டியை அமைத்தது. இதில் பஜல் அலி தலைவராகவும், கே. எம். பணிக்கர் மற்றும் எச்.என்.குஞ்சுரு உறுப்பினர்களாக இருந்தனர். இந்த கமிட்டியின் அறிக்கையின்படி 1956ல் மாநிலம் மறுசீரமைப்பு சட்டம் அமுல் படுத்தப்பட்டது. இச் சட்டத்தின்படி அன்று நாட்டில் 14 மாநிலங்கள் மற்றும் 6 மைய அரசின் நிர்வாக பிரதேசங்கள் அமைக்கப்பட்டன.

©KTBS Not to be republished

கன்னட மொழி பேசும் மக்களின் பிரதேசங்கள் பல சமஸ்த்தானங்களில் பகிர்ந்திருந்தது. இவ்வனைத்தையும் ஒன்று கூட்டும் வேண்டுகோளை முன்னிட்டது. இறுதியாக 1956 நவம்பர் 1 அன்று விசால மைசூர் மாநிலம் நடைமுறைக்கு வந்தது. பின்பு 1973ல் 'கர்நாடகா' என்று மறுபெயர் சூட்டப்பட்டது. இன்று இந்தியாவில் மொத்தம் 29 மாநிலங்கள் மற்றும் 6 மைய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பிர தேசங்கள் மற்றும் தில்லி நாட்டின் தலைநகர பிரதேசமாகியுள்ளது. National Capital Territory of Delhi

## பயிற்சிகள்

## I. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கம்பெனியின் இறுதி கவர்னர் ஜனரல் ____________ ஆவார்.
2. இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராக ____________ இருந்தார்.
3. இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவர் ____________
4. பாண்டிச்சேரி மைய அரசின் நிர்வாகத்தின் பிரதேசமாக ____________ ல் சேர்ந்தது.
5. மாநிலம் மறு சீரமைப்பு சட்டம் ____________ ல் நடை முறைக்கு வந்தது.

## II. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடைஎழுதுக.

1. இந்தியா விடுதலை அடைந்தபிறகு எதிர்க்கொண்ட பிரச்சனைகள் யாவை?
2. அகதிகளின் பிரச்சனைகளை நாடு எவ்வாறு எதிர்கொண்டது.
3. பாண்டிச் சேரியை பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து விடுதலைப் பெற்ற விதத்தை விவரிக்கவும்.
4. கோவாவை போர்ச்சுகீசியரிடமிருந்து இந்தியா எவ்வாறு பெற்றது என்பதை விவரி.
5. மொழிவாறு பிராந்தியங்கள் பிரித்த செயலைப் பற்றி எழுதுங்கள்.

## III. செயல்பாடு :

1. இந்தியாவின் வரைபடம் வரைந்து மாநிலங்களை குறியுங்கள்.

## IV. செயல்திட்டம் :

1, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தின் தாய்மொழி தலைநகரங்களைப் பட்டியலிடுக.

2. நம்முடைய அண்டை மாநிலங்களின் கலாச்சார சிறப்புகள் பற்றி ஆசிரியர் உதவியுடன் மற்றும் இணைதளத்தின் உதவியுடன் ஒரு அறிக்கையைத் தயாரிக்கவும்.

* * * *

©KTBS Not to be republished

## *அத்தியாயம் - 10*

# இருபதாம் நூற்றாண்டின் அரசியல் பரிமானங்கள்

### *இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன.*

- முதல் உலகப்போர்
- ரஷ்யப்புரட்சி
- வல்லாட்சியாளர்களின் தோற்றம்
- இரண்டாம் உலகப்போர்
- சீனப் புரட்சி
- பனிப்போர்
- அமெரிக்காவின் தோற்றம்

### *முதல் உலகப்போர் :*

கி.பி.1914 ஆண்டுக்கு முன்னரே ஐரோப்பா மற்றும் அதன் குடியேற்றங்களின் மீது அதிகாரத்தை கைப்பற்ற இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்டிரிய-ஹங்கேரி மற்றும் ரஷ்யா நாடுகளுக்கிடையே கசப்பான அனுபவங்களும் மோதல் பூசல்களும் நிலவின. தொழிற்புரட்சியும் புதிய கண்டுபிடிப்புகளும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே கடுமையான போட்டிகள் ஏற்பட வழிவகுத்தன. நூற்றாண்டு காலமாக இந்தியா உட்பட எண்ணற்ற பல உலக நாடுகளின் சந்தைகளையும் வளங்களையும் தங்கள் கட்டுப்பட்டில் கொண்டுவர வாணிகப் போட்டிகள் ஏற்பட்ட வரலாறு உண்டு. இவ்வாறு ஏற்பட்ட உடன்படிக்கைகளால் பல நாடுகளின் எல்லைப் பிரச்சனைகள் தலை தூக்கின. இது வலிமையான ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நிலவிய ஆற்றல் சமன்பாட்டை நிலைகுலையச் செய்தது.

மேற்கண்ட நடவடிக்கைகளால் ஒவ்வொரு நாடும் அளவற்ற இராணுவத் தளவாடங்களை குவிப்பதில் ஈடுபட்டன. பல உடன்படிக்கைகள் ஏற்பட்டன ஒருசில நாடு களில் வன்மை தேசியம் வளர்ச்சியுற்றது. முதல் உலகப்போர் நாடுகளை இரும்பெரும் குழுவாக பிரித்துப்போட்டது. இங்கிலாந்து பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் முக்கூட்டு நட்புறவு குழுவை (Triple Entente) அமைத்தன. அதே போன்று, ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முக்கூட்டு உடன்படிக்கையை (Triple Alliance) ஏற்படுத்தின. குறுகிய காலக்கட்டதில் இத்தாலி போட்டி குழுவில் இணைந்தது போர் நடைபெற்ற போது, குழுக்களின் அமைப்பு மாறிப்போயின.

முதல் உலகப்போர் 1914 லிருந்து 1918 வரை நடைபெற்றது ஆஸ்திரிய இளவரசர் ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினாண்ட் ஜூலை 28-ல் கொலை செய்யப்பட்டது முதல் உலகப்போரின் உடனடிக்காரணமாக அமைந்தது. இந்நிகழ்ச்சி ஆஸ்திரியா மற்றும் செர்பியா நாடுகளுக்கிடையே பிளவை ஏற்படுத்தியது.

போரின் தொடக்கத்தில் அமெரிக்கா நடுநிலை நாடாகவே விளங்கியது. ரஷ்யா ஜெர்மனிக்கு எதிராக எழுந்தது. ஆனால் போரின் முடிவில் இக்காட்சி மாறுபட்டது. அமெரிக்க, இங்கிலாந்து மற்றும் பிரான்சுடன் இணைந்தது. நவம்பர் 1917 ல் ரஷ்யாவில் பொதுவுடைமைப் புரட்சி ஏற்பட்டது. ஜெர்மனியுடன் போர் நிறுத்தம் என்ற அறிக்கையை பறைசாற்றி போரிலிருந்து வெளிநடப்பு செய்தது. ஜெர்மனி முக்கூட்டு நட்புறவுக்குழு நாடுகளால் பலமுறை மிக கடுமையாக தாக்கப்பட்டதால் தோல்வியை

©KTBS Not to be republished

ஏற்றுக்கொண்டு போரை நிறுத்தியது.

1919 ல் மிக அவமான வெர்செயில்ஸ் உடன்படிக்கையில் ஜெர்மனி கையெழுத்திட்டது. ஆஸ்திரிய-ஹங்கேரி மற்றும் ஆட்டோமன் பேரரசுகள் தங்கள் தனித்தன்மையை (identity) இழந்தன. ஜெர்மனி தன்னாட்டின் பலப்பகுதிகளை இழந்தது ஐரோப்பிய வரைபடம் தீர்க்கமாக மாற்றியமைக்கப்பட்டது. பல, சிறு சுதந்திரமான சிறு நாடுகள் தோன்றின எதிர்காலத்தில் போரை தடுக்கும் நோக்கத்திற்காக பன்னாட்டு சங்கம் (சர்வதேச சங்கம்) (league of nations) ஏற்படுத்தப்பட்டது.


தோற்கடிக்கப்பட்ட நாடுகளில் ஏற்பட்ட அவமானமும் வெட்கக்கேடான உணர்வுகளால் போர் தொடுக்கும் வெறித்தனமான தேசிய உணர்வு வளர்ச்சியுற்றது. ஜெர்மனி மேல் சுமத்தப்பட்ட போர் தண்டத் தொகையும் பிறமுடிவுகளும் அந்நாட்டு மக்களுக்கு பல தீயவிளைவுகளை உருவாக்கியது. வேலையில்லாத்திண்டாட்டம், வறுமை மற்றும் குடிசைப் பகுதிகளின் பெருக்கம் ஆகியவற்றால் நாடெங்கும் அதிருப்பதி ஏற்பட்டது. அதனால் ஜெர்மானிய தொழிலதிபர்கள் தங்களின் சுய நலத்திற்காக மக்களை சுரண்டிப்பிழைத்தனர். இச்சூழ்நிலை இரண்டாம் உலகப்போருக்கு காரணமான ஹிட்லர் போன்ற வல்லாட்சியர் (சர்வாதிகாரிகள்) தோன்ற வழிவகுத்தது. இச்சமயத்தில் படைக் கருவிகளை உற்பத்தி செய்து ஆயுதங்களை விற்பனையும் செய்யும் இங்கிலாந்து பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலாபகரமான செல்வப் பெருக்கத்தைப் பெற்றன.

***இதனை அறிக :***

*முதல் உலகப்போரில் இருதரப்பிலிருந்தும் படைவீரர்கள் மற்றும் குடிமக்கள் உள்பட ஒரு கோடிமக்கள் இறந்தனர். இரண்டு கோடி மக்கள் காயமுற்றனர். முப்பத்தைந்து இலட்சம் பேர் நிரந்தரமாக ஊனமுற்றவராயினர். ஒரு சிலப் போர்களைப் போன்றே, முதல் உலகப்போரும் ஒருசாராரின் இலாபத்துக்கும் பேராசைக்குமே நடைபெற்றது.*

## *இரஷ்ய புரட்சி :*

உலகில் இரஷ்யா மிகப்பெரிய நாடாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜார் (Zars) மன்னர்கள், நிலப்பிரபுகள் உழவர்பெருங்குடி மக்கள் மற்றும் ஏழைகளை கொடுமைப்படுத்தும் ஆட்சி முறையையே கையாண்டனர். புதிய வர்க்கமாக தோன்றிய முதலாளிகள் தொழிலாளர்கள் மற்றும் ஏனையோரையும் சுரண்டிப்பிழைத்தனர் ஜார் மன்னார்களுக்கு எதிராக எழும் போராளிகளாக துண்டியது. அதனால் பலக்கலவரங்கள் வெடித்தன. தொழிலாளர்கள் பொது கதவடைப்புக்கு அழைப்பு விடுத்தனர் தொழிற்சாலை பணியாளர்களும் கிராம உழவர்களும் ஆயுதமேந்தி போராடினர் ஜார் மன்னர்ககள், தேசியத்தின் சிறைக்கூடம் (Prison of nationlizm) என அழைக்கப்பட்டனர். சிறிய நாடான ஜப்பான் இரஷ்யாவை தோற்கடித்தது. அது ரஷ்யர்களை ஜார்மன்னர்களுக்கு எதிராக எழும் போராளிகளாக தூண்டியது. அதனால் பலக்கலவரங்கள் வெடித்தன.



**லெனின்**

©KTBS Not to be republished

தொழிலாளர்கள் பொது கதவடைப்புக்கு அழைப்பு விடுத்தனர் தொழிற்சாலை பணியாளர்களும் கிராம உழவர்களும் ஆயுத மேந்தி போராடினர் ஜார் மன்னார்களின் இராணுவம் போராளிகளை இரக்கமற்ற முறையில் நசுக்கிப் போட்டது. பிறகு இவ்வனுபவ ஒளியில் லெனின் அவர்கள் உழவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் புரட்சிகரமான நுணுக்கங்களை வழிகாட்டினார். அதன் விளைவாக, தொழிலாளர்கள் மென்மேலும் போராட்டங்களில் ஈடுபட்டனர். இவ்வேளையில் லெனின் நாடுகடத்தப்பட்டார். போராட்டங்கள் பெருகிக்கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு தீவிரத்தன்மையை அடைந்தபோது, ரஷ்யாவின் கடைசி ஜார் மன்னரான இரண்டாம் நிக்கோலாஸ் 1917 ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறினார். இதனை பிப்ரவரி புரட்சி எனப்படுகிறது. விடுதலை மான்ஷெக்குகள் (liberal mansheviks) அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்கள் இரஷ்யாவை ஒரு மக்களாட்சி குடியரசு என அறிவித்தனர்.

நாடு கடத்தப்பட்டிருந்த லெனின் இரஷ்யா திரும்பியவுடன் அமைதி, உணவு மற்றும் நிலம் என்ற எளிய மற்றும் புகழ்மிகு முழுக்கத்தை வழங்கினார். இதற்கு தொழிலாளர்களும் கிராம ஏழை மக்களும் முழு மனதுடன். ஆதரவளித்தனர். தொழிலாளர் கட்சியின் போல் வேஷக்கின் தலைமையில் அக்டோபர் 1917 ல் புரட்சி ஒன்று ஏற்பட்டது. லெனின் அப்புரட்சி போராளிகளும் இணைந்து இரஷ்யாவை ஒரு பொதுவுடைமை குடியரசு நாடு என நவம்பர் 7ல் அறிவித்தார். இது ரஷ்யாவின் அக்டோபர் புரட்சி எனப்படுகிறது. லெனின் இரஷ்ய அரசின் குடியரசுதத்லைவரானார்.

லெனின் அதிகாரத்துக்கு வந்தவுடன் எல்லா நிலங்களும் உழவர்களின் உடைமை என அறிவித்தார். அவர் அனைத்து ரஷ்யர்களுக்கும் இலவச கல்வி, விளையாட்டு, சுகாதாரம் மற்றும் அரசியல் கொள்கைகளை செயல் படுத்தினார். மனித வரலாற்றில் காரல் மார்க்சின் அறிவியல் பொதுவுடமை கோட்பாடுகளை நடைமுறைப்படுத்திய முதல் மனிதர் லெனின் ஆவார். அத்திட்டங்களின் தொடக்காலத்திலேயே லெனின் 1924ல் மறைந்தார்.

லெனின் இறப்பிற்குப்பின், ஜோசப் ஸ்டாலின் இரஷ்யாவின் குடியரசுத் தலைவரானார். அவர் அமெரிக்காவுடன் போட்டியிடக்கூடிய அளவில் இரஷ்யாவை ஒரு வல்லரசு நாடாக உருவாக்குவதில்முதன்மையான பங்காற்றினார். அவரால் தொடங்கப்பட்ட ஐந்தாண்டுத்திட்டங்கள் இரஷ்யாவின் முன்னேற்றப்பாதையை முற்றிலும் மாற்றியமைத்தது. இரஷ்யா உலகில் முதன் முறையாக மனித ஆற்றலால் தயாரிக்கப்பட்ட துணைக்கோளை விண்ணில் செலுத்தியது. உலகின் முதல் விண்வெளி வீரர் யூரி காகரின் (Yuri Gagarin) ஆவார். ஐந்தாண்டுதிட்டங்களின் மாதிரியை இந்தியா இரஷ்யாவிடமிருந்து பின்பற்றி வருகிறது. இரண்டாம் உலகப் போருக்குப்பின் பொதுவுடைமை கோட்பாடு நாடுகளின் கூட்டணிக்கு தலைமை ஏற்றது. அது ஆசிய ஆப்பிரிக்கா மற்றும் தென்அமரிக்கா நாடுகளின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவளித்தது. இருந்தாலும் இரஷ்யாவை ஒரு வல்லரசு நாடாக உருவாக்கும் வழி முறையில் ஸ்டாலின் பல தவறுகளையும் புரிந்தார். அவர் பொதுவுடைமை மக்க ளாட்சியை வலிமைப்படுத்துவதில் அவர் போதிய கவனம் செலுத்தவில்லை. அதன் விளைவாக புரட்சிக்கு எதிரானவர்கள் வலிமைப் பெற்று விளங்கினர். கோர்பாச்ச ாவ் 1985 ல் கிளாஸ் நாட் (திறப்பு) மற்றும் 1987 ல் பெரிங் ரோக்கியா (மீண்டும்

©KTBS Not to be republished

கட்டமைப்பு முறை (Perestroika) போன்ற சீத்திருத்தங்களை கொண்டு வந்தபிறகு பொது வுடைமைக் கோட்பாடு முறை இரஷ்யாவில் தளர்ந்து வீழ்ச்சியுற்று இறுதியில் சோவியத் ஒன்றியம் சிதறுண்டு போயிற்று.

***இதனை அறிக :***

*பெரிஸ்டோரிக்கியா மற்றும் கிளாஸ்நாட்: சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்படுத்திய மீண்டும் கட்டமைப்பு முறை சீர்த்திருத்தங்கள் நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்களாட்சியின் யோசனைகள் போன்ற கோட்பாடுகளை கோர்பச்செவ் அவர்கள் மக்களுக்காக இரண்டு முறைகளை பயன்படுத்தினார். அச்சொற்களே பெரஸ்ட்ரோக்கியோ மற்றும் கிளாஸ்நொஸ்த ஆகும்.*

*பெரிஸ்ட்ரோக்கியோ என்றால் - மறுசீரமைப்பு.*

*கிளாஸ்நொஸ்த் என்றால் - விடுதலை என்று பொருள்.*

**வல்லாட்சியர் (சர்வாதிகாரி)** Dictator

**ஹிட்லர் :** (Hitler) முதல் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட சூழ்நிலைகளால் ஜெர்மனியில் ஹிட்லர் மற்றும் இத்தாலியில் முசோலினிப் போன்ற வல்லாட்சியர்கள் தோன்றினர். ஹிட்லர் முதலில் மன்றத் தலைவராகி (Chancellor) தொடர்ந்து ஹிண்டன் பர்க்கின் இறப்பிற்குப் பின் சர்வாதிகாரியானார். ஹிட்லர் பியூரர் (Fuhrer) என்றபட்டத்தையும் பெற்றார். ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றிய போது, ஜெர்மனியில் கம்யூனிஸ்டுவாதிகளும் பொதுவுடைமை வாதிகளும் செல்வாக்கு நிறைந்தவர்களாக விளங்கினர். இச்சூழ்நிலையில், தொழிலதிபர்களின் ஆதரவைப் பெற்று, ஹிட்லர் கம்யூனிஸ்டுகளையும் பொதுவுடைமை வாதிகளையும் அடக்கி ஒடுக்கினார். அவர் தொழிலாளர் சங்கங்களையும் அரசியல் கட்சிகளையும் தடைசெய்தார். அவர் நாசிசக்கட்சி ஒன்றுதான் அரசியல் கட்சியென அறிவித்தார்.



**ஹிட்லர்**

ஹிட்லர் தன் ஆழ்ந்த சிந்தனைகளையும் யூதர்கள் உலகைக்கட்டுப்படுத்தும் ஆற்றல் குறித்து எச்சரிக்கையையும் ஜெர்மனிய மக்களின் மனங்களில் ஆழப்பதித்து அபாயச்ச ங்கை ஊதினார். ஆவர் ஆரிய இனம் ஒன்றுதான் உலகில் மிக்க சிறந்தது என மார்தட்டினார். இக்கருத்துக்களை யெல்லாம் பரப்பிட ஹிட்லர் நாசிதத்துவத்தை தழுவினார்.

**நாசிதத்துவத்தின் கருப்பொருள் பின் வருமாறு :**

உலகில் மிகச்சிறந்த இனம் ஆரிய இனம் ஆகும். ஜெர்மானியர்கள் உலகை ஆளப்பிறந்தவர்கள். எல்லா கம்யூனிஸ்டுவாதிகளும் ஆளப்பட வேண்டியவர்கள். ஜெர்மானியர்களின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் யூதர்களே காரணம் ஆவர் யூதர்களுடன், கம்யூனிஸ்டுகள், கத்தோலிக்கர்கள் மற்றும் பொதுவுடைமை வாதிகளும் ஜெர்மானிய பிரச்சனைகளுக்கு பொறுப்பேற்க கூடியவர்கள் ஆவர். இவர்கள் உயிரோடு

©KTBS Not to be republished

வாழ்வதற்கு தகுதியற்றவர்கள். இவ்வகையான தீவிரமான தேசியவாதம் கொடூரமான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டது. அவர் இனவெறுப்பை பரப்ப கோயாபல்ஸ் (Goebells) என்ற சிறப்பு அமைச்சரை பணியமர்த்தினார். அவர் மக்கள் மனங்களில் அமைதியின்மையையும் அச்சத்தையும் ஏற்படுத்த ''பழுப்புசட்டை'' (Brown Shirts) எண்ற படையை நிறுவினார்.

இவ்வாறு பெரு எண்ணிக்கையிலான பொது கொலைகள் மற்றும் படுகொலைகளும் வரலாற்றில் பழிக்கப்படுகின்றன. அவரின் பெரு எண்ணிக்கையிலான படுகொலைகள் ''ஹோலகாஸ்ட்'' (Holocaust பெரிய களப்பலி) எனப்படுகிறது, அவர், நரேம்பெர்க் எணப்படும் தண்டனைச் சட்டங்களை 1934-ல் இயற்றினார். அவர் வெளிச்சமும் காற்றுமில்லாத நச்சுகாற்று நிரம்பிய அறைகளில் தன் எதிர்ப்பாளர்களை அடைத்து உணவு மற்றும் தண்ணீர் வழங்க மறுத்தார். அரசியல் கைதிகளை பாதுகாப்பாக வைத்திருக்கும் முகாம்களில் அவர்களை அடிமைகளைப்போல வேலைசெய்ய ஆணையிட்டார். அவர் நச்சு காற்றை செலுத்தி பெரு எண்ணிக்கையில் பொதுவிடக்கொலைகள் புரிவதில் ஈடுபட்டார். குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியோர் என எந்த பாகுபாடும் பாராது அனைத்து மக்களையும் கொன்றுபோட திட்டம் தீட்டினார். அவர் தன்னுடைய சர்வாதிகார அதிகாரத்தை பெரு எண்ணிக்கையில் கொலை புரிவதிலேயே பயன்படுத்தினார். இரண்டாம் உலகப்போருக்கான காரணங்களுள் முழு உலகைவென்று ஆரிய இனத்தை புகழுக்குறியதாக்குவது என்ற நோக்கமும் ஒரு தலையாயக் காரணமாகும். ஹிட்லரின் இனப்படு கொலை வெறுப்பு அத்தியாயம் அவரின் இறப்புடன் முடிவுற்றது.

முசோலினி : சமூக இயக்கங்கள், முதல் உலகப்போரின் எதிரொலிப்புகள் மற்றும் இரஷ்யப்புரட்சி போன்றவைகளால் ஜெர்மனிக்கு இணையாக முசோலினியின் பாசிச அரசியல் அதிகாரம் இத்தாலியில் தோன்றியது. தீவிரத்தன்மையுடைய தேசியவாத மனப்பான்மை, எதிரிகளை அழித்தல், வன்முறையின் புகழ்பாடல், இனஉயர் உணர்வு, பேரரசுகளின் விரிவாக்கம் மற்றும் படுகொலையாளர்களுக்கு ஆதரவு போன்றவைகள் பாசிச கொள்கையின் முக்கிய கோட்பாடுகள் ஆகும்.

தேசிய பாசிச கட்சியின் நிறுவனரான முசோலினி இத்தாலியின் பிரதம அமைச்சராக 1922 முதல் 1943 வரை பதவி வகித்தார். அவர் 1925-ல் மக்களாட்சி அரசை அகற்றி ச ட்டமுறைப்படி ஒரு சர்வாதிகாரியாக அதிகாரத்தை கைப்பற்றினார். தன்னுடைய ரகசிய காவல்கள் ஆதரவுடன் தன்னுடைய அரசியல் எதிரிகளை அழித்தார். அவர் அனைத்து தொழிலாளர் போராட்டங்களையும் தடைசெய்து ஒரு சர்வாதிகாரியானார் ஹிட்லருடன் இணைந்து பல இலட்சக்கணக்கானோரின் இறப்புக்கு காரணமானார். அவர் 1945-ல் படுகொலைச் செய்யப்பட்டார்.

### இரண்டாம் உலகப்போர்:

முதல் உலகப்போரின் இறப்புகளையும் உயிர்ப்பலிகளையும் மக்கள் மறக்கும் முன்பாகவே, இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. செப்டம்பர் 1, 1939-ல் நாசிச ஜெர்மானியர்கள் போலந்துக்கு எதிராகத் தாக்கி போரை அறிவித்தனர். மனிதவரலாற்றில் இரண்டாம் உலகப்போர் பேரழிவுகளை ஏற்படுத்திய ஒரு காட்டு மிராண்டிப்போர் ஆகும். இப்போரில் நேரிடையாக முப்பது நாடுகள் பங்கேற்றன.

©KTBS Not to be republished

இரண்டாம் உலகப்போர் 1939 முதல் 1945 வரை நடைபெற்றது. முன்னேறிய நாடுகளின் அழிவுக்கொள்கைகளால் 1930-ல் ஏற்பட்ட பெருமந்தம் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா கண்டங்களில் கடுமையான சூழ்நிலைகளை ஏற்படுத்தியது. மக்களின் வாழ்க்கைமுறை சீரழிந்து பரிதாபதுக்குரிய நிலைக்கு தள்ளப்பட்டது. தொழிற்சாலை மற்றும் வேளாண் உற்பத்திபொருட்கள் தேங்கி கிடந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் ஆபத்தான உச்சக்கட்டத்தை அடைந்தது. முதல் உலகப்போரின் தோல்வி, அவமான உடன்படிக்கைகள் மற்றும் அளவிளமுடியாத பொருளாதார பேரிழப்புகள் போன்றவைகளால் தீவிரத்தன்மையுடைய தேசிய விழிப்புணர்வு பலநாடுகளில் முணைப்புடன் வளர்ச்சியுற்றது. ஜெர்மனி இன்னும் பிற ஐரோப்பிய நாடுகளில் தேசிய வாதத்ததை பரப்ப தொழிலதிபர்கள் பெருந்தொகையை வழங்கினர் இவ்வசதிகளைப் பயன்படுத்தி, வெறுப்புணர்வு செயல்பட்டன. ஹிட்லர் ஜெர்மனியிலும் முசோலினி இத்தாலியிலும் ஆட்சிக்கு வர மக்கள் விழைந்தனர். கிழக்காசியாவில், ஜப்பான் அதன் பேரரசை விரிவுப் படுத்தும் நோக்குடன் சீன எல்லை யோரங்களைத் தாக்கினர்.

இரண்டாம் உலகப் போரின் போது, அச்சு நாடுகள் (Axis power) மற்றும் நேசநாடுகள் (Allies) என்ற இருபோட்டிக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. அச்சுநாடுகள் குழுவில் ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளும், நேசநாடுகள் குழுவில் இங்கிலாந்து, பிரான்ஸ், இரஷ்யா மற்றும் பலநாடுகளும் இடம் பெற்றன ஜெர்மனி போலந்தை தாக்கியபோது, போலந்தின் நேச நாடான இங்கிலாந்து ஜெர்மனிக்கு எதிராகப் போரை அறிவித்தது. உண்மையில் இங்கிலாந்து உடனடியாக போலந்துக்கு உதவிட முன்வரவில்லை. போலந்து ஜெர்மனியால் கைப்பற்றப்பட்டது. கம்யூனிச கோட்பாடு உடைய நாடாக இரஷ்யா இருந்ததால் ஹிட்லர் இரஷ்யா மீது தாக்குதல் நடத்துவார் என இங்கிலாந்து, பிரான்ஸ் அமெரிக்கா மற்றும் பிறநாடுகள் எதிர்பார்த்தனர். இதனால் விழிப்புற்ற இரஷ்யா ஜெர்மனியுடன் ஆகஸ்ட் 24, 1939-ல் போரில்லா ஒப்பந்தத்தில் (Molotov Ribben trop pact) கையெழுத்திட்டது. ஹிட்லர் இத்தாலியுடன் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டு, டென்மார்க், நார்வே மற்றும் ஹாலந்து போன்ற நாடுகளை உள்ளடக்கிய மேற்கு ஐரோப்பியப்பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டார். ஹிட்லர் சோவியத் இரஷ்யா போரில் ஈடுபட வற்புறுத்தப்பட்டது. இவ்வேளையில், ஜப்பான் ஹிட்லர் அணியுடன் இணைந்தது. ஜப்பான், பசிபிக் பெருங்கடலின் மேற்குப்பகுதியிலிருந்த பல அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பகுதிகளை தாக்கி கைப்பற்றிக் கொண்டர்.

வட ஆப்பிரிக்காவிலிருந்து ஆங்கில குடியேற்றங்களையும் சூயஸ்கால்வாயையும் கைப்பற்ற இத்தாலி மற்றும் ஜெர்மனிய நாடுகள் முயன்றன. 1942-ல் ஸ்டாலின் கிரேடு போரில் இரஷ்யா ஜெர்மானிய படைகளைத் தோற்கடித்தது. அதன்பிறகு, 1943 ல் ஜெர்மனி தொடர்ச்சியான தோல்விகளை சந்தித்தது. இத்தோல்விகளில் இரஷ்யா மிகப்பெரும் பங்காற்றியது. நேச நாடுகளின் படைகள் இத்தாலி மீது படையெடுத்தன. அமெரிக்கா ஜப்பானை தோற்கடித்தது. மேற்குப்பசிபிக் தீவுகளை திரும்பவும் பெற்றன. இரஷ்யாவின் சிவப்பு படைகளின் மிகப்பெரிய அணிவகுப்பாலும் மேற்கத்திய நாடுகளின் தாக்குதல்களாலும் ஜெர்மனி சரணடைய வற்புறுத்தப்பட்டது. பெர்லின் நகரம் தளர்ந்து வீழ்ந்தது. 1945-ல் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். இத்துடன்


©KTBS Not to be republished

ஐரோப்பாவில் போர் முடிவுற்றது. 1945-ல் அமெரிக்கா இரு ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது முதல் முறையாக அணுகுண்டுகளை வீசியது. அதன் விளைவாக, இலட்சக்கணக்கானோர் சாம்பலாயினர். அதன் விளைவுகளை ஜப்பான் இன்றும் கூட உணருகிறது. ஆகஸ்ட் 15, 1945-ல் இரஷ்யாவால் மஞ்சூரியா விடுதலையானபோது ஜப்பான் முற்றிலுமாக சரணடைந்தது நேசநாடுகள் அழுத்தமான வெற்றியை வரலாற்றில் பதித்தன.

இரண்டாம் உலகப்போரால் எண்ணற்றோர் உயிரிழந்தனர். பல்லோர் காயமுற்றனர். உலகமுழுவதும் அது, சமூக அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தின. சர்வதேச சங்கத்துக்கு பதிலாக ஐக்கியநாட்டு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. வெற்றி வாகைச்சூடிய நேசநாடு களான, அமெரிக்கா, சோவியத் யூனியனான இரஷ்யா, சீனா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் நிரந்தர உறுப்பினர் நாடுகளாகின. சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஆக்கிரமிப்பு செய்யும் போட்டி நாடுகளாயின. இது பனிப்போர் ஏற்பட வழிவகுத்தது. ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் விடுதலையை அடையும் உதவியால் பயனடைந்தன. இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் பல நாடுகள் தங்களின் கட்டுப்பாட்டிலிருந்த பல குடியேற்றங்களை இழந்தன. இவ்வேளையில் இந்தியாவின் விடுதலை ஆலோசிக்கப்பட்டது. அமெரிக்கா அணுசக்தியை பயன்படுத்தியதால், வலிமையான நாடுகளின் அணு ஆயுதங்களை கைப்பற்றுவதில் கடுமையான போட்டி எழுந்தன.

### *சீனப்புரட்சி*

நீண்ட பண்பாட்டு வரலாற்றையும் நாகரீகத்தையும் கொண்ட ஒரு நாடு சீனாவாகும். விடுதலைப் போராட்டத்தின் போது, இந்தியாவைப் போன்று முழுவதுமான குடியேற்ற நாடாக சீனா இருக்கவில்லை. அது பாதி குடியேற்ற நாடாக விளங்கியது. அதன் சிலப்பகுதிகள் சுதந்திரமாக தனித்தியங்கின. இது மட்டுமின்றி சீனா பிரான்ஸ், ஜப்பான் மற்றும் பிற நாடுகளின் பேரரசுகளின் தாக்கத்திற்கும் உள்ளாகியது. உள் நாட்டு பழங்குடி இனத்தலைவர்கள் நிரம்பிய நாடும் சீனாவாகும் அது நிலபிரபுக்களாலும் போர்க்குணம் நிரம்பியவர்களாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்தியாவைப் போன்று




©KTBS Not to be republished

தொழிற் சாலைகள் வளர்ச்சியுற்ற நாடாகவும் அது இல்லை. இச்சூழலில், தேசிய ஒருமைப்பாடு, மக்களாட்சி மற்றும் வாழ்வாதாரம் போன்றவை முதன்மை பிரச்ச னைகளாகின. 1911-ல் கியோமின்டாங் கட்சியைச் சோந்த சன்-யாட்-சன் தலைமையில் பேரரசரின் ஆட்சிக்கு எதிராக ஆற்றல் மிகு போராட்டம் ஒன்று எழுந்தது. ஆனால் அது முழுநிறைவான போராட்டக்களமாக உருப்பெறவில்லை. 1925-ல் கம்யூனிசம் சீனாவில் தோன்றியது.

கிராமங்களில் உழவர்களின் இயக்கமும் நகரங்களில் தொழிலாளர் போராட்டங்களும் துடிப்புடன் செயல்பட்டன. ஒன்றபட்ட சீனாவை கட்டியெழுப்ப சன்-யாட்-சென் கம்யூனிச வாதிகளும் இணைந்து பணியாற்றினர். சன்-யாட்-சென் இறப்பிற்கு பிறகு கியோமின்டாங் கட்சியின் தலைமைப்பொறுப்பு அடக்கத் திட்டமிடும் சியாங்கை ஷேக் என்பாரின் கைகளில் ஒப்படைக்கபட்டது. அவர் பேரரசர்களின் இராணுவத்துடன் அவர் கைகோர்த்துக்கொண்டு, கம்யூனிஸ்டுகளுக்கு எதிாக அவர்களின் சொந்த மண்ணிலேயே போரை அறிவித்தார்.

***இதனை அறிக :***

*நீண்ட பயணம் சீனாவின் கம்னியுஸ்ட் புரட்சிக்காரர்கள் மீது சியாங்கை-ஷேக் நடத்திய தாக்குதலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள சீன புரட்சியின் தலைவர் ஏற்படுத்திய வரலாற்றுப்புகழ் பெற்ற நீண்ட பயணமாகும். சீனாவின் ஜியாங்ஜி பிரதேசத்திலிருந்து சினாவின் மேற்கு யெனானின் முனைவரை சுமார் 10,000 கி.மீ. தூரம்வரையில் சுமார் 80,000 புரட்சிபோர் வீரர்களை இடமாற்றிய நிகழ்வேயாகும். அக்டோபர் 1934முதல் 1935 அக்டோபர் வரை நடந்த மாபெரும் நீண்ட பயணமாகும். இறுதியில் சுமார் 10,000 மக்கள் மட்டுமே மிகுந்தனர். மனித சமுகப்புரட்சி வரலாற்றில் இவ்வளவு எண்ணிக்கையில் மக்கள் இவ்வளவு தூரம் நடந்து சென்று இதுவரையில் இல்லை எனக்கூறலாம் இதனால் இதனை நீண்ட பயணம் என்று அழைக்கிறோம்.*

ஏறத்தாழ 70,000 போராளிகள் கொல்லப்பட்டனர் அவர்களை பாது காத்து கொள்வதற்காக, மா-சே-துங்கின் தலைமையில் வரலாற்றுப்புகழ் மிகு நீள்பயணம் (Long March) வட பகுதிகளில் ஏற்பட்டது. இது உலக வரலாற்றில் சி றப்பான இராணுவ பயிற்சி முகாமாக விளங்குகிறது. இது இதற்கு முன்பு இல்லாத ஆதரவை உழவர்களிட மிருந்து பெற்றது.

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் சீனாவின் பலப்பகுதிகளை தாக்கியது. இதனை எதிர்த்துப் போரிட, சீனாவின் கம்யூனிச கட்சி முன்னணியில் வந்தது. 1945-ல் ஜப்பான் இப்போரில் தோல்வியுற்றது. ஜப்பானியப் படைகள் பின் வாங்கியதால், கம்யூனிச கட்சியின், மக்கள் விடுதலைப் படை இப்பகுதிகளின் மேல் அதிகாரம் கொண்டது. ஆக்கிரமிக்கப்பட்டப்பகுதிகளில் அது நிலச்சீர்திருத்தங்களை அறிவித்தது. நிலங்கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அதன் விளைவாக அவர்கள் மக்களின் ஆதரவைப் பெற்றனர். சிலப்பகுதிகள் ஷியாங்-கி-ஷேக் கட்டுப்பாட்டிலிருந்தன. பலப்பகுதிகள் கம்யூனிச கட்சியால் கைப்பற்றப்பட்டன. ஷியாங்-கி-ஷெயிக் தாய்வானுக்கு விடுதலைப்படை பெய்ஜிங்கிற்குள் நுழைந்தன. சீன மக்களாட்சி குடியரசு



©KTBS Not to be republished

தோற்றம் பெற்று மா-சே-துங் அதன் தலைவரானார்.

புரட்சிக்குப் பிறகு, கூட்டுப்பண்ணைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. அனைவருக்கும் இலவச கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டு வசதிகள் அனைத்தும் அளிக்கப்பட்டன. தொழில் முன்னேற்றம் காண, அறிவியல் மற்றும் தொழில் நுணுக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டன. தாவிடும் முன்னேற்றக்கொள்கை (Leap Forward Project) செயல்படுத்தப்பட்டது. தனியார் உடைமைகள் சமூக உடைமைகளாக்கப்பட்டன இம்முறையில், 1966-ல் பண்பாட்டுப் புரட்சி (Cultural Revolution) தோன்றியது. அதனால் பலதவறுகளும் நடைபெற்றன. 1979-ல் ஆட்சிக்கு வந்த டெங்சியோபிங் (Deng zioping) பல சீர்திருத்தங்களை கொண்டு வந்தார். இச்சூழலில் சீனா முதலாளித்துவ கோட்பாட்டில் நன்றாக ஒன்றிணைந்ததால், தற்போது கம்யூனிச கட்சியின் தலைமையில் அது ஒரு மிகப்பெரும் வல்லரசாக நடைபோடுகிறது.

***பனிப்போர்*** (Cold war)

இரண்டாம் உலகப்போருக்குப்பின்னார், இரு உலக வல்லரசுகளுக் கிடையே அரசியல், பொருளியல் இராணுவம் மற்றும் பிறத்துறைகளில் ஏற்படும் நிலையான அச்சம், வெறுப்பு, பொறாமை மற்றும் ஏக்க கவலைகள் பனிப்போர் எனப்படுகிறது. அமெரிக்காவை உள்ளடக்கிய முதலாளித்துவ குழு நாடுகளுக்கும் இரஷ்யாவை உள்ளடக்கிய பொதுவுடைமை குழு நாடுகளுக்குமிடையே நிலவும் அறிவிக்கப்படாத போர் பனிப்போர் ஆகும் மனிதப் பிர்ச்சனைகளுக்கு தீர்வு-முதலாளித்துவ கொள்கையா அல்லது பொதுவுடைமைக் கோட்பாடா என்றவினா எழுகிறது. 1917 லிருந்து இவ்விரு கொள்கை கோட்பாடுகளுக்கிடையே வேற்றுமைகள் நிலவினாலும் அது இரண்டாம் உலகப் போருக்கப் பின்னர்தான் வெளிப்படையாக வெளிச்சத்துக்கு வந்தது. 1989-ல் இரஷ்யாவில் பொதுவுடைமை கோட்பாடு தளர்வுற்று வீழும் வரை பனிப்போர் உச்ச க்கட்டத்திலிருந்தது.

பனிப்போரால் ஆயுதப்போட்டி இருநாடுகளுக்கிடையே தீவிரமடைந்தது. இப்போட்டியில் அமெரிக்கவல்லமை நாடாக உருவெடுத்தது. உலக முழுவதும் அது ஆயுதவாணிகத்தில் கையெழுத்திடமுன்வந்தது. அது தன்னுடைய அணியில் பல நாடுகளை வைத்துக் கொள்ள இராணுவ உடன் படிக்கைகளை ஏற்படுத்தியது. அமெரிக்காவின் தலைமையில் வடஅட்லாண்டிக் ஒப்பந்தம் அமைப்பு (NATO) தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பு (SEATO) மற்றும் மையக்கிழக்கு வடஒப்பந்த அமைப்பு (CENTO) போன்ற ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. இரஷ்யாவின் தலைமையில் வார்சா ஒப்பந்தம் (Warsaw pact) ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மிகப்பெரிய ஆயுத தொழிற்சாலை உச்சத்தை தொட்டன. இவைகளுடன் இராணுவ தளவாட நிலைகள் பல்வேறுநாடுகளில் அமைக்கப்பட்டன. ஆளில்லா விமானம் மூலம் தகவல்களை சேகரிக்கும் விமானம் மற்றும் அறிவியல் நுணுக்கப்போட்டிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முழு உலகமும் கண்ணுக்கு புலனாகாத பல்வகை போர் முறைகளில் அமிழ்ந்து அதிக அச்சம் கலந்த கவலையை எதிர்நோக்கியுள்ளது.

©KTBS Not to be republished

பனிப்போர், கொரியாப் போர், வியட்நாம் போர், 1956-ல் சூயஸ் கால்வாய் பிரச்சனை, 1961-ல் பெர்லின் சிக்கல் மற்றும் 1962-ல் கியூபா ஏவுகணை தாக்குதல் போன்ற பயங்கரத்தையும் அச்சத்தை மூட்டும் போர்களை ஏற்படுத்தின. பனிப்போர் 1985 வரை வன்மையாக வளர்ந்து, பிறகு அமெரிக்காவின் பக்கம் மென்மையாக தளர்வுள்ளது. உலக வளங்களை யெல்லாம் கட்டுப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா வெற்றிபெற்றது. பொருளாதார சிக்கல்களுக்கும் உள்நாட்டுப் பூசல்களுக்கும் இரஷ்யா இரையாயிற்று. ஆயுதப்போட்டி ஒரு பக்கமாக சார்ந்ததால் அமெரிக்கா உலக நாடுகளின் வலிமையுள்ள எஜமானனாக உருவெடுத்தது.

***அமெரிக்காவின் எழுச்சி*** (Rise of America)

1927-ல் உலக முழுவதும் ஏற்பட்ட பெருமந்தம் அமெரிக்க அரசியலில் மிகப்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. முதல் உலகப்போரில் அமெரிக்கா நேசநாடுகளுக்கு பொருளாதார, இராணுவ தளவாடங்கள் முறையில் உதவியதால் அந்நாடுகள் வெற்றி பெற்றன. 1929-ல் அமெரிக்காவில் பொருளாதார முன்னேற்றம் தடைபட்டு தேக்க நிலையடைந்தது. அதன் விளைவாக, தொழிற்சாலை மற்றும் விவசாய உற்பத்திகள் சீரழிந்தன. அத்துடன் சுரங்கவேலை, கப்பல்கட்டும் தொழில், நகரும் பொருட்களான மோட்டார் வண்டிகள் மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் ஆகியன கடுமையான பாதிப்புக்குள்ளாயிற்று. பொருளாதார சரிவு பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தின.

இராண்டாம் உலகப்போரின் போது, ஜப்பான் அமெரிக்க கப்பற்படைத்தளமான பெர்ல் ஹார்பர் முத்து துறைமுகம் - Pearl Harbour) மீது வான்வழி தாக்குதலை நடத்தியது. அதனால் அமெரிக்க நேச நாடுகளுக்கு ஆதரவாக இரண்டாம் உலகப்போரில் ஈடுபடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ரூசோவெல்ட் இராணுவப்படையில் பொது மக்கள் இணைந்து போருக்குதயாராகும்படி ஆவலைத்துண்டினார். அவர் சமூகப்பிரிவுகளில் பணியாற்ற பெண்களையும் ஊக்குவித்தார். போரில் அமெரிக்கா ஒரு வெற்றியாளராக வெளித்தோன்றியது. இரண்டாம் உலகப்போர் நடைபெறும் வேளையிலும் கூட அமெரிக்கா ஐக்கிய நாட்டு நிறுவனத்தை ஏற்படுத்த பலநாடுகளுடன் ஒத்துழைப்பை நல்கியது. 1945-ம் ஆண்டுக்குப்பிறகு, அமெரிக்கா ஒரு தன்னிகரில்லா வல்லரசாக வளர்ந்தோங்கியது. பனிப்போரின் இறுதியில், அமெரிக்க ஐக்கியநாடுகள் உலகின் முழு அதிகாரம் படைத்த நாடாக எழுந்து நிற்கிறது.

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. இரஷ்யாவில் கம்யூனிச அரசை ஏற்படுத்தியவர் _________ ஆவார்.
2. முதல் உலகப் போர் _________ ஆண்டில் முடிவுற்றது.
3. வெர்செயில்ஸ் உடன் படிக்கை _________ ஆண்டில் கையெழுத்தானது.
4. இரண்டாம் உலகப்போர் _________ ஆண்டில் தொடங்கியது.
5. _________ இடத்திலுள்ள அமெரிக்க கப்பல்கள் மையத்தை ஜப்பான் தாக்கியது.

©KTBS Not to be republished

## II. குழுவாக கலந்துரையாடி விடைத்தருக :

1. இரஷ்யப்புரட்சியில் லெனின் ஆற்றியபங்கை விவரி.
2. முதல் உலகப்போரின் உடனடிக்காரணத்தைப்பற்றிவிளக்குக.
3. ''நாசிச கோட்பாடு ஜெர்மனியை அழிவுக்குள்ளாக்கியது.'' இது குறித்து உன் விளக்கத்தைத்தருக.
4. இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள் யாவை?
5. பனிப்போர் என்றால் என்ன ?
6. சீனப்புரட்சியினால் ஏற்பட்டவிளைவுகள் யாவை?
7. அமெரிக்கா எவ்வாறு தன்பொருளாதார பெருமந்தத்தை எதிர்கொண்டு வெற்றிபெற்றது?

## III. செயல்பாடு :

1. செய்திதாட்கள் மற்றும் இணையத்தின் உதவிகொண்டு அண்மையில் உலகில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களின் தகவல்களை சேகரிக்கவும்.

## IV செயல்திட்டம் :

1. பல உலக நாடுகளின் கொடிகளை சேகரிக்கவும்.

* * * *

©KTBS Not to be republished

# அத்தியாயம் - 4

# உலகப் பிரச்சனைகள் மற்றும் இந்தியாவின் பங்கு

**இந்த அத்தியாயத்தில் கீழ்க் கண்ட விசயங்களை அறிகிறோம்.**

- **மனித உரிமைகள் மறுப்பு**
- **ஆயுதங்களில் போட்ட போட்டி**
- **பொருளாதார ஏற்றத்தாழ்வு**

இரண்டாம் உலகப் போருக்குபின் புதிய குடியேற்றத்திற்கு மற்றும் சோசலிஸம் அழிந்தது. பழைய உலகின் மாறுதலுடன் புதிய உலகம் தோன்ற ஆரம்பித்தது. 1945ல் ஐக்கியநாடுகள் (ஐநா) அல்லது ஒருங்கினைந்த நாட்டின் சங்கம் ஆரம்பித்ததுடன் புதிய சக்தி ஆரம்பமானது. ஆனாலும் உலக அளவில் மனித உரிமைகள், ஆயுதங்களின் போட்டி, பொருளாதார ஏற்றத் தாழ்வு, நிறவெறி, கொள்கை மற்றும் பயங்கரவாதம் போன்ற பல பிரச்சனைகள் இன்னும் அப்படியே உள்ளது. உலக குடும்பத்தில் ஒரு முன்னோடி உறுப்பு நாடாக இந்தியா இருந்தது, இவ்வெல்லா பிரச்சனைகளுக்கும் பரிகாரம் தேட முன்யோசனை நடத்துகிறது.

**மனித உரிமைகள் மறுப்பு :** மனித குல வாதிகள் ஒவ்வொரு மனிதனின் பிறப்பிலிருந்தே கிடைக்க வேண்டிய உரிமைகள் பற்றி வாதித்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் துரதிஸ்டகரமாக உலகின் பலமனிதர்கள் நெடுங்காலமாக இந்த மனித உரிமைகளை அனுபவிக்கவில்லை. மதம், இனம், பாலினம், சாதி, நிற வேற்றுமை மற்றும் நாடு, போன்றவற்றை காரணம் காட்டி மனித உரிமைகள் மறுக்கப் படும் சோகத்தை நாம் காணலாம்.

> ***நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்***
>
> ***"இந்திய அரசியல் அமைப்பு சட்டம் குறிப்பிட்டபடி அல்லது வெளிநாட்டு உடன்படிக்கையில் சேர்க்கப் பட்டிருக்கும் மற்றும் வாழும் சுதந்திரம். சம உரிமை மற்றும் ஒரு மனிதனின் உயர்வு உரிமை இவை எல்லாம் மனித குல உரிமை."***

1776ல் அமெரிக்காவின் சுதந்திரபோர் 1789ல் பிரிட்டனின் புரட்சி, 1917ல் ரஷ்யாபுரட்சி, 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா மற்றும் வேறுபல நாடுகளின் சுதந்திரப் போராட்டம், இவையெல்லாம் மனித உரிமை போராட்டத்திற்கு புதிய சக்தியை கொடுத்தன. இவைகளினால் உலக மனித உரிமைகளின் அறிவிப்பை மனித உரிமை பாதுகாப்பு இதிகாசத்தில் ஒரு முக்கிய பகுதியாகும். வெளிநாட்டு அறிஞர்களால் உருவாக்கப் பட்ட மனித உரிமைகளின் பாதுகாப்பை 1948 டிசம்பர் 10ம் தேதி ஐ.நா சபை அங்கிகரித்தது.

பொது சபை மனித உரிமைகளை காக்கும் பொறுப்பு மற்றும் தலைமையை உலக சபையின் ஒவ்வொரு உறுப்பு நாடுகளும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்று தீர்மானித்தது. இது போன்ற தீர்மானத்தை பெற்ற உறுப்பு நாடுகள் மனித உரிமைகளை காக்க முன்னோடியான, வழிகாட்டிகளை உலக சபையின் மனித உரிமைகள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. இந்த வழிகாட்டிகளை முக்கியமாக 30 படிகளில் தெரிவிக்கப்

©KTBS Not to be republished

பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக ஒவ்வொரு தனிமனிதனும் பிறப்பிலிருந்தே சுதந்திரம், சமஉரிமை, மற்றும் உயர்வை பெற்றிருப்பது, சுதந்திரமாக வாழ்தல், மற்றும், பாதுகாப்பு பெற்றிருத்தல் அடிமைத்தனத்தை ஒழித்தல், பெண்ணடிமை அல்லது கொடுமையை ஒழித்தல், போன்றவை. பொதுவாக மனித உரிமைகளை இந்தியா வாதித்து வந்துள்ளது. இந்தியா தன்னுடைய அரசியல் அமைப்பின் முன்றாம் பாகத்தில் விதி 12லிருந்து 35வரையில் உள்ள விதிகளின் படி அடிப்படை உரிமைகள் பற்றி குறிப்பிட்டுள்ளது மற்றும் இந்த விசயத்தைப் பற்றி விளக்கப் பட்டுள்ளது. உலக சபையின் சாதாரண சபையில் உலகம் தழுவிய மனித உரிமைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று இந்தியா கூறி வருகிறது.

மனித உரிமைகளின் கொடுமைக்கு சம்மந்தப் பட்டவாறு. 1966ல் ஐ.நா சபை உறுப்பு நாடுகளுடன் ஒரு சபையை நடத்தி ஒவ்வொரு நாடும் மனித உரிமை பாதுகாப்பிற்கு அரணாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது. இதன் காரணமாக மனித உரிமை பாதுகாப்பிற்கான வெளிநாட்டு அளவில் மனித உரிமை பாதுகாப்பு குழு உருவாக்கப் பட்டது. இதற்கு முன்னோடியாக இந்தியாவில் தேசிய மனித உரிமை பாதுகாப்பு குழு, தேசிய மகளிர் பாதுகாப்பு குழு, தேசிய தாழ்த்தப் பாட்டோர் பாதுகாப்பு குழு, தேசிய பழங்குடியினர் பாதுகாப்பு குழு, பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் தேசிய அமைப்பு போன்றவை உருவாக்கப் பட்டுள்ளது. மாநில அளவில், மாநில மனித உரிமை அமைப்பு, மாநில மகளிர் அமைப்பு போன்றவை உருவாக்கப் பட்டுள்ளது.

***ஆயுதங்களின் போட்டி :*** ஒரு புகழ் பெற்ற வார்த்தைஉண்டு ‘அணுஆயுத உலகத்தில் நாம் போரை ஒழிக்க வேண்டும்’ இல்லையென்றால் போர் நம்மை ஒழிக்கும், தற்போதைய உலகத்தில் ஆயுதங்களின் போட்டி ஒரு பயமான சூழ்நிலையாக காண்கிறது. ஆயுத ஒழிப்பு உலகின் இன்றைய மற்றும் நாளை வாழ்விற்கு மிக முக்கியம் என்றாகிறது. ஆயுதங்களின் தீவிரமான போட்டியை தடுக்க ஆயுத ஒழிப்பு ஒன்றே முக்கியமாகும்.

ஆயுத ஒழிப்பு என்றால் குறிப்பிட்ட அல்லது எல்லா ஆயுதங்களையும் தவிர்த்து அல்லது முழுவதுமாக ஒழித்தல். ஆயுதங்களின் நேரடி பயன்பாட்டினால் உலகத்தில் பயம், நிலையாமை பதற்றம் மற்றும் போரின் நிகழ்வும் தலையெடுக்கம். இந்த எல்லா தீய நிகழ்வுகள் தடுக்கும் நோக்கில் அணு ஆயுத ஒழிப்பு தற்போதைய உலகத்திற்கு மிக முக்கியமாகிறது. இது போன்று ஆயுதங்கள் மற்றும் வெடி குண்டுகள் பொருளாதார ரீதியாக ஒரு தேவையற்ற இழப்பாகும் என தோன்றுகிறது. அமெரிக்காவின் தலைவர் ஐ.எஸ்.என். ஹோவர் ஒரு முறை கொந்தளித்தார். ஆயுதங்களை கொண்டுள்ள இந்த உலகம் வெறும் பணத்தை மட்டும் செலவழிப்பதில்லை. அதற்கு பதிலாக தொழிலாளர்களின் வியர்வை, விஞ்ஞானிகளின் அறிவை, மற்றும் குழந்தைகளின் ஆசைகளை வீணடிக்கிறது.

அணு ஆயுதம் அல்லது நியூக்கிளியர் பாம்புகள் தயாரிப்பதுடன் ஆயுத ஒழிப்பு அல்லது ஆயுத தடைப்பற்றிய கேள்வி மிகவும் முக்கியமானது என்று கருதப்படுகிறது. இந்திய ஒரு அமைதியை விரும்பும் நாடாக இருப்பதால் ஆயுத கட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்கிறது எதிர்கால உலகத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் போரை தடுப்பது மிகவும் அவசியமாகவும், 1963க்கு பிறகு அமெரிக்கா யுனைட்டட் அமைப்பும் மற்றும் சோவியத்

©KTBS Not to be republished

ரஷ்யாவும் பலவித ஒப்பந்தங்களை செய்து கொண்டன. குறிப்பிட்ட ஆயுதங்களின் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் மற்றும் பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை நடத்தும் சோதனைக்கு தடை முழுமையான இருநாட்டு தடை ஒப்பந்தம் (C.T.B.T) இவைகள் அனு ஆயுதங்களை தடைசெய்ய சில முக்கியத்துவமானது என்று கருதப்படுகிறது. இவ்வாறு ''பரஸ்பரம் தடை''க்கு எதிராக இந்தியாவும் சேர்ந்து எல்லா நாடுகளின் முயற்சியும் அவசியமாகிறது.

***பொருளாதார ஏற்றத் தாழ்வு :*** உலக குடும்ப உறுப்பினர்களில் பரஸ்பரம் பொருளாதார ஏற்ற தாழ்வு ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளது. இது புதிய குடியேற்றம் மற்றும் தன்னாட்சி ஒரு இதிகாச கொடுப்பினை என்று கருதலாம். ஐரோப்பிய நாடுகள். ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் லத்தின் அமெரிக்கன் நாடுகளில் தன்னுடைய புதிய குடியேற்றத்தை உருவாக்கியது. இந்த தன்னாட்சிக்கு உட்பட்ட நாடுகள் பொருளாதாரமாக பின் தங்கின. 20ம் நூற்றாண்டின் முதல் பகுதிவரையில் அவர்களின் முன்னேற்றம் மிகவும் வீழ்ச்சியடைந்தது. சுதந்திரத்திற்கு பிறகு ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா நாடுகள் முன்னேற்றமடைய முயற்சி செய்தன. ஆனால் விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து, தொலைதொடர்பு, விஞ்ஞானம், கல்வி, ஆரோக்கியம், போன்ற எல்லா துறைகளிலும் வளர்ச்சி அடைய பொருளாதார தடை தலைதூக்கியது. எனவே உலக பொருளாதார உதவி இவைகளுக்கு முக்கியமாகவும் என்று அறிய முடிந்தது.

பொருளாதார வகையில் பின் தங்கியுள்ள நாடுகளுக்கு 1945க்கு பிறகு அரசியல் சேர்க்கையை ஆதரித்து அமெரிக்கா, மற்றும் சோவியத் ரஷ்யாவின் குழுக்கள் உதவி செய்ய ஆரம்பித்தன. ஆனால் இந்த நாடுகளின் வறுமை, முன்னேற்றமடைந்த நாடுகள் அரசியல் லாபத்திற்காக பயனானது.

எதிர் காலத்தில் இந்தியா நடுநிலை கொள்கையை உலகத்தில் தொடர்ந்தது. எந்தவித சரத்துக்கள் இல்லாமல் முன்னேறிய நாடுகள், ஏழை நாடுகளுக்கு பொருளாதார உதவி கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை இந்தியா ஏற்றுக் கொண்டது. தன்னால் பின்தங்கிய நாடுகளின் சுய கௌரவத்தை உயர்த்த இந்தியா உதவியது. அதனுடன் பணக்கார நாடுகளின் மூலதனம் கூட ஏழைநாடுகளுக்கு பாய்ந்து வரும்படி செய்ய முயற்சி செய்தது. ''மூன்றாவது உலகம்'' என்ற விசயமே, ''ஏழைநாடுகளின்'' என்ற அம்சத்தை உயர்த்தி காட்டியது. இந்த நாடுகள் உணவு, மூலதனம், தொழில் நுட்பம், ஆரோக்கியம், உயர் கல்விக்கு வழிவகுத்தல் போன்ற குறைகளிலிருந்து வெளிவர முயற்சி செய்தது. அதைப் போன்றே அன்டைய நாடுகளின் தேவையற்ற செலவு, மற்றும் வியாபாரம், திறமையற்ற போட்டி, உலகமயமாதால், போன்றவற்றால் ஏழைநாடுகளின் மீது பல சமயம் தீய பரிணாமம் ஏற்படுகிறது. இவையெல்லா வற்றையும் நீக்குவதற்கு ஐ.நா.சபை மற்றும் முன்னேறிய நாடுகள் முயற்சி செய்ய வேண்டும். இந்தியா ஒரு முன்னேறும் நாடாக உலக குடும்பத்தில் எல்லா நாடுகளுக்கு இடையே பொருளாதாரம், நீதி, மற்றும் சரிஉரிமையை ஏற்றுகிறது.

©KTBS Not to be republished

# பயிற்சிகள்

## I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிர்பபுக.

1. மனித உரிமைகள் தினத்தை ________ என்று அழைக்கிறோம்.
2. இந்தியா தொடர்ந்து ________ மனித உரிமைகளை ஏற்றுக்கொண்டு வந்துள்ளது.
3. ஆப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்து போராடியவர் ________
4. மனித உரிமைகள் என்பது ________ சமஉரிமை உட்கொண்டது.

## II. கீழ்க் கண்ட வினாக்களுக்கு குழுக்களுடன் விவாதித்து விடையளி.

1. இரண்டாம் உலக போருக்குப் பின் ஏற்பட்ட பிரச்சனைகள் எவை?
2. மனித உரிமைகளை, ஏற்புடையவதற்கு இந்திய நடத்தி வரும் போராட்டத்தை விவரி.
3. ஆயுதங்களின் போட்டியே உலக அழிவிற்கு காரணம், இதன் பின்னணியில் ஆயுதங்களின் போட்டியால் ஏற்படும் விளைவுகள் என்ன?
4. பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாடுகளின் குணங்கள் யாவை? இவ்வாறு பின்தங்குவதற்கு காரணமென்ன?
5. பொருளாதார ஏற்றதாழ்வின் நிவாரணத்திற்கு இந்தியா கை கொண்டுள்ள முறைகள் யாவை?
6. நிறவெறி கொள்கை மனித தத்துவத்திற்கு எதிரானது இதனை உங்கள் நோக்கத்தில் கூறுங்கள்.

## III. செய்முறை பயிற்சி :

1. மனித உரிமைகளை பாதுகாக்க, உருவாக்கப்பட்டுள்ள அமைப்பை பற்றி செய்தி சேகரி.
2. கர்நாடக அரசாங்கம் மாநிலத்தின் ஏழை மக்களுக்காக கைகொண்டுள்ள முன்னேற்றப் பட்டியலை பட்டியலிடு.

## IV. திட்டம் :

1. நிறவெறி கொள்கைக்கு எதிராக போராடிய மகான்களின் வாழ்க்கை வரலாற்றை படி.

* * * *

Not to be republished ©KTBS


# அத்தியாயம் - 5
# ஐக்கிய நாடுகளின் சபை

## இந்த அத்தியாயத்தில் கீழ்க் கண்டவற்றை அறிகிறோம்.

- ஐக்கியநாடுகளின் சபை நிறுவுதல்
- ஐக்கியநாடுகளின் சபையின் நோக்கங்கள்
- ஐக்கியநாடுகளின் சபையின் உறுப்புசபைகள்
- ஐக்கியநாடுகளின் சபையின் சாதனைகள்
- ஐக்கியநாடுகளின் சபையின் கீழ் பலசங்க அமைப்புகள்

## ஐக்கிய சபை (யூ.என்.ஓ)

20ம் நூற்றாண்டு இரண்டு பெரிய யுத்தங்களுக்கு சாட்சியானது. முதலாம் உலகப் போருக்கு பிறகு உலக அமைதிக்காக ''லீக் ஆப் நேஷன்ஸ்'' என்ற அமைப்பு உருவானது. ஆனால் 1939ல் இரண்டாம் உலகப் போர் ஆரம்பம் ஆகும்போதே இந்த சங்கம் வீழ்ச்சியடைந்தது. இரண்டாம் உலகப் போர் கடுமையில் நடந்து கொண்டு இருக்கும் போதே, உலகத்திற்கு நிறந்தர அமைதி வேண்டி முயற்சியும் ஆரம்பித்து உலக அளவில் இங்கிலாந்தின் ''வின்செண்ட் சர்ச்சில்'' ரஷ்யாவின் ஜோசப் ஸ்டாலின் மற்றும் அமெரிக்காவின் ''பிராங்ளிங் டிரூஸ்வெல்'' உலக அளவில் அமைப்பை நிறுவமுன் வந்தார்கள். ''உலக சபை (யூனிடெட் நேஷன்) என்ற ஒலியை அமெரிக்காவின் தலைவர் ''பிராங்ளின் டிரூஸ்வெல்ட்'' நடைமுறைக்கு கொண்டு வந்தார். மற்றும் 1942 ஜனவரி 1ம் தேதி 26 நாடுகளின் ஒப்பந்தத்த கையெழுத்துடன் முதல் முறையாக இந்த ஓசையை உபயோகப்படுத்தப் பட்டது. இதனை தற்போது ''உலகநாடுகள்'' என்று அழைக்கப் படுகிறது. 1945 ஜூன் 26 அன்று சான்பிராஸ்கோ உலக சபையின் அலுவலகம் சம்மேளத்தின் அமைதிக்காக 51 நாடுகளின் பிரதிநிதிகளின் கையெழுத்திட்டனர். அதன் பிறகு 1945 அக்டோபர் 24 அன்று 'உலகசபை' தோன்றியது, உலகசபையின் படி தற்போது 195 வல்லமை நாடுகள் உள்ளன. அவற்றின் 193 நாடுகள் உலகசபையின் உறுப்பினராக உள்ளன. இதன் தலைமை அலுவலகம் அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் உள்ளது. அமைதியை விரும்பும் எல்லா நாடுகளும் இதன் உறுப்பினர் ஆக முழுமையான அவகாசம் உள்ளது.



உலகசபை (யூ.என்.ஓ)

## ஐக்கிய நாடு சபையின் நோக்கங்கள் :

உலகசபை சிறியது. இந்த உலகத்து சபையின் முதல் தாக்கல் என்பது இதில் 19

©KTBS Not to be republished

அத்தியாயங்கள் உள்ளன. III விதிகளை கொண்டுள்ளது. ''உலகின் மக்கள் சமுதாயம் என்கின்ற நாங்கள்.......'' என்ற வாக்கியத்துடன் உலகசபை ஆரம்பமாகிறது.


### ஐக்கிய நாடு சபையின் நோக்கங்கள் கீழ்க் கண்டவாறு உள்ளது.

1. வெளிநாடுகளில் அமைதி மற்றும் சமாதான ஒழுங்கை காப்பது.
2. நாடுகளுக்கு இடையே பரஸ்பரம் கூட்டனியை வளர்ப்பது.
3. மனிதகுலத்தின் அடிப்படை உரிமைகளைப் பற்றிய நம்பிக்கையை வளர்ப்பது.
4. வெளிநாட்டு அளவில் பொருளாதாரம், சமுதாயம், கலாச்சாரம், அல்லது மனிதாபிமான பிரச்சனைகளுக்கு வெளிநாட்டு உதவியுடன் தீர்வு காண்பது.
5. வெளிநாட்டு அளவில் நீதி மற்றும் உடன் படிக்கைகளின் சரத்துகளுக்கு மதிப்பு கொடுப்பது.
6. நாடுகளின் இடையே பரஸ்பரம் சமாதானத்தின் மையமாக செயல்படுவது.

### ஐக்கிய நாடு சபையில் துணை சங்கங்கள் :

உலக சபை சிறியது அதன்படி மொத்தம் ஆறு முதன்மை துணைசங்கங்களுக்கு (வசதி) இடம் கொடுக்கப்பட்டுள்ளது அவைகள் :

**பொதுசபை :** எல்லா உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை கொண்ட ஒரு கிளை அமைப்பாக உள்ளது. ஒவ்வொரு உறுப்பு நாடுகளும் 5 உறுப்பினர்களை அனுப்பி வைக்கிறது. ஆனால் ஒவ்வொரு உறுப்பு நாட்டுக்கும் ஒரு வாக்கு உரிமை மட்டும் உண்டு. பொது சபை தன்னுடைய முதல் கூட்டத்தொடரில் ஒரு வருட காலத்திற்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுத்தது. அதே போல் 17 துனைத் தலைவர்களையும் 7 நி லை கு ழு அமைப்புகளுக்கு ஏழு பேர் தலைவர்களாக இங்கு தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த பொது சபை கூட்டத் தொடர் சாதாரணமாக செப்டம்பர் மாதத்தில் ஆரம்பித்து டிசம்பர் பாதி மாதம் வரை நடைபெறும். அனைத்து முக்கிய முடிவுகளுக்கு மூன்றில் இரண்டுபங்கு அளவு வந்துள்ள உறுப்பினர்களின் அனுமதி தேவைப்படுகிறது. வருடாந்திர வரவு செலவு கணக்குப் பட்டியலுக்கு இந்த பொது சபையில் ஒப்புதல் பெற




©KTBS Not to be republished

வேண்டியுள்ளது. எதாவது அவசர விசயங்களுக்கு விவாதிக்க வேண்டியிருந்தால், சிற்பபு கூட்டத்தை கூட்ட வேண்டும். உலக சபையை போலவே உலகின் எல்லா முக்கிய நிகழ்வுகளை விவாதிக்க இது முக்கிய பங்கு வகிக்கிறது.

***2. பாதுகாப்புசபை*** இது உலக சபையின், அமைச்சர் அவை என்பது போல் இருந்து மிகமுக்கியமான பலம் வாய்ந்த உறுப்பு எனப்படும். இதில் 15 பேர் உறுப்பினர்கள் இருப்பார்கள், அவர்களில் அமெரிக்கா, ஒருங்கினந்த அமைப்பு, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், மற்றும் சீனா நிரந்தர உறுப்பினர்களை கொண்ட நாடுகளாக உள்ளது. மீதமுள்ள 10 பேர் தற்காலீக உறுப்பினர்களை இரண்டு வருட காலத்திற்கு பொது சபை தேர்ந்தெடுக்கும். இவர்கள் உலகத்தின் பல (நிலப்) பூகோள பகுதிகளுக்கு பிரதிநிதியாக விளங்குவார்கள். ஒவ்வொரு பிரதிநிதிக்கும் ஒரு வாக்கு அளிக்கும் உரிமை உள்ளது. ஆனால் எல்லா நிரந்தர உறுப்பினர்களின் அனுமதி ஒவ்வொரு முக்கிய முடிவுக்கும் தேவைப்படுகிறது. இந்தியாவும் இதன் நிரந்தர (பிரதிநிதியாக) உறுப்பினராக முயற்சி க்கிறது.

உலக பிரச்சனைகளுக்கு அமைதிக்கு வழிவகுக்க, தீர்வுகளை பாதுகாப்பு சபை முயற்சிக்கிறது. தேவைப்பட்டால் உலகசபை அமைதிகாக்கும் படையை வெளிநாட்டின் அமைதி மற்றும் ஒழுங்கை காக்க அனுப்பும். வெளிநாட்டு நீதி மன்றங்களின் நீதிபதிகளை இது நியமிக்கும். மற்றும் உலக சபையின் செயலாளரை நியமிக்க பெயரை சிபாரிசுசெய்யும்.

***3. பொருளாதார மற்றும் சமூக சபை :*** இந்த குழுவில் 54பேர் உறுப்பினராக இருக்கிறார்கள். இவர்களில் 18 உறுப்பினர்கள் 3 வருடங்களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கிறார்கள். உறுப்பினர்களின் ஒருவரை தலைவராக தேர்ந்தெடுக்கப் படுவார். இந்த குழுவின் முக்கிய செயல்கள் பின் வருமாறு.

i) வெளிநாட்டு அளவில் பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், கல்வி ஆரோக்கியம் மற்றும் பல தொடர்புடைய விசயங்களை ஆராய்ந்து செயல் படுதல்.

ii) ஆதரவற்றவர்கள், பெண்களின் நிலைப்பாடு குடியிருப்பு, போன்ற விசயங்கள் இந்த அமைப்பின் செயல்பாட்டில் வருகிறது.

iii) மனித உரிமைகள் பற்றியும், அடிப்படை சுதந்திரங்கள் பற்றியும் இந்த குழு சிபாரிசு செய்கிறது.

iv) மனித வளம், கலாச்சாரம், கல்வி போன்ற விசயங்கள் பற்றி வெளிநாட்டு மாநாடுகளை கூட்டுவது.

v) சிறப்பு பெற்ற உறுப்பு அமைப்புகளான வெளிநாட்டு தொழிலாளர் சங்கம் (I.O.L), உணவு மற்றும் விவசாய சங்கம், (F.I.O), உலக சுகாதார அமைப்பு, (W.H.O), போன்ற சங்கங்களை செயல்படுத்துவது இவையெல்லாம் பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்பின் முக்கிய சங்கங்கள்.

***4. அறக்கட்டளை சபை :*** இந்த சங்கம் உண்மையாக பொதுசபையின் கிளைச் சபையாகும். அல்லது உதவி செய்யும் சங்கம் என்ற வகையில் செயல் படுகிறது. டிரஸ்டின் கீழ் வரும் பகுதிகளின் எண்ணிக்கை குறைவு என்பதால் இந்த சங்கத்தின்

© KTBS Not to be republished

செயல்பகுதிகள் குறைவாக இருக்கிறது. சுதந்திரம் அடையாத மாநிலப் பகுதிகளின் பொறுப்பை இந்த அமைப்பு பெற்றுள்ளது. ஆனால் இது தற்போது நடைமுறையில் இல்லை ஏனென்றால் எந்த ஒரு அறக்கட்டளையும் இல்லை.

**5. வெளிநாட்டு நீதிமன்றங்கள் :** இது உலகசபையின் ஒரு முக்கிய உறுப்பு சங்கமாகும். மற்றும் அனைத்து உறுப்பு நாடுகளும் இந்த நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு தங்களுடைய முழு ஆதரவை தர கடமைபட்டிருப்பார்கள். இந்த நீதி மன்றத்தில் 15பேர் நீதிபதிகளாக இருப்பார்கள். இவர்களுடைய பதவிக்காலக் ஒன்பது ஆண்டுகளாகும். இவர்கள் மறுமுறையும் தேர்ந்தெடுக்க தகுதியானவர்களாகும். நெதர்லாந்து நாட்டின் தி ‘ஹேக்’ என்ற இடத்தில் இந்த நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளது. மூன்று ஆண்டு காலம் ஒரு தலைவர் மற்றும் துணைத் தலைவரை இந்த நீதிமன்றத்தின் நீதிபதிகளே தேர்ந்தெடுப்பார்கள். அதிக வாக்கு களின் அடிப்படியில் மற்ற முடிவுகள் மேற்கொள்ளப்படுகிறது. நியாய தீர்ப்புகளுடன் சட்டம் விசயத்தில் இது சிறந்த ஆலோசனைகளை கொடுக்கிறது. சுயமான அறிவுரை வழங்குகிறது. இந்த நீதிமன்றங்களின் தீர்மானங்கள் மகத்துவம் பெற்றுள்ளது. ஆனால் இந்த நீதி மன்றங்களின் தீர்ப்பு கட்டாயமாக எந்த நாட்டிற்கும் பொருந்துவதில்லை. இவ்வை எல்லாவற்றிக்கும் இடையிலும் வெளிநாட்டு அமைதி மற்றும் சமாதானம், ஒழுங்கிற்கு வெளிநாட்டு நீதிமன்றம் தனது சிறப்பான பங்களிப்பை கொடுத்துள்ளது.

***தலைமைச் செயலகம் :*** தலைமைச் செயலாளர் மற்றும் உலக சபையின் ஊழியர்கள் இந்த சங்கத்தை சேர்ந்தவராக இருப்பார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் இந்த செயலகத்தின் தலைவர் எனப்படுவார். இவரை பாதுகாப்பு அமைப்பின் சிபாரிசின் பேரில் பொதுசபை 5 வருடங்களுக்கு தேர்ந்தெடுக்கும். இதன் தலைமை செயலகம் நியூயார்க்கின் ஜெனிவா, வியட்னாம் மற்றும் நைரோபியாவில் வேறு கிளைகள் உள்ளன. தினந்தோறும் நடக்கும் அலுவல் யோசனைகள், கலாச்சார செயல்பாடுகள் போன்றவை இந்த தலைமை செயலகத்தின் கீழ் வருகிறது.

**அறிந்து கொள்ளுங்கள் :**

*உலக சபையின் தலைமைச் செயலாளர்கள் :*

| | | | |
|---|---|---|---|
| 1. | டிராக்லீ | (1946–1952) | நார்வே |
| 2. | டேக்ஹமர்கில்டு | (1953–1961) | சுவிடன் |
| 3. | யூ-தாண்டு | (1961–1971) | பர்மா |
| 4. | கார்ட் வால்டுஹேம் | (1972–1989) | ஆஸ்திரியா |
| 5. | சேவியர் பிரிஸ்டி குயெல்லார் | (1982–1991) | பெரு |
| 6. | பௌத்ரஸ் பாலீ | (1992–1996) | எகிப்து |
| 7. | கோபி அன்னன் | (1997–2006) | கானா |
| 8. | பான்-கீ-மூன் | (2007–2017) | கொரியா |
| 9. | ஆன்டொனியோ கட்ரெஸ் | (2017லிருந்து) | போர்ச்சுகல் |

©KTBS Not to be republished

***ஐ.நா. சபையின் சாதனைகள் :*** உலக சபை பலவித அரசியல் விவாதங்களை பிரச்சனை (சச்சரவு) தீர்த்து வைத்துள்ளது. ஆனால் பாதுகாப்பு குழுவின் நிரந்தர உறுப்பினர்களின் முழுச் சம்மதமின்மை, மற்றும் உலக நிகழ்வுகளால் உலக சபையின் சாதனைகள் குழம்பியுள்ளது எனலாம். இதன் செயல்பாடுகள் அனைத்தும் போர் சம்பந்தப்பட்டது. பார்வையாளர்கள் குழு அல்லது அமைதி படைகள் மூலம் நடப்பது. இந்தியா உலக அமைதியையும், மனித உரிமைகள் பாதுகாப்பிற்கும் உலக சபையின் செயல்பாட்டிற்கு முழு ஒத்துழைப்பு தருகிறது. சூயஸ் கால்வாயின் பிரச்சனை, இரான் விவாதம், இந்தோனேசியா, காஷ்மீர், பாலஸ்தீனம், கொரியா, ஹங்கேரி, காங்கோ, சைபரஸ் அரேபியா - இஸ்ரேல், நம்பியா, ஆப்கானிஸ்தான் போன்ற விவாதங்களின் தீர்விற்கு உலக சபை பாடுபட்டுள்ளது. அணுஆயுதம் மற்றும் ஆயுத ஒழிப்பு நோக்கத்தில் உலக சபை தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. தற்போது பணிப்போர் முடிந்துள்ளது. உலகில் அமைதி ஏற்படும் பொருட்டு உலக சபை சிறந்து செயல்பட்டுக் கொண்டுள்ளது.

***2. பொருளாதாரம் மற்றும் நிதித்துறையின் சாதனை :*** உலக சபையின் தீர்மான மணுவில் இந்தச் (சங்கம்) சபை சமூக முன்னேற்றம் மற்றும் நல் வாழ்விற்கு முயற்ச்சி செய்ய வேண்டும் என்று அறிவிக்கப் பட்டது. பொருளாதாரம் மற்றும் சமூக சபையின் உயர் விசாரனையில் இந்த செயல்களை சாதிக்க வேண்டியுள்ளது. பொருளாதாரம் மற்றும் நிதித் துறையில் ('General Agriment on Taerifs and Trade') சுங்கவரி மற்றும் வியாபாரம் பொது ஒப்பந்தம்மாக இருக்கும். உதராணமாக உலகசபையின் முன்னேற்ற யோசனை (The United Nations development programme) கூட, இந்த துறையின் ஒரு சாதனை, உலகவங்கி (I.M.F) போன்ற பொருளாதார அமைப்புகள் உலக சபையின் உதவியுடன் நல்ல சாதனை செய்துள்ளது.

***சமுதாய சாதனைகள் :*** உலக ஆரோக்கிய சபை, யுனெஸ்கோ, யுனிசெப், உலக ஆதரவற்றோர் அமைப்பு, போன்றவை உலக சபையின் கீழ் விருப்பத்துடன் செயல் படுவதை பொதுவாக மனித உரிமைகளை வெளியிட்டது. ஒரு நல்ல சாதனை எனலாம், நிறவெறி கொள்கையை ஒழித்து மன்னாராட்சி ஒழிப்பு, புதிய குடியேற்ற தடை போன்றவை களை போக்குவதில் உலக சபையின் பங்கு குறிப்பிடதக்கது.

> ***தெரிந்து கொள்ளுங்கள்***
> ***"உலக சபையில், சீனா, ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், ஸ்பானிஸ், மற்றும் அரேபியா மொழிகளில் ஆட்சி மொழி உரிமை பெற்றுள்ளது.***

***ஐ.நா. சபையின் கீழ் வரும் பலவித சங்க அமைப்புகள் :***

***ஏ) உணவு மற்றும் விவசாய சங்கம்* FAO - (Food and Agricultural Organisation) :** உலகம் முழுவதும் உள்ள வறுமை, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைவுக்கு எதிராக போராட உணவு மற்றும் விவசாய சங்கம் ஒன்று 1945ல் உதயமானது. இதன் முக்கிய மூன்று (3) உட்பிரிவு என்றால் (1) சம்மேளனம், (2) சபை, (3) இயக்குநர், இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்கள் என்றால் ஏ) விவசாய துறையின் முன்னேற்றம் பி) ஊட்டச்சத்தான உணவு அளிப்பது சி) பசியிலிருந்து உலக மக்களை காத்தல் டி) கிராமப் புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தல், போன்றவையாகும். இதன் அலுவலகம் ரோம் நாட்டிலுள்ளது.

©KTBS Not to be republished

***பி) உலக சுகாதார சங்கம் :*** **WHO - (World Health Organisation) :** உலகத்தில் உள்ள மனிதர்களின் ஆரோக்கியத்தை காக்க 1948ல் உலக சுகாதார சங்கம் உருவாக்கப்பட்டது. இந்த உலக சுகாதார சங்கம், காலரா, பிளேக், மலேரியா, அம்மை, போன்ற நோய்களை முழுமையாக ஒழிக்க முயற்சி செய்து கொண்டுள்ளது. அதே போல், எய்ட்ஸ், கேன்சர் போன்ற நோய்களிலிருந்து இந்த உலகத்தை காக்க ஒரு முயற்சி செய்கிறது. அம்மை நோயை முழுமையான ஒழிப்பில் இந்த அமைப்பு வெற்றி கண்டுள்ளது. மக்கள் தொகை பெருக்கம் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு, பசி, ஊட்டச் சத்து நிறைவு, போன்ற விசயங்கள் இந்த சங்கத்தின் செயல்பாட்டில் உள்ளது. இந்த எல்லாத் துறைகளிலும் உலக ஆரோக்கிய சங்கத்தின் சேவை குறிப்பிட தக்கது எனலாம். இதன் முக்கிய அலுவலகம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ளது.

***சி) யூனெஸ்கோ :*** **(United Nations Educational Scientific and Cultural Organisation) : UNESCO** இது 1946ல் உருவானது. இதன் முக்கிய தலைமையகம் பாரீஸில் உள்ளது. இது உலகமுழுவதும் அறிவியல், கல்வி கலாச்சாரம், போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்கமுள்ள புகழ் பெற்ற அமைப்பு, தொழில் நுட்ப கல்வி, தொலைதொடர்பு, உருவாக்கும் சிந்தனை, கலாச்சாரம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பற்றி இது செயல்படுகிறது. இது அரசு மற்றும் தனியார் சங்கங்களுக்கும் உதவி புரிகிறது.

***டீ) யூனிசீப் :*** **(United Nations International Emergency Fund) :** இந்த அமைப்பு இரண்டாம் உலகப் போருக்கு பின் குழந்தைகள் நலத்திற்காக 1946ல் உருவானது. பின்பு 1957ல் இது ஒரு நிரந்தர அமைப்பு என்றானது. இந்த அமைப்பில் 30 பேர் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மகளிர் மற்றும் குழந்தைகள் நல முன்னேற்றத்திற்கு, முன்னோடியான சூழ்நிலையை உருவாக்குவதே இந்த அமைப்பின் அடிப்படை நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு முன்னோடியாக தேவைப்படும் எல்லா நாடுகளுக்கும் இது உதவி செய்கிறது. 1965ல் யூனிசிப் நோபால் பரிசு பெற்றுள்ளது. வாழ்த்து அட்டைகள் விற்பதின் மூலம் வரும் வருமானத்தை குழந்தைகள் நலத்திற்காக கொடுக்கப்படுகிறது. இவ்வறு இந்த அமைப்பு மனித குலத்திற்கு நன்மை செய்யும் அமைப்பாகும்.

***ஈ) ஐ.எம்.எப்*** **(International Monetary Fund) :** இந்த அமைப்பு 1945ல் ஆரம்பமானது. இது வெளிநாட்டு நிதிதுறை அமைப்பாகும். 1947க்கு பிறகு முழுமையாக செயல்பட துவங்கியது. இதன் தலைமை அலுவலகம் அமெரிக்காவின் வாஷிங்டன்னில் உள்ளது. இது வெளிநாட்டு அளவில் பொருளாதார பிரச்சனைகளை தீர்க்க முயற்சி செய்கிறது. உலக வாணிப வளர்ச்சிக்கு, பொருளாதாரத்தில் நிலை, மற்றும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கலில் நல்ல நிலை போன்றவற்றை காத்துக் கொள்ள இது உதவிபுரிகிறது. இதில் நிர்வாக அமைப்பு, செயல் நிர்வாக இயக்குநர் மற்றும் நிர்வாக இயக்குநர்கள் செயல்படுவார்கள். இதன் செயல்பாடுகள் பாகுபாடற்றவை. பல நாடுகளின் தலைமை வங்கிகளுக்கு தலைமை வங்கியாக இதனை அழைக்கலாம். பொருளாதார ரீதியாக முன்னேறிய மற்றும் பின்தங்கிய நாடுகளின் பரஸ்பர உறவுகளை விரும்புவதில் இது முக்கிய பங்குவகிக்கிறது.

©KTBS Not to be republished

***எப்) ஐ.பி.ஆர்.டி*** **(International Bank for Reconstruction and Development) :** உலக வங்கி என்று அழைக்கப்படும் இந்த அமைப்பு 1947ல் ஆரம்பமானது. இதன் தலைமை அலுவலகம் வாஷிங்டனில் உள்ளது. இரண்டாம் உலகப் போருக்கு பின்பு பொருளாதாரம் மீண்டும் சிறக்க இந்த வங்கி உருவானது. விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து மற்றும் தொலை தொடர்பு முன்னேற்றத் திற்காக, தேவைப்படும் எல்லா உறுப்பு நாடுகளுக்கும் இந்த வங்கி தேவையான அளவு கடன் உதவி செய்கிறது. இது உலகில் வியாபாரம், வெளிநாட்டு கொடுக்கல், வாங்களுக்கு உதவிபுரிகிறது. எல்லா முன்னேற்ற மடையும் நாடுகளுக்கு பொருளாதார முன்னேற்றத்திற்கு அதிக உதவிபுரிகிறது. இதில் நிர்வாக ஆளுநர்கள், செயற்கமிட்டி, மற்றும் தலைவர் செயல்படுவார். இதன் கீழ் இரண்டு உதவி கிளைகள் உண்டு. 1) வெளிநாடுகளின் முன்னேற்ற அமைப்பு பி) வெளிநாட்டு நிதித் துறை கழகம்.

***ஜி) வெளிநாட்டு தொழிலாளர் நலச் சங்கம் :*** **(International Labour Organisation)** இந்த சங்கம் பெயரில் குறிப்பிடபட்டுள்ளது போல் தொழிலாளர் நலனை காப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கம். இதன் தலைமை அலுவலகம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ளது. ஒவ்வொரு உறுப்பு நாடும் இரண்டு பிரதிநிதிகளை இந்த சங்கத்திற்கு அனுப்பி வைக்கிறது. இதில் ஒருவர் செயலாளர் பிரதிநிதி மற்றொருவர் அரசு பிரதிநிதியாக இருப்பார். தொழிலாளி வர்க்கத்தின் சமூக பாதுகாப்பு ஆரோக்கிய பாதுகாப்பு, நல்ல வாழ்க்கை தரம் போன்ற விசயங்கங்கள் இந்த சங்கத்தின் செயல்பாட்டின் கீழ் வருகிறது. பெண் தொழிலாளர்களின் பேறுகால வசதி, அதிகபட்ச சம்பள உயர்வு, குடியிருப்பு போன்ற விசயங்களும் இந்த சங்கத்தின் செயல்பாட்டில் வருகிறது. இந்த சங்கத்தின் தீர்மானங்கள் வெறும் உபதேசமாக இருந்தாலும், உறுப்பு நாடுகள் இவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. இதன் பொது சம்மேளனம் தொழிலாளி வர்க்கத்தின் உலக பாராளுமன்றத்தை போல இருந்து பாதுகாக்க முயற்சி க்கிறது.

***எச்) உலகசபையின் வியாபாரம் மற்றும் வாணிப முன்னேற்றம் :*** இந்த அமைப்பு முக்கியமாக உலக அளவு வியாபாரம் மற்றும் வாணிப முன்னேற்றத்திற்கு முயற்சிக்கிறது. வெளிநாட்டு அளவில் வியாபார வளர்ச்சிக்கு தேவையான தொழில் நுட்பத்தை இந்த சங்கம் தருகிறது. உலக அளவில் தன்னிச்சை தோரனைகளை தொந்திரவுகளை இது நீக்கிறது. அதன் மூலம் வெளிநாட்டு வியாபாரம் மற்றும் வாணிபத்திற்கு உதவி செய்கிறது. இவ்வாறு உலக குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்னோடியாக இது செயல்படுகிறது.

***ஐ) உலக வியாபார சங்கம் :*** **(World Trade Organisation) :** இந்த சங்கம் 1995 ஜனவரி 1ம் தேதி தோன்றியது. இதன் எல்லா உறுப்பு நாடுகளும் பொது வியாபாரம், மற்றும் சுங்க ஒப்பந்தத்திற்கு (காட்) ஒப்பிக் கொண்டுள்ளன. வெளிநாட்டளவில் வாணிபம் மற்றும் வியாபாரத்தின் தடைகளை நீக்குவதற்கு இது முயற்சி செய்கிறது. உலக வங்கியுடன் இது வெளிநாட்டு வாணிபம், விவகாரங்களின் தோதரணை உருவாக்குவதில் உதவி செய்கிறது. முழுமையான வாணிப தோரணையிலிருந்து முன்னேறி செல்லும் நாடுகள் சில சமயம் துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

©KTBS Not to be republished

ஐ.எம்.எஃப், (I.M.F) மற்றும் (I.B.R.D) சங்கங்களுடன் இது மூன்றாவது பொருளாதார தூணாக விளங்குகிறது.

***உள்நாட்டு உதவி :*** தற்கால உலகில் பலவித உள்நாட்டு சங்கங்கள் இருப்பதை நாம் காணலாம். இவைகளில் உறுப்பு நாடுகளின் பரஸ்பரம் உதவிகள் மற்றும் புரிந்து கொண்டு பலப்படுத்தி கொள்கிறது. இப்படிப் பட்ட அமைப்பிகளின் கீழ்க் கண்டவை முக்கியமானவை.

***1) காமென்வெல்த் நாடுகள் :*** **(Commen wealth of Nations) :** இதனை முன்பு ''பிரிட்டீஸ் காமென் வெல்த் ஆப் நேஷன்ஸ்'' என்று அழைத்தார்கள். அதன் பிறகு பிரிட்டீஸ் என்ற ஓசையை எடுக்கப் பட்டது. இந்த அமைப்பு 1962ல் உருவாக்கப் பட்டது. பிறகு இந்தியாவும் சேர்ந்து சுதந்திரம் அடைந்த பல நாடுகள் இதன் உறுப்பினர்களாக விருப்பப் பட்டு பெற்றுக் கொண்டன. இதற்கு அடையாளமாக, பிரிட்டனின் கிரீடம் உள்ளது. தற்போது இந்த காமென்வெல்த் அமைப்பில் 54 நாடு களின் உறுப்பினர்கள் உள்ளனர். பிரிட்டனின், லண்டன் நகரத்தில் இதன் தலைமை அலுவலகம் உள்ளது. இதன் செயல்பாடுகளில் உறுப்பினராக உள்ள நாடுகளின், பிரதம மந்திரி, அமைச்சர்கள், மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் பங்கு வகிப்பார்கள். ஜனநாயகத்தை நிலை நிறுத்துவது, சுதந்திர பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, உலகில் அமைதியை நிலை நாட்டுவது, விளையாட்டு, அறிவியல், மற்றும் கலை வளர்ச்சி, மற்றும் அது சம்பந்தப்பட்டவைகளின் முன்னேற்றம் போன்றவை இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களாகும். பரஸ்பரம் உறுப்பினராக உள்ள நாடுகளின் கூட்டணியை இந்த அமைப்பு பலப்படுத்துகிறது.

***2) சார்க் :*** **(South Asian Association for Regional co-operation) :** இந்த அமைப்பு 1985ல் உருவானது. தற்போது இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், ஸ்ரீலங்கா, பாக்கிஸ்தான், மாலத்தீவு, பூட்டான் மற்றும் ஆப்கானிஸ்தான், ஆகிய இந்த 8 நாடுகளும் இதன் உறுப்பினர்கள் ஆவார்கள். பொருளாதார முன்னேற்றம், சமுதாய முன்னேற்றம் மேலும் கலாச்சார வளர்ச்சியை சுற்றுப்புறச் சூழ்நிலையின் உதவியுடன் சாதிப்பது உடன் முக்கிய நோக்கம், இந்த சாதனை புரிவதற்கு பல தொழில்நுட்ப அமைப்புகள், செயல்படும் படைகள், மற்றும் நிலைக் குழுவுகள் உருவாகியுள்ளன. ஆனால் உறுப்பினராக உள்ள நாடுகள் பரஸ்பரம் அவநம்பிக்கை, விவாதங்கள், இந்த அமைப்பின் முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ளது. எல்லா தீர்மானங்கள் உறுப்பு நாடுகளின் வெறுப்பில்லாத நிலையில் இருக்க வேண்டும் என்ற கொள்கையே இந்த அமைப்பின் முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ளது. தங்களுக்குள் விவாதங்கள் இந்த உறுப்பு நாடு களின் இடையே வேண்டிய அளவு உள்ளன. ஆனாலும் குறிப்பிட்ட காலத்தில் மாநாடுகள், பரஸ்பரம் அமைதி போன்றவற்றிக்கு வழிவகுக்கிறது. விஞ்ஞானம், தொழில் நுட்பம், விவசாயம், பற்றிய விசயங்கள் பற்றி உறுப்பு நாடுகளின் பிரதி நிதிகளின் பயிற்சி முகாம்கள் கூட்டாக நடக்கிறது. ''சார்க்''கின் செயல்பாடுகளில் இந்தியாவும் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் தலைமை அலுவலகம் ''காட்டுமண்டு''வில் உள்ளது.

©KTBS Not to be republished

***ஆசியன் :*** **(Asociation of South East Asian Nations)** இந்த அமைப்பு 1967ல் உதயமானது. இதனை உருவாக்கிய உறுப்பு நாடுகளென்றால் சிங்கப்பூர், மலேசியா, இந்தோநேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து. தற்போது இதில் 10 நாடுகள் உறுப்பினராக உள்ளனர். இதன் முக்கிய நோக்கமென்றால், இந்த பிரதேசங்களின் பொருளாதார முன்னேற்றம், சமுதாய வளர்ச்சிக்கு முயற்சி மற்றும் கலாச்சாரம் வளர்ச்சியடையச் செய்தல், மேலும், பொருளாதார சமூக, கலாச்சாரம், தொழில் நுட்பம், நிர்வாகம் போன்ற துறைகளில் பரஸ்பரம் உதவி மற்றும் சேர்ந்து வாழ்தல்.

இது ஒரு இராணுவ கூட்டணி அல்ல. இந்தியா இந்த அமைப்பைப் பற்றி மிகுந்த மரியாதை கொண்டு உள்ளது. ஆனால் இதில் உறுப்பினர் இல்லை. வெறும் பார்வையாளராக மட்டும் உள்ளது. இதில் உலகில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 9 சதவீதம் பேர் உள்ளனர்.

***5) தி ஆர்கனைசேஸன் ஆப் ஆப்பிரிக்கன் யுனிட்டி :*** இந்த ஆப்பிரிக்காவின் ஒற்றுமை சங்கம் 1963ல் உருவானது. சுதந்திரமடைந்த ஆப்பிரிக்க நாடுகள் தங்களுக்குள்ளாகவே பலவித பிரதேச அமைப்புகளை உருவாக்கி கொண்டன. பின்பு அவையெல்லாம் ஒன்றாகி ''ஆர்கனைசேஸன் ஆப் ஆப்பிரிக்கன் யூனிட்டி'' என்ற புதிய அமைப்பை நிறுவியது. எல்லா சுதந்திர ஆப்பிரிக்க நாடுகள், சுய முடிவு எடுக்கும் உரிமையை இந்த அமைப்பு வாதிடுகிறது. இது சுதந்திரம், சமஉரிமை நீதி மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளில் ஒற்றுமை நிலவ பாடுபடுதல், ''புதிய குடியேற்றத்திற்கு'' எதிர்ப்பு தெரிவிக்க ஒன்றாக இருத்தல், இந்த தீர்மானத்திற்கு ஒப்புக் கொண்டுள்ள எல்லா ஆப்பிரிக்கா நாடுகளும் இந்த அமைப்பின் உறுப்பினராக தகுதியுள்ளவர்கள்.

இந்த அமைப்பில் (1) உறுப்பினராக உள்ள நாடுகளின் தலைவர்கள் மற்றும் அரசாங்க தலைவர்கள் சபை. (2) அமைச்சரவை (3) இடைப்பினை ஒப்பந்தம் மற்றும் புதியகுடியேற்றம், நிறவெறி கொள்கை, போன்ற வற்றிற்கு எதிராக இந்த அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ஐ.நா சபை ஆரம்பமானது __________ வருடம்.
2. ஐ.நா சபையின் தலைமை அலுவலகம் __________ நகரத்திலுள்ளது.
3. ஐ.நா சபையின் அமைச்சரவை போல் உள்ள கிளை அமைப்பு __________
4. பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளின் பதவிக்காலம் __________ வருடங்கள்.
5. பன்னாட்டு நீதிமன்றம் __________ என்ற இடத்தில் உள்ளது.
6. உலகசபை (ஐ.நா) இன்றைய தலைமைச் செயலாளரின் பெயர் __________
7. உலக ஆரோக்கிய சங்கம் நிறுவியவருடம் __________
8. ''சார்க்'' உருவான வருடம் __________

©KTBS Not to be republished

**II. கீழ்க் கண்ட கேள்விக்கு குழுக்களுடன் விவாதித்து இரண்டு மூன்று வாக்கியத்தில் விடையளி.**

1. ஐ.நா சபையை நிறுவுவதற்கு முன்மொழிந்தவர்களின் பெயரை கூறுக.
2. ஐ.நா சபையின் கிளை அமைப்புகள் யாவை?
3. பாதுகாப்பு அமைப்பின் நிரந்தர உறுப்பினராக உள்ள நாடுகள் யாவை?
4. உலக ஆரோக்கிய சங்கத்தின் செயல் பாட்டில் குறிப்பிட்டுள்ள விசயங்கள் யாவை?
5. வெளிநாட்டு தொழிலாளர் நலச்சங்கத்தின் செயல் பாடுகளை பட்டியலிடு.
6. SAARC ஐ விவரி.

**III. கீழ்க் கண்ட வினாக்களுக்கு குழுவுடன் விவாதித்து 10 வாக்கியங்களில் விடையளி :**

1. ஐ.நா சபையின் நோக்கங்களை பட்டியலிடுக.
2. பொதுசபை உருவானதை விவரி.
3. பொருளாதார மற்றும் சமூக அமைப்பின் செயல்பாடுகள் யாவை.
4. உலக அளவில் அமைதியை நிலை நாட்ட ஐ.நா சபையின் பங்கு முக்கியமானது ஆராய்க.
5. யுனெஸ்கோவின் செயல்பாடுகள் யாவை?
6. உலக அளவில் பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஐ.எம்.எஃப், ன் பங்கை விவரி.
7. காமென்வெல்த் நாட்டு சங்கங்களின் நோக்கங்களை பட்டியலிடுக.

**IV. செயல்முறை விளக்கம் :**

1. கரநாடகத்தில் யுனெஸ்கோவினர் அடையாளம் காட்டிய இதிகாச நினைவிடங்களின் படங்களை சேகரித்து ஆல்பம் தயார் செய்க.

**V. திட்டமிடு:**

1. உலக அளவில் ஐ.நா சபை அமைதிக்காக செயல்பட்டதைப் பற்றி வாரப் பத்திரிக்கைகளில் வந்துள்ள செய்திகளை சேகரி.

* * * *

©KTBS
Not to be republished

# அத்தியாயம் - 3
# சமுதாய இயக்கங்கள்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- சமுதாய இயக்கங்கள் பொருள் மற்றும் வடிவம், பிறப்பு மற்றும் மலர்ச்சி.
- சுற்றுச் சூழல் இயக்கங்கள்
- மதுபான தடை இயக்கங்கள்
- தொழிலாளர் இயக்கங்கள்
- பெண்கள் இயக்கங்கள்
- உழவர்கள் இயக்கம்
- தீண்டாமை கடைப்பிடிப்பு எதிர்ப்பு இயக்கங்கள்

©KTBS Not to be republished

### சமுதாய இயக்கங்களின் பொருள் மற்றும் வடிவம் :

சமுதாய இயக்கம் என்றால் மனித சமுதாயத்தின் இயக்கம், மாற்றம், மற்றும் பல்வேறு வடிவங்களுக்குத் தொடர்பாக நடைபெறும் ஒரு 'உரு வாக்கம்' என்றால் ஒவ்வொரு இயக்கத்தின் பின்னணியில் ஒரு நோக்கம்/குறி, திட்டம் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் இருக்கும். இயற்கையாகவே எவ்வாறென்றால் மனித சமுதாயத்தில் அல்லது மனித மலர்ச்சியினால் வெவ்வேறு நிலைகளில் இவ்வாறான இயக்கங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளன/ நடைப்பெற்றும் வருகின்றன / நடைபெறும் எந்த ஒரு உயிரும் தான் உயிர்வாழ்வதற்கு இடை யூறுவரும்போது அதற்கு எதிராக இயற்கையாகவே எதிர்ப்பை வெளிக்காட்டு கிறது. எதிர்ப்பானது மனித உயிர் மற்றும் சமுதாயத்திற்கு தவிர்க்க முடியாததாகும் இத னை நாம் இயற்கையின் செயலென்று நாம் நினைக்கின்றோம். மனித சமுதாயத்தில் நடைபெற்ற மற்றும் நடந்துவரும் சுரண்டலுக்கு எதிராக பல தனி மனித நிலைகளிலும் மேலும் தனிமனித நிலையில் எதிர்ப்புகள் நடைபெற்றன / நடைபெறுகின்றன. தனி மனி நிலைகளில் நடைபெறும் எதிர்ப்புகளை நாம் சமுதாய இயக்கங்கள் (கலவரங்கள்) என்று அழைப்பதில்லை. ஏனென்றால் சமுதாய இயக்கங்கள் என்பது மக்கள் சமூகமாக நடத்தும் ஒரு செயலாகும்.

மனித சமுதாயத்தின் சிறப்பு சமுதாயத்தின் செயல்களில் சமுதாய இயக்கம் மகத்துவமானது மற்றும் சிறப்பானதாகும் இதனை கன்னட 'மொழியில் எதிர்ப்பு' இயக்கம், கர்வம், அகங்காரம், போராட்டம், புரட்சி, கலவரம் இன்னும் இதைப் போன்ற சொற்கள் வழக்கத்தில் உள்ளன. கல்விக்கு தொடர்பான பிரிவுகளில் ஆங்கிலத்தில் மூவ்மென்ட் (movement) என்னும் சொல்லுக்கு சமமான சொல்லாக இத னை பயன்படுத்துகின்றோம்.

சமுதாய இயக்கங்கள் மக்கள் சமுதாயத்திற்கு மிகவும் அவசியம். கோரிக்கைகளை ஈடேற்றிகொள்ள உள்ள சமுதாயம் ஒரு மேடையாகும். மக்கள் கூட்டம் என்பது ஒரு தற்காலிகமான ஒரு நிகழ்வு ஆகும். இதில் கூட்டம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடும் மக்கள் கூட்டத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளான ஒரு மித்த கருத்து செயல், உணர்வு, போன்றவையால் தூண்டுதல் பெற்று ஒன்று கூடுவர் அங்கு தங்களின் உணர்வுகள் செயல்பாடுகள், கருத்துக்கள் நசுக்கப்படுவதாகவும், ஒடுக்கப்ப

டுவதாகவும் அவற்றை வெளிக் காட்டுவதாகவும் அக்கூட்டம் இருக்கும். வெவ்வேறு கலவரங்களின் பிரபாவங்களுக்கு உட்பட்டு, புதிய மனோபாவங்களையும் மற்று' புதிய சமுதாயசுபாவங்கள் வளர்த்துக் கொள்ளலாம். இதற்கு எடுத்துக்காட்டு என்றால் மகாத்மா காந்தியடிகள் முதன்முதலில் 'இறைவனே உண்மை (தேவரே சத்ய) என்று கூறுவார். பிறகு தேசிய இயக்கத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுடன் இணைந்து அனேக சமுதாய சீர்திருத்தம் அதனுடன் ஒன்றாக இருத்தல் மகாத்மா காந்தியடிகள் அவர்களை 'இறைவனே உண்மை' என்பதில் கொண்டு நிருத்தியது. இது மகாத்மா காந்தியடிகள் அவரின் வெவ்வேறு சமுதாய இயக்கங்களினால் உடலை வருத்தி சமுதாய அனுபவங்களின் பலன், இவ்வாறு ஒவ்வொரு சமுதாய இயக்கங்களுக்கும் புதிய சமுதாய மாற்றம் மாதரிகளை உருவாக்கி இருக்கின்றன.

19வது நூற்றாண்டிலும் முதல் இயற்கை செல்வம் ஏறக்குறைய பொதுமக்கள் பயன்படுத்தும் செல்வமாகியுள்ளது. தொழிற்புரட்சிக்குப் பிறகு இயற்கை செல்வங்கள் மீது அரசுகள் மற்றும் முதலீட்டாளர்கள் பிடிப்பை சாதிக்க ஆரம்பித்தன. அப்பொழுது அவற்றின் மீது கட்டுப்பாடு விதிக்க சட்டபூர்வமான செயல்கள் நடைமுறைக்குவந்தன. இயற்கை செல்வ வளங்களான விறகு மீது நிர்பந்தம் ஏற்பட்டது. பழங்குடி மக்கள் தாங்கள் வசிக்கும் சுற்றுச் சூழலில் அவர்களே பயன்படுத்த தேவையான அவசியமான விறகை பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது. இதனைப்பற்றி அனேக சீர்திருத்தவாதிகள் குரலெழுப்பினர். இதன் பின்னணியில் சமுதாய இயக்கம் சுற்றுச் சூழல் இயக்கம், மற்றும் விவசாயிகள் இயக்கங்கள் விளக்கம் அளித்தன.

சமுதாய இயக்கங்கள் அனைத்து காலங்கள், நாடுகளில், ஒன்றல்ல ஒன்று ஒரே விதத்தில் நடந்தன/நடந்து வருகின்றன. சில இயக்கங்கள் நிரந்தர சமுதாய விளைவுகளை தந்துள்ளன. எடுத்துக்காட்டாக இந்திய விடுதலைப் போராட்டங்கள் அரசியல் சுதந்திரம் சேர்ந்த பல நிரந்தரமான விளைவுகளை நம்முடைய சமுதாயத்திற்கு அளித்துள்ளன. சில இயக்கங்கள் முக்கிய விளைவுகளை தூக்கி யெறிந்துள்ளன. இந்திய வரலாற்றை நாம் கவனித்தோமானால் மறுபடியும் மறுபடியும் காணும் மதத்தொடர்பான கலவரங்கள் அல்லது பக்தி இயக்கம் இந்தியாவின் சமுதாய ஏற்பாட்டின் வடிவத்தை திறந்து காட்டுகின்றன. மதங்கள் - ஜாதி அடிப்படையில் ஏமாற்றுவது, சுரண்டுவது அபகரித்தல், ஆக்ரமித்தல் மற்றும் அகௌரவங்களுக்குள் எதிராக புத்தர், மகாவீரர், பசவண்ணர், அம்பேத்கர், சரணர்கள், தாசர்கள், சுபிதுறவிகள் போன்றவர்கள் நடத்திய இயக்கங்கள் ஜாதி அவமானங்கள் மற்றும் கெடுதல்களுக்குட்பட்ட மக்களுக்கு விடுதலை விளக்கை தந்தன. இது சமுதாய முன்னேற்றத்திற்கும் இயக்கத்திற்கும் போதுமான அளவு வாய்ப்புகளை அளித்தன.

### இயக்கத்தின் பிறப்பு மற்றும் மலர்ச்சி :

பொதுவாக நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நம்மையறியாமல் சிறுகுறு சண்டை சச்சரவுகள் சமூக குழுக்களில் நடைபெறுகின்றன. அவை அந்நொடியில் மட்டுமே ஏற்பட்டு மறைந்து விடுகின்றன. இவை மிகவும் மிதமான நோக்கத்திற்காக தற்காலிகமான சமயத்தில் சஞ்சலத்தை உண்டாக்கிவிடும். இவற்றின் இயக்கங்களை ஆரம்ப நிலைகளிலிருந்து அடையாளம் காண்கிறோம். அவற்றில் மக்கள் கூட்டத்தில் தொந்தரவுகள் / பிரச்சனைகள் முக்கி

©KTBS Not to be republished

யமானவைகளாகும். அவற்றின் அனேக தொம்பி / கலாட்டக்கள் தகுதியான காரணங்கள் இல்லாமல் நடைபெறுவதுண்டு. இவைப்போன்றவைகளை இயக்கத்தின் ஆரம்ப நிலை எனப்படுகிறது.

***மக்கள் கூட்டம் :*** மக்களின் எதிர்பாராத காரணங்களினால் அதிக எண்ணிக் கையில் சேர்ந்த தற்காலிகமாக நடத்தும் ஆலோசனை எண்ணம் மற்றும் நடத்தைகளை சமூக நடத்தை எனலாம். எடுத்துக் காட்டாக சாலை விபதது நடைபெறும்போது உடன டியாக அங்கு அதிகளவு மக்கள் கூடி நடத்தும் எதிர்ப்புகளை மக்கள் கூட்ட நடத்தை என்பார்கள். எவ்வாறான அடிப்படைகளின் முன்தோன்றின் சமுதாய இயகத்திற்காக உருவாக்கப்படுகிறது? எவ்விதமான முன்னறிவிப்பு திட்டங்கள் இல்லாமல் நிச்சய மற்ற ஒரு சிரத்தையி'லலாமல் சுற்றி நிறைந்திருக்கும் மக்கள் குழுமம் மக்கள்கூட் டமாகும். எடுத்துக்காட்டாக : திரைப்படத்தின் திரையரங்குகளில் டிக்கெட் வாங்க முற்றுகை இட்டதைப் போல சேர்ந்த மக்கள் சமுகமேயாகும். சாலை விபத்துக்களைப் காண சேரும் மக்கள் கூட்டம் முதலியன.

மக்கள் முன்னிலையிலுள்ள கட்டுப்படுத்தப்படாத நடவடிக்கைகள் எத்தனையோ முறை சமூதாயத்தின் தவறுகளை குறிப்பிடுவதுண்டு. இது சிலசமயங்களில் சமுதாய நிறுவனங்களின் செயலாற்றல்களின் வகைகளை மக்கள் திருப்தியற்று வெளிப்படுத் துவதோடு அரசின் திட்டங்களை, நடத்தைகளை மற்றும் குறிப்பிட்ட செயல்களின் வகைகளை மக்கள் திருப்தியடையாமல் போராடுகிறார்கள்.

***கூச்சல்/குழப்பம் :*** கூச்சல் குழப்பம் என்பது மக்கள் கூட்டத்தின் நடவடிக்கை களின் மற்றொரு மாதிரியாகும். இம்சையான மற்றும் நாசபானத்தின் வடிவமே மக்கள் கூட்டத்தின் நடவடிக்கைகளை கூச்சல்/குழப்பம் என்று அழைக்கலாம். மக்கள் கூட்டத் தில் பார்க்கும் அளவில் குறைந்தளவு நோக்கம், ஒருமைநிலையுடன் கூச்சல் குழப்பங் கள் இருப்பதில்லை கூச்சல்/குழப்பங்களில் வெவ்வேறு சமுதாய கொலையாளிகளின் கூட்டங்கள் தம்முடைய தீய சக்திகளை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்துடனேயே பொ துமக்களின் சொத்துக்கள் பொருட்களை அழித்துச் செல்கிறார்கள். கூச்சல் குழப்பங்கள் முதலில் கொந்தளிப்பை உருவாக்கி அதன் மூலமாக பெரியபிரச்சாரங்களை நடத்தி கூச் சல் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர். சில வேளைகளில் கூச்சல் குழப்பம் / போராட் டங்கள் பெருமளவில் உயிர் சேதத்தை உண்டாக்குகிறது.

இவ்வாறு கூச்சல்/குழப்பங்களிலின் நடத்தைகளினால் குறிப்பிடப்பட்ட நோக்கங் கள் இருப்பதில்லை. கூச்சல்/குழப்பங்களினால் சட்டம் மற்றும் ஒழுங்கிற்கு பெரும் சவாலாக அமைந்துவிடுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக வகுப்பு கலவரங்கள், ஜாதி கலவரங்கள், கலகங்கள், அரசியல் கூட்டங்களின் இடையே சண்டை சச்சரவுகள் ஏற் படுகின்றன. பொதுவாக நகரம் பட்டணங்களில் அதிகமாக மையம் கொண்டு நடை பெறுகின்றன கூச்சல்/ குழப்பங்கள் சமீப நாட்களில் கிராமிய பிரதேசங்களிலும் பரவ லாகியுள்ளன. ஜாதி, நிலம் மற்றும் அரசியல் காரணங்களுக்காகவும் சேர்ந்த சிலரின் தூண்டுதல் காரணமான சந்தர்ப்பங்களில் கூச்சல்/குழப்பங்கள் அதிகமாகின்றன. இவ் வாறான தவிர்க்க முடியாத நடவடிக்கைகளால் சமுதாயத்திற்கு செயல்பாடுகள் அதிக மாகின்றன. கூச்சல் குழப்பத்திற்கு முக்கிய காரணம் வெளிசக்திகள் மற்றும் எதிர்ப்பு துவேஷம் என்னும் மனோபாவனைகளாகும்.

©KTBS Not to be republished

கூச்சல் குழப்பங்கள் நீண்டகாலம் நடைபெறுவது இல்லை. ஒரு நிலையில் அவை முடிவடைகின்றன. அதிகாரிகளின் காலத்திற்கு தக்கவாறு நடவடிக்கைகள், காவல்துறை பாதுகாப்புப்படை மற்றும் சட்டங்கள் போன்ற சாதனங்களின் மூலமாக கூச்சல் / குழப் பம் கட்டுப் படுத்தப்படுகிறது.

### சுற்றுச் சூழல் இயக்கங்கள் :

சுற்றுச்சூழல் இயக்கங்கள் என்றால் சுற்றுச்சூழிலிலுள்ள உயிர்கள் உலகின் பாதுகாப்பை பிரதிபலிக்கும் அறிவியல், சமுதாய மற்றும் அரசியல் இயக்கங்களாகும் என்றால், நம் சுற்று முற்றிலும் உள்ள நிலம், காற்று, நீர் கூடிய அனைத்து உயிர்மண்டலத்தை நாசமாக்கிவருவது மற்றும் மாசுபடுத்தப்பட்டு வருவதை அறிவியல் பூர்வமாக எதிரொலிக்கும் இயக்கமே சுற்றும் சூழல் இயக்கமாகும். சுற்றுச்சூழல் இயக்கம் திடிரென வெளிப்பட்ட சமுதாய இயக்கமல்ல. பல ஆண்டுகளாக சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் வாசிகள் மீது நடை பெற்ற விதிமீரல்கள் இவ்வடிவத்தில் அடங்கியுள்ளன எடுத்துக்காட்டாக ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா 1973ல் தொடங்கப்பட்டிருந்தாலும் 1930 ஆண்டு முதலே கற்றறிந்த பழங்குடிமக்கள் ஜார்கண்ட் பிரதேசத்திலிருந்து எஃகுடன் அனேக இயற்கை செல்வ வளங்களை வெளி மூலதனத்துடன் தொழிற்சாலைகளின் பிடியில் சாதித்து உள்ளூர் மக் களை நிர்கதியடைய உட்படுத்தியதின் காரணமாக எதிர்த்தனர். இம்மாதரியான சுரண் டல்களுக்கு எதிராக தொடங்கப்பட்ட முக்கிய இயக்கத்தில் ஜார்கண்ட் முக்தி மோர்ச்ச வும் ஒன்றாகும்.


பின்பு 1978-79ல் உலக வங்கி ஆதரவுடன் சமுதாய காடு வளர்ப்புக்கு எதிராக நடைபெற்ற உக்கிரமான போராட்டமென்றால் ‘ஜங் கிள் கட்டாவு’ இயக்கமாகும். உலக தட்பவெப்பநி லையில் அதிகளவு, நீர்வளங்களின் மீது நடை பெறும் அத்துமீறல் இன்னும் இதைப் போன்றவைகளை எதிர்த்து நடைபெற்றுவரும் இயக்கங்கள் அனைத்தும் சுற்றுச்சூழல் இயக்கியங் களாகியுள்ளன. உயிரி உலகின் மகத்துவம் பற்றி கல்வித் தொடர்பான வட்டத்தில் மற்றும் அறிஞர் கள், சமுதாய செயல் வீரர்கள், உள்ளூர் மக்கள் ஒன்று கூடி சுற்றுச் சூழலைக் காப்பாற்றுவதற்காக சமூக எதிர்ப்புகளை நடத்தத் தொடங்கினார்கள். அவற்றில் முக்கிய இயக்கங்களை நேரடியாக சுருக்கமாக அறிமுகம் செய்து கொள்வோம்.

> ***இதனை அறியுங்கள்:***
> **ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா முதலில் சுற்றுச்சூழல் போராட்டத் திற்காக தொடங்கப் பட்டது. பிறகு அரசியல் கட்சியாயிற்று. உரிமைக்காக போராடிவருகிறது.**

***சிப்கோ இயக்கம் :*** உத்திரப்பிரதேசத்தின் தெஹ்ரி - கர்வால் மாவட்டத்திலுள்ள ரென்னி கிராமத்தில் 2500 மரங்களை அரசாங்கம் வெட்டிட ஆணை பிரப்பித்தது இத னால் காடுகள் அழிந்துவிடுவதோடு மட்டுமல்லாமல் சுற்றுச்சூழ்நிலையும் பாழடைத்து விடும் என்று அங்கு வாழும் பெண்களே முன் வந்து எவ்வித பயமூறுத்தலுக்கும் அஞ் சாமல் மரங்களை தங்கள் உடலோடு அணைத்துக்கொண்டு அப்பிக்கோ (சிப்கோ) இயக் கத்தைத் தொடங்கினர். 1974ல் நடைபெற்ற இவ்வியக்கத்தில் ஒரு பெண்ணின் சமயோ சிதமான செயலாலும் அதன் பலனாலும் தொலைநோக்கினாலும் வெற்றியடைந்தது.

©KTBS Not to be republished

இவ்வியக்கத்தின் பலனாக மரங்களை வெட்ட அரசாங்கம் பிரப்பித்த அனுமதி திரும்பப்பெற்றது.



***கருநாடகத்தின் அப்பிக்கோ இயக்கம் :*** கருநாடக மாநிலத்தின் வட கன்னட மாவட்டத்திலுள்ள சலானி கிராமத்தின் உழவர்கள் 1983ல் அப்பிக்கோ இயக்கம் ஒன்றைத் தொடங்கினர். ஒப்பந்தக்காரர்கள் கெலசே காட்டின் மரங்களை வெட்டிட முனைந்தனர். மரங்கள் வெட்டுவதை தடுத்திட உழவர்கள் மரங்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு எதிர்ப்பைத் தெரிவித்தனர். உழவர்களின் எதிர்ப்புக்கு மற்றொரு காரணமும் உண்டு. கள்ளக்கடத்தல் மூலம் மரங்கள் கடத்தப் படுவதாகவும் அறிந்திருந்தனர். அதனைத் தடுத்து நிறுத்தவும் இப்போராட்டம் நடைபெற்றது. மேலும் பொது மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி மரங்களின் நன்மைகளும் சுற்றுப்புரத்தின் மேம்பாடுகளுக்காக மரங்கள் செய்யும் பெரும் தொண்டின் உயர்வுகளையும் புரியவைத்திடவே இப்போராட்டத்தை நடத்தினர்.

***நர்மதையை காத்திடும் இயக்கம் :*** குஜராத் மாநிலத்தில் சர்தார் சரோவர் திட்டத்தின் கீழ் நர்மதை ஆற்றின் குறுக்கே ஓர் அனைக்கட்டுவதைத் தடுத்து நிறுத்திட ஒரு போராட்டம் எழுந்தது. இந்த இயக்கத்தின் தலைவர்களான சுற்றுச்சூழல் நலவிரும்பியான மேத்தாபட்கர் மற்றும் பாபா அம்டே போன்றோர் இந்த அணைக்கட்டு அமைக்கப்பட்டாலும் மாபெரும் காட்டுப்பகுதிகள் அழிவுக்குள்ளாக்கப்படும் என்றும் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும் என்பதும் பல்லாயிரக் கணக்கான விலங்குகளுக்கும் அவற்றைச் சார்ந்த உயிரனங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் என்பதையும் தெளிவுப் படுத்தினார்கள்.

***அமைதிப் பள்ளத்தாக்கு திட்டம் :*** கேரள மாநிலத்திலுள்ள பாலக்காடு மாவட்டத்தைச் சார்ந்த அமைதி பள்ளத்தாக்கில் அணைக்கட்டு ஒன்றுகட்ட ஏற்பாடு செய்யப் பட்டது. எனவே சுற்றுச் சூழலும் பலவிலங்கின் உயிர்வகைகளும் அதனால் அழிக்கப் பட்டுவிடும் என்று கருதினர். அதனால் அக்கட்டுமானப் பணியை நிருத்தும் பொருட்டு, கேரள சாகித்ய அமைப்பும் வனவிலங்கு ஆர்வலர்களும் எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள். இந்த இயக்கம் தன் போராட்டத்தில் வெற்றிபெற்று பலவகையான செடி, கொடி, மரங்களையும், அந்நிலத்திற்குறிய பிற விலங்கு உயிரினங்களையும் காப்பாற்றினர்.

***கருநாடக கடற்கரை சுற்றுச்சூழல் இயக்கம் :*** கருநாடகத்தின் கடற்கரையிலுள்ள மங்களூரில் துவக்கப்பட்ட எண்ணெய் தூய்மைசெய்யும் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வேதிப்பொருட்களின் கழிவுப் பொருட்களால் சுற்றுச் சூழல் மாசடைகிறது என்று அறிந்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ''மங்களூரு ரிபைனிரிஸ் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட்'' (MRPL) எதிராக போராட்டம் நடத்தினர். உடுப்பிக்கு அருகிலுள்ள நந்தகூடு அணல் மின்சாரம் துவக்குவதை எதிர்த்து மற்றும்

©KTBS Not to be republished

மங்களூரு சிறப்பு பொருளாதார அமைப்பின் நோக்கத்திற்கு வேளாண் நிலத்தை பெறுவதற்கு எதிராக நடைபெற்ற போராட்டங்கள் முக்கியமானவைகளாகும்.

***கைகா அணுசக்தி எதிர்ப்பு போராட்டம் :*** கருநாடக மாநிலத்திலுள்ள கார்வார் மாவட்டத்தில் கைகா என்னுமிடத்தில் அணுமின்சக்தி உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு எதிராக டாக்டர் சிவராம காரந்த பல அறிஞர்களுடன் இணைந்து ஒரு இயக்கம் தொடங்கினார். இப்போராட்ட நல விரும்பிகள் அணுசக்தி பெருக்கமையத்தினால் காடு சூழ்ந்த பெருநிலப் பகுதிகள் அழிக்கப்படுவதோடு கதிரியக்க பரவுதல்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுகளும் அதன்காரணமாக பல்வகை உயிரினங்களின் வாழ்வாதாரங்கள் நச்சுத் தன்மை அடைவதையும் எதிர்த்து காத்தனர்.

மேதா பாட்கர், சுந்தர்லால் பகுகுணா போன்றோர் தம்முடை இயக்கியத்தின் நோக்கத்தை சாதிக்க மிக நீண்டகாலமாக உண்ணாவிரதம், சத்தயாக்கிரகம், நடத்தியுள்ளனர். விடுதலைக்குப் பிறகு சமுதாய நன்மைக்காக இவ்வளவு நீண்டகாலம் உண்ணாவிரதம் சத்தியா கிரகங்கள் நடந்தது, முதல் முறையாக சுற்றுச்சூழல் இயக்கத்தை விட்டால் வேறு மார்கங்களில்லை. இயற்கையை பாதுகாப்பதே தங்கள் கடமையென்று அறியவேண்டும். குடிமக்கள் சுயநலமில்லாத சுற்றுச்சூழல் பாதுகாவலர்கள் என்ற பொருப்பு உடையவர் ஆவர், இதேவிழிப்புணர்ச்சியை எல்லா மக்களுக்குள்ளும் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பெறும்.

### பெண்களின் சுயஉதவிக்குழுக்கள் :

1980ல் கட்சிசார்பற்ற முறையில் நடைபெற்ற சமுதாய இயக்கங்களில் பெண்களின் இயக்கம் சுதந்திரமானது மற்றும் மகத்துவமானது. ஆண்களுக்கு முன்னுரிமையும் சமமற்ற தன்மை பார்வையில் பார்க்கும் போது, பெண்கள் மீது ஆண்கள் முன்னுரிமை, கலாச்சாரம் நடத்திய பெருமை, சுரண்டல், கெடுதல்கல்களுக்கு எதிராக பெண்கள் நடத்திய எதிர்ப்புகள் பெண்களின் இயக்கம் அதிலும் இலக்கிய உலகில் பெண்களின் சுரண்டலுக்கு எதிரான எண்ணங்கள் மூலமாக பெண்கள் சமமான தன்மையைக்குறித்து நியாயமான இயக்கியங்கள் மேலும் உருவாக்குதல் வெளிப்பட்டுள்ளது.

பெண்களுடைய சுய உதவிக்குழு என்பது அவர்களின் சுய விழிப்புணர்ச்சி, தன்னார்வத்தூண்டல் மற்றும் நம்பிக்கை பரிமாற்றம் (ஒருவருக்கொருவர் உதவும் தன்மை போன்றவற்றைத் தங்கள் சொந்த முயற்சியாலும் பொருளாதார தன்னிறைவையும், கூட்டுறவு முயற்சியாலும் பொருளாதார தன்னிறைவையும், சமூகத்தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டி ஏற்படுத்திக் கொள்ளும் கருத்தாக்கத்தை பெறுதல் வேண்டும் என்பதாகும்) இதில் பத்து அல்லது இருபது அதே ஊரைச் சார்ந்த பெண்கள் அடங்குவர். இக்குழு ஆண்களுக்கு சமமாக பெண்களும் வாழும் உரிமைகள் வாய்ப்பளிகப்படமுடியும். பொருப்புணர்ச்சி மற்றும் ஆற்றல் பெறவேண்டும். பெண்களை வேலையாட்கள் என்று பார்க்கும் ஆண்கள் முன்னிலை சமுதாயத்தின் 'சித்தாந்தம்' பெண் குழந்தைகள் மற்றும் பெண்களை சமமற்றதன்மையுடன் பார்க்கின்றனர்.

இவ்வாறான சமமற்ற தண்மைகளுடன் பெண்ணின் உடல் மற்றும் மனோதத்துவரீதியான தொந்தரவுகள், வரதட்சனை, தொந்தரவுகள், கொலை செய்தல், கேடுவிளைவிப்பது போன்றன நடந்து வருகின்றன. நிந்தித்தல், தகா

©KTBS Not to be republished

தவார்த்தைகளை பயன்படுத்துதல், வெவ்வேறு வடிவத்தில் இம்சைசெய்ல்கள் குடும்பத்திற்கு உள்ளே மற்றும் வெளியே பெண்ணின் சுதந்திரத்தையும் மற்றும் கௌரவத்தையும் தடைசெய்துள்ளன. இவற்றுடன் பெண்ணின் மீது ஆசிட் வீசுதல், பெண் குழந்தைகள் மற்றும் பெண்களை கள்ளத்தனமாக கடத்திச் சென்று விற்பனை செய்வது நாளுக்கு நாள் விசித்திரமான வடிவில் நடைபெற்று வருவதை நாம் ஊடகங்கள் மூலமாக ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். முன்பிருந்த குலகௌரவம், கொலைசெய்தல், மரியாதைக்கொலை பெயருக்கு வெவ்வேறு உருவங்களில் உள்ளது. நம்முடைய அரசியல் அமைப்பில் 14,15,16,39ல் கூறப்பட்டுள்ள சமமான வாய்ப்பு மற்றும் சமமான உழைப்புக்கு சமமான ஊதியம் அளிக்க வேண்டும் என்பதில் எவ்விதமான உரிமைகள் அனைத்தும் பெண்களுக் கிடைக்கவில்லை.

இம்மாதரியான சமமற்றதன்மை மற்றும் கெடுதல்கள் வெவ்வேறு வடிவங்களுக்கு எதிராக பெண்களின் உரிமைகளை விவரிக்கும் இயக்கமே பெண்களின் இயக்கமாகும். இவற்றில் மிகமுக்கியமானவைகளை இங்கு அறிந்து கொள்வோம்.

### மதுவிலக்கு இயக்கம் :

பெண்கள் உருவாக்கிய முக்கிய இயக்கங்களில் மதுவிலக்கு இயக்கம் முக்கியமானதாகும். இவ்வியக்கம் உடைவதற்கான காரணம் என்ன வென்றால் மதுவிலக்கு சந்தர்ப்பத்தில் பெண்கள் ஒன்று கூட்டப்பட்டுள்ளார்கள்.

மதுவிலக்கு விடுதலைப் போராட்டத்தின் ஒரு பாகமாகும். காந்தியடிகள் மதுவிலக்கை எதிர்த்து போராடினார். பெண்கள் மதுவிலக்கு இயக்கம் சிப்கோ இயக்கத்தின் ஒரு பாகமாக உருகொண்டது. கருநாடகத்தில் சுற்றுச்சூழல் இயக்கத்தின் ஒரு பாகமாக கடற்கரைபிரதேசம் மற்றும் மலைநாடு பிரதேசங்களில் மதுவிலக்கு இயக்கம் ஆரம்பமாயிற்று. குசுமா, சொரப, அவர்களுடன் பலர் இந்த இயக்கத்தில் போராடி தம்முடைய இன்னுயிரை இழுந்தனர். இதுவுமல்லாமல் ஹாசன், கோலார், மன்டியா, சாமராஜநகர், இன்னும் இதைப் போன்ற மாவட்டங்களில் பெண்கள் மதுவை விற்றதற்கு எதிராக போராட்டங்களை நடத்தினார்கள். மது சமுக நிறுவனங்களில் மற்றும் தனிமனித நிலைகளில் பலவகையான பிரச்சனைகளை உருவாக்கின. பெண்களில் அதிலும் கிராமிய ஏழைப் பெண்களின் வாழ்க்கையில் அனேக பெரும் விபத்துகளை உண்டாக்கியுள்ளது. கூலியாட்கள் தம்முடைய உழைப்பை குடிப்பதற்கு செலவு செய்வதினால் தம்முடைய அடிமைத்தனத்திற்கு சிறு குழந்தைகளை உழைக்க அனுப்புவதோடு மனைவியின் உழைப்பினால் வரக்கூடிய பணத்தைப் பறித்து மதுபானம் குடித்து அதற்கு அடிமையாகியுள்ளனர். இவ்வாறு மதுபானம் உண்டாக்கிய விளைவுகளை பொருக்க முடியாமல் மதுவிலக்கு இயக்கத்தை பெண்களை அமைத்தனர்.

**செயல்பாடு :** *பள்ளி வகுப்பறை மற்றும் சமுதாய சுற்றுச் சூழலில் பெண் குழந்தைகள் மற்றும் பெண்கள் எதிர்க்கொள்ளும் சவால்களை குறித்து எச்சரிக்கை உண்டாக்கி சிறு உருவாக்கங்களை குழந்தைகள் மூலமாக நடத்தி செய்து காட்டுவது.*

### உழவர் இயக்கங்கள்

தங்களுடைய கோரிக்கை நிராகரிப்பதின் மூலமாக ஆரம்பமான உழவர்களின்



©KTBS Not to be republished

எதிர்ப்புகள் உழவர்களை வாட்டும்




பொருளாதார பிரச்சனைகளுக்கு எதிராக இருபதாம் நூற்றாண்டின் எழுபது எண்பத்தாறுகளில் அனேக மக்களின் போராட்டங்கள் நடந்தேறின. நாடு முழுவதும் அனேக விவசாயிகளின் போராட்டங்கள் ஆரம்பமாகி எண்பத்தாறாம் ஆண்டில் அதிக கவனத்தைஈர்த்த சமுதாய போராட்டங்களில், உழவர் போராட்டம் முதன்மையானது.

கருநாடகத்தில் எழுபத்தாறாம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த டி.தேவராஜ அரஸ் மிகப்பெருமளவில் சமுதாய மாற்றங்களுக்கு அடிகோலினார். ஜாதிமுறை கட்டுமானம், சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ளவர்களின் ஏற்றத்திற்காக முழுமையான சட்டங்களை நடைமுறைப் படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். குத்தகைதாரர்களை நிலச்சுவாந்தர்களின் பிடியிலிருந்து விடுவித்து அடிமைமுறை, ஏழைகளின் கடன் நிவாரணம், அன்றைய அமைச்சராகிருந்த திரு பசவலிங்கப்பா அவர்களின் எண்ணப்படி தலைமீது மலத்தை எடுத்துச்செல்லும் பழக்கத்தை நிர்மூலம் செய்தார் மேலும் அனேக புரட்சிகரமான செயலாக்கங்களை நடைமுறைப்படுத்தினார்.

அதற்கடுத்து வந்த நாட்களில் உழவர்களின் பிரச்சனைகளின் பரிகாரத்திற்கு அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தினர். இவ்வாறு உழவர்கள் மற்றும் மக்கள் நடத்தும் எதிர்ப்பு போராட்டங்கள் அரசியலாயிற்று என்று அறிந்து மக்கள் போராட்டத்தைக் கட்டுப்படுத்த லாட்டி சார்ஜ் மற்றும் துப்பாக்கியால் சுட்டனர். இம்மாதரியான நடவடிக்கைகளை கண்டித்து 1980ஜூன் மாதத்தில் தார்வாட மாவட்டத்திலுள்ள நரகுந்தாவில் உழவர்கள் புரட்சி செய்தனர். நரகுந்த உழவர்களின் புரட்சி அரசு நடத்திய கொடுமைகளுக்கு எதிராக நடந்த புரட்சி மட்டுமல்ல. இது மொத்தத்தில் உழவர்களுக்கான போராட்டமாகும்.

நரகுந்த முற்றுகைக்குப்பிறகு மக்கள் இயக்கத்தினர் பொதுவுடைமை பேராசிரியர் எம்.டி.நஞ்சுன்டசுவாமி அவருடைய தலைமையில் கருநாடக மாநில விவசாயிகள் சங்கம் துவக்கினார். இது சிவமொக்காவின் காந்தியவாதி எச்.எஸ்.ருத்ரப்பா அவர்களின் தலைமையில் உயிர் பெற்றது. பேராசிரியர் நஞ்சுண்டசுவாமி அவர்கள் அதனை ஒழுங்குபடுத்தினார். என்.டி.சுந்தரேஷ் அவர்கள் செயலாளராக பரந்த சித்தாந்தத்தின் அடியில் விவசாய சங்கத்தினர் கடன் சுழற்சியில் சிக்கியுள்ளனர். கிராமங்களின் அடிப்படை வசதிகள் வளர்ச்சியடையவில்லை. அவற்றை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும். உழவர்களின் தன்மானத்திற்கும் சுதந்திரத்திற்கும் அடியுண்டாக்கும் ஜப்தி செயல்களை நிறுத்த வேண்டும். உள்ளூர் இயற்கை செல்வத்தில் உள்ளூர் கிராமங்களுக்கு பங்கு கிடைக்க வேண்டும். லெவி முறை நிறுத்த வேண்டும். இதைப்போன்று கிராமிய மக்களுக்கான மக்களாட்சிக்கான தேவைகளை அளித்து கருநாடக விவசாய போராட்டங்கள் நடை பெறுகின்றன.

©KTBS Not to be republished

இன்றைக்கும் விவசாயிகள் குழுவாக போராட்டங்களை நட்ததி வருகிறார்கள். சமீபத்தில் கருநாடகத்தில் மஹாதாயி மற்றும் காவேரி நதி நீருக்கான பங்கீடுகளுக்கு தொடர்பான அரசுகள் மற்றும் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகளுக்கு எதிராக விவசாயிகள் மகத்துவமான தன்மான போராடங்களை நடத்திவருவதை நினைக்க வேண்டும்.

**செயல்பாடு: உள்ளூர் உழவர்கள் எதிர்க்கொள்ளும் சவால்களை பற்றி உழவர்களுடன் உரையாடி குழு விவாதம் நடத்துமாறு குழந்தைகளிடம் கூறி அதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி அளிப்பது.**

## தொழிலாளர் போராட்டங்கள் :

'கர்நாடகா இயக்கம்' அல்லது 'கர்நாடகா சங்கம்' என்பது பொதுவாக உழைக்கும் மக்களை பிரதிநிதிக்கும் சங்கமாகும். சிறப்பான உழைப்புக்கான சுற்றுச்சூழல், கௌரவமான நடவடிக்கைகள், தொழிலாளர் மற்றும் உத்தியோக சட்டங்களின் நடைமுறைக்கு செயல்களுக்கு அரசுகள் அழுத்தமளித்து தொழிலாளர் சங்கங்கள் மூலமாக நடைபெறும் போராட்டங்களுக்கு தொழிலாளர் இயக்கம் என்று அழைக்கப்படுகிறது. சில நாடுகளில் தொழிலாளர் இயக்கங்களுக்கு அரசியல் கட்சிகளும் கூட சங்கத்தில் இணைந்துள்ளன. தொழிற்சாலை முதலீட்டார்களின் சுரண்டல்களுக்கு எதிராக ஒரே காலத்திலுள்ள தொழிலாளர் மீது சித்தாந்தம் வளர்ச்சியடைந்து வருகிறது.

ஐரோப்பிய நாடுகளில் தொழிற்புரட்சியினால் வேளாண் பிரிவில் வேலை வாய்ப்புகள் நசித்ததைக்கண்டு, தொழிற்சாலை பிரிவுகள் பக்கம் தொழிலாளர்களின் இயக்கம் அதிகமாயிற்று, அப்பொழுது காலத்தின் முறைசாரா தொழிலாளர்களிடம் உழைப்பை பெறும் மனோபாவனை அதிகமாயிற்று. இதனைக் கண்டித்து தொழிலாளர் சங்கத்தை நிறுவினர். 19ஆம் நூற்றாண்டில் உலகம் முழுவதும் தொழில்மையத்தை உட்கொண்ட பிரதேசங்களில் தொழிலாளர் கட்சிகள் மற்றும் டிரேட் யூனியன்கள் தொழிலாளர்களை ஒன்று கூட்டி சங்கம் அமைத்தனர். 'The Internationsl working men's Association' என்பது லண்டனில் 1864ல் ஆரம்பமானது அது முதல் தொழிலாளர் சங்கங்களாயின.

இச்சங்கங்களின் முக்கிய நோக்கம் தொழிலாளரின் அனுகூலமான அம்சங்களைக்காப்பாற்றுவது, ஒரு நாளைக்கு 8மணி நேரம் மட்டுமே உழைக்க வேண்டும் என்னும் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வருவது. இவ்வாறு ஆரம்பமான தொழிலாளர் போராட்டம் 19ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட பாகத்திற்கு பிறகு உலகளவில் பரவியது.

தொழிலாளர் சமூகத்தின் பாதுகாப்புக்கு தொடர்பாக 1923ல் அன்றைய அரசு இந்திய தொழிலாளர் சட்டத்தை அமுல்படுத்தியது. இச்சட்டத்தினால் தொழிலாளர் சங்கங்களுக்கு அனுகூலமாயிற்று. 1923ல் தொழிலாளர் சட்டத்தின்படி சங்கங்களுக்கு அரிசியலமைப்பு அங்கிகாரம் கிடைத்தது, பிறகு அனேக தொழிலாளர் அனுகூலமான அம்சங்களுக்கு தடை ஏற்பட்டதால், அதற்கு எதிராக போராட்டங்களை நடத்திவருகிறது. இந்நாட்டில் அனேக தொழிலாளர் சங்கங்கள் உயிர்பெற தம்முடைய போராட்டங்களை தொடர்கிறதுது.

©KTBS Not to be republished

## *தீண்டாமை கடைப்பிடிப்பதை எதிர்த்து போராட்டம் :*

ஜாதி வரிசையில் தீண்டாமை என்பது மனித எதிரி நடவடிக்கையாக உள்ளது. அரசியலமைப்பு அங்கீகரிப்பதற்கு முன்னர் தலித்துகளை தொடக்கூடாது. அவர்கள் அருகில் செல்லக் கூடாது மற்றும் பார்க்கவும் கூடாது என தொடர்ந்தது.

தீண்டாமையை ஆதரித்து சமுதாய நடைமுறையை கடைப்பிடித்தல் என்னும் காரணத்திற்காக தலித்துகள் மீது நடைபெறும் மனிததன்மை மற்றும் சம சமுதாய நிலையில் ஜாதியை ஆதாரமாகக் கொண்ட சமூக பிரச்சனைகளுக்கு எதிராக நடந்த மக்கள் இயக்கமே தீண்டாமையை கடைப்பிடித்தல் எதிரான இயக்கமாகும். தீண்டாமையை அனுபவித்த சமுதாயங்கள் தம்முடைய சமூக நிலைகளில் மாற்றங்கள் கண்டறிய நிரந்தரமான புரட்சிகளை தொடர்ந்து தொடங்கி வருகின்றன. அதனுடைய சிறுவரலாற்றை பின்பு காண்போம்.

***தீண்டாமை கடைப்பிடிப்புக்கு எதிரான இயக்கத்தின் வரலாறு :*** தீண்டாமையைக் கடைப்பிடித்தலுக்கு எதிர்த்து போராட்டத்தின் வரலாறு 19வது நூற்றாண்டிலிருந்தது என்பது அறியப்பட்டுள்ளது. மகாராட்டிரம் ஜோதிராவ் புலையர் இனத்தைச் சேர்ந்தவர் தீண்டத் தகாதவர் மற்றும் பின்தங்கிய பிரிவை உட்கொண்ட போராட்டத்தை ஆரம்பித்தார். ‘சாத்துர்வர்ண’ அடிப்படையில் மனிதனின் எதிரி ஆச்சாரங்கள் மற்றும் அவற்றின் பிரபலத்தைத் தடுப்பது இவ்வியக்கத்தின் நோக்கமாகும். மனதின் எண்ணங்களுக்குப் பிறகு 1917ல் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரபிரதேசம், மற்றுமுள்ள பிறபாகங்களில் உயிர் கடைப்பிடிப்பை எதிர்த்து போராட்டங்கள் உயிர்பெற்றன. 1925ல் பெரியார் ராமசாமி நாயக்கர் அவர்கள் ஆத்மகௌரவம் இயக்கத்தை ஆரம்பித்தார்.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் சிந்தனை மற்றும் போராட்டத்தின் மூலமாக தீண்டாமை கடைப்பிடித்தலை எதிர்த்து போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார். 1930ல் வட்ட மேஜை மாநாட்டில் அம்பேத்கர் அவர்கள் நாம் ஆளக்கூடிய பிரிவினராக வேண்டுமென்று தலித்துகளுக்கு அழைப்பு விடுத்தார். அம்பேத்கர் அவர்கள் நிரந்தரமாக தலித்துக்களின் அனைத்துவகையான உரிமைகளுக்காக போராடிக் கொண்டே வந்தார்.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் தம்முடைய அரசியல் செயல்பாடுகளின் நீண்ட சமூக தீமைகளுக்கு உட்பட்டபோது தீண்டதகாதவர் மற்றும் பெண்களின் உரிமைகளை பெறப் போராடினார். தீண்டாமை தலித்துக்கள் அனுகூலமாக எவ்வித எதிர் செயலை எழுதமுடியாத நிலையில்லாததால் ‘முகநாயக’ என்னும் பத்திரிக்கையை ஆரம்பித்து தீண்டாமையைக் கடைப் பிடிப்பதின் எதிராக மிகப் பெரிய போராட்டத்தை முதன்மையாக கணக்கிலெடுத்துக் கொண்டு தீண்டாமை நிவாரணம் அளிக்கவேண்டுமென சீர்திருத்த வாதியாகிருந்தார் இன்றைக்குத் தீண்டாமை கடைப்பிடிப்தை எதிர்த்து போராட்டங்களை வெவ்வேறு சங்கங்கள் மூலமா நடந்து கொண்டே இருக்கின்றன.

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சுற்றுச் சூழல் இயக்கம் என்றால் ________
2. 'நர்மதைப் போராட்டத்தின்' தலைமை யேற்று நடத்தியவர் ________
3. டாக்டர் சிவராமகாரந்த ________ ல் அணுமின்சாரம் நிலையம் அமைப்பதை எதிர்த்தார்.
4. பெண்கள் இயக்கம் என்றால் ________

### II. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடையளி.

1. சமூக மாற்றத்தின் மாதிரிகள் யாவை?
2. பெண்கள் இயக்கம் என்றால் என்ன? எடுத்துக் காட்டுகள் தருக.
3. மக்கள் கூட்டத்தின் வடிவங்களை எழுதுக.
4. சுற்றுச் சூழல் இயக்கத்தின் பொருள் மற்றும் வடிவங்களைக்கூறுக.

### III. செயல்பாடு :

1. உங்கள் ஊரில் பெண்கள்/சுற்றுச்சூழல் / தலித்துகள் முதலிய இயக்கங்களில் பங்கேற்றிருக்கும் மக்களை சந்தித்து இவ்வாறான சங்கங்களின் முகிய நோக்கம் உருவாக்கிச் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளின் விவரங்களை சேகரியுங்கள்.
2. பெண்கள் இயக்கத்தின் பெண்களின் சமுதாய மனோ பாவனையையும் அவர்களின் மனோபலத்தை எவ்வாறு முன்னேற்றமடைந்தனர் என்று பெண்களுடன் விவாதிக்கவும்.

### IV. திட்டம்:

1. கர்நாடகத்தில் சுற்றுச் சூழல் மற்றும் காடுகளின் பாதுகாப்புக்காக நடைபெற்றுவரும் இயக்கங்கள், போராட்டங்கள் பற்றி பத்திரிக்கைகளில் வரும் செய்திகளை சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும்.

* * * *

©KTBS Not to be republished

# அத்தியாயம் - 4
# சமூக சிக்கல்கள்

***இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.***

- குழந்தைத் தொழிலாளர் (குழந்தைகள் உழைப்பு)
- பெண்சிசுகரு கொலை
- பாலின வேறுபாடுகள்
- குழந்தைகளை கடத்தி விற்பன செய்வது
- குழந்தைகள் மீதான பாலின கேடுகள்
- பசி மற்றும் வறுமை
- குழந்தைத் திருமணம்
- மணக் கொடை சட்டம்

©KTBS Not to be republished

## ***குழந்தைத் தொழிலாளர் (குழந்தைகளின் உழைப்பு)***

பொதுவாக இளவயது குழந்தைகளை வேலைசெய்ய அனுப்புவதை குழந்தைத் தொழிலாளர் என்று அழைக்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்பின்படி 14 வயதிற்கும் குறைவான குழந்தைகளை பொருளாதார சம்பாதனையின் நோக்கத்திற்காக உழைத்து சம்பாதித்து வருபவர்களை குழந்தைத் தொழிலாளர்கள் என்று அழைக்கிறார்கள்.

இந்தியா போன்ற வளர்ச்சியடைந்துவரும் பல்வேறு நாடுகளில் குழந்தைகளை தீய வழியில் மற்றும் சம்பாதனை செய்ய அனுப்புவது ஒரு சமுதாய பிரச்சனையாக உள்ளது. 2011ன் மக்கள் தொகைகணக்கெடுப்பின்படி இந்தியாவில் இன்றைக்கும் 12.6மில்லியன் லட்சம் குழந்தைகள் வீடுகளில், தெரு தெருவாக, தொழிற்சாலை மற்றும் விவசாயத் துறைகளில் பலவந்தமாக உழைக்க வைக்கப்படுகிறார்கள். இதே விதமாக உலகம் முழுவதும் 215மில்லியன் லட்சம் குழந்தைகள் வெவ்வேறு துறைகளில் உழைத்து வருகிறார்கள். மக்களின் உழைப்பினால் அவர்களுடைய உடல், மனோநிலை, ஆரோக்கியம்குறைந்து விடுகிறது. குழந்தைகள் கல்வி இல்லாமல் வஞ்சிக்கப்படுகின்றனர். அவர்களுடைய அறிவுக்கூர்மை மலர்ச்சியடைவதற்கு முன்பே நசித்துவிடுகிறது.

குழந்தைத் தொழிலாளர் என்போர் யார்? 14வயதுக்கு உட்பட்ட எந்த குழந்தையும் பள்ளிக்கு செல்லாமல் வெளியில் உள்ளனரோ அவர்கள் அனைவரும் குழந்தைத் தொழிலாளர்களாவர். அவர்கள் உழைக்கப்படும் அல்லது உழைக்காமலிருக்கட்டும், வீட்டில் இருக்கட்டும் பள்ளியில் சேர்ந்து தினமும் பள்ளிக்கு சென்று கொண்டிருக்காமல் உள்ள அவர்கள் அனைவரும் குழந்தை தொழிலாளர் என அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு எனில் 15 வயதிற்குமேல் உழைத்தால், வேலைசெய்ய செல்லலாமா? இல்லை 2016ல் சட்டம் திருத்தப்பட்டு ''வளரும் பருவம்/யவ்வனப்பருவம் அறியாத உழைப்பு தடை'' ஐ நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறை தடை மற்றும் கட்டுப்பாடு சட்டம் 1986 திருத்தப்பட்டு 14 வயதுக்குட்பட்ட எவ்விதமான குழந்தைகளும் அல்லது யவ்வனத்தை அறியாதவர்கள் எந்தமாதரியான அபாயமான இடங்களில் வேலை செய்வதற்கில்லை, மேலும் யார் 14வயதிற்குள்ளே உழைக்க / வேலை செய்ய / தொழிலாளி / சம்பளம் / கூலிக்கு வைத்துக் கொள்வதற்கில்லை. அது தண்டனை மற்றும் அபராதத்திற்குறியதாகும். அந்த சட்டம் எது? என்பதை பின் பார்ப்போம்.

குழந்தைத் தொழிலாளர்கள் இனிமையை அறியாதவர்கள் உழைக்கும் முறை தடை

மற்றும் கட்டுப்பாடு சட்டம் - 1986, 2011ல் திருத்தப்பட்டுள்ளது அது : (Child and Adolecent Labour Prohibition and Regulation Act 1986 ( As Amended In July 2016)

1. இச்சட்டத்தின்படி 14 வயதுக்குட்பட்ட எக் குழந்தைகளும் எந்த ஒரு காரணத்திற்காகவும், எந்த துறைகளில் இடங்களில், எங்கும் கூட பணி செய்ய முடியாது பணியிலும் அமர்த்தமுடியாது. இந்த சட்டத்தின் பிரிவு - 14ன் படி குழந்தைகளை உழைக்க வைத்துக் கொள்வர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைவாசம் மற்றும் ரூ.50,000/- வரை அபராதம் விதிக்கப்படும்.
2. எக் குடும்பத்தினரும் கூட அவர்களுடைய நிலம், வயல், வியாபாரங்கள், அவர்களுடைய 14வயதிற்குள் அவர்களுடைய சொந்த மக்களையும் கூட ''பள்ளி'' நேரத்தில் வேலையில் வைத்துக் கொள்ளக்கூடாது. ஒரு வேளை வைத்துக் கொண்டால் குழந்தைகளின் தந்தை, தாய், அல்லது குடும்பத்தினரே உரிமையாளராகி இருந்தாலும் அவர்களும் குற்றவாளிகள் ஆவார்கள் அவர்களுக்கு ரூ.10,000/- அபராதம் விதிக்கப்படும்.
3. இச்சட்டத்தின் 15முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளை இளமையை அறியாதவர் / பருவம் அறியாதவர் என்று கூறுகிறது. இதனுடன் 15 முதல் 18 வயதுக்குட்பட்ட எவ்விதமான குழந்தைகளையும் அபாயகரமான இடங்களில் உழைக்க வைக்கக் கூடாது. ஒருவேளை உழைக்கச் செய்தால் இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் ரூ.50,000/- அபராதம் விதிக்கப்படும்.

இச்சட்டம் 1984 தொழிற்சாலை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 29 துறைகளுடன் 2 துறைகளையும் சேர்ந்து மொத்தம் 31 துறைகளை அபாயகரமானவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டு, சுரங்கம், வெடிப்பொருட்கள் தயாரிக்குமிடம். எரிப்பொருட்கள் உற்பத்தி அலகு, இரும்பு மற்றும் எஃகு தயாரிக்கும் அலகு மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் பழுதுபார்க்குமிடம். சிமென்ட், ரப்பர், இரசாயன உணவுப் பொருட்கள் தயாரிக்கும் இடங்களில், 18 வயதுக்குட்பட்டவர்கள் எவ்விதமான குழந்தைகளையும் வேலைக்கு வைத்துக்கொள்வதில்லை. ஒரு வேளை வைத்துக்கொண்டால் அது தண்டனைக் குறியதாகும்.



©KTBS Not to be republished

**குழந்தைகளின் உழைப்பு அல்லது குழந்தைத் தொழிலாளர்களுக்கான காரணங்கள் :**

1. குழந்தைகளின் உரிமைகளை கௌரவித்தல், அவற்றின் பாதுகாப்புக்காக அவசியமான தேவையான சமூக சுற்றுச் சூழல் இன்மை, குழந்தைகளின் உழைப்பு, குழந்தைத் திருமணம், குழந்தைகளை கடத்துவது, மற்றும் விற்பனை செய்வது போன்றன முக்கிய காரணங்களாகும். குறைவான கூலி, அதிக உழைப்பை விரும்பும் உரிமையாளர்கள் பிரிவினரை சுயநலம், லாபம் அடைவது, குழந்தைகளின் உழைப்பை அதிகமாக்க காரணங்களாகும். ஹோட்டல், சிறுதொழில்கள், பட்டாசு தயாரிப்பு அலகுகள். முறைப் படுத்தப்படா உழைப்பு பிரிவு, பஞ்சத்தினால் உண்டாகும் வேளாண் சமூகத்தின் இக்கட்டுகள், இடம் பெயருதல், பாதுகாவலரின் தீய பழக்க வழக்கங்களால், குழந்தைகளின் உழைப்பு அதிகரிக்க காரணமாகின்றன.
2. இலவச மற்று கட்டாய கல்வி உரிமைகள் பலனளிக்கும் வகையில் நடைமுறைக்கு வந்துள்ளது அனைத்து குழந்தைகளுக்கும் 10 ஆம் வகுப்பு வரையில் கல்வி முழுமையாக இலவசமாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளின் உழைப்பை அதிகரித்தால் குடும்பத்தின் பொருளாதார நிலை, குறைந்தளவு கூலி, நிலசீர்திருத்த சட்டம் நடைமுறையின் குறைபாடுகளும் கூட குழந்தைத் தொழிலாளர்களை அதிகமாக்கியுள்ளன.

**குழந்தைகளின் உழைப்பினால் உண்டாகும் தீய விளைவுகள் :**

1. குழந்தைத் தொழிலாளர்களில் குழந்தைகளின் உடல் மற்றும் மனோநிலை வளர்ச்சியின் மீது மிகவும் மோசமான விளைவுகளை உண்டாக்குகிறது. குழந்தைத் தொழிலாளர்களாக உழைக்கும் குழந்தைகள் இளைஞர்களாகும்போது அனேக உடல் மற்றும் மனோநிலை நோய்களுக்கு உட்படுகிறார்கள்.
2. சிறிய வயதிலேயே உழைப்பதில் பங்கேற்பதினால் கற்கும் வயதில் கல்வியிலிருந்து வஞ்சிக்கப்பட்டு கல்வியறிவு, எழுத்தறிவு இல்லாமல் ஆகிறார்கள். இது அவர்களுடைய உரிமைகளையும், சுதந்திரத்தையும் பறித்துக் கொள்கிறது.
3. குழந்தைகள் உழைக்கும் குடும்பங்கள் சமூக இயக்கம் பொருளாதார இயக்கம், சுருக்கமடையச் செய்கிறது. அவ்வாறான குடும்பங்களில் குழந்தைகள் மறுபடியும் மறுபடியும் உழைக்க, கெடுதலுக்கு, சுரண்டலுக்கு உட்படுகிறார்கள். இவ்வாறான இக்கட்டுகளான குழந்தைத்திருமணம், குழந்தைகளை விற்பனைசெய்வது மற்றும் கடத்தும் செயலை செய்வது சமூகவிரோத செயல்பாடுகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தியளிக்கிறது. இதன் பலனாக குழந்தைகள் சிறுவயதிலேயே, அதிலும் பெண் குழந்தைகளுக்கு தொல்லைகள் இம்சை பாலியல், சுரண்டல்களுக்கு பலியாகும் சாத்தியங்கள் அதிகமாகிவருகின்றன. சிறு வயதில்வெவ்வேறு நோய்களுக்கு ஆளாகி அங்கஊனமான நிலைகள் அதிகமாகின்றன.

குழந்தைத் தொழிலாளர் முறை நிர்மூலமாக்க நேராக தெளிவான மற்றும் முதல்

©KTBS Not to be republished

விளைவு எதுவெனில் 18 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் 100 சதவீதம் பள்ளியில் சேர்க்கை செய்ய வேண்டும்.

**செயல்பாடு : உன்னுடைய நண்பர்கள் யாராவது குழந்தைத் தொழிலாளராகி இருந்தால், பள்ளியிலிருந்து வெளியிலிருந்தால் உடனடியாக ஆசிரியர் கவனத்திற்கு கொண்டுவரவும்.**

18 வயது வரையில் நிரந்தர பள்ளிக்கல்வி அளித்து மற்றும் அதற்கு முழுமையாக அனைவரின் உதவி, சமபங்கு, சமமான தன்மை மற்றும் இதில் பங்கேற்பதே பலனாகும்.

1. அனைத்து சந்தர்ப்பங்களில் பாலின சமதன்மையை காப்பாற்றுவது மற்றும் அளிப்பது.
2. உதவியற்ற குடும்பங்களின் வாழ்க்கைக்கு இடப்பெயர்ச்சி செல்வதை தடை செய்ய வேண்டும்.
3. குழந்தைத் திருமணம்/குழந்தைகளை கடத்துதல் / விற்பனை செய்வதைத் தடைசெய்யும் அறிவை உண்டாக்குதல்.
4. குழந்தைகளின் பாதுகாப்பு உரிமைகளை பஞ்சாயத்துகள் பொருப்புடன் நிர்வாகிக்க வேண்டும்.

***கவனத்திற்கு : 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 12,6 மில்லியன் குழந்தைகள் வீடுகளில் / தெருக்களில், தொழிற்சாலை மற்றும் விவசயத்துறைகளில் உழைக்க கட்டாயப்படுத்தப் படுவதை அடையாளம் கண்டுள்ளனர். இதே நிலை உலகம் முழுவதும் 215 மில்லியன் குழந்தைகள் வெவ்வேறு துறைகளில் உழைப்புக்கு உள்ளாகியுள்ளனர்.***

### குழந்தைகள் மீதான பாலியல் கொடுமைகள் :

சமீப நாட்களில் குழந்தைகள் மீது பள்ளிகளில் குடும்பங்களில், மக்கள் கூடும் பொது இடங்களில் பெருகிவரும் பாலியல் துன்புறுத்தல்களை தடைசெய்யும் நோக்கில் பாலியல் குற்றவாளிகளிடமிருந்து குழந்தைகளை காக்க சட்டம் 2012 (Protection of Children from Sexual Offences Act 2012) நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு உள்ளது. இச்சட்டம் குழந்தைகள் மீதான பாலியல் பலாத்காரத்தை இவ்வாறு விவரிக்கிறது. 18வயதுக்குட்பட்ட எவ்வகையாவும் பாலியல் நோக்கத்துடன் சுரண்டுதல், துன்புறுத்துதல், அத்துமீறுதல், தொல்லைகள், தாக்குதல், நடத்துவது அல்லது அத்துமீறி தொட்டலும் அதனை பாலியல் அத்துமீறல் என்று கருதி அவர்கள்மீது தண்டனை அளிக்கும் சட்டமுள்ளது. இச்சட்டங்களை (Protection of Children from Sexual Offences Act-2012) நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டு உள்ளது. இச்சட்டம் குழந்தைகள் மீதான பாலியல் பலாத்காரத்தை இவ்வாறு விவரிக்கிறது. 18வயதுக்குட்பட்ட எவ்வகையான குழந்தைகள்மீது (ஆண் மற்றும் பெண்) எவ்விதமாகவும் பாலியல் நோக்கத்துடன் சுரண்டுதல், துன்புறுத்துதல், அத்துமீறுதல், தொல்லைகள், தாக்குதல், நடுததுவது அல்லது அத்துமீறி தொட்டாலும் அதனை பாலியல் அத்துமீறல் என்று கருதி அவர்கள்மீது தண்டனை அளிக்கும் சட்டமுள்ளது. இச்சட்டங்களை (Protection of Children from Sexual Offences Act-2012) ஜூன் 19-2012ல் இந்திய அரசு நடைமுறைக்கு தந்தது.

©KTBS Not to be republished

***இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் :***

1. பாலியல் தொல்லைகள் (நாசப்படுத்துதல், பலாத்காரம், துன்புறுத்துதல்)
2. சிறுவர்களை / தீயவழியில் பயன்படுத்துவது / தீவிரதொல்லைகள் பாலியல் துன்புறுத்தல்கள்.
3. பாலியல் கொடுமைகள்
4. தீவிரமான பாலியல் கொடுமைகள்
5. பாலியல் துன்புறுத்தல்
6. பாலியல் தொடர்பான படங்கள் தயாரிக்க குழந்தை களை பயன் படுத்துதல்.
7. பாலியல் படங்களை சேகரித்தல்.

மேலே கூறப்பட்ட எவ்வகையான பாலியல் கொடுமைகளை குழந்தைகள் மீது நடத்தினால் கொடுமையின் வடிவத்தைக் கொண்டு தண்டனைவிதிக்க இச்சட்டம் வாய்ப் பளிக்கிறது.

***பெண் கருச்சிதைவு :***

இயற்கையாகவே தாயின் கர்பத்தில் வளரும் கருவை வளரவிடாமல் தடை செய்வது அல்லது சட்டத்தை ஏமாற்றி பெண் கருவை அழிப்பது கொலை என்று அழைக்கப்படுகிறது. சமீபத்தில் நம்முடைய சமுதாய வாழ்க்கையை அதிகமாக வாட்டிவரும் பெண்கருவை அழித்தல்பற்றி சரியான விவரங் கள் கிடைப்பது கடினமாக உள்ளது. ஆனால் பெண்கருவை அழிப்பதற்கான குறிப்பிட்ட அம்சங்கள் நமக்குக்கிடைக்கின்றன. பெண் கரு சிதைத்தல் எவ்வாறு நடக்கி றது என்பதை புரிந்து கொள்வதற்கு இவ்வம்சங்கள் மிகவும் முக்கியமானவைகள்.

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அறிக்கைகளின் படி 1961ல் 0-6 வய துள்ள குழந்தைகளின் குழுவுக்கு சேர்ந்துள்ள பாலினவிகிதம் 1980க்கு பிறகு பெண் குழத்தைகளின் எண்ணிக்கைக்குறைந்து ஆண்குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாகி யுள்ளதைக் காட்டுகிறது. 2001ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஒவ்வொரு 1000 ஆண்களுக்கு பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 933 அளவு இருந்தால், 2012ல் ஒவ்வொரு 1000 ஆண்களுக்கு பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 940 அளவு இருந்தது. ஆனால் 0-06 வயதுள்ள குழந்தைகளில் பாலினவிகிதம் ஒவ்வொரு 1000 ஆண் குழந்தைகளுக்கு 914 பெண் குழந்தைகள் அளவிலுள்ளன. இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 1600 பெண் குழந்தைகள் காணாமல் போகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஆறுலட்சம் பெண் குழந்தைகள் காணாமல் போகிறார்கள் என்று யுஎன், ன் மக்கள் கணக்கெடுப்பு கூறுகிறது. இதுவரையில் இந்தியாவில் உள்ளமொத்த மக்கள் தொகையில் 100மில்லியன் பெண்கள் காணாமல் போய் இருக்கிறார்கள் என்று சில மேற்பார்வை ஆய்வாளர் கூறியுள்ளனர்.

கர்நாடகத்தில் 1991மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஒரு ஆயிரம் ஆண்களுக்கு 960 பேர் பெண்களிருந்தால், 2001 ன் மக்கள் தொகைக் கணக் கெடுப்பின்படி அது 965க்கு ஏறியது. எண்ணிக்கையின் பார்வையில் இது அதிகமாக இருப்பதைக் கண்டறியப்படுகிறது. இதே சந்தர்ப்பத்தில் 0-06 வயதிலுள்ளவர்களில் பாலின விகிதத்தின்படி கவனித்தால் கவலைப்படும் படியாக உள்ளது. கர்நாடகத்தில்

©KTBS Not to be republished

1991ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 0.06 வயதானவர்களின் குழுவினில் ஒரு ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 960 பெண் குழந்தைகள் இருந்தார்கள். இது 2001ல் 940ற்கு குறைந்துள்ளது.

பிரதேசவாரியாக பார்த்தோமானால் 80சதவீதமளவு மற்றும் கிராமிய பிரதேசங்களில் 69 சதவீதம் அளவுபுதியதாக பிறந்த சிசுக்கள் இறப்பைத் தழுவியுள்ளன. தேசிய குடும்ப ஆரோக்கிய தெரிவு ஆய்வில் - 3ன் படி கடந்த பத்தாண்டுகளில் பிறந்த சிசுக்கள் இறப்பில் ஆண் சிசுக்களின் இறப்பின் அளவு 53.6 சதவீதம் இருந்தால் பெண் சிசுக்களின் இறப்பின் அளவு 34.6 சதவீதம் இருந்தது. பெண் சிசுக்களின் 16.5 சதவீதம் உள்ளது. பெண் சிசுக்களில் 19.3 சதவீதம் அளவு அதிகமாகியுள்ளது. இது நமக்கு பெண் குழந்தைகளிடம் உள்ள சகிப்புத்தன்மையின்மையைக் காட்டுகிறது.

ஆண்களைவிட பெண்களின் வாழ்நாள் அதிகமாகிருக்கும். ஆனால் பெண் குழைந்தைகளின் இறப்பு ஆண் குழந்தைகளை விட அதிகமாகியுள்ளது. அடிமட்டத்தில் நாம் உருவாக்கிய ஆரோக்கிய செயல்கள் மற்றும் மக்களுக்கு குறிப்பிட்ட சமயத்தில், குறிப்பிட்ட அளவில், ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவு கிடைக்காமலிருப்பது இதற்கு முக்கியமான காரணம் என்று கூறுகிறார்கள்.

பெண் கரு சிதைவை பாதுகாக்க பெண்களுக்கு சமமான வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. சமமானதன்மை மனோதர்மத்திற்கு மகத்துவம் அளிக்கப்படுகிறது.

மற்றொருபக்கம் சுருங்கிவரும் பாலினத்தை அடையாளம் கண்டு பெண் கருச் சிதைவை 1994ல் நடைமுறைப் படுத்திய Per-Conception and Pre-Natal Diagnostic Techniques Act (PCPNDT-1994) ன் சட்டத்தின் மூலமாக தடைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆயினும் சமூக-கலாச்சார அம்சங்கள் பெண் கருச்சிதைவை நிர்பந்த படுத்துவதில் முழு அளவில் வெற்றியடையவில்லை. நம்முடைய சமுதாய சந்தர்பங்களில் மத்திய பிரிவினர், மேல்பிரிவினர்களுக்கு மேலும் கற்றவர்களிடையே பெண் கருச்சிதைவு அதிகமாகக் காணப்படுவது மிகப்பெரும் சவாலாக உள்ளது. சமூதாயமாக, பொருளாதாரமாக முன் செல்லும் சமுதாய குழுக்கள் மேலும் பிரிவுகளில் பெண்கருச்சிதைவு அதிகமாக நடைபெறுகிறது. ஆனால் இதனை உடைப்பதின் மூலமாக இதன் வேர்களை திருமணம் மற்றும் சொத்து வம்சபரம்பரையில் நாம் காணலாம். மகளின் திருமணச் செலவு, மணக்கொடை, அவள் கணவன் வீட்டாரின் தொடர்ச்சியான சுரண்டல்கள், பாலினத் தொல்லைகள், மற்றும் அத்துமீறல்கள், பொது இடங்களிலேயே பெண் குழந்தைகள்மீது நடைபெற்றுவரும் அத்துமீறல்கள், இன்னும் இதைப் போன்றவை ஒரு பக்கமானால் மற்றொரு பக்கம் வம்ச பரம்பரையாக வந்த சொத்து உரிமை மகனாகவே இருக்க வேண்டும் என்பது மற்றொரு காரணம், மேலோட்டமாகக் காணலாம். இவை ஆண் முன்னிலையாகும். பெண் முன்னிலை யாவதை அதிகரிக்க மற்றும் பெண்களைப் பற்றி உள்ள ஏற்றத் தாழ்வுகளை விரிவுபடுத்த காரணங்களாக உள்ளன.

**செயல்பாடு** : *பெண் குழந்தைகள் பற்றி சமமற்ற தன்மை, எண்ணங்கள் உங்கள் சுற்றுச் சூழலில் காணப்பட்டால் அவர்களுக்கு தெரிவித்து கூறுவதற்கு முயற்சி செய்யுங்கள் .*

©KTBS Not to be republished

***பட்டினி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு:***

உணவு மற்றும் வேளாண் நிறுவணம் (எஃப்.எ.ஒ) ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு நாளுக்கும் அவசியமாக போதுமான அளவு கலோரி அளிக்கப்படும் அளவு கூறப் பட்டு உள்ளது. இதுவல்லாமல் ஒவ்வொரு மனிதனின் வயது செய்யும் வேலை, வசிக்கும் பிரதேசம், தட்பவெப்ப நிலை முதலியவற்றின் அடிப்படையின்மீது வாழ்வதற்கு குறைந்தளவு ஆற்றல் அளிக்கும் உணவின் அவசியத்தை மருத்துவ சமுதாய அறிவியல் அளிக்கிறது.

குறிப்பிட்டளவு உணவு ஒரு தனிமனிதனுக்கு தொடர்ந்து கிடைக்காவிடில் அது பசி அல்லது பட்டினி, நமக்கு ஆரோக்கியமாக இருக்க மாச்சத்து, கொழுப்பு, விட்டமின், உப்புக்கள் இன்னும் பிற ஊட்டச்சத்துக்கள் சரியான அளவில் கிடைக்கவேண்டும். ஊட்டச்சத்துக்களின் குறைபாட்டை 'காண முடியாத பசி' என்று கூறுவார்கள். ஏழைகள் அதிகமான அளவில் கலோரிகள் மற்றும் ஊட்டச் சத்துக்கள் இரண்டிலும் வஞ்சிக்கப் படுகிறார்கள். எஃப், ஏ.ஓ.ன் படி இந்தியாவில் சராசரி ஒரு நாளுக்கு குறைந்தளவு 1820 கலோரிகள் தேவைப் படுகின்றன. மற்றும் குறைந்தளவு தேவையை விட என்றால் 1632க்குக் குறைவான கலோரியுள்ள உணவுப் பொருட்கள் குறைவதின் மூலமாக பசி பட்டினி மற்றும் ஊட்டச்சத்துக்களினால் வாழ்பவர்கள் என்று நிர்ணயிக்கப்படுகிறது.

***பசியின் காட்டிகள் :***

பசிக்கு சில முகங்கள் உள்ளன. உயிருடன் வாழ்வதற்கு அவசியமான, தேவையான உணவு கிடைக்காமலிருப்பது. மற்றொன்று தொடர்ந்து உணவில் மற்றும் ஊட்டச்சத்துக்களின் குறைபாட்டினால் பலவீனம், தீவிரமான ஆரோக்கியமின்மை, அங்கஹீனம், அகால மரணம், பசியின் காட்டிகள், இவ்வனைத்து முகங்களையும் கொண்டுள்ளது. அகால மரணம் குறைவான ஊட்டச்சத்துக்களின் குறைபாடு மற்றும் அதனுடைய விளைவுகள் அதனை எதிரொலிக்கின்றன. அதனால் இப்பொழுது கிடைத்துள்ள புள்ளி விவரங்களின் ஆதாரத்தின்படி பசியின் காட்டிகள் (குறிப்பீடுகள்) கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது.

பசியின் காட்டிகளை கீழ்க்காணும் மூன்று முக்கிய அம்சங்களின் சராசரியினால் கூறப்பட்டுள்ளது. கீழ்க்காணும் மூன்று அம்சங்களை ஒன்று கூட்டி மூன்றால் வகுத்தால் கிடைக்கக் கூடிய புள்ளி விவரமே பசியின் காட்டிகளாகும்.

1. குறைந்தளவு கலோரிகள் கிடைக்காத உணவை உண்ணும் அளவு.

2. சராசரி எடையை விட குறைந்த எடை உள்ள 5 ஆண்டுகளுக்குட்பட்ட குழந்தைகளின் சதவீத அளவு.

3. 5 ஆண்டு வரையிலான குழந்தைகளின் இறப்பு சதவீத அளவு.

இக்குறிப்பிடுகளை ஆதாரமாகக் கொண்டு உலகவங்கி இந்தியாவில் உலகிலேயே அதிக குழந்தைகள் பசிமற்றும் சத்தற்ற உணவினால் பலவீனமாகக் காணப்படுகிறார்கள். அவ்வாறே எடைக்குறைவான குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் உள்ள மக்கள் இந்தியாவிலேயே உள்ளனர். இது சிசுக்களின் இறப்பையும், குழந்தைகளின் இயக்கத்தையும், சந்ததிகளையும் மற்றும் பொருளாதார வளர்ச்சியுடனான தொடர்புகளை கொண்டுள்ளது.

©KTBS Not to be republished

2015ல் வெளியிடப்பட்ட உலகளவிலான பசியின் குறிப்பீடுகளின்படி, இந்தியா 20வது இடத்தில் உள்ளது. இது இந்தியாவிலுள்ள பசியின் தீவிரத்தைக் காட்டுகிறது.

***சத்துக்களற்ற உணவு :***

2011ல் தேசிய குடும்ப ஆரோக்கிய மேற்பார்வை தெரிவி-4 (எச்.எப்.எச்.எஸ்-4) ன் படி கர்நாடகத்திலுள்ள கிராமிய பகுதிகளிலுள்ள 24.3 சதவீதம் அளவு பெண்கள் மற்றும் நகரபிரதேசங்களின் 16.2 சதவீத பெண்கள் உடல் எடை காட்டி (பி.எம்.ஐ) குறைத் தளவை விட குறைவான எடையை கொண்டுள்ளனர். 06 முதல் 56 மாத குழந்தைகள் இரத்த குறைப்பாட்டுடன் வாழ்ந்து வருகிறார்கள். கர்பினியர்களின் 45.2 சதவீதம் பெண்கள் இரத்தக்குறைபாட்டினால் அவதிப்படுகின்றனர். திருமணமான 80.4 சதவீத அளவு பெண்கள் மிக மிதமான அளவில் குடும்பத்தின் முடிவுகளில் பங்கேற்கிறார்கள் 79.5 சதவீத பெண்கள் தன்னுடைய கணவனால் இம்சைக்கு உட்பட்டுள்ளார்கள் என்று (H.F.H.S-4) அறிக்கை கூறுகிறது.

33 சதவீதமளவு பெண்கள் மற்றும் 28 சதவீதமளவு ஆண்கள் உடல் எடை (Body Mass Index) காட்டி (BMI) குறிப்பிடப்பட்ட குறைவான மட்டத்தைவிட குறைவாக உள்ளது. 15-35 வயதினர் 79 சதவீதமளவு குழந்தைகள் 15-49 வயதான 56 சதவீதமளவு பெண்கள். இதே வயதினரான 24 சதவீத ஆண்கள் மற்றும் 58 சதவீதமளவு கர்பினியர் உணவுப் பற்றாக் குறைபாட்டால் மற்றும் சத்துக்களற்ற உணவினால் நலிந்துள்ளனர். சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய குடும்ப ஆரோக்கிய மேற்பார்வை தெரிவி - 2015-16 (N.H.S.F Servey 2015-16) கர்நாடகத்தில் 06-35 மாதங்கள் வயதுள்ள மொத்த குழந்தைகளில் 70.4 சதவீத குழந்தைகள் இரத்த குறைபாட்டினால் (இரத்த சோகை) அல்லல் படுகின்றனர்.

இவ்விதமான இரத்த சோகையினால் அல்லல்படுபவர்கள் ஏறக்குறைய குழந்தைகள் வறுமைக் கோட்டுக்குக கீழானவர்கள். குடும்பப் பிறிவிற்கு சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கு உணவு பாதுகாப்பு அளிப்பதற்காக, கர்நாடகத்தில் பொது மக்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலமாக வறுமைக் கோட்டிற்குக் கீழான குடும்பங்களுக்கு உணவு பதார்த்தங்கள் அளிக்கப்படுகின்றன. மொத்தத்தில் சத்தற்ற உணவு நாட்டில் மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்றான இதனை சரிபடுத்தும் நோக்கில், ஒவ்வொரு சங்கம் மற்றும் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். பாலின வேறுபாடு :

> **செயல்பாடு:**
>
> *பாலின் வேறுபாடுகளின் விளைவுகளைப் பற்றி குழந்தைகளுடன் விவாதம் செய்தல் உருவகம் மற்றும் நாடகங்களை குழந்தைகள் மூலம் நடத்த வேண்டும்.*

ஜெண்டர் அல்லது பாலினம் என்பது பெண்கள் மற்றும் ஆண்கள் என்று அடையாளம் காணப்படுவதற்காக இதனுடைய எண்ணமாக உள்ளது. பாலினம் என்பது அபூர்வமான ஒன்றாகும். ஒரு மானுடம் பெண் அல்லது ஆண் என்று அடையாளம் காணப்படுவதைத் தவிர உயிருக்குத் தொடர்பானது அல்ல. இது பெண் ஆண் இருவருக்கும் மற்றும் ஒருவருக்கொருவர் தொடர்பான இடத்தை குறிப்பிடுகிறது.

©KTBS Not to be republished

ஆனால் இன்று பாலின தொடர்பானது என்று அந்நேரத்தில் பெண் என்று எண்ணப் படுகிறது. வளர்ச்சி சித்தாந்தங்களினால் பாலின எண்ணங்கள் பெண்களின் விஷயங் களை அறிந்துகொள்ள பயன்படுத்தப் படுகிறது.

ஏனென்றால் வளர்ச்சியின் செயலாக்கங்களினால் அதிக எண்ணிக்கையில் வெ ளியில் மிகுந்துள்ள பெண் குழந்தைகள் மற்றும் பெண்களேயுள்ளனர். இவ்வாறிருக்க வளர்ச்சியை பாலினத்தொடர்பான நிலையிலிருந்து பொருள் அறிவது சில காரணங்க ளுக்கு முக்கியமாக உள்ளன.

***பாலின ஏற்றத்தாழ்வுகள் :***

உலகின் அனைத்து பாகங்களில் பாலின ஏற்றுத் தாழ்வுகள் உள்ளன. ஆனால் அது அனைத்து இடங்களிலும் ஒரே விதமாக இல்லை. அது அனேக வடிவங்களிலிருக்கும். பாலின தொடர்பு சமமற்ற தன்மையென்பது ஒரு வடிவமான விஷயமல்ல. இது சமூ கத் தொடர்புகளினால் சேர்ந்தது, கீழ்க்காணுமாறு மொத்தமாகியுள்ளது. பெண் மற்றும் ஆண்களின் இடையே உள்ள உண்மையான சமமற்ற தன்மை என்று 'அமர்த்திய சென்' கீழ்க்காணுமாறு கூறியுள்ளார்.

***பிறப்பு இறப்பில் சமமின்மை :*** ஆண்கள் ஆதிக்கத்தில் உள்ள சமுதாயத்தில் பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அதிகம், இதனால் பாலினதாரத்தில் பெண்கருச்சிதைவு அனேக நாடுகளில் பொதுவாகியுள்ளது. இது முக்கியமாக கிழக்கு மற்றும் தெற்கு ஆசிய, சீனா, தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் தைவான் ஆகிய நாடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

***அடிப்படை வசதிகளில் சமமின்மை :*** சில நேரங்களில் மக்கள் தொகை பண்பு களில் பெண்களுக்கு எதிராக இல்லாவிடிலும் அது வேறு வகையில் வெளிப்படுகிறது. ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் லத்தின் அமெரிக்காவின் அனேக நாடுகளில் சிறுவர்க ளுக்கு தைக்கப் பட்ட ஆடைகள் சிறுமியர்களுக்கு, பள்ளிக்கு செல்லும் வாய்ப்புகளும் குறைவு. அல்லாமல் சமுதாய செயல்பாடுகளில் பங்கேற்பதிலும் கூட பெண்குழந்தைக ளுக்கு வாய்ப்புகள் இருப்பதில்லை.

***வாய்ப்புகளில் சமமின்மை :*** அடிப்படை அவசியமான பள்ளி கல்வியில் அவ் வளவான சமமின்மை காணப்பட்டாலும், மேற்படிப்பு வாய்ப்புகள் சிறுவர்களுடன் ஒப் பிட்டால் பெண்குழந்தைகளுக்கு குறைவாகும். உயிர்கல்வி மற்றும் தொழிற் பயிற்சி யிலுள்ள சமமின்மையை ஐரோப்பா, மற்றும் வட அமெரிக்காவின் சிலநாடுகளிலும் காணலாம்.

***உரிமையில் சமமின்மை :*** சமுதாயத்தில் சொத்துரிமையில் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையே சமமின்மையைக் காணலாம். அடிப்படை சொத்தான வீடு மற்றும் நிலத்தின் உரிமையை பாலின சமமின்மை உள்ளது. இதனால் பெண்கள் வாணிகம், பொருளாதார செயல்பாடுகளில் மட்டுமல்லாது சில சமுதாய செயல்பாடுகளில் தொ டருவதற்கு தொந்தரவு உண்டாகிறது. இச்சமமின்மை உலகம் முழுவதும் பரவி இருந் தாலும் உள்ளூர் இணக்கமாக மாற்ற மடைந்துள்ளது. எடுத்துக்காட்டாக இந்தியாவில் முன்னோர்களின் சொத்து உரிமை ஆண்குழந்தைகளுக்காகவேயாகும்.

ஆனால் கேரளாவின் நாயர் சமுதாயதிதல் முன்னோர் சொத்துக்கள் பதிலாக தாய் முனனிலை (Matrilineal) சொத்து உரிமை இருப்பது காணலாம். சமீபத்தில்

©KTBS Not to be republished

நீதிமன்றங்களின் தீர்ப்புகளின்படி முன்னோர் சொத்தில் இந்திய பெண்களுக்கும் பங்கு பெறமுடியும் என்பதாகும். குடும்பத்தின் தலைமையில் சமமின்மை.

***குடும்ப சமமின்மை :*** பொதுவாக குடும்பத்தில் பாலின தொடர்பு சம மின்மை இருப்பதைக் காணலாம். இது அனேக வடிவங்களை பெற்றுள்ளது. சில குடும்பங்களில் பாலினபேத பாவங்களில் எவ்வித நோக்கமும் இல்லா திருக்கலாம். ஆண் குழந்தைகளில் ஆதாரம் (நட்பு) கல்வி, ஆரோக்கியம், வேலை வாய்ப்பு இவைகளில் சமமின்மை இல்லாமலிருந்தாலும் வீட்டு வேலைகள் வெளியே மற்றும் குழந்தைகள் காப்பது போன்றன பெண்களுக்கே உரித் தான செயலாகும்.

### *குழந்தைத் திருமணம் :*



குழந்தைத் திருமணம் நம்முடைய சமுதா யத்தை பரம்பரையாக வாட்டும் ஒரு சமூக பிரச்ச னையாகும் அவ்வாறெனில் குழந்தைத் திருமணம் என்றால் என்ன என்பதை அறிவோமா!

சட்டத்தின்படி குழந்தைத் திருமணம் என்றால் 18 வயதுக்குட்பட்ட சிறுமிக்கும் (பாலகி அல்லது 21 வயதுக்குட்பட்ட சிறுவனுக்கு திருமணம் செய் வித்தால் அதனை குழந்தைத் திருமணம் என்று அழைக்கப்படுகிறது. இருவரில் யாராவது ஒரு வர் சட்டம் கூறுவதற்கிணங்க வயதில் சிறியவராக இருந்தால் அது குழந்தைத் திருமணமாகும். இளைஞனுக்கு 21 வயது நிரம்பி இருக்க வேண்டும் அல்லது பெண்ணுக்கு 18 வயது நிரம்பி இருக்க வேண்டும். இல்லாவிடில் அவ்வகையான திருமணம் குழந்தைத் திருமணம் ஆகும். இதனுடன் 18 வயதுக்குட் பட்டு யார் பெரியவர்கள் திருமணம் நடந்தால் அது குழந்தைத் திருமணமாகும் பெண் ணுக்கு திருமணம் நடக்க 18 வயது முழுமையாக நிரம்பி இருக்க வேண்டும். அவ் வாறான திருமணமே சட்டப்படியானது. அவ்வயதுக்குட்பட்டு யாரேனும் திருமணம் செய்து கொண்டால் அது சட்டப்படியானது அல்ல அது தண்டனைக் குறியதாகும்.

குழந்தைத் திருமணம் ஏன் செய்யக் கூடாது என்றால் 18 வயதுக்குட் பட்ட குழந்தைகளுக்கு திருமணம் செய்தால் அது சட்டப்படி தண்டனைக் குறி யதாகும். எந்த ஒரு பெண்ணுக்கும் ‘திருமணம்’ என்னும் முறைக்கு உட்பட வேண்டுமென்றால் அவளுடைய உடல், மனது, கர்பப்பை, இயற்கை, மொத்தத்தில் உடல் திறன் வளர 18 ஆண்டுகள் தேவைப்படுகிறது. மனித சமுதாயத்தில் திருமணம் சந்தான உற்பத்தி செயலாக்கமே முக்கிய பாகமாகும். இவ்வாறு பெண் திருமணத்திற்கு பிறகு ‘கர்பம்’ தரிப்பது, குழந்தைப் பெறுவது சாதாரணமாகும். பெண் குழந்தைகள் கர்பம் தரிக்க அவர்களுடைய உடல் மற்றும் மானசீகமாக வளர்ச்சி மிகவும் முக்கியமா னது. மருத்துவ ஆய்வுகளின்படியே பெண் குழந்தைகளுக்கு ‘கர்பம்’ தரிக்க என்றால் கர்பபை உறுதியுடன் வளர்ச்சி அடைய 18 ஆண்டுகள் தேவைப்படுகிறது. அப்பொழுது மட்டுமே அது கருவை 9 மாதங்கள் உறுதியுடன் வளரச்செய்ய சாத்தியமாகும். இல்லா விடில் ‘கரு’ (சிசு)க்கு தொந்தரவு உண்டாகி இரத்தமாகவடியும் (bleeding) கருவுக்கு சி

©KTBS Not to be republished

தைவு ஏற்பட்டு இறப்பைத் தழுவும். சிறு வயதில் 'கர்பம்' தரிப்பதால் பிரசவ சமயத்தில் தாயின் மரணத்திற்கு உட்படும் சாத்தியங்களே அதிகமாகும். இக்காரணங்களுக்காக கட்டாயமாக பெண்ணுக்கு 18 வயது முடிந்த பிறகே திருமணம் செய்ய வேண்டும் என்று சட்டப்படி நிருபிக்கப்பட்டுள்ளது. அதற்காகவே 18 வயது நிறைந்த பிறகே திருமணம் செய்ய வேண்டும்.

குழந்தைகள் உடல் மற்றும் மானசீகமான வளர்ச்சியடைவதற்கு முன்பே செய்யும் திருமணமே குழந்தைத்திருமணம் என்று சட்டத்தில் கூறி, தண்டனை அபராதம் என்று கூறப்பட்டுள்ளது. உடல் மற்றும் மனது வளர்ச்சி இல்லாமல், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் உடல் வளர்ச்சியுடன் அனைத்தும் முழுமையடைவதில்லை. அதற்காக சட்டத்தில் குழந்தைத் திருமணத்தை தடுக்கப்பட்டு வருகிறது. இதனை தடுக்க எந்த சட்டம் உள்ளது என்பதை பின்னால் விவாதிப்போம். அதனைவிட முதலில் குழந்தைத் திருமணத்திற்கான காரணங்களை அலசி ஆராய்வோமா!

### குழந்தைத் திருமணத்திற்கான காரணங்கள் :

1. குழந்தைத் திருமணத்திற்கு முக்கிய காரணம் 'பாலின ஏற்றத்தாழ்வுகள்' பெண் வேறொருவர் வீட்டுக்கு செல்பவள்தானே அதனால் அவளுக்கு விரைவாக திருமணம் செய்து அனுப்பிவிட வேண்டும் என்னும் நம்பிக்கை 'பெண்' மற்றும் 'ஆண்' குழந்தைகள் மற்றும் இடையில் ஏற்றத் தாழ்வுகள் இன்று அதிக குழந்தைத் திருமணத்திற்கு காரணமாகின்றன. சிறப்பு என்னவென்றால் முக்கியமாக 'குழந்தைத் திருமணத்திற்கு' குழந்தைத் திருமணங்களே காரணமாகின்றன. முன்பு குழந்தைத் திருமணங்களுக்கு உட்பட்டவர்கள் அனைவரும் முந்தைய குடும்பத்தின் பழக்கமாக அதனை பின்தொடருகிறார்கள். குழந்தைத் திருமணத்திற்கு முக்கிய காரணம் 'கல்வி இல்லாமை குழந்தைத் தொழிலாளர், குழந்தைகளை கடத்துவது மற்றும் விற்பனை செய்வது சிறுவயதில் 'பள்ளிக்கு செல்லாமல் குழந்தைத் தொழிலாளியாக பிற்காலத்தில் எழுத்தறிவு இல்லாதவர்களாக 'குழந்தைத் திருமணம்' போன்ற பிரச்சனைகளுக்கு உட்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக 8-ஆம் வகுப்பு அல்லது 10-ஆம் வகுப்பு வரைபடித்து அல்லது கல்விபெறமுடியாத ஏழைக் குடும்பங்கள் தம்முடைய குழந்தைகளை 18-21 வருடத்திற்குள் திருமணம் செய்வதில்லை. அதனால் 18 வருடங்கள் வரை 'கல்வி' எவ்வளவு முக்கியமானது என்பதை அறிய வேண்டும்.
2. சட்டத்தில் குறைந்தளவு நடைமுறை மற்றும் பயன்படுத்துவதில் குறைபாடு. கல்வி முறையில் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் குறைபாடுகள். கல்வித் தொடர்பான, சமூகம் / சமுதாயங்கள் / பொது மக்களின் உதவும் தன்மை இன்மை. குழந்தைகளின் உரிமைகள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிகளை தவறுகள் இல்லா நடைமுறைப்படுத்த வேண்டும்.

### குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் - 2006

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. சிலசட்ட திருத்தங்கள் மூலமாக 2006ல் குழந்தைத் திருமண தடுப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதற்கு முன் 1929 மற்றும் 1986ல் இருந்தது. ஆனால் இந்திய குழந்தைகளின் உரிமைகள் உடன்படிக்கைக்கு 1992 டிசம்பர் 11ல் கையெழுத்

©KTBS Not to be republished

திட்டப் பிறகு சில குழந்தைகளின் சிறு மாற்றங்களுடன் புதிய சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

பெண் அல்லது ஆண்களில் யாராவது ஒருவர் அல்லது இருவர் சிறுவர்களாகி ருந்தாலும் அது தண்டனைக்குறியது ஆகும். எவ்விதமான சிறிய சிறுமிகளை யாரா வது பெரியவர் திருமணம் செய்துகொண்டால் அவர் தண்டனைக்கு உரியவர் ஆவார். இம்மாதரியான குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றால் (குழந்தைகளை தவிர்த்து திருமணம் செய்து கொண்டால், செய்தால், உதவிசெய்தால், பங்கேற்று நடத்தினால் 2 ஆண்டுகள் சிறைவாசம் 1 லட்சம் அபாரதம். தண்டனையுடன் சிறைவாசம் அனுபவிப் பார்கள். இச்சட்டத்தில் உள்ள கட்டம் - 9,10,11ன் படி குழந்தைத் திருமணம் செய்த புரோகிதர், சமையல்காரர்கள், துணிப்பந்தல் போட்டவர்கள், புகைப்படம் எடுப்போர், வீடியோ எடுப்போர், மேளம் கொட்டுவோர் வாகன ஓட்டிகள் மற்றும் திருமணத்தில் பங்கேற்ற அனைவரும் தண்டனைக்குறியவர் ஆவார்கள்.

முக்கியமாக திருமணம் செய்து கொண்ட சிறுவன் மற்றும் சிறுமியின் தந்தை, தாய் கள் மற்றும் குடும்பத்தினர் மேலும் திருமண சத்திரத்தின் உரிமையாளர்கள்கூட தண் டனைக் குறியவர் ஆவார்கள். இச்சட்டத்தில் திருமணப்பத்திரிக்கையை டைப் செய்த அச்சிட்ட அச்சக உரிமையாளர்கள் கூட தண்டனைக்கு உரியவர்களாவார் என்று கூறப்ப டுகிறது. ஏனென்றால் ‘குழந்தைத் திருமணம்’ குழந்தைகளின் உரிமைகளை மதிக்காமலி ருப்பது, அதற்கு யார் உதவி செய்வது அல்லது அதனை வினாக்கள் கேட்காமல் பங்கே கற்பது அல்லது நம்முடைய சமுதாயத்திற்கு பொருப்புகளை மறந்தால் அது குழந்தைக ளின் உரிமைகளை மற்றும் மனித உரிமைகளை மறுத்தால் அது குழந்தையின் உரிமை கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் எதிர்ப்பானது ஆகும். அதனால் அவர் கள் அனைவரும் குற்றவாளிகள் ஆவார்கள். இந்நாட்டின் மக்கள் தம்முடைய சமுதாய பொருப்புகளையும் மற்றும் சாட்சிகளையும் யாரும் மறைப்பதற்கில்லை என்று இச்சட் டம் தெளிவாக்குகிறது.

### *குழந்தைத் திருமணங்களினால் உண்டாகும் தீமைகள் :*

குழந்தைகளின் பன்முகவளர்ச்சிக்குத் தடை ஏற்படுகிறது. அவர்கள் கேள்விகள் கேட்கும் சுதந்திரத்தை இழுந்து விடுகிறார்கள். இதன்விளைவாக குழந்தைகல் மீது அதி களவில் தொல்லைகள், நிர்அலட்சியம், இம்சை, சுரண்டல் மற்றும் பாலின தொல்லை கள் அதிகமாகின்றன. குழந்தைகளின் அனைத்து உரிமைகளும் நசுக்கப்படுகின்றன. குழந்தைப் பருவம், கல்வி, பொழுது போக்கு, நண்பர்களுடன் நட்புக்கு இடையூறு, சத்தற்ற உணவு, இரத்தசோகை நோய்வாய்ப்படுதல், கர்பபிரச்சனைகள் சிசுமரணம், தாயின் இறப்புக்குக் காரணமாக அமைவது. விசேஷமாக பெண் குழந்தைகள் சிறிய வயதில் விதவையாகும் சம்பந்தம் அதிகமாகிறது. பெண் குழந்தைகள் எவ்வித சமூக பாதுகாப்புகளற்று அவ்வப்பொழுது எல்லை மீறலுக்கு உட்படும் சந்தர்ப்பங்கள் அதிக மாகும். குழந்தைத் திருமணத்தை எவ்வாறு தடைசெய்வது.

கர்நாடக மாநில அரசு சுமார் 47 வெவ்வேறு நிலைகளில் அதிகாரிகள் குழந்தைத் திருமணங்களை தடை செய்ய வேண்டுமென தீர்மானித்துள்ளது. அதனால் எங்கு குழந் தைத் திருமணம் நடந்தாலும் நாங்கள் வழக்குத் தொடரலாம். முதன் முதலாக மக்க ளுக்கு உதவியாக ‘சகாய வாணி 1098ற்கு புகார் அளிக்கலாம். புகார் அளிப்பவர்கள்

©KTBS Not to be republished

தங்கள் பெயரை வெளியிடாமலும் இருக்கலாம். உள்ளூரில் உங்கள் வீட்டின் அருகில் உள்ள எவ்விதமான அரசு பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு, கிராம கணக்கருக்கு, பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகளுக்கு, நகரத்திலுள்ள ஆரோக்கிய அலுவலர்களுக்கு அல்லது ஊர் நகரத்தின் எல்லைக்குட்பட்ட காவல் நிலைய அதிகாரிகளுக்கும் புகார் அளிக்கலாம். இவர்கள் அனைவரும் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்யும் அதி காரிகளாவர். ஒரு வேளை குழந்தைத் திருமணம் நடந்து விட்டால் அதற்கு எதிராக நட வடிக்கை எடுக்க காவல் நிலையத்திற்கு சட்டப்படி புகார் அல்லது நடந்த நிகழ்வுகளை தாக்கல் செய்பவராகவும் இருப்பார். இதனுடன் தாலுக்கா / மாவட்டளவில் அனைத்து அதிகாரிகளும் குழந்தைத்திருமண தடைசெய்யும் அதிகாரிகளும் குழந்தைத் திருமண தடை செய்யும் அதிகாரிகளாக இருப்பார்கள். இவர்களுக்கு எந்நேரத்திலும் குழந்தைத் திருமணம் பற்றி புகார் அளிக்கலாம்.

### *குழந்தைத் திருமணத்தினால் உண்டாகும் விளைவுகள் :*

1. 18 வயது வரையில் எந்த குழந்தைகள் பள்ளி / கல்லூரி படிப்பை விடும் கல்வித் தொடர்பான வளர்ச்சி செயல்களை நடைமுறைப் படுத்துதல் என்றால் 100% அனைத்து குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கையாக வேண்டும். பள்ளிக்கு வருகையுடன் 100 பிறப்பு பதிவு மற்றும் பிறப்பு பதிவு உறுதிச் சீட்டை பெற வேண்டும். இது கட்டாயமாகும்.
2. பெண் குழந்தைகளின் கல்வித்தொடர்பானவற்றிற்கு அதிக அழுத்தம், சிறுமிகளின் உடலுறுதி மற்றும் பலசாலியாவதற்கு முன்னுரிமை எங்கு குழந்தைத் திருமணங்கள் நடந்தாலும் புகார் அளிப்பது கண்டிப்பது, கேள்வி கேட்பது முதலியன.

> ***செயல்பாடு :*** *உங்கள் நண்பர்கள் யாருக்காவது குழந்தைத் திருமணம் செய்யக் கூடிய நிலை ஏற்பட்டால் உடனடியாக குழந்தைகள் உரிமைகளை காக்கும் குழுவிற்கு மற்றும் அதனுடைய உறுப்பினர்களின் கவனதிதற்கு கொண்டுவரவும்.*

### *குழந்தைகள் கடத்தல் மற்றும் விற்பனை :*

இன்று மிக வேகமாக வளர்ந்து வரும் சமுதாயத்தில் அதே வேகத்தில் நல்ல மற்றும் தீய அம்சங்களும் வளர்ந்து வருகின்றன. அதில் மனித சமூகத்திற்கு மிகப்பெரும் சவாலாக இருப்பது உலகின் மிகப்பெரும் தொல்லை மற்றும் சுரண்டல் என்றால் மனிதனை கள்ளத்தனமாக கடத்துவது (Human Trafficking) இன்று உலகில் படைக்கருவிகளின் கள்ள வியாபாரத்திற்கு பிறகு இரண்டாவது, மிகப் பெரிய வியாபாரம் அல்லது விற்பனை என்றால் 'மானிடர்களைக் கடத்தலி'ல் 70 சதவீதம் அளவு பெண்கள் மற்றும் குழந்தைகளே அதிகமாக பலியாடாகிறார்கள். ஒவ்வொர் ஆண்டும் 32 பில்லியன்கள் அளவு மானிடரின் கள்ளக் கடத்தில் வியாபாரம் நடைபெறுகிறது என்று 2012-13ல் ஐக்கிய நாடுகள் சபை தோராயமாகக் கூறியுள்ளது.

இந்தியாவில் தேவதாசிகள் எனப்படும் விருப்பமில்லா முறைக்கு குழந்தைகளை உட்படுத்துவது குழந்தைத்திருமணம் செய்விப்பது பிறகு அதனை பாலின அடிமை

© KTBS Not to be republished

களாக வைத்திருப்பார்கள். இவை சில வறிய குடும்பங்களில் தந்தை தாய்களுக்கு தெரிந்தே நடைபெறும் நிகழ்வாகும். ஆனால் சில செயல்களில் ஊரில் சுற்றிவரும் விப சாரத்திற்கு பிறருக்கு உதவுபவர்கள் உறவுகளின் ஆண்குழந்தைகள், பெண் குழந்தை களை பாசமுள்ளவர்களாக நடித்து, வேலை வாங்கித் தருவதாக ஆசை வார்த்தைகளைக் கூறி நம்பச் செய்து, அழைத்துச் சென்று பாலியல் தொழில் நடத்தம் வீடுகளில் விற் பனை செய்த சான்றுகள் உள்ளன. கன்னட பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிபிரிவு நடத் திய ஆய்வில் உட்பட்ட சில யுவதிகள் கூறியவாறு, மும்பையில் சொந்தவீடு அல்லது வாடகைவீடு (கர்வாலி உள்ளவர்கள் பெண்களின் தம்பிகள் ஆண் குழந்தைகள் ஊரில் விபசாரத்திற்கு பெண்களை தேடுபவர்களாக வேலை செய்கிறார்கள் என்று கூறியுள்ள னர்.)

அவர்கள் சுற்று முற்றிலும் உள்ள கிராமங்களிலேயே சுற்றிக் கொண்டே பெண் குழந்தைகளின் பிரச்சனைகள் உள்ள வீடுகளை கவனித்து அவர்களுக்கு ஓரளவு பணம் கொடுத்து, அவர்களுடைய பெண் குழந்தைகளை அழைத்துக் கொண்டு செல்வார்கள். சில நிகழ்ச்சிகளில் சிறுமிகளை நேரடியாக ஈடுபடச் செய்து அழைத்துக் கொண்டு அல் லது ஓடிச்சென்று விடுகிறார்கள். பின் பாலியல் விபச்சார விடுதிகளில் சேர்த்து விடு வார்கள். இதைப் போன்ற எடுத்துக் காட்டுகள் உள்ளன. சமீபத்தில் சிறிய சிறுமிகளுக்கு சாக்லேட்டுடன் எதையெல்லாம் கொடுத்து, கோயில் திருவிழாக்களைக் காட்டி, சி னிமாக்காட்டி, புதிய உடைகளைக் கொடுத்து ஆசைகாட்டி அழைத்துச் சென்று, பாலி யல் தொழில் நடத்தும் விபச்சார வீடுகளில் விற்பனை செய்த நிகழ்ச்சிகளும் கண்டுள் ளோம். வளர்ச்சி ஆய்வு பிரிவு சோதனைகளில் உட்படுத்திய தேவதாசிகளின் ஆதர வில் 4 சதவீதம் அளவு நிகழ்வுகளை சிறுவயதிலேயே கடத்தப்பட்டு விடுகிறார்கள். இதனைப் பற்றி நாம் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதுவல்லாமல் நம் பள்ளியின் சுற்று முற்றிலும் அறிமுகம் இல்லாத புதிய மனிதர்கள் பேசும் போது அவர் களுடைய நடவடிக்கைகளை மிகவும் எச்சரிக்கையுடன் கவனித்து வரவேண்டும். அவர் களைப் பற்றி சந்தேகம் ஏற்பட்டால் ஆசிரியர் மற்றும் உன் பெற்றோர்களுக்கு உடன டியாக தெரிவிக்க வேண்டும்.

குழந்தைகள் கடத்தல் என்றால் என்ன? 18வயதுக்குட்பட்ட எவ் விதமான தனிமனிதன் (நாட்டின் உள்ளே அல்லது நாட்டின் வெளியே) வேலைவாய்ப்பு, கடத்தப்படுதல், மாற்றல், பாதுகாப்பு, ஏற்றுமதி செய்வது சொந்தமாக் கிக் கொள்வது. அல்லது சுரண்டும் நோக்கத்தடன் நடைபெறும் செயலை குழந்தைகள் கடத்தல் என்பார்கள். கடத்தலுக்கு உள்ளானவர்களில் 27 சதவீதம் வீட்டு வேலைகளுக்கும் 46சதவீதம் பாலியல் சுரண்டல்/பாலியல் செயல்களுக்கு உட்படுத்துகிறார்கள். பல வந்தமாக உழைப்புக்கு உள்ளாகி உள்ள குழந்தைகளை பிச்சையெடுக்கத் தள்ளப் படுகிறார்கள்.

### *குழந்தைகள் கடத்தலுக்கான காரணங்கள் :*

குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம், பள்ளியை விடுவது, வறுமை, குடும்பங்களில் குழந்தைகள் பற்றி அல்பமாக நினைப்பது. தொழிலாளர் முறை, முதலியன முக்கிய காரணங்களாகும். ஒழுங்கற்று இடம் பெயருதல் மற்றும் இடமாற்றம் அதிகமாகிவரும் தகவல் தொழில் நுட்பம் மேலும் இணையம் பயன்பாடு.

©KTBS Not to be republished

சமுக சமமின்மை, பாலின சமமின்மை, ஏற்றத் தாழ்வுகள் அறிவுக்கூர்மை குறைபாடு, பெருகிவரும் கடன் சுமை, சமமற்ற வியாபாரத் தொடர்புகள் - இவையனைத்தும் காரணங்கள் ஆகும்.

***தீய விளைவுகள் :*** குழந்தைகளின் பன்முக வளர்ச்சிக்கு போதைப் பொருட்கள் உடல் மற்றும் பாலியல் சுரண்டல்களுக்கு பலியாவது. குழந்தைகளின் இறப்பு மற்றும் நோய்களின் அபாயம் / எச்.ஐ.வி. / பால்வினை நோய், அவசியமற்ற கர்பமுண்டாவது, பலவந்தமாக கர்பமுண்டாக்குவது, கொலை, போதைப் பொருகளால் பலி முதலியன. மொத்த சமுதாயத்தின் சுயநலத்திற்கு களங்கத்தை உண்டாக்கும் சமுதாய முறைகளாகியுள்ளன.

நீதியற்ற மனிதனின் கள்ளக் கடத்தலுக்கு சட்டம் - 1956க்கு திருத்தப்பட்டு உள்ளது எவ்வகையிலும் குழந்தை, பெண், மனிதன் கள்ளக்கடத்தலை தடுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று எந்த குழந்தைகள் / பெண்களை பணம் அல்லது மற்றும் இதர ஆசைக்கு, அழுத்தம் அளித்து சட்டத்திற்கு புறம்பாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு எவ்விதத்திலும் அழைத்துக் கொண்டு சென்றால் அது குழந்தைகளின் / பெண்களை கடத்துவதற்கு சமமாகும். அவ்வாரானவர்களின் மீது ஐ.பி.சி. - 370 (IPC-370) புகார் அளித்து அவர்களுக்கு 10 ஆண்டு அல்லது ஆயுள் தண்டனை அளிக்க வாய்ப்புகள் உள்ளன.

***சில பரிகார செயல்கள் :***

குழந்தைகளின் உரிமைகள் நடைமுறைக்காக மற்றும் குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம், குழந்தைகள் கடத்தல், குழந்தைகள் மீது பாலியல் பலாத்காரம் மற்றுமுள்ள சுரண்டல்கள் பரிகாரத்திற்காக சில செயல்களைக்கைக் கொள்ள வேண்டும்.

1. அனைத்து அரசு / அரசு உதவி பெறும் / அரசு உதவிபெறா பள்ளிகளில் கட்டாயமாக 'குழந்தைகள் உரிமைகள் கிளப்' அமைத்து நடை முறைப்படுத்த வேண்டும்.
2. அனைத்து / அரசு / அரசு உதவி பெறும் / உதவிபெறும் பள்ளிகளில் குழந்தைகள் பாதுகாப்புக் குழு அமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
3. மாநிலத்தின் அனைத்து கிராமபஞ்சாயத்துக்களில் ஒவ்வொரு ஆண்டும் கட்டாயமாக 'குழந்தைகளின் கிராம சபை'களை நடத்தி அக்கிராமத்தின் பஞ்சாயத்து எல்லைக்குள் 18 ஆண்டுகளுக்குட்பட்ட எல்லா குழந்தைகளின் பிரச்சனைகளுக்கு பரிகாரம் செய்ய கைக்கொள்ள வேண்டும்.
4. மாநிலத்தின் அனைத்து கிராம பஞ்சாயத்து, தாலூக்கா அளவில் மற்றும் மாவட்ட அளவில் ''குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்புக் குழுவை ஏற்படுத்தி ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை சபையை நடத்தி 18 வயதுக்குட்பட்ட எல்லா குழந்தைகளின் பிரச்சனைகளுக்கு பரிகாரம் அளி த்தல்.''
5. மாநிலத்தின் அனைத் கிராம பஞ்சாயத்தின் தாலூக்க அளவில் மற்றும் மாவட்ட அளவில் கட்டாயமாக 'பெண்கள் மற்றும் குழந்தைகளை கடத்தி மற்றும் விற்பனைக்குத் தடை' குழுவை உருவாக்கி ஒவ்வொரு இரண்டு

Not to be republished ©KTBS

மாதங்களுக்கொருமுறை பெண்கள் மற்றும் குழந்தைகளை கடத்தி விற்பனை செய்யும் நிலை ஏற்படக் கூடாது, பரிசீலனை செய்வது. அனைத்து பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு கிராமம் / தாலூக்கா / மாவட்டங்களாக செய்து பஞ்சாயத்துகளை குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம் குழந்தைகள் மற்றும் பெண்கள் கடத்தப் படுவதைத் விடுவிக்க / கட்டுபடுத்த பஞ்சாயாத்துகளுக்கு அதிகாரம் / அளிக்கவேண்டும்.

6. மாநிலத்தின் ஒவ்வொரு அங்கனவாடி மையத்தில் ஒரு 'பாலிகா சங்கம்' ஆரம்பித்து அதில் 11-18 ஆண்டுகள் அம்மையத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்து சிறுமிகளை சேர்த்து சங்கம் அமைத்து அதில் பாலின, பாலின வேறுபாடு, பாலின சமதன்மை குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம், குழந்தைகளை கடத்துவது, பாலியல் ரீதியான கொடுமைகள், பாதுகாப்பு, மற்றும் பாதுகாப்பற்று தொடுதல், பிறப்பு இறப்பு சான்றிதழ், பள்ளி கல்வியின் மகத்துவம் தடுப்பூசிகள், இளம்பருவம் அறியாத வளர்ச்சி, ஆரோக்கிய தனிக்கை, எச்.ஐ.வி/ ஏய்ட்ஸ் (Aids) விவரங்கள், சத்தான உணவு, கழிப்பறை வசதி, தூய்மை, குழந்தைகளின் உரிமைகள், குழந்தைகளின் சட்டங்கள், இலாக்காக்களின் வசதிகள், இலாக்காக்கள் மற்றும் இன்னும் பிற விவரங்கள் அளித்து சிறுமிகளை காக்க வேண்டும்.

மேற்காணும் முக்கிய அம்சங்களை இதுவரையில் அரசின் சுற்றறிக்கை, உத்தரவுகள், விருப்பப்படியுள்ளன. இதனை அனைத்து குழந்தைகள், மக்கள், பெற்றோர், இலாக்காக்கள், அதிகாரிகள் ஒன்றுகூடி நடை முறைப்படுத்த வேண்டும்.

### *பயிற்சிகள்*

## I. *கோடிட்ட இடங்களை தகுந்த சொற்களால் நிரப்புக.*

1. அரசியலமைப்பு ________ விதி குழந்தைகளை உழைக்க வைப்பது சட்டத்திற்கு புறம்பானது என்று கூறியுள்ளது.
2. குழந்தைத் திருமணம் தடுப்புச்சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்ட ஆண்டு ________
3. குழந்தைத் தொழிலாளர் நலனுக்காக ________ ல் தேசிய கொள்கை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.
4. பெண்கருச் சிதைவை தடை செய்தசட்டம் ________ ல் நடைமுறைக்கு வந்தது.
5. பாலியல் குற்றவாளிகளினால் குழந்தைகளின் பாதுகாப்பு சட்ட ________ ல் நடை முறைக்கு வந்தது.

## II. *கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒருவரியில் விடையளி.*

1. இந்தியாவின் ஏதாவது இரண்டு சமுதாய பிரச்சனைகளின் பெயர்களை எழுதுக.

©KTBS Not to be republished

2. குழந்தைத் தொழிலாளர் என்போர் யார்?

3. பெண்கருச்சிதைவு என்றால் என்ன?

4. குழந்தைத் திருமணம் என்றால் என்ன?

5. பாலின வேற்றுமை என்றால் என்ன?

6. குழந்தைகள் விற்பனை மற்றும் கடத்தல் என்றால் என்ன?

## III. கீழ்க்காணும் வினாக்களுக்கு குழுக்களில் விவாதித்து விடையளிக்கவும்.

1. குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகளுக்கான காரணங்கள் யாவை? கூறுக.

2. குழந்தைத் திருமணத்தின் விளைவுகள் யாவை?

3. குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைக்களை தடுக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

4. ‘பெண் கருச் சிதைவு’ தீய விளைவுகள் யாவை?

5. பாலின வேறுபாடுகளின் பிரிவுகள் யாவை?

6. பசிபட்டினியின் விளைவுகளை விவரிக்க.

## IV. செயல்பாடு.

1. உங்கள் ஊரின் சமூக பிரச்சனைகளைப் பட்டியலிட்டு அவற்றிற்கான பரிகாரங்களை எழுதுக.

## V. செயல்திட்டம் :

1. உங்கள் பள்ளிக்கு சட்டவல்லுனர்களை அழைத்து குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம், பெண்கருச் சிதைவு, பாலின ஏற்றத்தாழ்வுகள், முதலிய சமுதாய பிரச்சனைகள் பற்றி பிரசங்கம் மற்றும் பட்டி மன்றம் வைக்கவும்.

* * * *

©KTBS Not to be republished

## பாடம் 8

# கனிமம் மற்றும் ஆற்றல் வளங்கள்

**நாம் கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி இப்பாடத்தில் கற்போம்.**

- **கனிமங்களின் பொருள் மற்றும் அதன் முக்கியத்துவம்**
- **இந்தியாவின் முக்கிய கனிமங்கள். இவற்றின் சேகரிப்பு வினியோகம் மற்றும் உற்பத்தி பொருட்கள்**
- **மின்சார மூல வளங்கள் முக்கியத்துவம் மற்றும் பொருள்.**
- **மரபுரீதியாக மின் மூல வளங்கள் நிலக்கரி பெட்ரோல் மற்றும் அணு மின்சக்தி.**
- **இந்தியாவிலுள்ள மின்சார பிரச்சனை மற்றும் தீர்வுகள்.**

©KTBS Not to be republished

### 8.1 கனிமங்களின் பொருள் மற்றும் முக்கியத்துவம்

கனிமம் என்பது ஒரு இயற்கையான உயிரற்ற பொருள். இதில் ஒரு நிச்சய இரசாயண கலவையும் பௌதீக அம்சங்களும் உள்ளன. உ-ம் இரும்பத்தூது, மேங்கனீஸ், பாக்சைட் மற்றும் சில. பூமியிலிருந்து கனிமங்களை வெளியில் எடுக்கும் செயல்வழி முறைக்கு கனிமத்தொழில் என்று பெயர்.


கனிமங்கள் இயற்கையின் அன்பளிப்பு. இவை நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கின்றன. இவை தொழிலக வளர்ச்சி, கட்டுமானம், போக்குவரத்து வளர்ச்சி, தகவல், வாணிபம் மற்றும் வர்த்தகத்திற்கு அதிக பயனளிக்கிறது. சில கனிமங்கள் பெரும் பொருளாதார மதிப்பை பெற்றுள்ளன. உ-ம் : தங்கம், வைரம் போன்றவை. இந்தியா பல கனிமங்களின் இருப்பிடமாக உள்ளது.


### 8.2 முக்கிய கனிமங்கள்

இரும்புத்தாது : இது ஒரு இரும்பு அடங்கிய உலோக கனிமம் இது இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகளுக்கான முக்கிய மூலப்பொருள். இந்தியா பெருமளவு இரும்புத்தாதுக்களை கொண்டுள்ள நாடு. இது பல மாநிலங்களில் காணப்படுகிறது. உத்திரபிரதேசம், ஒடிசா, கர்நாடக, சந்திஷ்கர், ஜார்க்கண்ட், தெலுங்கானா, மத்தியபிரதேசம் மகாராஷ்ட்ரா மற்றும் இராஜஸ்தான்.

ஒடிசா இந்தியாவிலேயே அதிக அளவில் இரும்புத்தாது உற்பத்தியாகும் மாநிலம். இம்மாநிலத்தில் முக்கியமாக மயூர்பாஜ், கியோன்ஜார், சுந்தர்கர், கட்லேக் மற்றும் கொராபுட், சத்திஸ்கர் மாநிலத்தில் பஸ்தார், துர்க் மற்றும் ஜபல்பூர் மாவட்டங்களிலும், ஜார்கண்ட் மாநிலத்தில் சிங்பூம், பாலமாவு, தன்பத் மற்றும் ஹஜாரிபாக்; கர்நாடகாவில் சண்டூர் - ஒசப்பேட்டை, கெம்மன்குண்டி மற்றும் குதுரேமுகா பகுதிகளிலும் கிடைக்கின்றன. மேலும் கோவா, தமிழ்நாடு, மேற்குவங்களாம் மற்றும் உத்திரபிரதேசம் மாநிலங்களிலும் காணப்படுகின்றன.

இந்தியா உலகின் இரும்புத்தாது அதிகம் கிடைக்கும் நான்காவது மிகப்பெரிய




நாடு. சுமார் 35 சதவீத உற்பத்தியை மட்டுமே இந்தியாவில் பயன்படுத்தப் படுகிறது. மற்ற அனைத்தும் வேறு நாடுகளுக்கு ஏற்மதி செய்யப் படுகின்றன

**மேங்கனீஸ் தாது :** இது ஒரு முக்கியமான இரும்பு - கலவை உலோகம். இது எஃகு தயாரிக்க தேவைப்படுகிறது. இது மேலும் உலர் மின்கலங்கள் (Dry Batteries) வண்ணங்கள், கண்ணாடி, குடுவைகள் மற்றும் கேலிகோ அச்சுத் தொழில் ஆகியவை உற்பத்தி செய்யவும் பயன்படுகின்றன.


உலகின் மேங்களீஸ் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஒடிசா, மகாராஷ்ட்ரா, மத்திய பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்கள் நாட்டின் மேங்கனீஸ் உற்பத்தி மாநிலங்கள். ஒடிசாவில் தான் மிக அதிக மேங்கனீஸ் கனிமம் நிறைந்துள்ளதுடன் அதிக உற்பத்தியும் நடைபெறுகிறது. மிகச் சிறந்த தாது சுந்தர்கர், கலஹன்டி மற்றும் கொரபுட் மாவட்டங்களில் உள்ளன.

நாக்பூர், பண்டாரா, ரத்னகிரி மகாராஷ்ட்ராவிலும் மத்திய பிரதேசத்தில் சின்ட்வாரா, ஜபல்பூர் மற்றும் திவாஸ் பகுதிகளிலும் கர்நாடாகாவில் உத்தரகன்னடா, சிவமொகா பல்லாரி, சித்ர துர்கா மற்றும் துமகூரு மாவட்டங்களிலும் மேங்கனீஸ் தாது அதிக அளவில் கிடைக்கிறது. தெலுங்கான, இராஜஸ்தான், குஜராத், ஜார்கண்ட் மற்றும் பீகார் மாநிலங்களில் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

உலகில் இந்திாய ஐந்தாவது மிகப்பெரிய மேங்கனீஸ் உற்பத்தி செய்யப்படும் நாடாக திகழ்கிறது. இந்தியா தன் தேவைக்குப் போக

©KTBS Not to be republished

மிகுதியான தாதுவை முக்கியமாக ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் பெல்ஜியம் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.





*அறிந்துகொள்ளுங்கள்.*

**பாக்சைட் : இந்த வார்த்தை "Les Baux" என்ற இடத்திலிருந்து உருவானது காரணம் அர்லஸ் என்ற இடத்திற்கு அருகாமையில் (பிரான்ஸ் நாட்டில்) முதன் முதல் கண்டு பிடிக்கப்பட்டதால் அப்பெயர் பெற்றது.**

**அலுமினியம் : இது ''இருபதாம் நூற்றாண்டின் அதிசய உலோகம்'' எனப்படுகிறது; இது பலவித பயன்பாட்டிற்கு தேவைப்படுகிறது.**

***பாக்சைட் :*** இது அலுமினியத்தின் முக்கிய மூலப்பொருள். இத்தாது ஒடிசா, குஜராத், ஜார்கண்ட், மகாராஷ்ட்ரா, சத்தீஸ்கர், தமிழ்நாடு மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் பெருமளவில் உள்ளது.




இந்தியாவில் ஒடிசா மாநிலம் மிகப் பெரிய பாக்சைட் உற்பத்தி செய்யும் பகுதியாக உள்ளது. இதன் இருப்புகள் முக்கியமாக கலஹண்டி, கொரபுட், சுந்தர்கர் மற்றும் சம்பல்பூர் மாவட்டங்களில் உள்ளன. சத்தீஸ்கர் மாநிலத்தில் பிலாஸ்பூர், துர்க், சர்குஜா மற்றும் ராய்கர் பகுதிகளில் கிடைக்கிறது. மகாராஷ்ட்ராவில் இரத்தினகிரி, கோலாப்பூர், தானா மற்றும் சத்தாரா பகுதிகளில் கிடைக்கிறது. ஜார்கண்ட்டில் இராஞ்சி, லோஹர்தகா மற்றும் பாலமாவு பகுதிகளில் கிடைக்கிறது.

குஜராத்தில் ஜாம்நகர், ஜூனைத், தெடா மற்றும் பாவநகர் பகுதிகளிலும் மத்திய பிரதேசத்தில் ஷஹ்டால்,

©KTBS Not to be republished

மண்டல் மற்றும் பால்கட் பகுதிகளிலும் கோதாவரி மற்றும் விசாகப்பட்டினம் ஆந்திரா பிரதேசத்திலும், தமிழ்நாட்டில் சேலம் மற்றும் நீலகிரியிலும் கர்நாடகவிலும் உத்தரகன்ணட பெல்காம் மற்றும் சிக்கமகளூரு மாவட்டங்களில் கிடைக்கிறது.

***மைகா :*** இது மிக முக்கியமான உலோகம் - அல்லாத கனிமம். இதை மிகச்சுலபமாக மிக மெல்லியதாகவும், மெலிய காணத்தக்க தகடாகவும் செய்யலாம். இது வெப்பத்தை தாங்கக் கூடியது. மைகா தகடுகள் மின்சார தொழிற்சாலைகளில் மற்றும் தொலைபேசி, விமானங்கள், தானியங்கி வாகனங்கள் மற்றும் கம்பியில்லா தகவல் தொடர்புகள் ஆகியவற்றிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

மைகா பெருமளவில் கிடைக்கும் மாநிலங்கள் - ஆந்திர பிரதேசம், இராஜஸ்தான், ஜார்கண்ட் மற்றும் பீகார். இந்தியாவில் அதிக அளவில் மைகா உற்பத்தியாகும் மாநிலம் ஆந்திரபிரதேசம். அதிக அளவில் நெல்லூர், கிருஷ்ணா, விசாகப்பட்டினம், கோதாவரி மற்றும் அனந்தபூர் மாவட்டங்களில் கிடைக்கிறது.

> *அறிந்துகொள்ளுங்கள்.*
>
> ***நெல்லூரில் கிடைக்கும் மைகா வெளிர் பச்சை நிறம் கொண்டது. இதை உள்ளூர் மக்கள் "தேன் மைகா'*** Honey mica ***என்றழைக்கின்றனர்.***

இரண்டாவது மிகப்பெரும் உற்பத்தி மாநிலமான இராஜஸ்தானில் மைகா இருப்புகள் முக்கியமாக ஜெய்பூர், ஆஜ்மீர், பில்வாரா மற்றும் உதய்பூர் மாவட்டங்களில் உள்ளது. ஜார்கண்ட்டில் ஹஜாரிபாக், தன்பத், பாலமாவு, இராஞ்சி மற்றும் சிங்பூம் பகுதிகளிலும் பீகாரில் கயா முங்கெர் மற்றும் பாகல்பூர் பகுதிகளிலும் மைகா கிடைக்கிறது. சிறிதளவில் குஜராத், மகாராஷ்ட்ரா, ஒடிசா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் கிடைக்கின்றது.

உலகிலேயே இந்தியா மிக அதிக அளவில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடாக உள்ளது. சமீப காலங்களில் ஏற்றுமதி குறைந்து வருகிறது. ஏனெனில் பலநாடுகளில் தற்போது செயற்கை மைகா தயாரிக்கப்பட்டு வருகிறது.


***மின்சார மூல வளங்கள் :*** பொருள் மற்றும் முக்கியத்துவம் : மின்சார உற்பத்திக்கு அவசியமான மூலவளங்களை 'மின் மூலவளங்கள்' அல்லது 'அற்றல் மூலங்கள்' என்று அழைக்கிறோம். ஆற்றல் வளங்கள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தர முன்னேற்றத்திற்கும் மிகமிக அவசியம். தொழிற்சாலை, வேளாண்மை, வர்த்தகம், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகள் போன்றவைகளில் இவை பெரும் பங்காற்றுகின்றன.

இயற்கை மின் ஆற்றல் மூல வளங்களின் அடிப்படையில் மரபு சார் மற்றும் மரபுசாரா ஆற்றல்வளங்கள் என இருவகைகளாக பிரிக்கலாம். இதில் மரபுசார் மூலங்கள் நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு போன்றவை இவற்றில் பெரும்

> *அறிந்துகொள்ளுங்கள்.*
>
> *நிலக்கரியின் பன்முக பயன்பாட்டின் அடிப்படையில் இதை "கருப்பு வைரம்' என்றழைக்கின்றனர்.*

©KTBS Not to be republished

பாலானவை தீர்ந்து போகக்கூடியவை. மரபுசாரா ஆற்றல் மூலங்கள் இதில் மாற்று ஆற்றல் மூலங்களான சூரிய, காற்று, கடலின் ஏற்ற இறக்கம், புவியியல் - வெப்ப ஆற்றல் இயற்கை எரிவாயு போன்றவை. மின்சக்தி பற்றாக்குறையிலிருந்து இந்தியா இவ்வளங்களை மேம்படுத்துவது அவசியம்.




***நிலக்கரி :*** நிலக்கரி என்பது தாவரங்கள் பூமிக்கடியில் பல நூற்றாண்டுகளாக மக்கி எரியும் தன்மை கொண்டவை. இதில் பெரும்பாலும் கார்பன் அடங்கியுள்ளது. முற்காலங்களில் புதைந்து போன தாவர பொருட்கள்; உயர்ந்த வெப்பநிலை மற்றும் அழுத்தத்தின் காரணமாக நிலக்கரியாக மாற்றமடைந்துள்ளன.

***முக்கியத்துவம் :*** இந்தியாவில் நிலக்கரி ஒரு மிக முக்கிய ஆற்றல் மூலவளம். நாட்டில் பயன்படுத்தப்படும் மொத்த சக்தியில் 67 சதவீதம் இது பங்களிக்கிறது. மேலும் இதன் துணை உற்பத்தி பொருட்களான - அமோனியா, நிலக்கரி தார், நிலக்கரிவாயு, பென்ஜால், நப்தா, சல்பர் போன்றவைகளை அளிக்கிறது. இவை இரசாயன தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களாக பயன்படுகின்றன. உ-ம் : சாயத்தொழில், பிளாஸ்டிக், செயற்கை நூல், இரப்பர் போன்ற தொழில்கள்.

இந்தியாவின் நிலக்கரி சுரங்கப்பகுதிகள் இரண்டு புவியில் காலங்கள் அதாவது “கோண்ட்வானா’ மற்றும் ‘டெரிடியரி’ நிலக்கரி பகுதிகள் சார்ந்ததாக உள்ளது. எப்படியேனும் கோண்ட்வானா நிலக்கரி பகுதிகள் விசாலமானது மற்றும் மிக முக்கியமானது.

***பகிர்வு மற்றும் உற்பத்தி :*** இந்தியாவில் நிலக்கரி இருப்புகள் பெரும்பைன்மையாக அமைந்துள்ள மாநிலங்கள் ஜார்கண்ட், சதீஸ்கர், ஒடிசா, மகாராஷ்ட்ரா, மத்திய பிரதேசம் தெலுங்கான மற்றும் மேற்கு வங்காளம். இம்மாநிலங்கள் நாட்டின் மொத்த நிலக்கரி இருப்பில் 96 சதவீதம் பெற்றுள்ளன. மேலும் அஸ்ஸாம், மேகாலயா மற்றும்

> ***அறிந்துகொள்ளுங்கள்.***
>
> *பெட்ரோலியம் என்ற சொல் இரண்டு லத்தீன் வார்த்தைகளான ‘பெட்ரோ’ பொருள் பாறை மற்றும் ‘ஒலியம்’ பொருள் எண்ணெய் இவற்றிலிருந்து வந்தது. எனவே இது ‘பாறை எண்ணெய்’ எனப்படுகிறது.*
>
> *பெட்ரோலியம் ‘திரவ தங்கம்’ இதன் பொருளாதார மற்றும் பல்வேறு மதிப்புகளின் அடிப்படையில் அழைக்கப்படுகிறது.*

©KTBS Not to be republished

நாகாலாந்துகளில் கூட காணப்படுகிறது.


இந்தியா உலகின் மூன்றாவது அதிக அளவில் நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடாகும்.

**பெட்ரோலியம் :**

நீர் அம்ச கார்பன்களைக் கொண்ட கனிமம் இது ஒரு முக்கிய எரிபொருளாகவும் மூலப் பொருளாகவும் பல தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இது ஒரு வர்த்தக ஆற்றலின் முக்கிய மூலப்பொருள் மற்றும் போக்குவரத்திற்கு பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. வெவ்வேறு பெட்ரோலிய இரசாயண தொழிற்சாலைகளுக்கு பெட்ரோல் மூலப்பொருளாக உள்ளது. உ.ம் : செயற்கை இரப்பர், செயற்கை நூல், மருந்துகள், உரங்கள், சாயப்பொருட்கள் போன்றவை.

***பகிர்வு :*** இந்தியாவில் பல பெட்ரோலிய இருப்புகள் பாம்பேஹை, குஜராத், அஸ்ஸாம், ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் பெருமளவு கிடைக்கிறது.

பாம்பே ஹை எண்ணெய் பகுதி மிகுந்த வளம்மிக்கதாகவும் அதிக அளவு குரூட் எண்ணெய் தயாரிப்பிலும் இந்தியாவில் முதன்மை இடத்தில் உள்ளது. அடுத்து இரண்டாவது எண்ணெய் உற்பத்தி பிரதேசமாக குஜராத் உள்ளது. இதன் முக்கிய எண்ணெய் பகுதிகள் அங்கலேஷ்வர், கேம்பே, கலோல், நவ்காவ்ன் மற்றும் மெஹ்சனா - இந்தியாவில் பெட்ரோலியம் முதன்முதலில் அஸ்ஸாமில் மகும் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அஸ்ஸாம் குரூட் எண்ணெய் உற்பத்தியில் முதன்மை வகிக்கிறது. இது தற்போது மூன்றாம் இடத்தில் உள்ளது. முக்கிய எண்ணெய் பகுதிகள் திக்பாய், நஹர்காடியா, மோரன்-ஹூக்ரிஜன், சிப்சாகர் மற்றும் ருத்ரசாகர். இதர எண்ணெய் வளப்பகுதிகள் கோதாவரி, கிருஷ்ணா, காவேரி நதிப்படுகை மற்றும் முகத்து வாரங்களில் உள்ளன. இந்தியா பெட்ரோலியத்தில் ஒரு முக்கிய உற்பத்தி நாடாக இல்லை. இதன் தேவைகளுக்கு பெருமளவு பெட்ரோலியத்தை இது இறக்குமதி செய்து கொள்ள வேண்டிய அவசியத்தில் உள்ளது.




***அணுசக்தி :*** அணு கனிமங்களிலிருந்து சக்தியை உற்பத்தி செய்வதே அணுசக்தி எனப்படுகிறது. இந்தியாவில் இதன் தேவை அதிகரித்து வருகிறது. இருப்பினும் அணுசக்தி போதுமானதாக

©KTBS Not to be republished

இல்லை எனவே இந்தியா அணுசக்தி உற்பத்தி செயல்திட்டம் உருவாக்கியுள்ளது.

இந்தியா மிக அதிக அணு கனிமங்களை பெற்றுள்ளது. உ.ம் : யுரேனியம் மற்றும் தோரியம் இவை அணுசக்தியை உருவாக்க தேவைப்படுகிறது. நம்நாடு தொழிற்நுட்ப அறிவை பெற்றுள்ளது. இந்தியாவில் முதன்முதல் அணுமின் நிலையம் தாராபூரில் 1969ல் அமைக்கப்பட்டது. இப்போது இந்தியாவில் 7 அணு மின் நிலையங்கள் உள்ளன. அவை 1) தாராபூர் - இது மகாராஷ்டிராவில் மும்பை அருகே உள்ளது. 2) இராணா பிரதாப் சாகர் - இது இராஜஸ்தான் மாநிலத்தில் கோடா அருகே உள்ளது. 3) கல்பாக்கம் - தமிழ்நாட்டின் சென்னை அருகே கல்பாக்கத்தில் அமைந்துள்ளது. 4) நரோரா - இது உ.பி.யில் உள்ளது 5) கக்ரபாரா - குஜராத் 6) கைகா - கர்நாடாகவின் கார்வார் அருகே உள்ளது 7) கூடங்குளம் இது தமிழ்நாட்டில் உள்ளது.

மரபு சாரா மின்சார மூலங்களின் தேவை : இந்தியாவில் மரபுசாரா ஆற்றல் மூல வளங்கள் அபரிமிதமாக உள்ளது. இவை புதுப்பிக்க தக்க மாசடைதலற்ற மற்றும் சுற்றுச்சூழல் நண்பனாக உள்ளது. இவை மிக வசதியாக நகர மற்றும் கிராமப்புற பகுதிகளுக்கு வினியோகிக்கலாம். இவை இந்தியாவின் தேவைகளை பூர்த்தி செய்யும் தகுதி பெற்றுள்ளது. சமீப ஆண்டுகளில் ஆற்றல் நுகர்வின் வீதம் அதிகரித்து வருகிறது. எனவே இந்தியாவில் மாற்றத்தக்க ஆற்றல் வளங்களின் மேம்பாட்டை அவசரமாக செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

***ஆற்றல் பிரச்சனை :*** இந்நாட்களில் இந்திய பிரச்சனைகளில் இதுவும் ஒன்று. ஆற்றலின் தேவை பெருமளவில் உள்ளது. ஆனால் ஆற்றலின் உற்பத்தி போதுமானதாக இல்ல. இது இந்தியாவில் ஆற்றல் பற்றாக்குறை பிரச்சனையை உருவாக்கியுள்ளது. இது தொழிற்சாலைகள், வேளாண்மை போக்குவரத்து, வர்த்தகம் போன்றவைகளில் எதிரிடை விளைவுகளை பெற்றுள்ளது.

***காரணங்கள் :*** ஆற்றல் பற்றாக்குறைக்கான முக்கிய காரணங்கள் :

அ) குறைந்த இருப்பு மற்றும் எண்ணெய் பற்றாக்குறை ஆ) நிலக்கரியின் தரம் குறைவு இ) தவறான மழையளவு ஆகையால் புனல்மின் நிலையங்களுக்கான நீர் பற்றாக்குறை ஈ) மின்சக்தி மாற்றுதல்களின் செயற்வழிபாட்டு முறையால் ஆற்றல் இழப்பு உ) மரபுசாரா ஆற்றல் மூலங்களின் குறைந்த அளவு பயன்பாடு.

***பரிகாரங்கள் :*** ஆற்றல் பிரச்சனைகளுக்கான தீர்வுகள்:-

அ) பெட்ரோல் மற்றும் நிலக்கரியின் உற்பத்திகளை அதிகரித்தல். ஆ) எண்ணெய் மற்றும் நிலக்கரிகளுக்கு பதிலாக வேறு பொருட்களை பெறுவதற்கான முயற்சிகள் எடுத்தல் இ) புனல்மின் நிலையங்களை அதிகரிக்க முக்கியத்துவம் அளித்தல் ஈ) மரபு சாரா ஆற்றல் வளங்களை அதிக அளவில் பயன்படுத்துதல்.

## *புனல் மின்சக்தி அல்லது நீர்மின்சக்தி*

வேகமாக வீழும்நீரின் சக்தியை பயன்படுத்தி மினசாரம் தாரிப்பதை 'புனல் மின்சக்தி' என்றழைக்கிறோம். இது புதுப்பிக்க தக்கது, மலிவானது, நிலக்கரி மற்றும் எண்ணெய்களை விட உயர் வெப்பமதிப்பை பெற்றுள்ளது. இது இயந்திரங்களை

©KTBS Not to be republished

சித்தமாக வைத்துக் கொள்கிறது. இதை சுலபமாக மாற்றியனுப்பலாம்.

படிம எரிபொருட்களான எண்ணெய், நிலக்கரி மற்றும் இயற்கை வாயுக்களை போதுமான அளவு இந்தியா பெற்றிருக்கவில்லை. எனவே நீர்மின் சக்தியை மேம்படுத்தும் அவசியம் உள்ளது. இந்தியாவில் நீர்மின்சக்தியை மேம்படுத்துவதற்கு தேவையான சாதகமான சூழ்நிலை அமைந்துள்ளது.

உம் : நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு

இந்தியாவின் முதன் முதல் புனல்மின்சக்தி நிலையம் (1897) மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங்கில் அமைக்கப்பட்டது. ஆனல் உண்மையான புனல்மின்சக்தி உற்பத்தி தொடக்கம் காவேரி நதிக்கரையில் உள்ள சிவசமுத்திரம் (1902) நீர்மின் நிலையங்கள்.

மிகமுக்கிய புனல்மின் உற்பத்தி நிலையங்கள்:

***கர்நாடகா :*** சிவசமுத்திரம், ஷராவதி, லிங்கன மக்கி, ஆலமட்டி, காளி மற்றும் பத்ரா

***தமிழ்நாடு :*** மேட்டூர், பைகாரா, பாபநாசம், பெரியார், மேயார், குந்தா மற்றும் கொடயார்.

***மகாராஷ்ட்ரா :*** கோபோலி, பிவ்புரி மற்றும் பிரா.

***ஒடிசா :*** இராகுட், பிம்குட், பாலிமெலா மற்றும் ரெகாலி

***ஆந்திர பிரதேசம் :*** சிரீசைலம், இராமபாத சாகர், சீலேரு.

***தெலுங்கானா :*** நிஜாம், சாகர், நாகர்ஜூன சாகர், போச்சம்பாடி

***கேரளா :*** இடுக்கி, சபர்கிரி, பள்ளிவாசல், பரம்பிகுளம்

***மற்றவைகள் :*** உகை, கடனா (குஜராத்) சுவர்னரேகா, மைதான் திலயா, பன்சட்ஹில் (ஜார்கண்ட்), பக்ராநங்கல் பஞ்சாப் கோசி (பீகார்) காந்திசாகர் (மத்திய பிரதேசம்)

இதைத்தவிர்த்து பல புனல் மின்சக்தி திட்டங்கள் இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் உள்ளன.

> ***அறிந்துகொள்ளுங்கள்.***
>
> ***படிம எரிபொருள்: தாவரங்கள் மற்றும் விலங்குகளின் படிமமான பொருட்களிலிருந்து உற்பத்தியாகும் எரிபொருள்.***

***அணுசக்தி :***

பரமணுக்களின் கனிவளங்களின் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்திற்கு அனுமின்சக்தி என்பார்கள். இந்தியாவில் மின்சத்தியின் தேவை அதிகமாகியுள்ளது. இத்தேவையை நிரைவேற்ற மின்சாரம் உற்பத்தியாகவில்லை. இவ்வாறு இந்தியா அணுசக்தியை உற்பத்திசெய்யும் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவில் பெருமளவில் அணுசக்தித் தயாரிக்கத் தேவை கனிவங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக யுரேனியம் மற்றும் தோரியம். இவை அணுமின்சக்தி தயாரிக்க

©KTBS Not to be republished

அவசியமானவைகளாகும். இதனுடன் இந்தியாவில் தேவையான அளவு தொழில் நுணக்கங்கள் உள்ளன. இந்தியாவில் முதன் முதலில் அணுமின்சக்தி தயாரிக்கும் மையம் தாராப்பூர் என்னுமிடத்தில் (1969) அமைக்கப்பட்டது. இன்று நமது நாட்டில் மொத்தம் 7 அணுமின்சக்தி மையங்கள் உள்ளன. அவை 1) தாராப்பூர் மும்பைக்கு அருகில் மகாராஷ்டிரமாநிலம், 2) ராணா பிரதாப்சாகர் கோட்வுக்குப் பக்கத்தில் இராஜஸ்தான் 3) கல்பாக்கம் சென்னைக்கருகில், தமிழ்நாடு 4) நரோரா உத்திரபிரதேசம் 5) காக்ரபாரா, குஜராத், 6) கைகா கார்வாருக்குப் பக்கத்தில் கர்நாடகா, 7) குடங்குளம் தமிழ்நாடு.

### *மரபுசாரா ஆற்றல் வாங்களின் அவசியம்:*

இந்தியாவில் அளவிடமுடியாத மரபுசாரா ஆற்றல் வளங்கள் கிடைக்கின்றன. அவைதிரும்பப் பெறக்கூடிய மூலங்களாகும் மாசடையாதவை மற்றும் சுற்றுச்சூழலுக்கு நண்பர்களாகியுள்ளன. அவற்றை எளிதாக நகரங்கள் மற்றும் கிராமிய பிரதேசங்களுக்கு கொண்டு செல்லலாம். அவற்றின் உற்பத்திகளால் நாட்டின் மின் தேவையை பூர்த்தி செய்யமுடியும். இந்தியாவில் சமீபத்தில் மின் ஆற்றல் பயன்பாட்டின் தேவை அதிகமாகியுள்ளது. இவ்வாறு அவசரமாக மாற்றுசக்தி வளங்களை வளர்ச்சியடைய செய்வது மிகவும் அவசியமாகும்.

***மின்சக்தி பற்றாக்குறை :*** சமீப நாட்களில் இந்தியா எதிர்க்கொள்ளும் பல பிரச்சனைகளில் மின்சாரப் பற்றாக்குறையும் ஒன்றாகும். இதற்குமுன் கூறப்பட்டது போன்று தேவைக்கு ஏற்றவாறு மின்சார பற்றாக் குறையை எதிர்க்கொள்ளப் படுகிறது. இதனால் நாட்டின் தொழில் வேளாண்மை, போக்குவரவு, வியாபாரம் முதலிய வற்றின் மீது தாக்கம் ஏற்படுகிறது.

***காரணங்கள் :*** இந்தியாவின் மின்சாரப்பற்றாக்குறைக்கு முக்கிய காரணங்களாவன i) நாட்டில் குறைந்தளவே பெட்ரோலியமும் எண்ணெயும் கிடைக்கிறது. ii) தரம் குறைந்த நிலக்கரி iii) பருவத்தில் மழைகுறைபாடு மற்றும் நீர் மின்சக்தி உற்பத்திக்கு நீர் கிடைப்பதில்லை. iv) மின்சாரத்தை கொண்டு செல்வதில் மின்சாரம் இழப்பு V) மரபசாரா ஆற்றல் வளங்களை குறைந்த அளவே பயன்படுத்துதல்.

***விளைவுகள் :*** மின்சாரத்தின் பற்றாக்குறையின் விளைவுகள் i) நிலக்கரி மற்றும் பெட்ரோலியத்தின் உற்பத்தியை பெருகச் செய்தல். ii) நிலக்கரி மற்றும் பெட்ரோலியத்திற்கு மாற்றாக மற்ற ஆற்றல் வளங்களை பயன்படுத்தும் செயல்களை மேற்கொள்ளுதல் iii) பெருமளவில் நீர் மின்சக்தி உற்பத்திக்கு முன்னுரிமை அளிப்பது. iv) மரபுசாரா ஆற்றல் வளங்களை அதிகமாக பயன்படுத்துவது.

## *பயிற்சிகள்*

### I. கோடிட்ட இடங்களை பொருத்தமான சொற்களால் நிரப்பு :

1. ________ மிகமுக்கிய இரும்புகலவை உலோகம்.
2. அலுமினியத்தின் மிக முக்கிய மூலப்பொருள்________

©KTBS Not to be republished

3. முக்கிய உலோகமல்லாத கனிமம்________

4. தாவர மூலத்தின் எரிபொருள்________

5. சிவமுத்திர புனல்மின்சக்தி நிலையம்________ மாநிலத்தில் உள்ளது.

## II குழுக்களில் கலந்துரையாடி பின்பு கீழ்க்கண்டவைகளுக்கு பதில் எழுதவும்.

1. கனிமம் மற்றும் சுரங்கத்தொழில் சொற்களை விவரி.
2. மேங்கனீஸ் தாதுவின் முக்கிய பயன்கள் யாவை?
3. இந்தியாவில் பாக்சைட் கிடைக்கும் மாநிலங்கள் எவை?
4. இந்தியாவின் ஆற்றல் மூல வளங்களின் பொருள் மற்றும் முக்கியத்துவத்தை விவரி.
5. இந்தியவின் பெட்ரோலிய பகிர்வை விவரி.
6. இந்தியாவின் அணுசக்தி நிலையங்களை கூறு.
7. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய புனல்மின் நிலையங்களை எழுது.

## III செயல்பாடுகள் :

1. இந்திய வரைப்படம் வரைந்து பெட்ரோலியம் மற்றும் அணுசக்தி உற்பத்தி இடங்களை குறிப்பிடவும்.

## IV செயற்திட்ட பணி

1) இந்தியாவில் கிடைக்கும் கனிமங்களின் மாதிரிகளை சேகரித்து ஒரு குறிப்பு எழுதவும்.

* * * *

©KTBS Not to be republished

## பாடம் - 9

# போக்கு வரவு மற்றும் தகவல் தொடர்பு

### இவ்வத்தியாயத்தில் கிழ்க்காணும் அம்சங்களை அறிவோம்

- போக்கு வரவு என்பதின் பொருள்
- இந்தியாவில் போக்குவரவின் வகைகள்
    1) நிலவழிபோக்குவரவு மற்றும் வகைகள்
    2) நீர்வழிப் போக்குவரவு மற்றும் வகைகள்
    3) வான்வழி போக்குவரவு மற்றும் வகைகள்

### போக்குவரவின் பொருள் மற்றும் முக்கியத்துவம்

**பொருள் :** சரக்கு, சேவை மற்றும் பயணிகளை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதை போக்குவரத்து என்பார்கள். இது இடம் மற்றும் காலத்தின் பயன் பாட்டை நிறைவேற்றுகிறது. உற்பத்தி, பகிர்தல், கொள்ளுதல் மற்றும் அனைத்து இதர தொடர்பான செயல்களை நிர்வாகிப்பதற்கான போக்கு வரத்தை அளிக்கிறது.

***முக்கியத்துவம் :*** சரக்கு சேவை முதல் மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் மனிதனின் செயல்பாடுகள் அனைத்து நிலைகளின் வளர்ச்சியில் போக்கு வரவு மற்றும் முன்னேற்பாடுகள் முக்கிய பங்காற்றி வருகின்றன. இவ்வாறு ''தேசிய ஏற்பாடுகளில் ஒன்றில் வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகள் உடல் மற்றும் எலும்புகள் ஆனால் போக்குவரவு மற்றும் தகவல் தொடர்பு ஊடக வலைகள் இரத்தக் குழாய்கள் போன்றனவாகும்'' என்னும் பழமொழியுள்ளது.

முடிந்த வரையில் மற்றும் எளிய கட்டணம் உள்ள போக்குவரவு வசதிகள் செல்வவளங்கள் மற்றும் வேளாண் வளர்ச்சிக்கு உதவியாக அமைகிறது. இது தொழில் முன்னேற்றங்களுக்கு ஆதரவையும் உற்சாகத்தையும் அளிக்கிறது. சந்தை விரிவாக்கும் தேசிய மற்றும் அயல்நாட்டு வியாபார வளர்ச்சி, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி, மக்களின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை சீர்திருத்தம், சுற்றுலா துறைக்கு உற்சாகம் மற்றும் பாதுகாப்பு படைகளுக்கு உதவியாக அமைகிறது.

### போக்கு வரவின் வகைகள் :

இந்தியாவின் வெவ்வேறு போக்குவரவு ஊடகங்களைப்பற்றி அறிய கீழ்க்காணும் அட்டவணை உதவியாக அமைகிறது.

**போக்கு வரவு**

| நிலவழி போக்குவரவு | நீர்வழி போக்குவரவு | வாண்வழி போக்குவரவு |
|---|---|---|
| i) சாலை போக்குவரவு | i) உள்நாட்டு நீர்வழி போக்குவரவு | i) வாண்வழி போக்குவரவு |
| ii) இரயில் போக்குவரவு | ii) கடல் போக்குவரவு | ii) தேசிய போக்குவரவு |
| iii) குழாய் போக்குவரவு | | iii) அனைத்துலக போக்குவரவு |

©KTBS Not to be republished

## 1. நிலவழி போக்குவரவு

**i.** சாலைகள் மிகப் பழங்காலம் மற்றும் எங்கும் நிறைந்த போக்கு வரவு ஊடகமாகும். அவை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மகத்துவமான பங்கு வகிக்கிறது. இந்தியா கிராமங்களை முதன்மையாகக் கொண்ட நாடு மேலும் வே ளாண்மையை ஆதாரமாகக் கொண்ட நாடு. நாட்டின் வேளாண்மை மற்றும் கிராமியத் தொழில்கள் முன்னேற்றத்திற்கு சாலைகள் மிக முக்கியமாகும். ஏனென்றால் மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்களை இணைக்க சாலைகள் மிகவும் ஏற்றன.

சாலைகள் காடுகள் மற்றும் மலைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. அவை வெகுதூரம் அல்லது எங்கோ இருக்கும் இடங்களையும் பட்டணம் மற்றும் நகரங்களுடன் தொடர்பு கொள்வதற்கு போக்கு வரவை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு வீட்டிற்கும் சேவை அளிக்க உதவுகின்றன. ரயில் போக்குவரத்து துறைமுகம் மற்றும் விமான நிலையங்களுக்கு போக்கு வரவை அளிக்கின்றன. அவை சுற்றுலாத் துறை, வியாபாரம் மற்றும் வணிகம் மேலும் தொழில் முன்னேற்றத்திற்கு அதிகளவில் உதவுகின்றன. வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. பாதுகாப்புத் துறையில் அதிலும் எல்லை பிரதேசங்களில் சாலைகள் மிகவும் உபயோகமாக உள்ளன.

### 1. சாலைகளின் வகைகள்

சாலைகளை அமைப்பதில் வகையை அனுசரித்து இரண்டு வகைகளாக பிரிக்கலாம் அவை i) பக்கா சாலைகள் : இவை சிமென்ட் காங்கிரீட் அல்லது தாரைக் கொண்டு நிர்மானம் செய்யப்பட்டுள்ளன. ii) கச்சா சாலைகள் : இவை ஜல்லி மற்றும் மண்ணால் அமைக்கப்பட்ட சாலைகள். அவை அதிகமாக கிராமிய பிரதேசங்களில் உள்ளன. இவற்றை அபிவிருத்தி செய்ய பல செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நோக்கில் பிரதம மந்திரியவர்களின் 'கிராமசடக்' திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

2. நிர்மாணம் மற்றும் நிர்வாகங்களை அனுசரித்து சாலைகளை ஐந்து வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

i) தங்க நாறகரம் மற்றும் சூப்பர் நெடுஞ்சாலைகள்
ii) தேசிய நெடுஞ்சாலைகள்
iii) மாநில நெடுஞ்சாலைகள்
iv) மாவட்ட சாலைகள்
v) கிராமிய சாலைகள்

***i) தங்க நாற்கரம் மற்றும் சூப்பர் நெடுஞ்சாலைகள் :*** இது ஒரு நான்கு முதல் ஆறு வழி சிறப்பான சாலைகளை உருவாக்கும் திட்டமாகும் 1999ல் தொடங்கப்பட்டது. இந்நெடுஞ்சாலை இணைவு நாட்டின் முதன்மை நகரங்கள், கலாச்சாரம் மற்றும் தொழிற் மையங்களை இணைக்கின்றன. இது டில்லி-ஜெய்ப்பூர்-அகமதாபாத்-சூரத்-மும்பை-பூ னா-பெங்களூரு-சென்னை- விசாகப்பட்டிணம்-புவனேஸ்வர்-கொல்கத்தா-அலகாபாத் -கான்பூர்-டெல்லியுடன் தொடர்பு கொள்ள முடிகிறது.


சூப்பர் நெடுஞ்சாலைகள் இரண்டு பாகங்களாக பிரிக்கப் பட்டுள்ளன. ஏ) வடக்கு-தெற்கு காரிடார் :- இது ஸ்ரீநகர்முதல் கன்னியாகுமாரி வரை

©KTBS Not to be republished

பரந்துள்ளது. பி) கிழக்கு-மேற்கு காரிடார்:- இது அஸ்ஸாமிலுள்ள சில்டாரிலிருந்து குஜராத்தின் போர்பந்தர்வரை பரவியுள்ளது. இவை அனேக முக்கிய நகரங்கள், தொழில் மையங்களையும் மற்றும் துறைமுகங்களையும் இணைக்கின்றன.

இந்நெடுஞ்சாலைகளை கட்டுமானம் மற்றும் நிர்வாகம் ''இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை'' (NHAI) சேர்ந்திருக்கும்.

**ii) *தேசிய நெடுஞ்சாலைகள் :*** இம்முக்கிய சாலைகள் மாநிலங்களின் தலை நகரங்களிலிருந்து முக்கிய துறைமுகங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய நகரங்கள் மற்றும் பட்டணங்களுடன் போக்குவரவை ஏற்படுத்துகின்றன. இவற்றின் கட்டுமானம் மற்றும் நிர்வாகம் மைய பொது வேலை வாய்ப்புதுறை (PWD) தொடர்பானது.




**iii) *மாநில நெடுஞ்சாலைகள் :*** இவை மாநிலத்திற்குள்ளேயே மாவட்ட மையங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு போக்குவரவை அளிக்கும். இவற்றை அமைப்பது பராமரிப்பது மாநிலத்தின் நெடுஞ்சாலைத்துறையால் நிர்வாகிக்கப்படுகிறது. (PWD)

©KTBS Not to be republished

**iv) *மாவட்ட சாலைகள் :*** இவைகளின் நிர்வாகத்தை ஜில்லா பஞ்சாயத்துக்கள் கவனித்துக்கொள்கின்றன. இவை தாலூக்கா மையங்களை, மாநில நெடுஞ்சாலைகளுடன், ரயில் போக்கு வரவு, முதலியவற்றுடன் இணைக்கின்றன.

**v) *கிராமிய சாலைகள் :*** இவை ஒவ்வொரு கிராமத்தையும் இணைக்கின்றன. பட்டணம் மற்றும் சந்தை மையங்களுடன் போக்கு வரவை ஏற்படுத்துகின்றன. இவற்றில் பெரும்பாலும் கச்சா சாலைகள், மழைக்காலங்களில் போக்குவரவு மிகவும் கடினமாக இருக்கும். இவற்றை பக்கா சாலைகளாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

***எல்லைப்புற சாலைகள் :*** நாட்டின் எல்லைப் பிரதேசங்களில், பாதுகாப்பு படைகளின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டசாலைகளை ''எல்லைப் புற சாலைகள்'' என்பார்கள். இவை பாகிஸ்தான், நேபாளம், பூடான், பங்காள தேஷ் மற்றும் மையன்மார் போன்ற நாடு களுடன் ஒட்டி இந்திய எல்லையில் நீ ளத்திற்கும் காணப்படுகின்றன. இவற்றை அமைப்பது மற்றும் ''நிர்வாகம் எல்லைப்புற சாலை வளர்ச்சி ஆணையம்''ன் கட்டுப்பாட்டிலிருக்கும்.

> ***உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்***
>
> * ***எண் 7, தேசிய நெடுஞ்சாலை இந்தியாவிலேயே மிகவும் நீளமானது.***
> * ***மனாலி-லே சாலை உலகிலேயே மிகஉயரமான இடத்தில் உள்ளது.***

**II. *அ) ரயில் போக்கு வரவு :*** ரயில் மார்கங்கள் இந்தியாவின் மற்றொரு முக்கிய தரைவழி ஊடகமாகும். அவை இந்தியாவின் சரக்கு மற்றும் அதிக எண்ணிக்கையில் பயணிகளை தொலைவான இடங்களுக்கு கொண்டு செல்ல, அதிக பயனுள்ளதாகவும், உதவியாகவும் உள்ளது. அவை வேளாண்மை, தொழில், மற்றும் பொருளாதார வளர்ச்சியில் மகத்துவமான பங்கை அளித்து வருகிறது. அதுமட்டுமல்லாமல் நாட்டின் வியாபாரம் மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் உதவியாகிறது.

இந்தியாவில் இரயில் போக்கு வரவு நிர்மாணம் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் ஆரம்பமாயிற்று. பஞ்சம் ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு, உணவு தானியங்கள், தீவனங்கள் மற்றும் சேனைப் படைகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது இரயில் மாங்கங்களின் முக்கிய நோக்கமாகும். இந்தியாவில் முதன் முதலில் இரயில் மார்கம் 1853ல் பாம்பே (மும்பை) மற்றும் தானேவுக்கு இடையே அமைக்கப்பட்டது. அதன் பின் கொல்கத்தா-ராணிகஞ்ச (1854) மதராஸ் (சென்னை) அரக்கோணம் (1864) ல் இரயில் மார்கங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அதன்பின் நாட்டின் மற்ற பாகங்களிலும் இரயில் மார்கங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

இரயில் போக்கு வரவு இந்தியாவின் மிகப் பெரிய பொது நிறுவனமாகும். இன்று நாட்டில் 64,015கி.மீ. நீளத்திற்கு இரயில் மார்கங்கள் உள்ளன. சுமார் 7,031 இரயில் நிலையங்கள் உள்ளன. நிர்வாக வசதிக்காக இந்திய ரயில்மார்கங்களை 16 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு மற்றும் சுகமான பயணத்திற்கு பல்வேறு செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

©KTBS Not to be republished

### குழாய் மார்கங்கள் (போக்குவரவு) :

இது புதிய நில வழி போக்குவரத்து முறையாகும். குழாய் போக்கு வரவில் பைப்புகள் நிலத்திற்குள் புதைக்கப்பட்டு இருக்கும். விசேஷமாக கச்சா எண்ணெயை, எண்ணெய் சுத்திகரிப்பு மையங்களுக்கு இயற்கை எண்ணெய் (கச்சா எண்ணெயை) மேலும் சேறு உருவில் கனிவளங்களும் கொண்டு செல்லப்படுகின்றன. இந்தியாவின் மொத்தம் 35,676 கி.மீ. நீளமான குழாய் வழி பாதைகள் உள்ளன.

> **உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்**
> *ஹஜிரா-விஜயபுர-ஜகதீஸபுர எண்ணெய் குழாய் மார்கம் இந்தியாவில் மிக நீளமானது. (2300 கி.மீ.)*

### 2. நீர்வழி போக்கு வரவு:

பழங்காலத்தில் உலகின் முக்கிய கடல் வழி பயணம் மேற்கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. நீர்வழிபோக்குவரவிற்கு கப்பல் மற்றும் படகுகளுடன் துறைமுக வசதியைப் பெற்றிருந்தது. நீர்வழி போக்கு வரவை இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. i) உள்நாட்டு நீர் வழி போக்குவரவு ii) கடல் வழி போக்கு வரவு.


**i) உள்நாட்டு நீர் வழி போக்கு வரவு :** உள்நாட்டு நீர் வழி போக்கு வரத்து, நதி, ஏரி, கடற்கழிமுகம், நீர்த்தேக்கம் மற்றும் கால் வாய்கள் மூலமாக நடைபெறுகிறது. முற்காலத்தில் உள் நாட்டின் நீர்வழி போக்குவரவு இந்திய சாலை ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்று இருந்தது. இன்று சாலை போக்கு வரவு மற்றும் இரயில் போக்குவரவு முன்னேற்றமடைந்ததினால் அதனுடைய மகத்துவம் குறைந்துள்ளது. இந்தியாவில் உள்நாட்டு நீர் வழி போக்கு வரவில் முக்கியமாக சில சரக்கு மற்றும் பயணிகளைக் கொண்டு செல்ல ஒரு தொடர்பாகிருந்தது. அது அதிகமாக வடஇந்தியாவில் கங்கை, பிரம்மபுத்திரா, மற்றும் அவற்றின் உபநதிகள் மூலமாக நடைபெற்றது. தென் இந்தியாவில் நதிகளின் கழிமுகங்களில் படகு போக்கு வரத்து நடைபெறுகிறது.

**ii) கடல் நீர் வழி போக்குவரவு :** சமுத்திரங்கள் மற்றும் கடல்கள் மூலமாக நடைபெறும் கப்பல் போக்குவரவே கடல் வழி போக்கு வரவாகும். இந்தியா நீளமான கடற்கரைகள் மற்றும் சில இடங்களில் இயற்கைத் துறை முகங்களுடன் நாடு கிழக்கு தீர்க ரேகைகளின் நடுவில் நிலைத்துள்ளது. நாட்டின் அயல் நாட்டு வியாபாரத்தில் 85 சதவீதம் கடல் மார்கம் மூலமே நடைபெறுகிறது. இவ்வெல்லா அம்சங்களும் நாட்டின் கடல்வழி போக்கு வரவு மூலமே நடைப்பெற்றுவருகிறது.

**துறைமுகங்கள் :** சரக்குகளை ஏற்றுவதற்கும் இறக்குவதற்காகவும் கப்பல்கள் வந்தும் தங்கும் இடங்களே துறைமுகங்களாகும். இவை நிலவழி மற்றும் கடல்வழி சந்திக்கும் இடங்களாகும். இந்தியாவில் பல துறைமுகங்கள் உள்ளன. அவற்றை முக்கியமான நடுத்தர மற்றும் சிறிய அளவிலான துறைமுகங்களென்று பிரிக்கப்பட்டுள்ளன. முதன்மைத் துறைமுகங்களில் பெரிய கப்பல்கள் தங்கி நங்கூரம் பாய்ச்சி நிற்குமிடங்களாகும். துறைமுக மேடைகள் மற்றும் சரக்குகளை ஏற்றுவது

© KTBS Not to be republished

மற்றும் இறக்குவது மிகவும் அவசியமாகும். நவீன வசதிகளைக் கொண்டு உள்ளன. இந்தியாவில் 13 முதன்மைத்த துறைமுகங்கள் உள்ளன. அவற்றில் 6 மேற்கு கடற்கரையிலும் 7 கிழக்குக் கடற்கரையிலும் உள்ளன.




©KTBS Not to be republished

### மேற்குக் கடற்கரைத் துறைமுகங்கள் :

**காண்ட்லா :** இது குஜராத்தின் கச் வளைகுடாவின் தலைபாகத்திலுள்ளது.

**மும்பை :** இது பெரிய அளவில் பரந்துள்ள மற்றும் சிறந்த தங்குமிடமாக உள்ள துறைமுகமாகும். மகாராஸ்ட்டிராவிலுள்ளது. இதனை இந்தியாவின் நுழைவு வாயில் என்றும் அழைப்பார்கள்.

**ஜவஹர்லால் நேரு துறைமுகம் :** முன்பு இதனை 'நவசேனா துறைமுகம்' என்று அழைத்து வந்தனர். இது மும்பை நகரத்திலிருந்து 10 கி.மீ. தூரத்திலுள்ள எலிஃபென்டா குகைகளுக்கு அருகிலுள்ளது. மும்பை துறைமுகத்தின் வேலைபளுவை குறைக்க இத்துறைமுகம் நிர்மானிக்கப்பட்டது.

**மர்ம கோவா :** இது கோவாவின் ஜுவாரி நதியின் கழிமுகத்தின் கரையிலுள்ளது.

***நவமங்களூரு :*** இதனை கருநாடக மாநிலத்தில் நுழைவு வாயில் என்று அழைக்கப்படுகிறது.

***கொச்சி :*** கேரளாவின் கடற்கரையிலுள்ளது. இது அரபிக் கடலின் ராணி என்று அழைக்கப்படுகிறது.

***கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்கள் :***

***தூத்துக்குடி :*** தமிழ் நாட்டின் தென் கிழக்கிலுள்ளது.

***சென்னை :*** இது தமிழ் நாட்டிலுள்ள மிகப்பெரிய பழமையான துறைமுகமாகும். இது ஒரு செயற்கை துறைமாகும்.

***எண்ணூர் :*** சென்னைத் துறைமுகத்தின் வேலைப்பளுவைக் குறைக்கும் நோக்கத்துடன் இதனை அமைத்துள்ளனர். சென்னை துறைமுகத்திற்கு வடக்கு பகுதியில் உள்ளது.

***விசாகப் பட்டிணம் :*** இது நிலப்பகுதியால் சூழப்பட்ட ஆழமான மற்றும் பாதுகாப்பான துறைமுகமாகும். ஆந்திர பிரதேசத்தின் கடற்கரையிலுள்ளது.

***பாராதீப் :*** ஒரிசாவின் மகாநதி முகத்துவாரத்தில் உள்ள துறைமுகமாகும்.

***ஹால்டியா :*** இது ஹுக்ளி மற்றும் ஹால்டி நதிகள் கூடும் இடத்தில் உள்ளது. (மேற்கு வங்காளம்). கொல்கத்தா துறைமுகத்திற்குள் நுழைய முடியாத பெரிய அளவிலான கப்பல்கள் இத்துறை முகத்தில் வந்து தங்குகின்றன.

***கொல்கத்தா :*** ஹுக்ளி நதியின் இடதுகரையில் இந்தியாவின் நதிக்கரையிலுள்ள ஒரு துறைமுகமாகும். இது இந்தியாவின் இரண்டாவது துறைமுகமாகும். கடல் வழியாக வியாபாரம் நடத்தும் தென்கிழக்கு ஆசியாவின் பெரிய துறைமுகம். ஹுக்ளி நதியிலிருந்து அவ்வப்போது வண்டல் நிறைவதினால் கப்பல் போக்குவரவுக்கு இடையூறுகள் ஏற்படும். இதனால் வண்டலை வெளியேற்றும் செயல் அவசியமனதாகும்.

***போர்ட் ப்ளேயர் :*** இது இந்திய அரசின் ஆட்சிக்கும்பட்ட அந்தமான் நிக்கோபர் தீவுகளில் உள்ளது.

### 3. வான் வழி போக்குவரவு :

இது மிகவும் வேகமான போக்குவரவு ஊடகமாகும். பயணிகள் மற்றும் தபால்களை கொண்டு செல்ல மிகவும் பொருத்தமான போக்குவரவு வசதியாகும், வெள்ளம், நில நடுக்கம் போன்ற அவசர கால நிலைகளுக்கு இது மிக உதவியாக அமைகிறது. இந்தியா பரந்த நாடாகும். வான்வழி போக்குவரவு வளர்ச்சிக்கு அவசியமான அனைத்து முன்னேற்பாடு அம்சங்களையும் கொண்டுள்ளது.

இன்று இந்தியாவில் இரண்டு முக்கியமான வான்வழி போக்கு வரத்து நிறுவனங்கள் உள்ளன. அவைகளென்றால் (i) ஏர் இண்டியா நேஷ்னல் Air India National, இது இந்தியா மற்றும் அநேக உலக நாடுகளுடன் வான்வழிப் போக்கு வரத்தை ஏற்படுத்தி பல்வேறு வசதிகளை அளித்துள்ளது. (ii) இண்டியன் ஏர்லைன்ஸ் Indian Airlines இது நாட்டிற்குள்ளேயே வான்வழிப் போக்கு வரத்தை அளித்து அதனுடன் அண்டை நாடுகளுக்கும் போக்கு வரத்தை அளித்து வருகிறது. இதுவரையில் இந்தியாவின் வான் வழி போக்குவரவு பொதுமக்கள் துறையாக இருந்தது. ஆனால் இன்று வறையருக்கப்பட்டதாக தனியார் நிறுவனங்களும் சேவையை அளித்து வருகின்றன.




©KTBS Not to be republished

எ-டு ஜெட் ஏர்வேஸ், சஹாரா, பாராமவுன்ட் வான்வழி போக்குவரவு முதலியன.

***விமான நிலையங்கள் :*** இந்தியாவில் மொத்தம் 141 விமான நிலையங்கள் உள்ளன. அவற்றில் 28 பன்னாட்டு விமான நிலையங்கள். 88 உள்நாட்டு மற்றும் 25 விமானப்படையை சேர்ந்த எல்லை பாதுகாப்பு விமான நிலையங்களாகும். சில பன்னாட்டு விமான நிலையங்கள் கீழ்க்காணுமாறுள்ளன.

1. இந்திராகாந்தி பன்னாட்டு விமான நிலையம், டெல்லி.
2. சத்ரபதி சிவாஜி பன்னாட்டு விமான நிலையம், மும்பை.
3. நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் விமான நிலையம், கொல்கத்தா.
4. அண்ணா பன்னாட்டு விமான நிலையம, சென்னை.
5. கெம்பே கௌடா பன்னாட்டு விமான நிலையம், பெங்களூரு.
6. இராஜிவ் காந்தி பன்னாட்டு விமான நிலையம், ஹைதராபாத்.




©KTBS
Not to be republished

7. ஸ்ரீகுரு ராமதாஸ்ஜி பன்னாட்டு விமான நிலையம் அம்ருதசரஸ்.
8. லோகப்பிரிய கோபிநாத் போர்டெலியா பன்னாட்டு விமான நிலையம் குவஹாத்தி.
9. பிஜு பட்நாயக் பன்னாட்டு விமான நிலையம் புவனேஸ்வர்.
10. சர்தார் வல்லபாய் பட்டேல் பன்னாட்டு விமான நிலையம் அகமதாபாத்.
11. வீர சாவர்க்கர் பன்னாட்டு விமான நிலையம் போர்ட்பிளேயர்.
12. டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர் பன்னாட்டு விமான நிலையம். நாக்பூர்.
13. ஜாருகி பன்னாட்டு விமான நிலையம் ஸில்லாங்கு.
14. லால்பகதூர் சாஸ்த்திரிபன்னாட்டு விமான நிலையம் வாரனாஸி.

### செய்திபோக்கு வரவு ஊடகம் :

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அல்லது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு செய்திகளை பரிமாறி கொள்வதற்கு செய்தி போக்கு வரவு ஊடகம் என்பார்கள். மனிதர்களுக்கு புதியது அல்ல, மிகப்பழங்காலத்திலேயே செய்தி போக்குவரவிற்கு பறவை மற்றும் விலங்குகளை பழக்கப்படுத்தி வைத்திருந்தனர்.

***முக்கியத்துவம் :*** அரசின் கொள்கைகள், விதிகள் மற்றும் வளர்ச்சிகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கு செய்தி போக்கு வரவு ஊடகம் உதவியாக உள்ளது. இது இயற்கைப் பேரிடர்களான விபத்து, மற்றும் நாசங்கள் வானிலை முன்அறிவிப்புகளை நாம் அறிந்து கொள்ள உதவி செய்கிறது. வியாபாரம், வானிகம், தொழில், வேளாண்மை முதலியவற்றின் வளர்ச்சிக்கு உதவிகரமாக உள்ளது. பொழுதுபோக்கு, உலகின் அன்றாட செய்திகளின் விவரங்களை அளிக்கிறது. அல்லாமல் நாட்டின் ஒருமைப்பாடு, சமதன்மை மற்றும் நிர்வாகத்திற்கு உதவியாக அமைந்துள்ளது.

இன்று இந்தியாவில் வெவ்வேறு வகையான செய்தித் தொடர்பு ஊடகங்கள் நடைமுறையில் உள்ளன. அவற்றை இரண்டு முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம். i) தனி மனிதர் செய்தி போக்குவரவு ஊடகம் மற்றும் ii) சமுதாய செய்தித் தொடர்பு ஊடகம், தபால், டெலிகிராப், டெலிபோன், பேக்ஸ், இ-மெயில், இணையம், செமினார் முதலியன தனிமனிதர் ஊடகங்களாகும். செய்தித்தாள் வார, மாத சஞ்சிகைகள் ஆகாஸ்வாணி, தொலைக்காட்சி, புத்தகங்கள் முதலியன சமுதாய ஊடகங்களாகும்.

***தபால் சேவைகள் :*** இந்தியாவில் பழங்கால முதலே நடைமுறையிலிருந்து வரும் ஊடகங்களில் தபால் சேவையும் ஒன்றாகும். தபால் நிலையங்கள் பல சேவைகளை அளித்து வருகின்றன. எடுத்துக்காட்டு : கடிதங்கள், பார்சல், பாக்கெட், மணியார்டர், முதலியவைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்கிறது. இதனுடன் சிறு சேமிப்பு கணக்கு, முதலீடுகள், தேசிய சேமிப்பு பத்திரங்கள் முதலிய சேவைகளையும் அளித்து வருகின்றன.

***தொலைதூர போக்குவரவு :*** இது டெலிகிராப், டெலிபோன், பேக்ஸ், முதலிய சேவைகளை கேபிள்கள் மூலமாக ஏற்படுத்துகின்றன. இன்று இந்தியாவில் தொலைதூர போக்குவரவு இணையம் ஏற்பாடுகள் ஒவ்வொரு தொலைதூரங்களில் உள்ள

©KTBS Not to be republished

இடங்களுக்கு கிடைக்கின்றன. டெலிபோன் மற்றும் மொபைல் வசதிகள் டெலிகிராபிக் சேவைக்கு பதிலான ஏற்பாடாகஉள்ளது, பரந்தளவில் பயன் பாட்டில் உள்ளது.

***ஆகாஷ்வாணி மற்றும் தொலைக்காட்சி :*** சமுதாய செய்தி போக்கு வரவு ஊடகங்களில் ஆகாஷ்வாணி மற்றும் தொலைக்காட்சிகளின் பங்கு மகத்துவமானது. இந்தியாவின் தொலைதூர இடங்களில் வசிக்கும் மக்களும்கூட ஆகாஷ்வாணியின் மூலம் செய்திகளை கேட்கமுடியும். மற்றும் தொலைக் காட்சியின் மூலம் பார்க்கவும் முடியும். இவ்வாறு அவை நம்முடைய கிராமிய பிரதேசங்களுக்கு அதிக உதவியாக அமைந்துள்ளன. ஏனென்றால் நம்முடைய விவசாயிகளின் வேளாண் பிரச்சனை, விவசாய உற்பத்திகளின் விலை, வானிலை முன் அறிவிப்பு, நவீன வேளாண்மைமுறை முதலியவைகள் பற்றிய புதிய செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும் இதுவல்லாமல் அவை கல்வி, பொழுது போக்கு, மற்றும் விவரங்கள் அடங்கிய வெவ்வேறு நிகழ்வுகளைப் பற்றிய செய்திகளை வெளியிடுகின்றன. 1936ல் ‘ஆல் இண்டியா ரேடியோ’ என்று அழைக்கப்பட்டது. 1959ல் டெலிவிஷன் ஆரம்பமாயிற்று. டெல்லியிலிருந்து ‘‘தொலைக்காட்சி’’ (DD) என்னும் பெயரிலியே ஆரம்பமாயிற்று.

***செய்தித் தாள்கள் :*** இவை அச்சிடும் செய்தி போக்குவரவு ஊடகத்தை சேர்ந்ததாகும். மிகமுக்கிய மற்றும் நடை முறையிலுள்ள செய்தி போக்குவரவு சாதனமாகும். இந்தியாவில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான நாளிதழ்கள் மற்றும் குறிப்பிட்ட காலங்களில் வெளியிடப்படும் வார, மாத இதழ்கள் வெவ்வேறு மொழிகளில் பதிவுப் பெற்று வெளியிடப்படுகின்றன. அவற்றில் 41 நாளிதழ்கள் 100 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ளன. குஜராத்திய மொழியின் ‘‘பாம்பே சமாச்சார்’’ என்பது இந்தியாவின் மிகவும் பழமையான மற்றும் இன்னும் தனிச்சிற்பபைப் பெற்ற நாளிதழாகும். இது 1922ல் தன்னுடைய சேவையைத் தொடங்கியது.

***துணைக்கோள் மற்றும் கணினி இணையம் :*** எலக்ட்ரானிக் தொழில் நுட்பம் மற்றும் அறிவியல் அறிஞர்களின் வளர்ச்சி செய்தி போக்கு வரவு ஊடகங்களில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியது. கணினி (கம்ப்யூட்டர்) இணையம், வலைபின்னல் (இன்ட்டர்நெட்) இ-மெயில் சேவைகள், பேக்ஸ் முதலிய வசதிகளை அளித்து வருகின்றன. செயற்கை கோள்கள் விண்ணில் நிலை நிருத்துவதால் உலக அளவில் செய்திபோக்கு வரவு ஊடகம் வரலாற்றில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா முழுவதும் ஆகாஷ்வாணி மற்றும் தொலைக்காட்சிகளின் ஒலி/ஒளிபரப்பிற்கு துணைக்கோள் தொழில்நுட்பம் அதிகளவில் உதவுகிறது.

புவித் தொடர்பான விவரங்கள் (GIS), குளோபல் பொசிஸனிங் சிஸ்ட்டம் (GPS) மற்றும் தூரப்புலனணுர்வு தொழில் நுட்பம் (Remote Sensing) தொழில் நுட்பங்கள் இந்தியாவில் வளர்ச்சியடைந்துள்ளன. புவித்தொடர்பான விவரங்களை சேகரிக்கும் மற்றும் அறிவிக்கும் ஒரு கணனி ஏற்பாடாகும். குளோபல் பொசிஸனிங் (GPS) சிஸ்ட்டம் இதனுடைய முக்கிய செயல் புவியின் மீது யாதாவது ஒரு ஸ்திரமாகவும் அல்லது இயங்கும் பொருள் அல்லது ஒருவனின் இடத்தை அட்ச ரேகைகள் மற்றும் தீர்க ரேகைகள் மூலமாக சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. தூரபுலனனுர்வு

©KTBS Not to be republished

தொழில் நுட்பம் மூலம் பூமியின் மேல்பகுதிக்குத் தொடர்பான புள்ளிவிவரங்களை சேகரிக்க இன்று பயன்பாட்டிலுள்ள 'தூரப்புலனணுர்வு' மிகவும் முக்கியமானது. இது ஒரு பொருள், இடம், அல்லது குணங்களை நேரடியான தொடர்பைக் கொண்டுள்ள விவரங்களை சேகரிக்கும் ஊடகமாகும். தூர புலனணுர்வின் மூலமாக வெளியில் மற்றும் துணைக் கோளின் புகைப் படங்களை எடுத்துக் கொள்ளலாம்.

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. போக்குவரவு ஊடகம் ________ இந்தியாவின் கிராமங்கள் மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது.
2. இந்தியாவில் முதன் முதலில் இரயில் மார்கத்தை ________ மற்றும் ________ இடையே அமைக்கப்பட்டது.
3. ________ துறைமுகம் இந்தியாவின் நுழைவாயில் என்று அழைக்கிறார்கள்
4. பெங்களூரு பன்னாட்டு விமான நிலையத்திற்கு ________ என்று பெயரிடப்பட்டுள்ளது.
5. பாம்பே சமாச்சார் நாளிதழ் ________ ல் தொடங்கப்பட்டது.

**II குழுக்களில்விவாதித்துகீழ்க்காணும்வினாக்களுக்குவிடையளிக்கவும்.**

1. போக்கு வரவு மற்றும் செய்தி போக்கு வரவு என்றால் என்ன?
2. தங்க நாற்கரம் மற்றும் சூப்பர் நெடுஞ்சாலைகள் பற்றி எழுதவும்.
3. இந்திய இரயில் போக்குவரத்தைப்பற்றி எழுதுக.
4. நீர் போக்குவரத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி விவரியுங்கள்.
5. இந்திய வான்வழி போக்குவரத்தைப் பற்றி விவரியுங்கள்.
6. இந்தியாவின் வெவ்வேறு செய்தி போக்கு வரவு ஊடகங்கள் பற்றிஎழுதுக.

**III செயல்பாடுகள் :**

1. இந்தியாவின் படம் வரைந்து தேசிய நெடுஞ்சாலைகளைக் குறித்தும் மற்றும் அவற்றின் பெயர்களையும் எழுதுக.

**IV செயல்திட்டம்.**

1. இந்தியா விண்ணேற்றிய செயற்கைக் கோள்களின் புகைப்படங்களை சேகரியுங்கள்.

* * * *

©KTBS Not to be republished

# அத்தியாயம் - 10

# இந்தியாவின் தொழிற்சாலைகள்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- தொழிற்சாலைகள் பொருள் மற்றும் முக்கியத்தவம்.
- தொழிற்சாலைகளின் இட அமர்வு
- இந்தியாவின் முக்கிய தொழிற் பிரதேசங்கள்
- இந்தியாவின் முக்கிய தொழிற்சாலைகள் : இரும்பு மற்றும் எஃகு, அலுமீனியம், பருத்தியாடை, சர்க்கரை, காகிதம் மற்றும் அறிவுப்பூர்மான தொழிலகங்கள்.

## தொழிற்சாலைகளின் பொருள் மற்றும் முக்கியத்துவம் :

அனேக இயற்கை செல்வவளங்கள் மற்றும் மூலப் பொருட்கள் நேரடியாக பயன்படுத்தக் கொள்ளப்படுவதில்லை. அவற்றை மாற்றமடைய அல்லது தூய்மைப் படுத்த வேண்டும். எடுத்துக்காட்டு கரும்பை சர்க்கரையாக்க, இரும்புத்தாதுவை எஃகாகவும், பருத்தியை துணியாகவும், மரக்கூழை காகிதமாகவும் மாற்றப்படுகின்றன. இவ்வாறு மூலப் பொருட்களை அதிகளவு உபயோகமான பொருட்களாக மாற்றும் முறைக்கு தொழில் முறை என்பார்கள்.

தொழிற்சாலைகள் நம்முடைய பொருளாதார முன்னேற்றத்தில் மிகமுக்கியமான பங்கு வகிக்கிறது. அவற்றின் வளர்ச்சியினால் முதல் நிலை சரக்குகளை சார்ந்து மற்றும் இறக்குமதி குறைவாகிறது. நாட்டின் வருமானம் மற்றும் தனிநபர் வருமானம் பெருக்கமடைகிறது. அன்னிய செலாவணியைப் பெறுவதில் வளர்ச்சி ஏற்படுகிறது. வேலைவாய்ப்பு, ஜிடிபி மற்றும் மக்கள் வாழ்க்கை மட்டம் உயருகிறது.

## தொழிற் சாலைகளின் இட அமைப்பு

தொழிற்சாலைகளின் இடமைப்பு மற்றும் வளர்ச்சியை பல அம்சங்கள் தீர்மானிக்கின்றன. தொழிற்சாலைகளின் இடம் அமைப்பைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சங்களென்றால் 1) மூலப் பொருட்களின் அளிப்பு, 2) ஆற்றல் வளங்கள் கிடைப்பது, 3) சாலை போக்கு வரவு மற்றும் செய்திபோக்குவரத்து, 4) சந்தை வசதி, 5) மூலதனம் 6) தொழிலாளர் மற்றும் நீர் வசதி 7) நல்ல தட்பவெப்பநிலை 8) அரசின் கொள்கைகள் மற்றும் விதிகள்.

## முக்கிய தொழிற்பிரதேசங்கள்

ஒரே வகையான அல்லது வெவ்வேறு வகையான தொழிற்சாலைகள் அதிக எண்ணிக்கையில் மையம் கொண்டுள்ள பிரதேசத்தை 'தொழிற் பிரதேசம்' என்பார்கள். தொழில் மற்றும் தொழில் செயல்பாடுகள் அதிகமாகக்காணப்படும் பிரதேசமாகும். பொதுவாக அது நகர பிரதேசமாகிருக்கும். இது தொழிற்சாலை இடமைப்பு அம்சங்கள் முழுமையாகக்கூட காணப்படுகின்றன.

இந்தியாவில் 8 முக்கிய தொழிற்பிரதேசங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன. அவை 1. ஹுக்ளி கொல்கத்தா பிரதேசம், 2. மும்பை -

Not to be republished ©KTBS

பூனா பிரதேசம் 3. அகமதாபாத் - வடோதர பிரதேசம். 4. மதுரை - கோயம்பத்தூர் -பெங்களூரு பிரதேசம் 5. சோட்டா நாக்பூர் பீடபூமி பிர தேசம் 6. டெல்லி மீரட்பிரதேசம் 7. விசாகபட்டணம்-குண்டூர் பிரதேசம் 8. கொல்லம்-திருவனந்தபுரம் பிரதேசம்.

## இந்தியாவின் முக்கிய தொழிற்சாலைகள் :

## இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள்

இது மற்ற தொழில்களுக்கெல்லாம் அடிப்படையானது. பொறியியல், ரயில் எஞ்சின், இயந்திர உபகரணங்கள், வாகனங்களின் உதிரி பாகங்கள் வேளாண் உபகரணங்கள் முதலிய தொழிற்சாலைகள் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகளை நம்பியுள்ளன. இந்தியாவின் மிக முக்கிய உலோக தொழிற்சாலை, இரும்புத் தாதுவை உருக்கும் மற்றும் இரும்பை தயாரிக்கும் கலை இந்தியார்களுக்கு பழங்காலத்திலிருந்தே அறிந்திருந்தனர். இதற்கு டெல்லியில் உள்ள இரும்பு கம்பம் சி றந்த எடுத்துக்காட்டாகும்.

இந்தியாவில் முதன் முதலில் நவீன இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை 1874ல் மேற்கு வங்காளத்தில் குல்ஃபி என்னுமிடத்தில் துவக்கப்பட்டது. ஆனால் உண்மையில் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை தொடங்கிய புகழ் ஜே.என். டாடா அவர்களையே சாரும். இவர் 1907ல் ஜார்கண்ட் மாநிலத்தில் ஸாக்சி (ஜெம்ஷெட்பூர்) என்னுமிடத்தில் டாடா இரும்பு மற்றும் எஃகு கம்பனியின் தொழிற்சாலையை துவக்கினார். ஆயினும் இந்நிறுவனம் விடுதலைக்குப் பின் அதிக முன்னேற்றத்திற்காக ஐந்தாண்டு திட்டங்களில் சரியான செயல்களை மேற்கொள்ளலாயிற்று.

இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகளில் முக்கிய இட அமைப்பு என்றால் i) அடிப்படையான மூலப் பொருட்களான இரும்புத்தாது கிடைப்பது. ii) முக்கிய ஆற்றல் செல்வ வளங்களான கோக்கிங் நிலக்கரி மற்றும் நீர் மின் ஆற்றல் கிடைப்பது iii) இரயில் போக்குவரவு மற்றும் துறைமுகங்கள் வசதி iv) நீர் வசதி கிடைப்பது v) குறைந்த கூலிக்கு பயிற்சிபெற்ற தொழிலாளர்கள் கிடைப்பது vi) மூலதனம் மற்றும் உள்ளூர் சந்தைகளின் வசதி.

***உற்பத்தி மையங்கள் :*** 14 இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 4 தனியாருக்கு சொந்தமானவை. மிகுந்தவை அரசுக்கு சொந்தமானவை அவை கீழ்க்காணுமாறு உள்ளன.

### தனியாருக்கு சொந்தமானவை

1. டாடா இரும்பு மற்றும் எஃகு கம்பனி (TISCO), ஜெம்ஷெட்பூர (சாக்சி) ஜார்கண்ட்.
2. ஜிந்தால் விஜயநகர் எஃகு லி (வரையருக்கப்பட்டது) தோரணகல்லு, பல்லாரி மாவட்டம் கருநாடகம்.
3. இஸ்பாட் இரும்பு மற்றும் எஃகு லீ தோல்வே, ரத்னகிரி மாவட்டம், மகாராஸ்ட்டிரம்.
4. துபாரி எஃகு இடமைப்பு நீலாச்சல் இஸ்பாத் வரையருக்கப்பட்டது (NINL) ே




©KTBS Not to be republished

காபாலூர், ஒடிசா.

**அரசுக்கு சொந்தமானவை**

1. இந்திய இரும்பு மற்றும் எஃகு கம்பனி (IISCO), பர்னபுர மேற்கு வங்காளம்.
2. விஸ்வேஸ்வரய்யா இரும்பு மற்றும் எஃகு கம்பனி (VISL), பத்ராவதி, கர்நாடகா.
3. இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட், பிலாய், துர்கமாவட்டம், சத்திஸ்கர்.
4. இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட், ரூர்கெலா சுந்தர்கட்மாவட்டம், ஒடிசா.
5. இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் துர்காபுர, மேற்கு வங்காளம்.
6. போகாரோ உருக்கு இயந்திர ஸ்தாபனம் பொகாரோ ஜார்கன்ட்.
7. சேலம் உருக்கு ஆலை, இயந்திர ஸ்தாபனம் சேலம் மாவட்டம், தமிழ்நாடு.
8. விசாக பட்டணம் உருக்காலை இயந்திர ஸ்தாபனம் விசாகபட்டணம், ஆந்திரபிரதேசம்.
9. தாயித்தரி உருக்காலை இயந்திரஸ்தாபனம் பாராதீப் அருகில் ஒடிசா.
10. டாடா உருக்காலை இயந்திரஸ்தாபனம் களிங்க நகர, ஒடிசா.

இவையல்லாமல் நாட்டின் வெவ்வேறு பாகங்களில் 199க்கும் அதிகமான சிறுகுறு உருக்கு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. உலகில் உருக்கை தயாரிக்கும் நாடுகளில் இந்தியா 8வது இடத்திலுள்ளது.




**2. அலுமீனியம் தொழிற்சாலை :** அலுமீனியம் ஒரு முக்கிய இரும்பற்ற ஒரு உலோகம். இது பலவழிகளில் பயன்படுகிறது. இதனை விமானம் தானியியங்கி

©KTBS Not to be republished

வாகனங்கள், ரயில் போக்குவரத்து, கப்பல், வண்ணம் தயாரித்தல், வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரித்தல், வெவ்வேறு தொழில்களில், மின்சார கம்பிகள், கேபிள்கள் தயாரித்தல், இதனுடைய தகடுகளை பேக்கிங் செய்ய, முதலான நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டு வருகிறது. இதனை உருக்கு மற்றும் செம்புக்கு பதிலான பொருட்களாக பயன்படுத்தி வருகிறார்கள்.

அலுமீனியம் தொழிலின் முக்கிய இடங்களென்றால் i) அடிப்படை மூலப்பொருள் பாக்ஸைட் கிடைப்பது ii) நீர்மின்சக்தி கிடைப்பது iii) மூலதானம் மற்றும் பரவலான சந்தை முதலியன.

***பகிர்வு :*** இந்தியாவில் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகளுக்குப் பிறகு அலுமினியம் தொழிற்சாலை இரண்டாவது உலோக அடிப்படை தொழிலாகும். இது முதன் முதலில் மேற்கு வங்காளத்தின் ஜெயகாம் நகரத்தில் 1942ல் ஆரம்பமாயிற்று. இன்று நாட்டில் 9 அலுமினியம் தயாரிப்புமையங்களுள்ளன. அவை மேற்கு வங்கத்தில் ஜெயகாம் நகரம், கேரளாவில் அலுபுரம், தமிழ்நாட்டில் மேட்டூர், கர்நாடகத்தில் பெளகாவி, ஓடிசாவில் ஹிராகுட், மற்றும் தாமன் ஜோடி, உத்திர பிரதேசத்தில் ரேனூகூட்ட, சத்தீஸ்கரில் கொரப மற்றும் மகாராஷ்டிராவில் ரத்னகிரி. ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

உலகில் அலுமினியம் உற்பத்தி செய்யும் நாடுகளின் வரிசையில் இந்தியா 11வது இடத்திலுள்ளது. தன்னுடைய அபார தேவையை பூர்த்தி செய்ய இந்தியா அலுமினியத்தை இறக்குமதி செய்கிறது.

***3. பருத்தித்துணி நெசவுத் தொழிற்சாலை :*** இந்தியாவின் ஜவளி தொழில்களில் துணிதயாரிப்பு தொழில்கள் மிகவும் பெரியன. மற்றும் முக்கியமான துறையாகும். அல்லாமல் மிக முக்கிய வேளாண் ஆதாரமான தொழிலாகும். பழங்கால முதலே இந்தியர் பருத்தித்துணி நெசவு செய்யும் கலையை அறிந்திருந்தனர். ஆனால் அது கைத்தறிகளினால் நெய்த பருத்தித் துணிக்கு கட்டுப்பாடுகளிருந்தன. இந்தியாவில் முதன் முதலில் நவீன பருத்தித்துணி தொழிற்சாலைகள் மும்பையில் துவக்கப்பட்டது. பருத்தி கிரணி 1854ல் ஆரம்பமாயிற்று. அதன்பிறகு அனேக பருத்தி கிரணிகள் தொடங்கப்பட்டன. இத்தொழில் அதிகவளர்ச்சியடைந்தது. இன்று பருத்தித்துணி உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்ததாக இந்தியா இரண்டாம் இடத்திலுள்ளது. பருத்தி ஜவளி பொருட்களை ஏற்றுமதி செய்வதில் இரண்டாம் இடத்திலுள்ளது. பருத்தியாடை தொழிற்சாலையை அமைக்கக்கூடிய முக்கிய இடங்களென்றால் மூலப் பொருட்களான கச்சா பருத்தியைப்பெறுவது பரந்த சந்தைகள், மின்சாரம் பெறுவது, மூலதனம், பயிற்சி பெற்ற தொழிலாளர் கிடைப்பது மற்றும் ஈரப்பதமான வானிலை.

***பகிர்வு :*** இந்தியா வெவ்வேறு பாகங்களில் 76க்கும் அதிகமான நகரங்கள் மற்றும் பட்டனங்களில் பருத்தி ஆடை தொழிற்சாலைகள் பகிர்ந்துள்ளன. ஆயினும் இது அதிகமாக பருத்தி விளைவிக்கும் மாநிலங்களில் மையம் கொண்டுள்ளது அவை மகாராஷ்டிரம், குஜராத், தமிழ்நாடு, கர்நாடகம் மத்தியபிரதேசம், இராஜஸ்தான் உத்திரபிரதேசம் பஞ்சாப் மற்றும் ஹரியானா, இவற்றில் முதலிரண்டு மாநிலங்கள் நாட்டின் பருத்தி ஜவளிபொருட்களின் உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. மும்பைநகரம் புகழ்பெற்ற பருத்தி ஜவளி உற்பத்தி, மையமாகும். இதனை ''இந்தியாவின் பருத்தி போலிஸ்'' (In-



©KTBS Not to be republished

dian cotton Police) மற்றும் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.

***சர்க்கரைத் தொழிற் சாலை :*** இது இந்தியாவில் பருத்தித்துணித் தொழிற்சாலைகளுக்கு அடுத்து இரண்டாவது முக்கிய வேளாண அடிப்படையான தொழில் ஆகும். மிகப்பழங்காலத்திலிருந்தே சர்க்கரைத் தயாரிக்கும் கலை இந்தியர் அறிந்திருந்தனர். ஆனால் அன்று வெல்லம் மற்றும் கண்டசாரி சர்க்கரை (நாட்டுசர்க்கரை) தயாரித்துவந்தனர். நவீன சர்க்கரை தயாரிப்பு 20வது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் விடுதலைக்குப்பிறகு அதிக வளர்ச்சியைக் கண்டது. இத்தொழிற்சாலையின் முக்கிய இடமபைப்புகளென்றால் மூலப்பொருளான கரும்பு கிடைப்பது. எளிய விலையில் மற்றும் சரியான போக்கு வரவு வசதி, அரசாங்கத்தின் ஆதரவு, மின்சார வசதி, மூலதனம் மற்றும் சந்தைகளின் வசதி முதலியன.

***பகிர்வு :*** சர்க்கரைத் தொழிற்சாலைகள் முக்கியமாக கரும்பு விளையும் பிரதேசங்களில் மையம் கொண்டுள்ளன. அவ்வாறான பிரதேசங்களென்றால் மகாராஸ்டிரம், உத்திரபிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம் குஜராத், பஞ்சாப், ஹரியானா, பீஹார் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் மிக முக்கியமானவைகளாகும். உலகளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடுகளில் பிரேஜிலுக்கு அடுத்து இந்தியா இரண்டாம் இடத்திலுள்ளது.

©KTBS Not to be republished

***இது உங்களுக்கு தெரியுமா?***

***சர்க்கரைத் தொழிற்சாலைகளின் துணைப்பொருட்கள்***

**** மொலாசஸ் : (சர்க்கரை உற்பத்தி செய்யும்போது கிடைக்கும் வெல்லம் போன்ற கழிவுப்பொருள்) கரும்பு பாலை சர்க்கரையாக மாற்றும் செயலாக்கங்களின் போது கிடைக்கும் பாகு இதனை மதுபானங்கள் மற்றும் உரங்கள் தயாரிக்கும் பயன்படுத்தப் படுகின்றன.***

**** கரும்சக்கை : கரும்பை அரைக்கும் போது அதன்பாலை எடுத்தபிறகு மீதியுள்ள பகுதியே கரும்புசக்கை. இதனை காகிதம்தயாரிப்பிலும் மற்றும் எரிபொருளாகவும் பயன்படுத்தப் படுகிறது.***

***5. காகிதத் தொழில் :*** காகிதம் ஒரு அவசியமான உபயோகமுள்ள பொருளாகும். இதனை அனேக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எடுத்துகாட்டு : எழுதுவதற்கு, அச்சிட, பேக்கிங் முதலியன வற்றிற்கு ஒரு நாடு கல்வி மற்றும் எழுத்தறிவு மட்டத்தை அந்நாட்டில் பயன்படுத்தும் காகித்ததின் அளவைக் கொண்டே அறியப்படுகிறது.

இந்தியாவில் காகிதம் தயாரிக்கும் கலை 10வது நூற்றாண்டிலேயே அறிந்திருந்தனர். அப்பொழுது அது ஒரு குடிசைத் தொழிலாகிருந்தது. நாட்டிலேயே முதன் முதலில் நவீன காகிதத் தொழிற்சாலை மேற்குவங்காளத்திலுள்ள செராம்புரா என்னுமிடத்தில் 1932ல் அமைக்கப்பட்டது. ஆனால் அது வேகமாகவே மூடப்பட்டது. இவ்வாறு உண்மையான வெற்றியுடன் காகிதத் தொழிற்சாலை ஒன்று (1872) கொல்கத்தாவுக்கு அருகிலுள்ள பாலி என்னுமிடத்தில் துவக்கப்பட்டது. ஆனால் இத்தொழிற்சாலை உலகப் போர்களின் காலம் அல்லது விடுதலைக்குப் பிறகு அதிக புகழடைந்தது.

காகிதத்தொழில் காடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும்.

இத்தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களென்றால், மூங்கில் மற்றும் மரங்களின் பட்டைகள் போன்ற மிருதுவான பொருட்கள், சஃபாயி மற்றும் பாபரைப் போன்ற புல் முதலியன. சமீபத்தில் காடுகளிலிருந்து கிடைக்கும் மூலப்பொருட்களின் குறைப்பாட்டினால் நெல், கோதுமை, பார்லி, புல், கரும்பு சக்கை கிழிந்த ஆடைகள், கிழிந்த காகிதங்கள் முதலியவைகளை பயன்படுத்துகிறார்கள்.

இவைகளல்லாமல் அதிகளவில் நீர்வசதி, பரந்தளவில் சந்தைகள், தொழிலாளர்கள் கிடைப்பது, சாலை போக்கு வரவு வசதி, மின்சாரம் மற்று சில வேதியல் பொருள்கள் கிடைக்கும் தன்மை முதலியன காகித தொழிற்சாலைக்கு தேவையான முக்கிய அம்சங்கள்.

***பகிர்வு :*** முதன் முதலில் இந்திய காகித தொழிற்சாலை மேற்கு வங்காளத்தில் ஹுக்ளி நதி சமவெளியில் வளர்ச்சியடைந்தது. இன்று அது பெருகி மகாராஸ்டிரம், குஜராத், உத்திரபிரதேசம், தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், மத்திய பிரதேசம் மற்றும் ஒடிசா மாநிலங்களில் பரந்துள்ளன.

இந்தியாவில் காகித உற்பத்தி தன்னுடைய உள் நாட்டின் தேவையை பூர்த்தியடைய செய்ய போதுமானதாக இல்லை. இவ்வாறு காகிதத்தை அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

***அறிவு சார்ந்த தொழிற்சாலைகள் :*** இவை அறிவை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் சேவைகளை உட்கொண்ட தொழில்களாகும். என்றால் தொழில் நுட்பம் மற்றும் அறிவியல் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு உதவியாக அமையும். இச்செயல்களுக்கு சிறப்பு தொழிலகங்கள் உள்ளன. இவற்றிற்கு உடல் பலம் மற்றும் மூலப் பொருட்களைவிட அறிவுக்கூர்மை திறன்கள் வேண்டும்.

அறிவு சார்ந்த தொழில்களின் வளர்ச்சி சமுதாய - பொருளாதார மாற்றம் தாக்கத்தை ஏற்படுத்தும் சாதனமாகிருக்கும் இந்தியா போதுமான இளைய தலை முறை மக்கள் தொகை மற்றும் வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளது. மேலும் தானே முக்கிய அறிவுசார்ந்த தொழிற்பிரதேசமாக வெளிப்பட சிறந்த திறனைக் கொண்டுள்ளது. இவ்வாறு இன்று நாட்டில் அறிவுசார்ந்த தொழிற்பிரதேசங்களில் வேகமாக முன்னேற்றமடைந்து வரும் தொழிலாக உள்ளது.

தகவல் தொழில் நுட்பம் அறிவு சார்ந்த தொழில் மிகவும் மகத்துவம் பொருந்தியது. மென்பொருள் (சாப்ட்வேர்) ஹார்டு வேர்கள் இதனுடைய முக்கிய அங்கங்களாகும் சாப்ட்வேர் தொழிலின் வளர்ச்சிக்கு மாநில மற்றும் மைய அரசுகள் இரண்டும் ஊக்குவிக்கின்றன. இத்தொழிலை ஊக்கப்படுத்த நாட்டின் வெவ்வேறிடங்களில் பல சாப்ட்வேர் தொழில் நுட்ப பூங்காக் (STP)கள் தொடங்கப்பட்டன. (1995)

ஆயினும் அது அதிகமாக தென் இந்திய மாநிலங்களில் வளர்ச்சி யடைந்துள்ளன. எடுத்துக் காட்டு கர்நாடக, மகாராஷ்டிரா, தமிழ்நாடு, மற்றும் தெலுங்கானா, கர்நாடக மாநிலம் சாப்ட்வேர் தொழிலில் மிகச்சிறந்த பெயரை சம்பாதித்துள்ளது. மாநிலத்தில் பல தகவல் தொழில் நுட்பநிறுவனங்கள் துவக்கப்பட்டுள்ளன. அவை பெங்களூரு, மும்பை, பூனா, சென்னை, ஹைதராபாத், கொல்கத்தா, டெல்லி, மற்றும் நோய்டாவில் மையம் கொண்டுள்ளன.

பெங்களூரு சாப்ட் வேர் தொழிலில் நாட்டிலேயே மிகவும் புகழ்வாய்ந்தது. அதனை இந்தியாவின் 'சிலிக்கான் வேலி' என்று அழைக்கிறார்கள்.



©KTBS Not to be republished

மைசூரு, பெங்களூரு, ஹூப்பள்ளி, உடுப்பி முதலியன கர்நாடகாவில் மற்ற சாப்ட்வேர் (மென்பொருள்) தொழில் மையங்களாகும், இதனுடன் நாட்டின் ஹார்ட் வேர் தொழிலும் வளர்ச்சியடைந்து.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் சரக்குகளில் சாப்ட்வேர் பொருட்கள் முக்கியமானவைகளாகும். இதனால் நாட்டிற்கு போதுமான அளவு அந்திய செலாவணி ஈட்டித்தருகிறது.

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்பு :

1. ஜிந்தால் விஜயநகர எஃகு தொழிற்சாலை ________ மாநிலத்திலுள்ளது.
2. பாக்ஸைட் தாது ________ தொழிலுக்கு முக்கியமூலப் பொருளாகும்.
3. ________ தொழில் காடுகளை அடிப்படையாகக் கொண்டது.
4. இந்தியாவின் முதல் நவீன காகிதத் தொழிற்சாலை 1932ல் ________ என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது.

### II குழுக்களில்விவாதித்துகீழ்க்காணும்வினாக்களுக்குவிடையளிக்கவும்.

1. தொழிற் சாலைகள் என்றால் என்ன? அவை அமைவதற்கான இட அமைப்பை விவரிக்கவும்.
2. இந்தியாவின் முக்கிய தொழிற் பிரதேசங்களை பட்டியலிடுக.
3. இந்தியாவில் அலுமீனியம் தொழிலைப் பற்றி விவரிக்க.
4. இந்தியாவின் பருத்தித்துணி தொழிற்சாலைகளின் பகிர்வைக் குறித்து விவரிக்க.
5. இந்தியவில் அறிவு சார்ந்த தொழில்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

### III கீழ்க்காண்பவைகள் பொருத்தி எழுதுக.

| ஏ | பி |
|---|---|
| 1. பெங்களூரு | ஏ) விஸ்வேஸ்வரய்ய இரும்பு எஃகு லிமிடேட் |
| 2. மும்பை | பி) இந்தியாவின் காட்டன் போலிஸ் |
| 3. பத்ராவதி | சி) அலுமீனிய தொழிற்சாலை |
| 4. ரேனுகூட்ட | டி) இந்தியாவின் சிலிக்கான் வேலி |

### IV செயல்பாடு :

1) இந்தியாவின் வரைபடத்தை வரைந்து அதில் இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி மையங்களை குறித்து பெயரை எழுதுக.

### V செயல் திட்டம் :

1) அருகிலுள்ள ஏதாவது ஒரு தொழிற்சாலைக்கு சென்று அதனைப்பற்றிய விவரங்களை எழுதுக.
2) கருநாடகத்தில் காணப்படும் வெவ்வேறு தொழிற் சாலைகளின் பட்டியல் தயாரித்து மற்றும் அவைதயாரிக்கும் உற்பத்திகளை அட்டவனையில் குறிப்பிடுக.

* * * *

©KTBS Not to be republished

# அத்தியாயம் - 11
# இந்தியாவின் இயற்கை இடர்பாடுகள்

## இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.

- இயற்கை இடப்பாடுகளின் பொருள்
- இந்தியாவில் புயல் காற்றுகள், வெள்ளம், நிலச்சரிவு, கடல் கொந்தளிப்பு மற்றும் நில நடுக்கத்திற்கான காரணங்கள். விளைவுகள் மற்றும் பகிர்வு.

**பொருள் :** இயற்கை பேரிடர்களால் பரந்தளவில் உண்டாகும் நாசங்களின் பலனே இயற்கை இடர்பாடுகள். இயற்கையாக உண்டாகும் இடர்பாடுகளாகும். இடர்பாடுகள் இயற்கை அல்லது மனிதனால் உண்டாக்கப்படுபவை, என இரண்டு வகைகளாகும். நிலநடுக்கம் எரிமலைகள், சுனாமி, நிலச்சரிவு மற்றும் பனிப்புயல்கள், பூமியின் உட்பகுதியில் நிகழும் கிரியைகளினால் உண்டாகும். இயற்கையான இடர்பாடுகளாகும். அவ்வாறே புயல் காற்றுகளினால் (சைக்ளோன்) பஞ்சம், வெள்ளம் மற்றும் தொற்று நோய்கள் காற்றுக்கோளத்திற்கு தொடர்பான இயற்கை இடர்பாடுகளாகும். இயற்கை இடர்பாடுகளில் போதுமான அளவு அபூர்வமான மேலும் எதிர்பார்க்க முடியாத நிலையில் சம்பவிக்கக் கூடியவை. இதனைப் பற்றி சிறந்த அறிவைப் பெற்றிருந்தால் நடைபெறக் கூடியதை அறிந்து இழப்பை குறைத்துக்கொள்ள முடியும்.

இந்தியா பரந்த நாடாகும். பல இயற்கை இடர்பாடுகளை எதிர்க்கொண்டுள்ளது. எ-டு புயல்காற்றுகள், வெள்ளம், நிலச்சரிவு, கடல் கொந்தளிப்பு, நில நடுக்கங்கள் முதலியன.

### புயல் காற்றுகள்

குறைந்த அழுத்தமுள்ள மையத்தை நோக்கி காற்றுகள் சக்கரவடிவத்தில் இயங்குவதே புயல் காற்றுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவ்வியற்கை இடர்பாடுகள் காற்றுக் கோளத்திற்கு தொடர்பானவை புயல்காற்றுகளில் வெப்பமண்டலம் மற்றும் குளிர் வெப்பமண்டலத்தின் புயல்காற்றுகளென்று இரண்டு வகைகள் உள்ளன. இந்தியாவில் அதிகமாக வெப்பமண்டல புயல் காற்றுகள் சம்பவித்துள்ளன.

***காரணங்கள் :*** வெப்பமண்டல சுழல் காற்றுகள் தோன்றுவதற்கு மற்றும் வளர்ச்சிக்கு காரணமான நிலைகள் என்னவென்றால்: 1) அதிக வெப்பளவு 2) அமைதியான காற்று மற்றும் 3) அதிக ஈரப்பசையுள்ள காற்று. இந்நிலைகள் குறைந்த அழுத்த உறையை நிர்மானிக்கிறது. குறைந்த அழுத்த உறையின் சுற்றிலும் சம்பந்தப்பட்டிருப்பதால் (ஈனஅஸ்டின் என்ற அறிவியல் அறிஞர் கண்டறிந்த-காலம்-இடம் பொதுத் தொடர்பு தத்துவம்) அதிக அழுத்தமிருக்கும். இவ்வாறு சுற்றிலும் அதிக அழுத்த பிரதேசத்திலிருந்து, குறைந்த அழுத்தமுள்ள மையத்தின் பக்கத்திற்கு சக்கரவடிவில் காற்றுகள் வீசுவதால் புயல்காற்றுகள் அல்லது சைக்ளோன்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான நிலைகள் பொதுவாக வெப்பமண்டல பெருங்கடல் பகுதிகளில் காணப்படுகின்றன.

©KTBS Not to be republished

***விளைவுகள் :*** வெப்ப மண்டல புயல் காற்றுகள் பெரும் நாசத்தை விளைவிக்கக் கூடியன. அவை உயிரிழப்பு மற்றும் சொத்துக்களுக்கு நாசத்தையுண்டாக்குகின்றன. கட்டிடங்கள் இடிவது, சாலை மற்றும் செய்திபோக்கு வரவு ஊடகங்களை செயலிழக்கச் செய்கின்றன. மின்வினியோகத்திற்கு தடை உண்டாக்குகிறது. விளைச்சல், இயற்கை தாவரவகைகள், விலங்கு சமுதாயம் முதலியவற்றிற்கு பெரும் நாசத்தை விளைவிக்கின்றது.

***பகிர்வு :*** இந்தியாவில் வெப்பமண்டல புயல்காற்றுகள் அதிகளவில் வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்றன. இவ்வாறு நாட்டின் கிழக்குக் கடற்கரையில் புயல்காற்றுகளின் பிடிப்பு பிரதேசமாக விளங்குகிறது. இதில் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், ஒடிசா மற்றும் மேற்கு பகுதியில் உள்ள மாநிலங்களும் சேர்ந்துள்ளன. அபூர்வமாக சில புயல் காற்றுகள் அரபிக்கடலிலும் ஏற்படுவதுண்டு.

இந்தியாவில் வெப்பமண்டல புயல் காற்றுகள் அதிகமாக வடகிழக்கு பருவக்காற்றுகள் காலத்தில் ஏற்படுகின்றன. அதிலும் அக்டோபர் மாதத்தில் அவற்றின் தீவிரம் அதிகமாகிருக்கும். அபூர்வமாக ஒரு முறை மே மற்றும் ஜீன் மாதங்களிலும் ஏற்பட்டுள்ளன.

***முன்னெச்சிரிக்கை செயல்கள் :*** புயல் காற்றுகள் இயற்கையாக ஏற்படுகின்றன. அவற்றை நம்மால் கட்டுப்படுத்த இயலாது ஆனால் மக்கள் முன்னெச்சிரிக்கையுடன் செயல்பட கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் வானொலி, தொலைக்காட்சி, மற்றும் இதர செய்திபோக்குவரவு ஊடகங்களில் வெளியிடப்படும் எச்சரிக்கைகளை கவனிக்க வேண்டும். புயல் காற்றுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மக்களுக்கு தற்காலிகமாக தங்கும் வசதியை அளிக்க வேண்டும். புயல்காற்றுகளால் ஏற்படும் அழிவுக்கு மற்றும் கடலில் ஏற்படும் ஆழிப் பேரலைகளை (சுனாமி) கட்டுப்படுத்தும் மாங்குரோவ் காடுகள் மற்றும் அதிக ஆழத்திற்கு வேர்விடும் மற்ற மரங்களை கடற்கரையில் வளர்க்க வேண்டும்.

## வெள்ளங்கள் :

சில சமயங்களில் நதிகள் தம்முடைய கரைகளைக் கடந்தும் பொங்கி பாயும் போது பக்கத்திலுள்ள பகுதிகள் நீரில் மூழ்கி விடுகின்றன. இதனை ஆற்றுவெள்ளம் என்பார்கள். இது இந்தியாவில் அவ்வப்போது ஏற்படும். ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் ஒன்றல்ல ஏதாவது ஒரு பாகத்தில் இவ்வாறான வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன.

***காரணங்கள் :*** வெள்ளங்கள் இயற்கை விளைவுகளால் மட்டுமல்லாமல் மனிதனின் செயற்கை செயல்களாலும் ஏற்படுகிறது. இயற்கை நிலைகளில் மிக அதிகமான மழை, பனி உருகுவதாலும், புயல் காற்றுகளினால், மேகவெடிப்பு, நதிகடலில் கலக்க செல்லும் பாதைகளில் தடைகள் ஏற்படுவதாலும், நதிகளில் பெருமளவில் வண்டல் சேருவதாலும் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து கரைபுரண்டு ஓடும். மனிதக்காரணங்களான காடுகளின் அழிப்பு முறையற்று கட்டப்பட்ட அணைகள், கரைகள் நதியின் கொள்ளளவு, அக்கிரமான நிலப்பயன்பாடு மாற்றங்கள் மற்றும் அணைக்கட்டுகள் உடைந்து விடுவதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது.

©KTBS
Not to be republished

***விளைவுகள் :*** வெள்ளங்களால் உண்டாகும் முக்கிவிளைவுகள் என்றால், உயிரிழப்புகள், பொருள் நாசம், சொத்திழப்பு, விளைச்சல் மற்றும் தாவரவகைகளுக்கு இழப்பு மற்றும் அழிவு நஷ்ட்டம், சாலை போக்குவரவு, செய்திபோக்குவரவிற்கு பாதிப்பு, மண்அரிப்பு, அடிப்படை வசதிகளின் இழப்பு முதலியன.

***வெள்ளத்திற்கு உட்படும் பிரதேசங்கள் :*** 1) கங்கை மற்றும் பிரம்மபுத்திரா நதிகளின் சமவெளிப் பிரதேசங்களான, பஞ்சாப், ஹரியானா உத்திரபிரதேசம், பீஹார், மேற்கு வங்காளம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களின் பாகங்களுக்குட்பட்ட பிரதேசங்கள். 2) சட்லெஜ், பியாஸ், ரவி மற்றும் சீனாப் சமவெளிப்பிரதேசங்கள், அவை ஜம்மு காஷ்மீர் மற்றும் இமாச்சல் பிர தேசங்களின் சில பாகங்களை உட்கொண்டபகுதிகள். 3) தீபகற்பபீடபூமியின் முகத்துவார நிலங்கள், எடுத்துக்காட்டு மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவேரிநதியின் முகத்துவாரங்களின் பாகங்கள். அவை ஒடிசா, மத்திய பிரே தசம், சத்தீஸ்கர், தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசத்தின் பாகங்களாகும். இப்பாகங்களில் வெள்ளங்கள் ஏற்படுவது ஆபூர்வமாகும். இங்கு ஒரே சமயத்தில் மிக அதிகமான மழை பொழியும்போது வெள்ளங்கள் ஏற்படுகின்றன. 4) நர்மதை மற்றும் தபதி நதிகளின் பள்ளமான பாகங்கள். எ.டு: குஜராத்.

### வெள்ளக் கட்டுப்பாட்டு செயல்கள் :

i) வெள்ளக்கட்டுப்பாட்டிற்கு நதியின் குறுக்கே ஆங்காங்கு தடுப்பணைகளைக் கட்ட வேண்டும். காடுகளை வளர்த்து மற்றும் வேகமாக பாயும் நீரைக் கட்டுப்படுத்துவது.

ii) அணைக்கட்டுக்களைக் கட்டி நீர்த்தேக்கத்தில் நீரை சேகரித்து நதிநீ ர் வெள்ளப்பெருகைக் குறைப்பது. சேகரிக்கப்பட்ட நீரை பாசனத்திற்கு பயன்படுத்துவது போன்ற நோக்கங்களை ஏற்படுத்துவது.

iii) மக்கள் வசிக்கும் பிரதேசங்கள் மற்றும் வேளான் நிலங்களை பாதுகாக்க தடுப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

iv) வெள்ளங்களைப்பற்றி முன்னெச்சரிக்கை மற்றும் சரியான நேரத்தில் முன் அறிவிப்பை அறிவிப்பது, இது மக்கள், கால் நடைகளின் உயிரிழப்பையும் மற்றும் சொத்துக்களுக்கு உண்டாகும் இழப்பை தடை செய்ய சரியான சமயத்தில் செயலாற்ற வேண்டும்.

### *நிலச்சரிவுகள் :*

குன்றுகள் அல்லது மலைகளின் மேல் பகுதிகளிலிருந்து கீழ்பகுதிக்கு சரிவுகள் ஏற்படுத்தி சரியும் மண்குவியலுக்கு ''நிலச்சரிவு'' என்பார்கள். இது புவியீர்ப்பு சக்தியினால் மண், கல் மற்றும் இடிபாடுகள் கீழே விழும் அல்லது நகரும் செயலை உட்கொண்டதாகும்.

***காரணங்கள் :*** இயற்கை மற்றும் மனித சக்திகளிரண்டும் நிலச்சரிவுக்குக்



©KTBS Not to be republished

காரணமாகின்றன.

***இயற்கைக் காரணங்கள் :*** கடல் அலைகளின் உக்கிரம், பாறைகளின் அடித்தளத்தை நீர் மற்றும் அலைகள் பூமியை அரித்து சரிவுகளை ஏற்படுத்தி நிலச்சரிவுகளை உண்டாக்குகின்றன. மேலும் சரிவுகளின் அடிபாகத்தின் அரிப்பு, பெருமழை முதலியனவும் நிலச்சரிவுகளுக்குக் காரணமாக அமைகின்றன.

***மனித செயல்கள் :*** காடுகள் அழிப்பு, இரயில், சாலைகள், அணைக்கட்டுகள், நீர்த்தேக்கம் மற்றும் நீர்மின் உற்பத்தி திட்டங்களின் கட்டுமானம் துரிதகதியில் சுரங்கங்களை தோண்டுதல், கற்பாறைகளை உடைத்தல் முதலியன.

***விளைவுகள் :*** நிலச்சரிவும்கூட இயற்கை நாசத்தை உண்டாக்கும் பேரிடர்களாகும். இவைகளாலுண்டாகும் முக்கிய விளைவுகளென்றால், இரயில், சாலைகளுக்கு தடை, மக்களிருப்பிடம் மற்றும் தாவரவகைகள் நிலச் சரிவினால் மண்சரிந்து இறப்புகள், மற்றும் சொத்துக்களுக்கு நாசத்தை உண்டாக்கும். இவற்றில் அவ்வப்பொழுது சாலைகளுக்கு தடைகளையுண்டாக்குவது சாதாரணமாக காணப்படக் கூடிய காட்சியாகும்.

***பகிர்வு :*** இந்தியாவில் நிலச்சரிவுகள் குன்று - மலைகள் உள்ள மாநிலங்களில் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டு ஜம்மு-காஷ்மீர், இமாச்சல பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள்.

***கட்டுப்படுத்தும் முறைகள் :*** சரிவுகளை குறைப்பது. நெடுஞ்சாலைகளின் பக்கங்களில் உள்ள சரிவுகளில் கற்பாறைகள் விழாமல் தடைகளை ஏற்படுத்துவது. பிரியும் சரிவுகளுள்ள பகுதி மற்றும் மக்கள் இருப்பிடங்களின் பாகங்களில், சுரங்கத்தொழில் மற்றும் கல்குவாரி செயல்பாடுகளுக்கு தடைவிதிப்பது. காடுவளர்ப்பு முதலிய செயல்களால் நிலச்சரிவுகள் ஏற்படுவதைத் தடுப்பது மிகவும் அவசியமாகும்.

### *கடற்கரை அரிப்பு (அ) கடல் அரிப்பு* (Coastal Erosion)

கடல் அலைகள் கடற்கரையை வேகமாக தாக்குகின்றன. நிரந்தரமான இச்செயல்களால் கடல் அலைகள் கிரமமாக கரையை அரித்துக் கொண்டே வருகிறது. இவ்வாறு கடல் அலைகள் உராய்வதின் செயலாக்கங்களினால் கடற்கரையில் அரிப்பு மற்றும் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு ‘கடல் அரிப்பு’ என்பார்கள்.

***காரணங்கள் மற்றும் பகிர்வு :*** கடற்கரையின் அரிப்புக்கு கடல் அலை மற்றும் கடல் நீரோட்டங்கள் முக்கிய காரணங்களாகும். இந்தியாவில் கடல் அரிப்புக்கு கீழ்க்காணும் மூன்று முக்கிய காரணங்களாகும்.

**i) *தென் மேற்கு பருவக்காற்றுகள் :*** இவை இந்தியாவின் மேற்குக் கடற்கரையை வெகு வேகத்தில் அரிக்கின்றன. இக்காலத்தில் குஜராத், மகாராஸ்டிரம், கோவா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாட்டின் கடற்கரைகள் அதிகமாக அரிக்கப்படுகின்றன.

**ii) *வெப்பமண்டல புயல் காற்றுகள் :*** வடகிழக்கு பருவக்காற்றுகள் வங்கக்கடலில் உண்டாகின்றன. இவை அதிகளவில் நாசத்தை உண்டாக்குபவை,

©KTBS Not to be republished

இந்தியாவின் கிழக்குக் கடற்கரைக்கு பெரும் நாசத்திற்கு காரணமாகின்றன. தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம் மற்றும் ஓடிசா கடற்கரைப் பிரதேசங்களில் பெரும் அரிப்புகளை உண் டாக்குகின்றன.

**iii) *சுனாமி* :** கடலின் அடிபாகத்தில் ஏற்படும் நில நடுக்கங்களால் உண்டாகும் பூதகாரமான கடல் அலைகளை சுனாமி என்பார்கள். இது இந்தியாவின் கடற்கரைகளின் அரிப்புக்குக்கு காரணமாகின்றன. அதிலும் விசேஷமாக கிழக்குக் கடற்கரை மற்றும் அந்தமான் - நிக்கோபார் தீவுகளின் கடற்கரைப் பகுதிகளில் குகைகளை ஏற்படுத்தி பெரும் நாசத்தை உண்டாக்கிவிடும்.

மனிதனின்சில செயல்களாலும்கூடகடற்கரைகளின்இழப்புக்குக்காரணமாகின்றான். எடுத்துக்காட்டு அளவுக்கு மீறி மணல் மற்றும் கல்குவாரிகள் அலைஅரிப்புகள் ஏற்படக்காரணமாகின்றன.

***விளைவுகள்:*** கடல் அரிப்பு ஒரு இயற்கை பேரிடராகும். இதனுடைய முக்கிய விளைவுகளாவன: i) கடற்கரைப் பிரதேசத்தில் கட்டிடம் மற்றும் மரங்கள் துண்டிக்கப் படுகின்றன. ii) கடற்கரைகளில் சாலைகள் மற்றும் இரயில் மார்கங்களுக்கு இடையூறு. iii) அதிக காலம் கடற்கரைகளில் நீர் நிரம்பி இருப்பதி னால் அங்கு வாழும் மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் பிரச்சனைகள்.

> ***உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்***
>
> ***கடல் அலை தடைகள் :*** *பெரும் அளவிலான கற்பாறைகள் அல்லது காங்கிரிட் திம்மைகளை கடற்கரை ஓரங்களில் குவியலாக போட்டு கடல் அறிப்பைத் தடுக்கலாம்.*
>
> ***கடல் அலை தடைகள் :*** *கடல் அலைகளின் அரிப்பினால் கடற்கரையைக் காப்பாற்ற சமுத்திரக் கரையோரங்களில் தடுப்பு சுவர்களை ஏற்படுத்த வேண்டும்.*

***கட்டுப்படுத்தும் முறைகள் :*** i) கடல் அலைகளின் தாக்கத்தை கட்டுப்படுத்த கடல் தடுப்பு சுவர், பலமானபாறைகளைப் போட்டு அலைகளின் தீவிரத்தைத் கட்டுப்படுத்துதல். ii) கடற்கரைகளில் மணல் மற்றும் சுரங்கத் தொழிலை தடை செய்வது. iii) கடலில் தடை, மற்றும் மணல் குவியல்களை காப்பாற்ற மற்றும் தொடர்ச்சியாக மரங்களை வளர்ப்பது முதலியன.

### *நில நடுக்கங்கள் :*

பூமியின் உட்பகுதியில் உள்ள உட்சக்திகளால் ஏற்படும் அதிர்வுகள் மேற்பகுதியில் அசைவுகளை உண்டாக்குகின்றன. இதனை நில நடுக்கம் என்று அழைப்பார்கள். இயற்கைப் பேரிடர்களில் இதுவும் ஒன்றாகும்.


***காரணங்கள் :*** நில நடுக்கங்கள் நிலத்தட்டுகளின் இயக்கத்தால் எரிமலை, பாறைவெடிப்புகள் மற்றும் மடிப்புகள், நிலச்சரிவு, உட்குகை, மேற்கூரைகள் சரிவது, மனிதனால் கட்டப்பட்ட அனைக் கட்டுகளின் நீரால் உண்டாகும் பளு முதலான



© KTBS Not to be republished

காரணங்களினால் நிலநடுக்கம் ஏற்படுகிறது. இந்தியாவில் இதுவரை ஏற்பட்ட நில நடுக்கங்களில் பெருமளவு புவிதட்டுகளின் இயக்கத்தால் ஏற்பட்டுள்ளன.

***விளைவுகள் :*** நிலநடுக்கம் போன்ற பேரிடர்களால் உண்டாகும் முக்கிய விளைவுகளாவன : நிலத்தின் மேல் அமைந்துள்ள வெடிப்புகள், கட்டிடங்கள் இரயில் போக்குவரத்து, சாலை, மின்சாரம் வழங்கல், தொலைத் தொடர்பு ஊடகங்கள், பாலங்கள், அணைக்கட்டுகள் உடைவது, தொழிற்சாலைகளுக்கு நாசம் மனிதன் மற்றும் கால் நடைகளின் இறப்பு, மற்றும் சொத்துக்களின் இழப்பு, இதனுடன் தீ விபத்துகள், நிலச்சரிவு, நிலத்தடி நீரின் அளவில் வேறுபாடுகள் நதிகளின் போக்கு மாற்றமடைவது, அல்லது தடைகள் முதலியன.




***பகிர்வு :*** இந்தியாவில் கீழ்க்காணும் மூன்று முக்கிய நிலநடுக்கம் ஏற்படும் மண்டலங்கள் உள்ளன. அவை

**i) *இமயமலை மண்டலம் :*** இது இந்தியாவில் அதிகதீவிரமுள்ள நிலநடுக்க மண்டலமாகும். இது ஜம்முகாஷ்மீர், இமாச்சல் பிரதேசம், உத்தராஞ்சல் மற்றும் பீகார் பாகங்களை உட்கொண்டுள்ளது. இங்கு பூதட்டுக்களின் இயக்கத்தின் விளைவினால் நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டு சாமோலி மற்றும் வடகாசி.

**ii) *சிந்து-கங்கை மண்டலம் :*** இது இமயமலை மண்டலத்தின் தெற்குபகுதியில் உள்ளது. இதில் ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா உத்திரபிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் சமவெளிகளின் மண்டலத்தில் உள்ளது. இது ஒரு நடுத்தர தீவிரமான நில நடுக்க பிரதேசமாக உள்ளது.

**iii) *தக்காண பீடபூமி :*** இது லட்சதீவுகள், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் வளைகுடா பகுதிகளை உட்கொண்டுள்ளது. இந்தியாவின் தக்காணப் பீடபூமி ஒரு மலை நிலப்பகுதியென்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. இம்மண்டலத்தை நிலநடுக்கங்கள் பிரதேச மென்று அறியப்பட்டுள்ளது. இம்மண்டலத்தில் நில நடுக்கங்கள் ஏற்படுவது குறைவு. இவ்வாறு சமீபத்தில் இம்மண்டலத்தை குறைவான நில நடுக்க

©KTBS
Not to be republished

பிரதேச மண்டலம் என்று அறியப்பட்டுள்ளது.

***முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் :***

- நில நடுக்க மண்டலங்களில் மக்கள் இருப்பிடங்களை கட்டுவதற்கு தடை விதிப்பது.
- நில நடுக்கத்தைத் தாங்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும்.
- நல்ல முதல்தரமான கட்டுமாணப்பொருட்களைப் பயன் படுத்தி மற்றும் பலமாடி கட்டிடங்கள் கட்டுவதைக் கைவிட வேண்டும்.
- நிலத்தடி நீருக்காக கிணறுகளை அதிக ஆழமாக வெட்டுவதைத் தடுக்க வேண்டும்.
- நில நடுக்கம் தீவிரமாக உள்ள குன்று-மலைப் பிரதேசங்களில் நகரவளர்ச்சிக்கு அனுமதியளிக்கக் கூடாது.
- மிகப்பெரிய அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்களை அமைப்பதற்கு தடை விதிக்க வேண்டும்.
- காடழிப்பு மற்றும் தீவிர வடிவில் சுரங்கங்கள் வெட்டுவதை தடுக்க வேண்டும்.
- நிலநடுக்கங்கள் ஏற்பட்ட பிறகு, மறுவாழ்வு ஏற்பாடுகள், தொற்று நோய்கள் பரவாமலிருக்க கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவது. மருத்துவ உதவிகளை ஏற்படுத்த வேண்டும் முதலியன.

## ***பயிற்சிகள்***

**I. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

1. ________ மிகவும் நாசத்தை உண்டாக்கும் காற்று மண்டலத்தின் பேரிடர்.
2. இந்தியாவின் கிழக்குக் கடற்கரை அதிக ________ பிரதேசமாகும்.
3. இந்தியாவில் தக்கான பீடபூமியில் ________ கள் ஏற்படுவது ஆபூர்வமாகும்.
4. இந்தியாவில் அவ்வப்போது ________ கள் குன்றுமலைகள் உள்ள மாநிலங்களில் ஏற்படுவதுண்டு.
5. கடல் அரிப்பு அதிகமாக ________ களின் செயல்களால் ஏற்படுகின்றன.

**II. *குழுக்களில் விவாதித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.***

1. இயற்கை இடர்பாடுகள் என்றால் என்ன?
2. வெள்ளங்களென்றால் என்ன? வெள்ளங்கள் உண்டாவதற்கான இயற்கைக் காரணங்கள் யாவை?

©KTBS Not to be republished

3. புயல் காற்றுகள் என்றால் என்ன? அவற்றின் முக்கிய விளைவுகள் யாவை?

4. நில நடுக்கங்கள் உண்டாவதைப்பற்றியும் மற்றும் விளைவுகளை விவரிக்கவும்.

5. இந்தியாவில் கடலரிப்பு உண்டாவதற்கான காரணங்கள் மற்றும் அதன் பகிர்வைப் பற்றி விவரிக்கவும்.

6. நில நடுக்கத்தால் ஏற்படும் விளைவுகளை குறைப்பதற்கு கை கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கைகளைக் கூறுக.

## III செயல்பாடுகள் :

1. இந்தியாவின் வரைப்படத்தை வரைந்து, அதில்வெள்ளம் மற்றும் புயல் காற்றுகளால் தாக்காட்ட புயல் காற்று வீசிய் இடங்களைக் குறிப்பிடுக.

2. கடந்த 100 ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட மிகவும் நாசத்தை ஏற்படுத்திய நில நடுக்கங்களின் பட்டியலைத் தயாரிக்கவும்.

## IV செயல் திட்டம் :

1) இயற்கை இடர்பாடுகளின் புகைப்படங்களை சேகரியுங்கள் மற்றும் ஒரு ஆல்பத்தைத் தயாரியுங்கள்.

* * * *

©KTBS Not to be republished

# அத்தியாயம் - 12
# இந்தியாவின் மக்கள் தொகை


**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- **இந்தியாவின் மக்கள் தொகை அளவு**
- **இந்திய மக்கள் தொகை வளர்ச்சி**
- **மக்கள் தொகை பெருகுவதற்கான காரணங்கள்**
- **மக்கள்தொகை பகிர்வை தீர்மானிக்கும் அம்சங்கள்**
- **மக்கள் தொகை பகிர்வு மற்றும் அடர்த்தி**

***மக்கள் தொகையின் அளவு :*** ஒரு பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வாழ்ந்து வரும் மக்களின் அளவே மக்கள் தொகையாகும். உலகில் சீனாவுக்கு அடுத்த நிலையில் இந்தியா இரண்டாவது மக்கள் தொகை மிகுந்த நாடாக திகழ்கிறது. 2011ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 121.01 கோடி, உலக நிலப்பகுதியில் 2.4 சதவீதம் பாகமுள்ள இந்தியாவின் மக்கள் தொகை உலகின் மொத்த மக்கள் தொகையில் 17.5 சதவீத பாகமுள்ளது.

***மக்கள் தொகைவளர்ச்சி :*** கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் என்றால் 1901 முதல் 1921 வரை இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சி நிதானகதியிலிருந்தது. இதற்கு அதிக இறப்புகளே முக்கிய காரணமாகிருந்தது. மரணத்தை அளிக்கும் நோய்கள் மற்றும் மருத்துவ வசதிகுறைபாடுகளால் மரண அளவு அதிகரித்தது. 1921-1951காலத்தை சாதாரண மக்கள் தொகை வளர்ச்சி காலமென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு பயங்கரமான தொற்று நோய்களின் கட்டுப்பாடு, மருத்துவ வசதிகளில் சீர்திருத்தம் அல்லது முன்னேற்றம் மேலும் தூய்மைப் படுத்து நிர்வாகங்களினால் மரண விகிதம் குறைந்ததே முக்கிய காரணமாகும்.

1951-1991ன் கால அளவில் மக்கள் தொகை பெருக்கத்தின் விகிதம் தீவிரமாக பெருகியது. சுமார்மூன்று மடங்கு மக்கள் தொகை பெருகியது. இதற்கான காரணங்கள் என்றால் மரண அளவு இன்னும் சிறிதளவு குறைந்தது, பதிலாக மக்களின் அளவு அதிகமாகியது தொடர்ந்தது. 1981ற்கு பிறகு மக்கள் தொகை வளர்ச்சியிலிருந்து 2011ல் 17.64 சதவீதம் குறைந்தது.




***மக்கள் தொகை பெருகுவதற் கான காரணங்கள் :*** இந்திய மக்கள் தொகை பெருகுவதற்கு அனேக காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கிய மானவைகள் கீழ்க்காணுமாறுள்ளன.

**1) *அதிகமக்கள் அளவு :*** இது இந்தியாவில் மக்கள் தொகை பெருகுவதற்கு முக்கிய அம்சமாகும். மதம் மற்றும் சமூக மூட நம்பிக்கைகள், குழந்தைத் திருமணங்கள் வறுமை, எழு

©KTBS Not to be republished

த்தறிவின்மை, வெப்பமண்டல வானிலை முதலியன மக்கள் தொகையின் அளவு பெருகுவதற்கு காரணங்களாகின்றன.

***2) குறைந்தளவில் இறப்பின் அளவு :*** இது இந்தியாவில் மக்கள் தொகை பெருகுவதற்கான மற்றொரு காரணமாகும். மருத்துவ வசதிகளில் முன்னேற்றம், உயிர் கொல்லி தொற்று நோய்களை கட்டுப்படுத்தியது. சிசு இறப்புகள் குறைவு, கல்வியில் முன்னேற்றம் முதலியவைகளினால் மரணம் சம்பவிப்பது குறைந்து கொண்டே வந்தது.

***மக்கள் தொகைவளர்ச்சியின் விளைவுகள் :*** மக்கள் தொகை விரைவாக பெருகியதால் பல பிரச்சனைகள் உண்டாகின்றன. அவைகளில் முக்கிய மானவைகள் என்றால் - வேலை வாய்ப்பின்மை, உணவுப் பற்றாக்குறை, சத்துக்களற்ற உணவு, பெருமளவில் சமூகத்தின் பொருப்பு மற்றும், அடிப்படை வசதிகளின் குறைபாடு, குறைவான தனி நபர் வருமானம். நிதானமான பொருளாதார வளர்ச்சி வறுமை, வாழ்க்கை முறையில் சரிவு, சுற்றுச் சூழல் மாசுகள், அரசியல் அராஜகம் முதலியன.

***மக்கள்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள் :*** இந்திய அரசு நாட்டின் மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப் படுத்த அனேக செயல்களை மேற்கொண்டுள்ளது. அவைகளில் முக்கியமானவைகளென்றால் - குடும்பக்கட்டுப்பாடு திட்டம், பெண்கள் நலதிட்டம், பிரச்சாரம் மற்றும் விளம்பரங்கள், கிராமிய பிரதேச மக்களிடையே மக்கள் தொகையால் ஏற்படும் பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவது முதலியன.

### ***மக்கள் தொகை பகிர்வு :***

இந்தியாவில் மக்கள் தொகை பகிர்வு சமமாக இல்லை. அதற்கு பூகோள அமைப்பு மற்றும் கலாச்சார அம்சங்கள் காரணமாகின்றன. மாநிலங்களில் உத்திரபிரதேசம் அதிக மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. (19.95 கோடி) இதற்கு எதிராக சிக்கிம் மிகக்குறைந்த மக்கள் தொகையுள்ள மாநிலமாகும் (6.1லட்சம்) மைய அரசின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் டெல்லியில் மிக அதிகமான மக்கள் தொகை (1.67 கோடி) யைப் பெற்றுள்ளது. ஆனால் லட்ச தீவுகளில் மிகக் குறைவான (64,429) மக்கள் தொகையைக் கொண்டது.

இந்தியாவில் குறைவான மக்கள் தொகையுள்ள பிரதேசங்களென்றால் : இமயமலை பிரதேசம், மைய அரசின் உயரமான பிரதேசம், தார் பாலைவனம் மற்றும் தீவுகள், இதற்கு எதிராக மக்கள் அதிகமுள்ள பிரதேசங்கள் கங்கை சமவெளி கடற்கரை பிரதேசங்கள் மற்றும் தொழிற்சாலைகளைக் கொண்ட நகரபிரதேசங்களாகும்.


### ***மக்களடர்த்தி :***

ஒவ்வொரு சதுரகிலோ மீட்டரில் வசிக்கும் மக்கள் தொகையை 'மக்களடர்த்தி' என்று அழைக்கப்படுகிறது. 2011ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் சராசரி மக்களடர்த்தி ஒவ்வொரு சதுர கிலோ மீட்டருக்கு 382 மக்கள் இருந்தனர். பீகார் மாநிலம் அதிக மக்களடர்த்தியைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சதுர கிலோமீட்டருக்கும் 1102 மக்கள். இதற்கு எதிராக ஒவ்வொரு சதுர கிலோமீட்டருக்கு 17மக்களுள்ள மாநிலம் அருணச்சல பிரதேசமாக உள்ளது. மைய அரசின் ஆட்சிக்குட்பட்ட பிர

©KTBS Not to be republished

தேசங்களில் சதுரகிலோ மீட்டருக்கு 11,297 மக்கள் உள்ள டெல்லி அதிக மக்களடர்த்தியுள்ள பிரதேசமாகும். இதற்கு எதிராக அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் குறைந்தளவிலான மக்களடர்த்தி (463) உள்ளது.

மக்களடர்த்தியை அனுசரித்து இந்தியாவை 3 மண்டலங்களாக பிரிக்கலாம். i) அதிக மக்களடர்த்தி பிரதேசங்கள் ii) சாதாரண மக்களடர்த்தி பிரதேசங்கள் iii) குறைவான மக்களடர்த்தியுள்ள பிரதேசங்கள்.




Not to be republished

**i) அதிக மக்களடத்தியுள்ள பிரதேசங்கள் :** இவை ஒவ்வொரு சதுர கிலோமீட்டருக்கு 501க்கும் அதிக அளவில் மக்கள் வாழும் பிர தேசங்களை உட்கொண்டுள்ளது. வட இந்திய சமவெளிகள், கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பிரதேசங்களில் மக்களடர்த்தி அதிகமாக உள்ளது. இப்பிர

தேசங்களில் பீகார் (1102) மேற்குவங்காளம் (1030) கேரளா (859), உத்திரபிர தேசம் (828), ஹரியானா (573), பஞ்சாப் (550), மற்றும் தமிழ்நாடு (555) மாநிலங்களை உட்கொண்டுள்ளன. இங்கு மக்கள் அடர்த்திக்கு வளமான மண் நீர்ப்பாசனம், சாலை போக்குவரத்து, செய்தி போக்குவரவின் வளர்ச்சி, முதலியன முக்கிய காரணங்களாகும். மைய அரசின் ஆட்சிக்குட்பட்ட டெல்லியில் (17,297) சண்டிகட் (9,252) புதுச்சேரி (2598) டாமன்-டையு (2169) லட்ச தீவுகள் (2119) தாதர்-நகர் ஹவேலிகளில் அதிக மக்களடர்த்தியுள்ளது. எடுத்துக்காட்டு : மும்பை, பெங்களூரு, சென்னை, கௌல்கத்தா, பூனா முதலியன.

**ii) *சாதரண மக்களடர்த்தியுள்ள பிரதேசங்கள் :*** இதில் ஒவ்வொரு சதுர கிலோமீட்டருக்கும் 251-500 மக்கள் வாழும் பாகங்களை உட்கொண்டுள்ளன. அவை ஜார்கன்ட் (414) அஸ்ஸாம் (397) கோவா (394) மகாராஸ்டிரம் (365) திரிபுரா (350) கர்நாடகம் (319) ஆந்திர பிரதேசம் (308) குஜராத் மற்றும் ஒடிசா (269) மாநிலங்களாகும். இங்கு சாதாரண மக்களடர்த்திக்கு கனிவளம் மற்றும் உலோகங்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக உள்ளன.

**iii) குறைந்தளவு மக்கள் அடர்த்தி பிரதேசங்கள் :** ஒவ்வொரு சதுர கிலோ மீட்டருக்கும் 250க்கும் குறைவான மக்கள் வசிக்கும் பாகங்கள் இம்மண்டலத்தில் சேர்ந்துள்ளன. எடுத்துக்காட்டு : மத்திய பிரதேசம் (136) இராஜஸ்தான் (201) உத்தரகான்ட் (189) சத்தீஸ்கர் (189) மேகாலயா (132) இமாச்சல பிரதேசம் (123) மணிப்பூர் (122) நாகாலாந்து (119) ஜம்மு - காஷ்மீர் (124) சிக்கிம் (86) அந்தமான்-நிக்கோபர் தீவுகள் (46) மற்றும் அருணாச்சல பிரதேசம் (17) மாமலை, மலை, மற்றும் குன்று பகுதிகள் மற்றும் காட்டு பிரதேசங்களில் குறைந்த வெப்பளவு அல்லது பகுதி பாலைவனம் வானிலைக் குறைவான பகுதிகளில் மக்களடர்த்தி குறைவாகிருக்கும்.

***மக்கள் தொகை பகிர்வை கட்டுப்படுத்தும் அம்சங்கள் :*** பூகோள, அரசியல், சமுதாயம், சமூகம் பொருளாதாரம் முதலான அம்சங்கள் இந்திய மக்கள் தொகை பகிர்வின் மீது தாக்கத்தை உண்டாக்குகிறது. அவற்றில் கீழ்க் காண்பவைகள் முக்கியமானவையாகும்.

***1. மேற்பாக குணங்கள் :*** மலை, குன்றுகளின் பிரதேசங்களில் மக்கள் தொகை அபூர்வமாகும். எடுத்துக்காட்டு : வடக்கு மலைகள் மற்றும் வடகிழக்கு மலைக்காடுகளின் பிரதேசங்கள், ஆனால் வடக்கு பெரும் சமவெளிகளில் மற்றும் நதி முகத்துவாரங்களில் மக்களடர்த்தி அதிகமாகிருக்கும்.

***2. வானிலை :*** சிறந்த வானிலையுள்ள பிரதேசங்களில் மக்கள் தொகை அதிகம். இதற்கு எதிராக மிகக்குளிர்ச்சி மற்றும் வறண்ட காற்றுகள் உள்ள பகுதிகளில் மக்கள் தொகை அரிதாகிருக்கும். எடுத்துக்காட்டு, இமயமலை மற்றும் தார்பாலைவனம் முதலியன.

***3. மண் :*** வளமாக உள்ள பாகங்களில் அதிக மக்கள் தொகையிருக்கும். எடுத்துக்காட்டு : வடஇந்திய சமவளிகள். மேற்கு மற்றும் கிழக்கும் கடற்கரைப்பிரதேசங்கள் இதற்கு பதிலாக வளமற்ற மண்ணுள்ள மணல் நிலங்களில் மக்கள் தொகைக் குறைவாக இருக்கும்.

Not to be republished ©KTBS

***4. செல்வவளங்கள் :*** பெருமளவில் கனிவளங்கள் மற்றும் ஆற்றல் வளங்கலுள்ள பிரதேசங்களில் மக்கள் அதிகளவிலிருப்பார்கள். எடுத்துக்காட்டு மேற்கு வங்காளம், ஒடிசா முதலியன.

***5. தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் :*** அதிகளவில் தொழில் வளர்ச்சி, வணிக முன்னேற்றமுள்ள இடங்கள் மற்றும் நகரமையங்களில் மக்கள் தொகை அதிகமிருக்கும். எடுத்துக்காட்டு: புதுடில்லி, பெங்களூர், மும்பை, சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத் முதலியன.

நீர் வசதி, சுற்றுலா வளர்ச்சி, மற்றும் சொத்துக்களுக்கு கிடைக்கும். பாதுகாப்பு போன்றவைகளால் மக்கள் தொகை பகிர்வின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. 2011ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகை ________ கோடிகளாகும்.
2. உலக மக்கள் தொகையில் ________ சதவீதம் பாகம் இந்தியாவிலுள்ளனர்.
3. இந்தியாவில் அதிக மக்களைக் கொண்டமாநிலம் ________
4. மைய அரசின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் ________ மிகக் குறைவான மக்கள் தொகைக் கொண்டுள்ளது.
5. ________ இந்தியாவில் மிகக்குறைவான மக்களடர்த்தி உள்ள மாநிலமாகும்.

### II குழுக்களில் விவாதித்து வினாக்களுக்கு விடையளிக்க :

1. மக்கள் தொகை என்றால் என்ன?
2. மக்களடர்த்தி என்பதற்கு பொருள் கூறுக.
3. இந்தியாவில் மக்கள் தொகைப் பெருகுவதற்கான முக்கிய காரணங்கள் யாவை?
4. இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சியினால் உண்டாகும் விளைவுகள் யாவை?
5. மைய அரசின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் மக்கள்தொகை பகிர்வை கட்டுப்படுத்தும் முகிய அம்சங்கள் யாவை?
6. இந்தியாவின் சில பாகங்களில் குறைவான மக்களடர்த்திக்குக்கான காரணங்களை விவரிக்க.

### III செயல்பாடு:

1. இந்தியவில் மக்கள் தொகை சமமற்ற பகிர்வை நிருபிக்க வரைபடம் ஒன்றை தயாரியுங்கள்.

### IV செயல்திட்டம் :

1) உங்கள் மாவட்டத்தின் மக்கள் தொகைக்குத் தொடர்பான விவரங்களை சேகரியுங்கள் மற்றும் அதனைப்பற்றி சிறு குறிப்பெழுதுக.

* * * *

©KTBS
Not to be republished

# அத்தியாயம் - 3

## பணம் மற்றும் கடன்

இவ்வத்தியாயத்தில் நாம் கீழ்க்காணும் விஷயங்களை கற்கஉள்ளோம்.

- **பணம் பொருள், பிறப்பு மற்றும் செயல்கள்.**
- **வங்கிகளின் மகத்துவம்.**
- **பணம் அனைவருக்கும் ஒதுக்குவது மற்றும் அதன் அளவீடு**
- **இந்திய ரிசர்வ் வங்கி நடைமுறைப் படுத்திவரும் கடன், கட்டுப்பாடு செயல்கள்.**
- **பணத்தின் அளிப்பு மற்றும் அளவீடு.**

### பணத்தின் பொருள் மற்றும் மகத்துவம்

பணம் ஒரு அடிப்படையானது. தவிர்க்கமுடியாதது. அது நம்முடைய விவகாரங்கள் நடைபெறுவதற்கும் எளிதாக புரிந்து கொள்வதற்கும் சரக்கு சேவைகளின் மதிப்பு, நிர்ணயித்தல் மதிப்பு / செல்வம் சேகரிப்பது மற்றும் முன்னிலை பெறுவதற்காகவும் வியாபாரத்திற்கும் அனுகூலமாக விளங்குகிறது.

*நீங்களும் தெரிந்துகொள்ளுகள்*

*ஒவ்வொரு விஷயத்திலும் ஒழுங்கு முறையிலும் அதனுடையதான அடிப்படையிலும் தோன்றுகிறது. இயந்திர இயலில், சக்கரம், அறிவியலில் நெருப்பு, அரசியலில் ஓட்டு (வாக்கு) மற்றும் பொருளாதாரத்தில் பணம் இவற்றின் அடிப்படைத் தோற்றங்கள் மனிதனின் மொத்த வணிக வாழ்க்கையில் பணம் ஒரு அவசியமான தேடுதலாகும், அதன்மீது மற்றவை அனைத்தும், அதனை சார்ந்திருக்கும்.* ***- ஜாஃபரி க்ரவுதர்.***

©KTBS Not to be republished

பணத்தினால் சரக்கு - சேவைகளை வாங்கலாம் அது வியாபாரத்தின் ஊடகமாக அனைவருக்கும் பொதுவானது ராபர்ட்ஸன் அவர்களின்படி சரக்குகளுக்காக பணம் கொடுக்க செய்வதில் அல்லது இதர வியாபாரக் கடன்களை தீர்ப்பதில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது எந்த பொருளும் பணமாக உள்ளது.

***பணத்தின் மலர்ச்சி :*** புராதன காலத்தில் மக்கள் பணத்தைப் பயன்படுத்தாமல் சரக்குகளை பரஸ்பரம் வியாபாரம் செய்து வந்தனர். பொருள் வியாபாரம் மிகவும் கடினமான வியாபாரம் விதானமாகிருந்தது எடுத்துக்காட்டாக உன்னிடம் பசுஇருந்தது அதற்கு பதிலாக ஆட்டை வாங்க விரும்பினால் அப்பொழுது நீ ஆடுகளைக் கொண்டிருப்பவனைத் தேடவேண்டும். அதுவும் அல்லாமல ஆட்டுக்கு பதிலாக பசு தேவையுள்ளவரை அவரே தேடிப்பிடிக்க வேண்டும். இறுதியில் அப்படிப்பட்ட மனிதனை தேடிக்கண்டறிந்தாலும் அப்பொழுது மதிப்பு நிர்ணயிக்கும் சவால் எதிராகும். என்றால் ஒரு பசுவுக்கு எத்தனை ஆடுகள் சமமாகும்? பசுவை அல்லது ஆடுகளை பிரிப்பது எவ்வாறு அதனால் பொருள் பகிர்வுமுறை பரஸ்பரம் தேவைகளின் பொருத்தி அனைத்து இடங்களில் மதிப்பீடாகும். சரக்குகளை பிரிக்கும் பிரச்சனை, மதிப்பு சேர்க்கை பிரச்சனைகளிலிருந்து பலவாறு அனுகூலமற்ற தன்மையைக் கொண்டிருக்கும்.

***பொருள் உருவில் பணம் :*** மனித நாகரீகத்தின் வளரிச்சியின் பின்னணியில் நடந்த கனமான மற்றும் எடையுள்ள பொருள் ஒன்றை பணமாக ஒப்புக் கொண்டனர். குறிப்பிட்ட பொருள் மூலமாக மற்ற ஒவ்வொன்றையும் அளவிட்டனர். பல்வேறு நாடுகளில் வெவ்வேறு பொருட்களை பணம் என்று நினைத்து பயன்படுத்தினர். எடுத்துக்காட்டாக, கீரிசில் கால்நடைகளையும், ரோமில் ஆடுகளையும், சீனாவில் கற்களையும் பணமாக பயன் படுத்தினர். ஆனால் பணத்தின் இவ்வடிவ பொருள் பரிவர்த்தனை அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்துவைக்கவில்லை.

***உலோக பணம் :*** விலையுயர்ந்த உலோகங்களான பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம் போன்றவற்றை பணமாக பயன்படுத்தினர். குறிப்பிடப்பட்ட எடையுள்ள பொருள் சிறப்பாக பொன் அல்லது வெள்ளியினால் தயாரித்து, அதன்மீது நிர்வாக முத்திரையிட்ட வில்லைகளை பரிவர்த்தனையின் ஊடகமாகப் பயன்படுத்தினர். அவை வெவ்வேறு முகமதிப்புள்ளவையாகிருப்பதால் மக்களிடையே எளிமையாக பரவியது. அவற்றைக் கொண்டு செல்வது மற்றும் மாற்றமும் கூட அனுகூலமாகிருந்தது.

> ***செயல்பாடு***
>
> *வரலாற்றில் வெவ்வேறு அரசர்கள் பயன்படுத்திய நாணயங்கள் பற்றி அறிநது கொளளுங்கள்*

***காகிதப் பணம் :*** உலோகப் பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது பாதுகாப்பாக இல்லை. அதனால் வியாபாரம் செய்பவர்கள் அறிமுகமான லேவாதேவி செய்பவர்கள் அளித்துவரும் எழுத்துப்பூர்வ பதிவுகளை அவர்கள் அதிகாரப் பூர்வ பணத்தின் உண்மையான சாட்சியாக தம்முடன் கொண்டு செல்லத் தொடங்கினர். இவ்வெழுத்துப் பதிவுகள் உண்மையான பணமாக இல்லை. அதனுடைய தேவையின் மீது அவற்றின் பணத்திற்கு வினியோகிக்கப்பட்டு வந்ததால் அவை அடையாள பணமாக பரவலாகக் கொள்ளப்பட்டன. உண்மையான பணமாக பயன்படுத்தத் தொடங்கினர். அதன் பிறகு அரசுகள் மையவங்கி ஒன்றை ஏற்படுத்தி அதற்கு நோட்டுக்கள் முத்திரையிட்டு செலாவணிக்கு நாடு முழுவதும் ஒரேமாதரியான அதிகாரத்தை அளித்தது. அப்பணமே சட்டப்பூர்வமான பணமாயிற்று. அந்தந்த நாடுகளில் நடைபெறும் வியாபாரங்களில் அந்த பணத்தை யார் ஒருவரும் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறமுடியாது. அவ்வாறே நமது நாட்டில் ரூபாய், அமெரிக்காவில் டாலர், இங்கிலாந்தில் பவுண்டு ஜப்பானில் யென், சீனாவில் யுவான் போன்ற பெயர்களில் பண பரிவர்த்தனை பயன்பாட்டிலுள்ளது.

***பிளாஸ்டிக் பணம் :*** இது சமீபகாலங்களில் பரவலாக வங்கிகள் தம்முடைய நுகர்வோர்களுக்கு கிரிடிட் அல்லது டெபிட் கார்டுகளை அளித்து அதன் மூலமாக வியாபாரம் செய்யும் அனுகூலங்களை ஏற்படுத்தியுள்ளன. கிரிடிட் கார்டை எலக்ட்ரானிக் இயந்திரத்தின் மீது ஒற்றி அழுத்தி இழுக்கும்போது வாங்குபவனின் கடன் கணக்கில் பணம் சேருகிறது. டெபிட் கார்டும் கூட இதே விதத்தில் பணிசெய்கிறது. இதனால் டெபிட் கார்டில் பணம் எடுப்பவனின் சேமிப்பு கணக்கிலிருந்து எடுக்கப்படுகிறது. இவற்றை பிளாஸ்டிக்னால் செய்யப்பட்டிருப்பதால் இவை பிளாஸ்டிக் பணம் என்கிறோம்.

©KTBS Not to be republished

**வங்கி பணம் :**

வங்கி பணம் : வியாபாரம் மற்றும் வணிக வளர்ச்சியைக் கொண்டுள்ள வங்கியும் வங்கி பணம் நடைமுறைக்கு வந்தது. செக்குகள், டிராப்ட்டுகள், கிரிடிட் மற்றும் டெபிட் கார்டுகள் பயன்பாட்டுக்கு வந்தன. இவற்றை பயன்படுத்தி பணத்தை செலுத்துவது மற்றும் வேறு இடத்திற்கு மாற்றலாம். செக்குகளை சரக்குகள் மற்றும் சேவைகளின் விவகாரங்களில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

## *2. பணஅட்டைகள் (கார்டுகள்)*

பணகார்டுகளில் முக்கியமாக மூன்று குழுக்கள் உள்ளன. அவைகள் முதல்நிலை அல்லது முக்கிய செயல்கள்: முன் செயல்கள் : மற்றும் இதர செயல்கள்.

***2.1. முதல் நிலை அல்லது முக்கிய செயல்கள் :*** பணத்தின் முக்கிய செயல்கள் கீழ்க்காணும் வகைகளிலுள்ளன.

***அ)*** வினியோகத்தின் ஊடகம் அல்லது மாற்றம் அளித்திடும் சாதனம் சரக்குகள் வாங்குவதற்கு மற்றும் விற்பனையில் பணத்தை நடுநிலை ஸ்தானமாக உபயோகிக்கின்றோம். பணத்தின் பயன்பாடு வியாபாரங்களை இரண்டு பாகங்களாக பிரிக்கின்றது.

முதலாவதாக சந்தைகளில் சரக்குகள் மற்றும் சேவைகளை விற்பனை செய்வதினால் பணம் பெறமுடிகிறது. இரண்டாவதாக அப்பணத்தைப் பயன்படுத்திக் கொண்டு சரக்குகள் மற்றும் சேவைகளை வாங்கலாம்.

***ஆ) மதிப்பீட்டளவு :*** பணம் பொருட்கள் வினியோக நிலையில் மிகப்பெரிய அனுகூலமற்றத் தன்மையை போக்கியுள்ளது. அது அனைத்து சரக்குகள் மற்றும் சேவைகளின் மதிப்பை விலை வடிவில் வெளிப்படுத்துகிறது. அனைத்து சரக்கு சேவைகளின் மதிப்பை பணவடிவத்தில் விலைகளில் நிர்ணயமாகும்போது வியாபாரம் சுமுகமாக நடை பெறுகிறது.

***முன் செயல்கள் :*** பணத்தின் முன் செயல்களாவன

***அ) குறிப்பிட்ட பரிவர்த்தனையின் அளவு :*** பணம் தற்கால பரிவர்த்தனைக்கு உதவியாக உள்ளது. கடன் பெற்றவர்கள் குறிப்பிட்ட அளவில் பணத்தை உண்மையில் குறிப்பிடப்பட்ட தேதிமுதல் மறுபடியும் பணம் செலுத்தும் நிபந்தனைகளால் கடனாக பெறமுடிகிறது. அதே விதமாக ஒருவர் தற்போது சரக்குகளை வாங்கி அவற்றிற்கான பணத்தை முன்வரும் குறிப்பிட்ட தேதிகளில் செலுத்த முடியும்.

***ஆ)மதிப்பீடு அல்லது வாங்கும் சக்தியின் சேர்க்கை :*** சரக்குகள் நாசமடையும் குணத்தைக் கொண்டிருப்பதினால் பொருள் வினியோக முறையில் செல்வத்தின் சேமிப்பு அல்லது சேர்க்கை மிகவும் கடினமாகிருந்தது. ஆனால் பணத்தின் பயன்பாடு ஆரம்பமானதின் மீது சரக்குகள் அவற்றின் மதிப்பீடு வடிவில் சேமிப்பு அல்லது சேர்க்கை செய்வது மிகவும் இனிமையாக உள்ளது.

©KTBS Not to be republished

***இ) மதிப்பு இடமாற்றம் அல்லது வாங்கும் சக்தியின் இடமாற்றம் :*** பணத்தின் மூலமாக சரக்கு - சேவைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடமாற்றம் செய்வது எளிதாக உள்ளது. இத்திசையில் வியாபாரம் பெருகியுள்ளது. தனிமனிதன்-மனிதர்களிடையேயும் இடமாற்றம் இனிமையாக அமைந்துள்ளது.

***மற்ற செயல்கள் :*** பணத்தின் செயல்கள் இவ்வாறுள்ளன.

***அ) கடனின் அடித்தளம் :*** பணம் கடனின் அடித்தளமாக உள்ளது. அதிலும் வங்கிகள் தம்மிடம் வரும் வைப்பு நிதிகளின் ஆதாரத்தின் மேல் நுகர் வோருக்கு தேவைப்படும் கடன்களை அளிக்கின்றன.

***ஆ) மூலதனத்தினால் உற்பத்தி பெருக்கம் :*** மூலதனத்தின் வடிவிலிருக்கும் பணத்தை பல்வேறு செயல்களுக்கு பயன்படுத்தப் படுகிறது. பணத்தின் நிலையில்லாத குண இயல்பால் அதனை குறைவான உபயோகித்திலிலிருந்து அதிகமான உபயோகத்திற்கும் அதிக உற்பத்திலிருக்கும் பயன்பாட்டிற்கும் மாற்றும்போது மொத்த உற்பத்தி அதிகரிக்கும்.

### 3. வங்கிகள் :

வங்கிகள் பொருளாதாரவளர்ச்சிக்கும் மகத்துவமான பங்கை அளிக்கின்றன. 1949ல் இந்திய பண லேவாதேவி கட்டுப்பாடு சட்டம் லேவாதேவி ''கம்பனி இந்தியாவில் பண லேவாதேவி விவகாரங்கள் நடத்தும் எந்த கம்பனியையும் லேவாதேவி கம்பனி என்கிறோம். கடன் அளிக்கும் அல்லது முதலீடு அளிக்கும் நோக்கத்திற்காக பொதுமக்களிடமிருந்து பணத்தை டேவணித்தொகையை சேர்த்து தேவை அல்லது மற்ற ஆதாரத்தின்மீது பணத்தை மறுபடியும் பணம் செலத்துவதல்லாமல், செக்குகள் (காசோலைகள்) டிராப்ட்கள் (உண்டிகள்) உத்தரவுகள் போன்றவைகள் மூலம் பணத்தை திரும்பப்பெறும் செயல்களே பணலேவாதேவியாகும்.

இந்திய ஸ்டேட்பேங்கு அல்லாமல் 20 பொதுமக்கள் மண்டல வங்கிகள் (1969ல் 14 வணிகவங்கிகளை தேசியமையமாக்கப் பட்டன 1980ல் மறுபடியும் 6 வங்கிகள் தேசிய மையமாக்கப்பட்டன) பிரதேச கிராமிய வங்கிகள் (1976ல் தொடங்கப்பட்ட) தனியார் வங்கிகள், கூட்டுறவுவங்கிகள் / சங்கங்கள் மேலும் இந்திய ரிசர்வ வங்கியில் பதிவுப்பெற்று மற்றும் அதனுடைய விதிகள், கட்டுப்பாடுகளுக்குட்பட்ட மற்றவங்கிகளும் உள்ளன.

***வங்கிகளின் முக்கியத்துவம் :*** பொருளாதார வளர்ச்சியில் வங்கிகள் மகத்துவமான பங்களிப்பை அளித்து வருகின்றன. அவை பொதுமக்களின் சேமிப்பை சேகரித்து அவற்றை வாடிக்கையாளர்களுக்கு கடன்வடிவில் அளிக்கின்றன. இதன் மூலமாக முதலீடு சேகரிப்பு மற்றும் சேகரிப்பதில் அவை முதன்மை பங்களிப்பை அளித்து வருகின்றன. வெவ்வேறு சாதனங்கள் மூலமாக நுகர்வோருக்கு (வாடிக்கையாளர்) பணம் செலுத்த அனுகூலமான வழிகளை அளித்துள்ளது. வணிக-விவகாரங்களுக்கு வங்கிகள் நடைமுறையிலுள்ள சந்தை வட்டியளவில் கடனை அளித்து அதன்மூலமாக வேளாண்மை தொழில்கள், மற்றும் சேவை மையங்களின் வளர்ச்சிக்கு உதவியாகின்றன.

©KTBS Not to be republished

இவையல்லாமல் வங்கிகளின் உண்டியல் (Bills of Exchange) களை ஏற்கின்றன. இவையல்லாமல் அவை டெபிட்கள், கிரிடிட் மற்றும் டெபிட் கார்டுகளை அளித்து எளிய விவகாரங்களுக்கு ஓய்வு அளிக்கின்றன. ஷேர்களில் (பங்குகளில்) கூட பணத்தை அளிக்கிறது.

### *4. இந்திய ரிசர்வ் வங்கி :*

இந்திய மைய வங்கி ஆக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ) 1935 ஏப்ரல் 1 முதல் தொடங்கியது மேலும் அதனை ஜனவரி 1 1949 அன்று தேசிய மையமாக்கப்பட்டது.

### *இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்கள்*

**2. *அரசின் வங்கியாக செயலாற்றுவது :***

இந்திய மைய வங்கியாக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ) 1935 ஏப்ரல்1 முதல் தொடங்கியது மேலும் அதனை ஜனவரி 1, 1949 அன்று தேசிய மையமாக்கப்பட்டது. ஆர்.பி.ஐ.க்கு 2,5,10,20,50,100,500, 1000 மற்றும் 2000 முகமதிப் புடைய நோட்டுக்களை முத்திரையிட்டு செலாவணிக்குத் தருகின்ற ஒரே நிறுவனமாக உள்ளது. ஒரு ரூபாய் நோட்டை அரசுக்காக ஆர்.பி.ஐ. அச்சிட்டு அளிக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னுரையில் அதனுடைய செயல்களை இவ்வாறு வர்னிக்கப்படுகிறது. ''வங்கி நோட்டு க்களை அளிப்பதைப் கட்டுப் படுத்துவது மற்றும் இந்தியாவின் பணமதிப்பை நிலையாக (ஸ்திரமாக) நிலைப்படுத்துவதின் நோக்கமாக பாதுகாப்புகளை அளிப்பதோடல்லாமல், நாட்டின் கௌரவத்தை காப்பாற்றுவதோடு பணம் மற்றும் விவகாரங்களை நிர்வாகிக்கிறது.''

> ***நீங்களும் தெரிந்துகொள்ளுகள்***
>
> *இந்திய நிசர்வ் வங்கியின் அறிவிப்பில் அதனுடைய செயல்களை இவ்வாறு வர்ணனை செய்துள்ளது. வங்கியின் நோட்டுகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் இந்தியாவின் பணமதிப்பை நிலைப்படுத்துவதின் நோக்கத்தினால் பாதுகாப்புகளை வைப்பதோடல்லாமல் நாட்டின் பெருமையை காப்பாற்றுவ தோடு பணம் மற்றும் கடன் ஏற்பாட்டை நிர்வகித்து வருகிறது.*

**2) *அரசின் வங்கியாக செயலாற்றுவது :*** ஆர்பிஐ மைய மற்றும் மாநில அரசுகளின் டேவனிகளை வாங்குகிறது. இது அரசுக்காக வரி மற்றும் இதர பரிவர்த்தனைகளை வாங்குகிறது. இது அரசுக்காக வரி மற்றும் இதர பரிவர்த்தனைகளை வாங்கி, அரசின் கட்டளைப்படி பணம் செலுத்தவும் கூட செய்கிறது. அரசின் கடன் பத்திரங்கள், கஜானாவில் உண்டிகள் ஏற்ப தோடல்லாமல், அரசின் நிதிநிலை ஆலோசகராகவும் செயலாற்றுகிறது. அரசுகளுக்கு அவசியமுள்ள குறுகிய கால கடன் ஏற்பாடுகளையும்கூட அது அளிக்கிறது.

**3) *வங்கிகளின் வங்கியாக செயல் நிர்வாகம் :*** ஆர்பிஐ வங்கிகளின் வங்கியாக செயலாற்றிவருகிறது. நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளை

© KTBS Not to be republished

கட்டுப்படுத்துகிறது. அனைத்து வங்கிகளும் தம்முடைய டேவணி பணத்தை குறிப்பிட்டளவு பாகத்தை ஆர்பிஐயில் ஒதுக்கிவைக்க வேண்டும். வங்கிகளுக்கு பெருமளவில் பணத்தின் தேவையுள்ளபோது அவை களுக்கு ஆர்பிஐ கடனளிக்கிறது. அது வங்கிகளின் நிதியை நிர்வாகிப்பது குறித்து வழிகாட்டுகிறது.

4) **தேசிய பணம் செலுத்தம் மையமாக செயல் நிர்வாகம் :** வங்கிகளின் இடையிலான விவகாரங்களை சிறப்பாக தீர்த்துவைப்பதற்காக ஆர்பிஐ பணம் செலுத்தும் மையமாக செயலாற்றிவருகிறது.

5) ***கடனின் அளவு கட்டுப் படுத்துதல் :*** நாட்டில் எதிர்நோக்கும் நிதி நிலைக்கு ஆதரவாக வணிக வங்கிகள் அளிக்கும் கடனின் அளவை ஆர்பிஐ கட்டுப்படுத்துகிறது.

6) ***அயல் நாட்டு நாணய மாற்றின் சேர்க்கையின் கண் காணிப்பு :*** ஆர்பிஐ அயல் நாட்டின் நாணயமாற்றில் சேர்க்கையின் கண் காணிப்பாளராக செயலாற்றி வருகிறது. இச்செயல் நம்முடைய பணம் வேறு நாடுகளின் பணத் திற்கு இடமாற்றுமாக நாணய மாற்று விலைகளை கட்டுப்படுத்த உதவுகிறது. அயல் நாட்டு நாணயமாற்று விலைகளில் ஆட்சேபமற்ற ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதின் காரணமாக சூழ்நிலைகளை ஆராய்ந்து ஆர்பிஐ அயல் நாட்டு பணங்களை வாங்க மற்றும் மறு செயல்பாடுகளை கைகொண்டுள்ளது.

7) ***வங்கி லேவாதேவியின் வளர்ச்சி :*** மக்களிடையே வங்கியின் வியாபார, பழக்கங்களை வளர்ச்சியடைவதன் மூலமாக சேமிப்பை ஆர்பிஐ சமநிலைப்படுத்தி மற்றும் வங்கி அனுகூலங்களை அனைத்து பிரதேசங்களுக்கு விரிவாக்க முயற்சி செய்துள்ளது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தீவிரமடைய ஆர்பிஐ மகத்துவமான பங்களிப்பை வகித்துள்ளது. இது புள்ளிவிவர சேர்ப்பாக, பலனிளிக்கும் புதிய ஆய்வுகள் கைகொள்ளப்படுவது மேலும் லேவா தேவி தொடர்பான அறிவு பகிர்ந்தளிப்பை செல்வந்தர் பரம்பரையினரை கொண்டுள்ளது. நாடு பல்வேறு நிதி இடுக்கண்களை சரியாக எதிர்க்க ஆர்பிஐயின் நியமங்கள் அதிகளவு உதவியாகியுள்ளது.

> மிக புரதானமான மையவங்கி 1668ல் தொடங்கப்பட்ட ஸ்வீடன் நாட்டின் 'ரிக்ஸ் வங்கி' பிரட்டனின் மையவங்கி 'பேங்க் ஆப் இங்கிலாண்டு' ஐ 1694ல் தொடங்கப்பட்டது. அமெரிக்காவின் மையவங்கி 'பெடலர் ரிசர்வ் சிஸ்ட்டம்' ஐ 1913ல் தொடங்கப்பட்டது.

## 5. பணத்தின் தேவையை நிரப்புதலின் கட்டுப்பாடு :

நாட்டின் நிதிநிலை பிரதிகார. அளித்த கரன்சி நோட்டுகள் மற்றும் நாணயங்கள் அந்நாட்டின் பணத்தை பூர்த்திசெய்கிறது. இல்லாவிடில் நாட்டின் வங்கிகளிலுள்ள சேமிப்பு மற்றும் நிகழ் கணக்கில் (Current Account) உள்ள



©KTBS Not to be republished

மிகுதியை உபநிதியென்று கணக்கிடப்படுகிறது. இக்கணக்கிலுள்ள பணத்தை வங்கிகளிலிருந்து குறைந்த கால குறிப்புகள் அளித்து அல்லது தேவையின் ஆதாரத்தின் மீது பளுவை குறைப்பதினால் அவற்றின் தேவை அல்லது டிமாண்டு டேவனிகள் என்று அழைக்கிறார்கள். மிகுந்த டேவனிகளுக்கு குறிப்பிட்ட கால அளவு இருப்பதினால் அவை முதிர்ந்த டேவனிகளாகிருக்கும். அவ்வாறே ஏதாவது சமயத்தில் மக்களிடம் உள்ள குறைந்தளவு மற்றும் சேமிப்பு வைப்புக் தொகைகளின் மொத்தமாக அன்றைய தேவை பூர்த்தி செய்து மொத்த பணத்தின் அளவு என்று கணக்கிட வேண்டும்.

இந்தியாவில் பணம் பூர்த்திசெய்வதற்கு நான்கு தீர்மானங்கள் பயன்படுத்தப்படுகின்றன: மற்றும் அவற்றை இவ்வாறு வெளிப் படுத்தலாம்.

M1 = கரன்ஸி நோட்டுகள் மற்றும் நாணயங்கள் + வணிக வங்கிகளிலிருக்கும் நிகர சேமிப்பு வைப்புத் தொகைகள்.

M2 = M1 + தபால் நிலையங்களிலுள்ள சேமிப்பு வைப்புகள்.

M3 = M1 + வணிக வங்கிகளிலுள்ள முதிர்ச்சியடைந்த வைப்புகள்.

M4 = M3 + தபால் நிலையங்களிலுள்ள மொத்த வைப்புகள்.

நிதி நிர்வாக கண்ணோட்டத்தில் M1 மற்றும் M2 சிறிய தொகை பணமென்று கணக்கிடப்படுகிறது. M3 மற்றும் M4 ஐ விசால பணமென்று கணக்கிடப் படுகிறது. இப்பணத்தை பூர்த்தி செய்வதை தவிர்த்து வணிகவங்கிகள் தாம் சேகரித்த டேவணிகளின் ஆதாரத்தின்மீது எவ்வளவோ மடங்கு அதிகளவில் கடனை ஏற்படுத்தி வணிகம் மற்றும் இதர நோக்கங்களுக்கு அளிக்கின்றன. இதுவும் கூட பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்துகிறது செலவணியில் உள்ள பணத்தின் அளவில் இப்பணத்தை பூர்த்தி ஒருபக்கமானால் இன்னொருபக்கம் சரக்கு சேவைகள் பூர்த்தி செய்வதால் நாட்டில் பணவீக்கம் (விலை யேற்றம்) நிலை ஏற்பட்டுவிடும். பணத்தேவையைப் பூர்த்தி செய்வது, அதிகாரத்துடன் அதற்கு தகுந்ததான சரக்கு சேவைகளை அளிப்பதில் இல்லாத போது விலைகள் தீவிரமாக ஏறத் தொடங்கி பெருமளவில் சிரமங்கள் உற்பத்தியாகின்றன.

விலைகளில் ஏற்ற அளவு அதிகரிக்க பலனிளிப்பு பலமாகவும் தீவிரமான விலையேற்றம் மக்கள் வாங்கும் சக்தி மற்றும் வருமான பகிர்வை தீவிரமாக பாதிப்புகுள்ளாவதோடு நுகர்வோருக்கு எதிர்ப்பார்ப்பை பொய்யாக்கி பொருளாதார வளர்ச்சிக்கு தடையாகிறது.

இம்மாதரியான சந்தர்ப்பங்களில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஆர்.பி.ஐ. பணத் தேவையை பூர்த்தி செய்ய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் வங்கிகள் கடன் அளிக்கும் திறனை கட்டுப்படுத்த அது பல குறிப்பிட்ட முறைகளை கடைப்பிடிக்கிறது. இம்முறைகள் கடனின் பெருக்கமல்லாமல் கடனளிக்கும் நோக்கங்களுக்கு பலனளிக்கும். பணத்தேவையை பூர்த்திசெய்ய மற்றும் கடனளவை கட்டுப் படுத்துவதற்காக உள்ள முறைகளை மொத்தமாக நிதிநிலை நீதி என்று அழைக்கிறோம். தற்போது நாம் ஆர்பிஐ கைகொள்ளும் கடன் கட்டுப்பாட்டு முறைகளை விவாதிப்போம்.

©KTBS Not to be republished

## கடன்/விலாசம் கட்டுப்பாடு முறைகள்

இவற்றை நாம் இரண்டு விதானங்களாகப்பிரிக்கலாம். பலனிளிக்கும் மற்றும் சிறப்பு பண்பு முறைகள்.

இவ்வுதவிகளை வியாபாரத்திற்கு மற்றும் மக்களுக்கு கிடைக்கும் பணத்தின் அளவு பலனளிக்கின்றன. அவைகளில் முக்கியமானவை

**i. *வங்கி சரக்கின் குறிப்பிட்ட விலை :*** மைய வங்கி மற்றுமுள்ள வங்கிகளுக்கு அனுமதியுடன் பாதுகாப்பு வழிகளுக்கு அல்லது வினியோகத் திற்கு நல்ல உண்டிகளுக்கு தள்ளுபடியின் மூலம் வட்டி விலையாக இருக்கும். இது வங்கிகள் தம்முடைய நுகர்வோருக்கு விதிக்கும் வட்டியின் அளவை தீர் மானித்து அடிமட்ட அளவாகி வங்கிகள் அளிக்கும் கூடனின் அளவு செல் வாக்கு இருக்கும். வங்கியின் குறிப்பிட்ட பொருளின் விலையை அதிகமாகும் போது மொத்த கடனின் செலவு அதிகமாகி கடனளிப்பது குறைகிறது மற்றும் வங்கியின் பொருள் விலை இறங்குமுகமாகும்போது கடனின் செலவு குறை யும் கடனளிப்பது சுருக்கமடையும்.

**ii. *சுதந்திரமாக சந்தை செயலாற்றுதல் :*** நிதி சந்தைகளில் சுதந்திரமாக அரசின் பத்திரங்களை மைய வங்கி கொள்ளும் மற்றும் விற்பனை முறையை சுதந்திர சந்தை செயலாக்க மேயாகும். அரசு பத்திரங்களின் விற்பனையை பொதுமக்கள் மற்றும் வங்கிகள் இடும் பணத்தை மைய வங்கிக்கு இடமாற்றம் செய்யப்படுகிறது. பத்திரங்கள் வாங்கிய பணத்தை மைய வங்கியிலிருந்து பொதுமக்களுக்கு மற்றும் வங்கிகளுக்கு இடமாற்றம் செய்யப்படுகிறதுது.

இவ்வாறு பணம்/கடனின் அளவை ஆர்பிஐ கட்டுப்படுத்துகிறது.

**iii. *ஒதுக்கீடு விகிதத்தின் அவசியத்தை ஏற்ற இறக்கம் செய்வது:*** வணிக மற்றும் மற்ற வங்கிகள் ஆர்பிஐயின் குறிப்பீடுகளின்படி இரண்டு வகையான ஒதுக்கீடுகளை கொண்டிருக்க வேண்டும். முதலாவது ரொக்க ஒதுக்கீடு விகிதமானால் மற்றொன்று சட்டபூர்வமான பொருப்பு விகி தமாகும். சட்டபூர்வமான பொருட்கள் விகிதமானது. வங்கிகள் தம்முடைய மொத்த டேவணிகயை குறிப்பிடபட்ட அளவு ரொக்கமாக வைத்துக் கொள்ளும் சட்டபூர்வமான அளவாகும். ரொக்க ஒதுக்கீடு விகிதம் வங்கிகள் தம்முடைய மொத்த டேவணிகளின் குறிப்பிட்ட அளவை ஆர்பிஐயின் வரவாக வைக்க வேண்டிய அளவாகும். இவ்விரண்டு விகிதங்களை ஏற்றியபோது வங் கிகளிடம் அன்றாட விவகாரங்களுக்கு குறைவான பணம் தேவைப் படுகிறது மற்றும் அவை இறங்குமுகமாகும் போது அதிகபணம் தேவைப்படுகிறது.

## ஆ) குண இயல்பு கடன் கட்டுப்படுத்தும் செயல்கள்

குன இயல்பு செயல்கள் அல்லது இரகசிய கடன் கட்டுப்பாட்டு செயல்கள் கடன் பெறும் நோக்கம் மற்றும் அதன் பயன்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. முக்கி யமாக குண இயல்பு கடன் கட்டுப்படுத்தும் செயல்கள் இவ்வாறுள்ளன.

©KTBS Not to be republished

i. ***மார்ஜின் அளவில் மாற்றம் :*** கடன் பெறும்போது வங்கி பத்திரங்களை கேட்கிறது அல்லது கடனின் குறிப்பிட்ட அளவை கடனாளிகளின் தனிப்பட்ட மார்ஜின் பணமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். எந்த நோக்கத்திற்காகவும் கடன் அளிப்பதை உற்சாகமூட்ட பொது நிதியின் அளவை இறங்கு முறைப்படுத் தலாம். அதே விதமாக கடன் அளிப்பதை உற்சாகமற்ற மார்ஜின் பணத்தின் அளவை ஏறுமுகமாக செய்யலாம்.

ii. ***கடனின் உச்சவரம்பில் நிர்ணயிக்கப்பட்ட அல்லது கடனின் அளவு :*** குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அளிக்கும் கடனின் அதிக அளவை ஆர்பிஐ தனிப்பட்ட அளவை எந்த நோக்கத்திற்கு அதிகளவில் கடனளிப்ப தைத் தடுக்கிறது.

iii. **நீதித் தொடர்பாண அழுத்தம் :** பல்வேறு நோக்கங்களுக்காக மொத்த கடன் அளிப்பதை அல்லது பல்வேறு நோக்கங்களுக்காக கட னின் அளவை குறைப்பதினால் ஆர்பிஐ வணிக வங்கிகளின் மீது நிபந்தனைகளுடன் சுற்றறிக்கை அல்லது சுற்றறிக்கைகளின் மூலமாக நீதிதொடர்பான அழுத்தபாரம் இதுவாகும்.

iv. **நேரடியான செயல் :** எப்பொழுதும் மற்றெல்லா செயல்கள் நிலையான தாக ஆர்பிஐ வணிக வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவணங்கள் நேரடியாக கட்டுப்படுத்தும் முறைகள் கைக்கொள்கின்றன. இது ஒரு தண்டனைலிருந்து இதனை இடைநிலையில் பயன்படுத்தப் படுகிறது.

இவ்வாறு மைய வங்கிகள், இந்தியாவில் ஆர்பிஐ, பல்வேறு செயல்கள் மூல மாக பணத்தின் அளவை கட்டுப்படுத்தி தன்மூலமாக விலை நிலவரம் மற்றும் மொத்த வளர்ச்சி இயக்கத்தில் தாக்கம் ஏற்படுத்துகிறது.

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை நிர்பபுக :**

1. பொருள் வினியோகிக்கும் முறையில் பொருட்களுக்கு மாற்றாக __________. வினியோகம் செய்யப்பட்டது.
2. செக்குகள் __________. பணத்தின் சாதனமாக உள்ளது.
3. இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கப்பட்ட ஆண்டு __________
4. ஜப்பான் நாட்டின் பணத்தை __________ என்று அழைக்கிறோம்.
5. இந்திய அரசு 14 வணிக வங்கிகளை __________ ல் தேசிய மையமாக்கப் பட்டது.
6. குறைவான பணத்தை பூர்த்தி செய்வதை __________ மற்றும் மூலமாக அள விடப் படுகிறதுது.
7. பணவீக்கம் பணத்ததை பூர்த்திசெய்ய சரக்கு-சேவைகளின் பூர்த்தி செய்வதை விட __________ இதுவாகும்.

## II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. பொருள் வினியோக முறை என்றால் என்ன?
2. பணம் பொருளை விளக்குக.
3. இந்தியாவின் மைய வங்கி எது?
4. பணத்தின் செயல்களை விவரிக்கவும்.
5. இந்தியாவிலுள்ள வெவ்வேறு நிதி நிறுவணங்களின் பெயர்களைக் கூறுக.
6. ஆர்பிஐ யின் செயல்களை விவரிக்கவும்.
7. இந்தியாவில் பயன்படுத்தப்பட்டுவரும் பணத்தின் பூர்த்திசெய்வது வெவ் வேறு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட முறைகளை விளக்குக.

## III. செயல்திட்டம்.

1. சரியான படங்களை பயன்படுத்திக் கொண்டு பணத்தின் வளர்ச்சியை விவரி.

## IV. செயல்பாடுகள் :

1. வணிக வங்கிகளின் செயல்களை கவனித்து மற்றும் விவரங்களை அளிக்க வும்.

2. அருகிலுள்ள வங்கிக்கு சென்று அதனுடைய செயலாக்கங்களைப் பற்றிய கட் டுறையை எழுதுக.

* * *

©KTBS Not to be republished

அத்தியாயம் - 4

# பொது மக்களின் நிதி மற்றும் நிதி நிலை - அறிக்கை

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- பொதுமக்கள் நிதியின் பொருள் மற்றும் மகத்துவம்.
- நிதி நிலை அறிக்கை.
- பொதுமக்களின் செலவுகள் மற்றும் பொதுமக்களின் வருமானம்.
- பற்றாக்குறை நிதிநிலை மற்றும் நிதித் தொடர்பான குறைபாடு.

## 1. அறிமுகம்

உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கு எந்தெந்த மூலங்களிலிருந்து வருமானம் கிடைக்கிறது என்பது தெரியுமா? ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் வேளாண்மை தொழில் அல்லது சேவைத்துறைகளின் வேலை வாய்ப்புகளில் உழைப்பதன் மூலமாக வருமானத்தைப் பெறுகிறார்கள். தனிமனிதர்கள் வருமானத்தை ஒப்பந்தம் அல்லது வாடகை (நிலம், ஜமீன், மற்றும் இதர நிலையான சொத்துக்கள் மீது); கூலி (வெவ்வேறு பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபட்டு தன்னுடைய உழைப்பை அளிப்பதன் மூலம்) வட்டி (பணத்தை நிறுவணங்கலில் வைப்புநிதியாக போடுவதன் மூலம் அல்லது மற்றவர்களுக்கு கடன் அளிப்பதன் மூலமாக) மற்றும் இலாபம் (ஒரு உற்பத்தி செயல்பாடுகளில் பணத்தை மூலதனமாக அளிப்பதன் மூலமாக வடிவத்தில் வருமானத்தைப் பெறுகிறார்கள்.

பொதுவாக வருமானத்தை ஒரு ஆண்டு காலத்திற்கு தோராயமாக செய்யப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் வருமானத்தை அனுபவித்தல் மற்றும் வளர்ச்சி நோக்கங்களுக்காக செலவிடப்படுகிறது. தனிமனிதன் அல்லது குடும்பம் தன்னுடைய வருமானம் மற்றும் செலவை சரியான முறையில் நிர்வாகிப்பதின் மூலமாக வளர்ச்சியை சாதிப்பது ஒரு கலையாகும். வருமானத்தைவிட செலவு அதிகமாகும் போது கடன் பெற வேண்டியதாகிறது. இவ்வாறு தனி மனிதன் அல்லது குடும்பத்தின் வருமானம், செலவு மற்றும் கடன்களின் நிர்வாகத்தைப் பற்றி தெரியபடுத்துவதை ‘தனிமனித செலவு திட்டம்’ என்றார்கள். அதே வகையில் அரசாங்கமும் தன்னுடைய நிதி நிலையை நிர்வாகம் செய்கிறது. அதுபொதுமக்களின் நிதியாகும். இவ்வத்தியாயத்தில் அரசு தன்னுடைய நிதியை எவ்வாறு நிர்வாகம் செய்கிறது என்பதை அறிவோமா!

## 2. பொதுமக்களின் நிதியைப்பற்றிய பொருள் மற்றும் மகத்துவம்.

அரசாங்கத்தின் வருமானம், செலவு மற்றும் கடன்கள் இவைகளின் நிர்வாகத்தைப் பற்றி கற்பதே பொது மக்களின் நிதியாகும் என்று டால்டன் அவர்கள் விவரித்துள்ளார். பொதுமக்களின் நிதி அரசின் வருமானம், செலவு மற்றும் கடன், நிர்வாகம் செய்வதைப் பற்றிய சித்திரத்தை அளித்துள்ளது.

©KTBS Not to be republished

***பொதுமக்கள் நிதியின் மகத்துவம் :*** பொருளாதாரவளர்ச்சி மற்றும் பொருளாதார உறுதி சம நிலையை சாதிப்பதற்கான நோக்கத்தினால் அரசு தன் னுடைய வருமானம், செலவு மற்றும் கடன்களுக்குத் தொடர்பான காலத்திற்கு கடைப்பிடிக்கும் நீதிக்கு நிதித் தொடர்பானது என்பார்கள். பொருளாதார முன் னேற்றம் மற்றும் உறுதியை சாதித்து வருமானத்தில் சமமாக பங்கீடு செய்து சாதிப்பது பொது நிதியின் முக்கிய நோக்கங்களாகும்.

முன்னேற்றத்திற்கு வரிவிதிப்பு நீதியை பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் செல்வந்தர்களின் வருமானத்தின்மீது அதிக வரியை விதித்து, அவ்வாறு ஒன்று கூட்டப்பட்ட வருமானத்தை ஏழைமக்களின் நலனுக்கு நாட்டிலுள்ள சமமற்ற தன்மைகள் குறைந்து வருகின்றன. அதுவல்லாமல் அவ்வருமானத்தை வளர்ச்சி செயல் கள் மீது உண்மையில் மொத்த வளர்ச்சியின் அளவு அதிகரித்து அனைவருக்கும் பயன ளிக்கும் வகையிலிருக்கும். அதே விதமாக பொருளாதாரம் முடிவுக்கு வராமலிருக்கும் காலங்களில் செலவைக் குறைத்து பொருளாதார குறைபாடுள்ள சந்தர்ப்பங்களில் செலவை குறைத்து, அரசு பொருளாதார உறுதித் தன்மையை சாதிக்கும். வருமானம், செலவு மற்றும் அவைகளுக்கிடையே ஒத்திருந்தால் ஆண்டு வரவு செலவு அல்லது நிதி நிலை அறிக்கையின் பாகமாகிருந்தால் பொதுமக்களின் நிதியைப்பற்றி அறிவது வரவு-செலவு பரிசீலனைக்கு உதவியாக இருக்கும்.

### *வரவு-செலவு அல்லது நிதி நிலை அறிக்கை* (Budget)

அரசு ஒவ்வொரு ஆண்டும் தன்னுடைய வரவுசெலவை முன்னதாகவே தயாரிக் கிறது. இந்தியாவில் நிதி ஆண்டு ஏப்ரல் 1 முதல் தொடங்கி அதற்கு அடுத்த ஆண்டு மார்ச்சு மாதம் 31க்கு முடிவடைகிறது. அடுத்த ஆண்டு வரவு செலவை அதே ஆண்டில் தயாரித்து மக்களவையில் சமர்பித்து அனுமதியைப் பெறப்படும். அவ்வரவு-செலவு மூலம் தன்னுடைய தயாரிப்பான நிதியின் நோக்கங்களை சாதிக்க முயற்சிக்கிறது. அவ் வறெனில் வரவு-செலவு என்றால் என்ன?

அரசு ஒரு ஆண்டின் வருமானம் மற்றும் செலவுகளைப் பற்றி தயாரித்த தோராய பட்டியலை வரவு செலவுதிட்டம் அல்லது நிதி நிலை அறிக்கை என்கிறோம். இது அரசின் வருமானம் மற்றும் செலவுகளைக் கூறும் ஒரு அறிக்கையாகும். மைய மற் றும் மாநில அரசுகள் தம்முடைய பிரத்தியோகமாக வரவு-செலவு திட்டங்களை தயா ரிக்கின்றன. இந்தியாவில் மைய அரசும் நிதி அமைச்சர் நிதித் துறையின் உதவியுடன் தயாரிக்கிறார். நிதி அமைச்சர் ஒவ்வொரு ஆண்டும், பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் மக் களவையில் மைய அரசின் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிப்பார். மக்களவை மற்றும் மாநிலங்களவை இரண்டிலும் நிதி நிலை அறிக்கையின் தாள்களின் மீது ஆழ்ந்த விவா தங்கள் நடைபெறும் மார்ச்சு மாதம் 31-க்குள் இரண்டு அவைகளிலும் ஆமோதிப்புப் பெறப் படுகிறது.

வரவு-செலவு தாள்களில் மூன்று வகைகள் உள்ளன.

©KTBS Not to be republished

வரவு-செலவு தாள்களில் அரசின் வரவு அரசின் செலவை விட அதிகமாகிருந்தால் அதனை கூடுதலான நிதிநிலை அறிக்கை என்கிறோம்.

நிதி நிலை அறிக்கையில் அரசின் வருமானத்தைவிட செலவு அதிகமாகிருந்தால் அதனைப் பற்றாக் குறை நிதி நிலை அறிக்கை என்கிறோம். அரசின் வருமானம் மற்றும் செலவும் சமநிலையிலிருந்தால் அதனை சமநிலை நிதிநிலை அறிக்கை என்கிறோம்.

வளர்ச்சியடைந்துவரும் இந்தியாவைப் போன்ற நாடுகளில் அரசுகள் பற்றாக் குறை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிதன் மூலம் தன்னுடைய செலவை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை அடையும் முயற்சியை மேற்கொண்டு வருகிறோம்.

### *3) பொதுமக்களின் செலவுகள்*

அரசு நாட்டின் பாதுகாப்பு, ஆட்சி நிர்வாகம், பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் நோக்கத்திற்காகவும், வெவ்வேறு செயல்பாட்டிற்காகவும் நிதி செலவிடப்படுகிறது. இதனை பொதுமக்கள் செலவுத்தொகை என்பார்கள். என்றால் அரசு தன்னுடைய மக்கள் நலனை மனதிலிருத்தி செய்யும் செலவுகளை பொதுமக்கள் செலவு என்பர். 20வது நூற்றாண்டின் நல அரசுகள் அமைந்தவுடன், நவீன அரசுகள் செயலாற்ற மற்றும் அதனுடைய பங்கு விரிவாக்கப்பட்டது. அவ்வப்போது பொதுமக்களின் செலவுகள் அதிகமானது, இந்தியாவில் மைய மற்றும் மாநில அரசுகளுக்கு தம்முடையதான சொந்த செலவினங்கள் உள்ளனன.

இருபதாவது நூற்றாண்டில் அரசுகளின் பங்கு விரிவடைந்து பொதுமக்களின் கடன்கள் அதிகரித்தது. பொதுமக்களின் கடன், பொருளாதார வளர்ச்சியை காக்கும் வசதிகளையும் ஏற்படுத்தியது, அது மூலதனம் செலுத்துவதற்கு உள்ள சூழ்நிலையை சுதாரிக்க வேண்டியதாகிறது. சேமிப்பு, தயாரிப்பு, மற்றும் நவீனங்களுக்கு புத்துணர்வு அளிக்க வேண்டியதாகிறது. அல்லாமல் பொருளாதார வளர்ச்சியை தீவிரமாக்கி உறுதியை நிச்சயப்படுத்த வேண்டும் என்றால் பொதுமக்கள் கடனின் முக்கிய நோக்கங்கள் அவை.

1. பொருளாதார வளர்ச்சியை தீவிரமாக்குவது.
2. நிறுவனம், வியாபாரம் மற்றும் வணிகத்தை ஊக்குவிப்பது.
3. வேளாண்மை மற்றும் கிராமிய வளர்ச்சியை ஊக்குவிப்பதுது.
4. சமத்துவ பிரதேச முன்னேற்றத்தை ஊக்குவிப்பது.
5. சமுதாய - பொருளாதார அடிப்படை வசதிகளை நிர்மானிப்பது.
6. சமூகமாக பயன்படுத்தும் சரக்குகளை அளித்து சமுதாய நலனை அதிகரிப்பது மற்றும்
7. முழுமையான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவது.

©KTBS Not to be republished

### *4. பொதுமக்கள் வருமானம்.*

பொதுமக்களின் வருமானம் வெவ்வேறு பொருளாதார செயல்பாடுகள் மற்றும் தனிமனிதர்கள் மீது விதிக்கும் வரிகள்மூலம் அரசாங்கத்தின் தொழில் நிறுவனங்கள் மூலமாகக் கிடைக்கும் வருமானத்திலிருந்தும் மானியம் போன்றவைகளின் மூலம் கிடைக்கிறது. மக்களின் வருமானத்தில் அதிகமாகும் நிதி, அரசின் தேவைகளுக்கும் அதிகமாகிருப்பதினாலும், அரசு சேமித்துவைத்துள்ள வருமான அளவு அதிகரத்தி லிருந்தும் வருமானம் கிடைக்கிறது. அரசியல் சாசனம் மைய மற்றும் மாநில அரசுக ளின் செயல்களை கட்டுப்படுத்துவதுடன் அவற்றின் வருமான மூலங்களையும் கட்டுப் படுத்தியுள்ளது. மைய அரசின் வருமானத்தின் மூலங்கள் பற்றி தெளிவாக அறிவோம்.

***நிலவரி வருமாணம்* (Revenue Receipt) :** அரசு வெவ்வேறு வரிகள் மற் றும் வரியற்ற மூலங்களிலிருந்து சேகரிக்கப்படும் வருமானத்தை நிலவரி வருமானம் என்று அழைக்கிறார்கள். இது அரசின் உண்மையான வருமானமாக இருக்கும். நிலவரி வருமானம் முக்கியமாக இரண்டு வகைகளாக உள்ளன. அவை (1) வரிவருமணம் (2) வரியற்ற வருமானம்.

***1. வரி வருமானம்* (Tax Revenue) :** மக்கள் எவ்விதமான எதிர்பார்ப்புமின்றி அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய கட்டாய முறைவரி என்கிறோம். மைய அரசு மக் கள் மீது பல்வேறு வகையான வரிகளை விதித்து வருமானத்தை சேமிக்கின்றது. வரிகள் அரசின் மிக முக்கியமான வருமானத்தின் மூலங்களாக உள்ளன.

அரசாங்கம் வரிகளை விதிக்கும்போது அதிக வருமானம் உள்ளவர்களுக்கு அதிக வரிகையும், குறைவான வருமானம் உள்ளவர்கள்மீது குறைவான வரியையும் விதிக்கி றது. ஏழைகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. அதேவ கையில் செல்வந்தர் பயன் படுத்தும் சரக்கு-சேவைகள் மீது அதிக வரியை விதிக்கிறது. அரசு வரிவிதிப்பில் கடைப்பிடிக்கும் இந்நீதியை முன்னேற்ற வரிநீதி (Principle of pro-grassive taxation) என்பார்கள்.

மைய அரசு விதிக்கும் வரிகளில் முக்கியமாக இரண்டு வகைகள் உள்ளன. அவை -

(அ) நேர்முகவரிகள் (ஆ) மறைமுக வரிகள் ஆகும்

***அ) நேர்முகவரிகள்* (Direct Taxes) :** அரசு யார்மீது வரி விதிக்கிறதோ, அ வர்களை அந்த வரிச்சுமையை சுமப்பவர்களாகிறார்கள். அவ்வகையான வரிகளை நேர்முக வரிகளென்பார்கள். இவ்வரிகளின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடிவ தில்லை. பொதுவாக தனிமனிதர்கள் மற்றும் நிறுவனங்கள் சம்பாதிக்கும் வருமானம் மற்றும் செல்வத்தின் மீது விதிக்கும் வரிகள் தேர்முக வரிகளாகும். முக்கிய நேர்முக வரிகளென்றால், வருமான வரி, சொத்துவரி, ஸ்டாம்புவரி முதலியன.

***ஆ) மறைமுக வரிகள்* (Indirect Taxes) :** அரசு விதிக்கும் வரிகளின் சுமை

©KTBS Not to be republished

யை மற்றவர் மீது மாற்றுவதற்கு சாத்தியமிருந்தால் அம்மாதரியான வரியை மறைமுக வரிகள் என்பார்கள். பொதுவாக மறைமுகவரிகள் சரக்கு-சேவைகள் மீது விதிக்கப்படு கிறது. எடுத்துக்காட்டு அரசு சரக்கு சேவைகள் உற்பத்தியாகும் சந்தர்ப்பத்தில் உற்பத் தியாளன் மீது இவ்வரியின் சுமைவிதிக்கப்படுகிறது. உற்பத்தியாளனின் இவ்வரியின் சுமையை விற்பனையாளன் மீது மாற்றமடைகிறது. விற்பனையாளன் இறுதியில் வரிச்சு மையை நுகர்வோர் (பயன்பாட்டாளன்) மீது மாற்றமடைகிறது. மைய அரசு விதிக்கும் முக்கியமான மறைமுக வரிகளென்றால் கலால்வரி, ஏற்றுமதி, இறக்குமதி, சுங்கவரிகள், சேவை வரிமுதலியன. 2017-18 நிதியாண்டில் அரசு அனைத்து மறைமுக வரிகளுக்கு பதிலாக ஒரேவிதமான சரக்கு மற்றும் சேவைவரியை (GST) விதித்து உள்ளது.

**சரக்கு மற்றும் சேவை வரிகள் (Goods and Services Tax, GST)**

*ஜி.எஸ்.டி இந்தியா முழுவதும் விதிக்கப்படும் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாட்டின் மீது ஒரு மறைமுக முழுமையான வரியாகிருக்கும். மைய மற்றும் மாநில அரசுகள் தற்போது விதித்துள்ள அனைத்து மறைமுக வரிகளுக்கு பதிலாக நடைமுறைக்கு வந்துள்ளது. அதனை சரக்கு-சேவைகள் விற்பனை அல்லது வாங்கும் அனைத்து நிலைகளில் விதிக்க அங்கிகரிக்கப்படுகிறது. ஆனால் உற்பத்தியாளன் அல் லது விற்பனையாளன் தற்போதை சரக்கு அல்லது சேவைக்கு அளித்து வரும் வரியின் அளவு திரும்பப் பெறும் சாத்தியம் உள்ளது. ஜிஎஸ்டி நடைமுறைப் படுத்த மறைமுக வரிகள் செம்மையாக்குவதில் ஒரு மகத்துவமாக காலடியாகும். பன்னோக்கு வரிமூ லம் மற்றும் அதன் பரிணாமங்களை தடை செய்து நாடுமுழுமைக்கும் ஒரு சாதாரன சந்தைகளை ஏற்படுத்த உதவியாகிறது. வரியை எளிமைப்படுத்தப்படுவதால் அத னுடைய நிர்வாகம் மற்றும் நடைமுறை எளிதாகிறது. நுகர்வோரின் பார்வையில் பார்க்கையில் மிக முக்கியமான பலன்யாதெனின் வரிசுமை குறைக்கப்படஉள்ளது. சரக்குகள் விடுதலையாகி ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு கொண்டு சென்றாலும் மற்றும் போதுமான பதிவுகள்பாரம் குறைகிறது.*

**2. வரிகளற்ற வருமானம் (Non-Tax Revenue)** : அரசுவரிகளை தவிர்த்து மற்ற மூலங்களினால் வருமானத்தைப் பெறுகிறது. இதனை வரிகளற்ற வருமானம் என் பார்கள். மைய அரசு சேர்த்துவைக்கும் முக்கிய வரிகளற்ற வருமானம் என்றால் அவை:

1. இந்திய ரிசர்வ் வங்கி சம்பாதனை செய்யும் நிகரலாபம்.
2. இந்திய ரயில்வேயில் கிடைக்கும் நிகரலாபம்.
3. அஞ்சல் மற்றும் தொலை பேசியில் கிடைக்கும் நிகரலாபம்.
4. பொது நிறுவனங்கள் ஈட்டும் வருமானம்.
5. நாணயங்கள் அச்சிடுவது மற்றும் தங்கசாலையின் மூலம் கிடைக்கும் வரு மானம்.

©KTBS Not to be republished


6. வெவ்வேறுவகையான கட்டணங்கள், அபராதங்கள் மூலம் கிடைக்கும் வருமானம்.


**முதலீடு வருமானம் (Capital Receipts) :** இம்மூலத்தின் வருமானம் அரசுக்கு சுமையாகிறது அல்லது அதனுடைய சொத்துக்களை குறைத்து விடுகிறது. எடுத்துக்காட்டாக அரசு வாங்கிய கடன்கள் அதனுடைய சுமையை அதிகமாக்கினால் பொது நிறுவனங்களின் பங்குகளை விற்பதின் மூலம் அதனுடைய சொத்துக்களின் அளவு கரைந்து விடுகிறுது. இவற்றை முதலீடு வருமானம் என்கிறோம்.

அரசு முதலீடு வருமானத்தை பன்முகமாக உள்நாடு மற்றும் அயல் நாடுகளின் மூலங்களினால் கடன் பெறுவதன் மூலமாக சேகரிக்கப்படும். நாட்டிலுள்ள மக்கள் வங்கிகள் நிதி நிறுவனங்கள் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் போன்றவைகள் மூலமாக சேகரிக்கப்படும் கடன்களை உள்நாட்டு கடன் என்பார்கள். அயல் நாட்டு அரசுகள், அயல் நாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் அனைத்துலக நிதி நிறுவனங்களின் மூலம் பெறப்படும் கடனை அயல் நாட்டுக் கடன் என்பார்கள்.

அரசு கடன்களென்றால் இதர மூலங்களிலிருந்து முதலீடு வருமானத்தை சேகரிக்கிறது. அது தனது நிறுவனங்களில் வைத்துள்ள தன்னுடைய மூலதனத்தை திரும்பப் பெறுகிறது. மாநில அரசுகள் மைய அரசிடமிருந்து பெறும் கடன் மற்றும் பணஉதவியை காலாகாலத்தில் மறுபடியும் முதலீடு செய்கின்றன. இவ்வாறு கடன் மறுமுதலீடு மூலம் சேகரிக்கப்படும் பணத்தை கடனற்ற முதலீடு வருமானம் என்பார்கள்.

கீழ்க்காணும் படம் இந்திய அரசின் 2014-15 ஆம் ஆண்டு வரவு செலவு விவரங்கள் காட்டுகின்றன.




*செயல்பாடு :* மேற்காணும் படத்தை அறிந்து அதனுடைய பொருளை எழுதுங்கள்.

Not to be republished ©KTBS

## 5. பற்றக்குறை நிதி நிலை (Deficit Financing)

இதற்கு முன் கூறியது போன்று தன்னுடைய செலவைத் தோராயப்படுத்தி, அதற்கு ஏற்றவாறு வருமானத்தைப் பெறுகிறது. இவ்வாறு செயலாற்றும்போது பொதுவாக தன்னுடைய வருமானத்தின் செலவீனம் அதிகம் செய்கிறது இது நாட்டின் வளர்ச்சி நோக்கில் சிறப்பானது. அரசு தன்னுடைய வருமானம் மற்றும் செலவீனத்திற்கிடையால் உள்ள இடைவெளியை இந்திய ரிசர்வ் வங்கியில் தான் முதலீடு செய்துள்ள ரொக்க சேமிப்பை திரும்பப் பெறுகிறது. உள்நாடு மற்றும் அயல்நாடு மூலங்களிலிருந்து கடனை சேகரிக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்தும் கடனைப் பெறுகிறது. அவசியமிருந்தால் அதிகளவில் நோட்டுக்கள் முத்திரைமிடுவது இதில் சேர்ந்துள்ளது. இவ்வாறு குறைப்பாடான பணம் என்றால் இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து, கடன் பெறுவது மற்றும் புதிய பணம் தயாரிப்பது நிதித் தொடர்பான குறைபாடு என்று அழைக்கிறோம். இவ்வனைத்து செயல்களால் பணத்தின் செலாவணி அதிகமாகி, வளர்ச்சி பலன்கள் சிறப்பாக இருக்கும்.

இந்தியாவில் நான்கு வெவ்வேறு குறைபாடுகளின் தீர்மானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் அவற்றை கீழ்க்காணும் விதத்தில் கணக்கிடப்படுகிறது.

### நிதிசம்பந்தமான குறைபாடுகள் (Fiscal Deficit)

அரசின் நிதித் தொடர்பான வருமானம் மற்றும் கடனற்ற முதலீடு வருமானங்களைவிட அரசின் மொத்த செலவு அதிகமாகிருந்தால் அதனை நிதித் தொடர்பான குறைபாடு என்பார்கள். அதனை இவ்வாறு கண்டறிகிறார்கள்.

**i. *நிதித் தொடர்பான குறைாபடு = (நிலவரி வருமானம் + கடனற்ற முதலீட்டின் வருமானம்) – மொத்த கடன்***

**ii. *நிலவரி குறைபாடு :***

நிலவரி கணக்கில் கடன், நிலவரி கணக்கில் வருமானத்தைவிட அதிகமாகும் போது நிலவரிகுறைபாடு உண்டாகும், அதனுடைய சூத்திரம்: நிலவரி குறைபாடு = நிலவரிகணக்கின் வருமானம் = நிலவரி கணக்கின் செலவு.

**iii. தொடக்க நிலை குறைபாடு :**

நிகழும் ஆண்டின் நிதித் தொடர்பான குறைபாட்டினால் கடந்த ஆண்டின் வட்டி செலுத்துவதிலிருந்து திரும்ப பெறும்போது தொடக்க நிலை குறைபாடு கிடைக்கிறது.

**தொடக்க நிலை குறைபாடு = நிதித் தொடர்பான குறைபாடு — வட்டி செலுத்துதல்**

**iv. *நிதிநிலை அறிக்கை அல்லது வரவு - செலவு குறைபாடு :*** இது மொத்த வருமானம் மற்றும் செலவுகளின் இடையிலான இடை வெளியாகியுள்ளது. அதனுடை கணக்கை இவ்வாறு செய்கிறோம்.

***நிதி நிலை அறிக்கை அல்லது வரவு செலவு குறைபாடு = மொத்த***



©KTBS Not to be republished

## வருமானம் – மொத்த கடன்.

ஆனால் அதிகளவில் குறைபாடுகள் பொருளாதார நிலைக்கு ஏற்றதல்ல. ஏனென்றால் அவை நாட்டுக்கு சுமையை உண்டாக்குபவையேதவிர கட்டுப்பாடற்ற குறைபாடுகள் பணத்தின் ஒழுங்கை காட்டுகிறது அது பணத்தின் பின்தங்கிய நிலையை அதிகரிக்கிறது. அதனால் அதைப்போன்ற பணத்தைக் கட்டுப்படுத்த 2003ல் இந்திய அரசு நிதி தொடர்பான பொருப்பு மற்றும் நிதிநிலை அறிக்கை பற்றிய நிர்வாக சட்டத்தை (Fiscal Responsibility and Budget Management Act. FRBMA) நடைமுறைக்கு கொண்டுவந்தது. இது முக்கியமாக நிதியின் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவது. குறைபாடுகள் குறைவதற்கு, பொருளாதார நிர்வாகத்தை சிறப்புறச் செய்வது, மற்றும் பொதுமக்களின் நிதிகளுக்கு சிறப்பான நிர்வாகத்தை அளிப்பதன் மூலமாக நிதிநிலை அறிக்கை சமநிலையை சாதிக்கும் நொக்கத்தை கொண்டுள்ளது.

கீழ்க்காணும் 2017-18ம் ஆண்டின் மைய அரசின் நிதி நிலை அறிக்கையின் கண்ணோட்டம் அளிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பொருள் விவரங்கள் | கோடி ரூபாய்களில் |
|---|---|---|
| 1 | நிலவர கணக்கின் வருமானம் | 15,15,771 |
| 2 | வரிகள் மூலம் வருமானம் (மையஅரசின் பங்கு) | 12,27,014 |
| 3 | வரிகளற்றதன் வருமானம் | 2,88,757 |
| 4 | முதலீடு கணக்கின் வருமானம் (5+6+7) | 6,30,964 |
| 5 | கடன்களின் வசூல்கள் | 11,932 |
| 6 | மற்ற வசூல்கள் | 72,500 |
| 7 | கடன்கள் மற்றும் இதர பாத்யதைகள் | 5,46,532 |
| 8 | மொத்த வசூல் 1+4 | 21,46,735 |
| 9 | திட்டமிடப்படாத கடன் | 9,45,078 |
| 10 | நிலவரி கணக்கு | 6,74,057 |
| 11 | வட்டி செலுத்தியது | 2,71,021 |
| 12 | முதலீடு கணக்கு | 12,01,657 |
| 13 | திட்டக்கடன் | 11,62,817 |
| 14 | நிலவரி கணக்கு | 5,23,078 |
| 15 | முதலீடு கணக்கு | 38,780 |
| 16 | மொத்தக் கடன் | 21,46,735 |

©KTBS Not to be republished

| | | |
|---|---|---|
| 17 | நிலவரி கணக்கின் கடன் (10+14) | 18,36,934 |
| 18 | அதிலும் மானியம் மற்றும் சொத்துகள் நிர்வாகம் | 1,95,350 |
| 19 | முதலீட்டின் கடன் (12+15) | 3,09,801 |
| 20 | நிலவரி குறைபாடுகள் (7+1) | 3,21,163 |
| 21 | நிதி குறைபாடுகள் 16-(1+5+6) | 5,46,532 |
| 22 | தொடக்கக் குறைபாடு 22-14 | 23,454 |
| 23 | **திட்டங்களின் மீது அல்லாமல் மற்றவைகளின்கடன்** (13+15) | 12,01,657 |

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

### I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. அரசு பொதுமக்கள் நிதியை ________ மூலம் நிர்வாக்கிறது.
2. நிதி நிலை அறிக்கையில் அரசின் வருமானம் அதனுடைய கடனைவிட அதிக மாகிருந்தால் அதனை ________ என்று அழைப்பார்கள்.
3. மைய அரசின் நிதி நிலை அறிக்கையை மக்களவையில் சமர்ப்பிப்பவர் ________
4. அரசு உள்நாடு மற்றும் அயல் நாட்டுக் கடன்கள் மூலமாக சேகரிக்கப்படும் வருமானத்தை ________ என்பார்கள்.

### II. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு வரியில் விடை அளிக்கவும்.

1. பொதுமக்கள் நிதியின் பொருளைக் கூறுக.
2. நிதி நிலை அறிக்கை என்றால் என்ன?
3. குறைபாடு நிதிநிலை அறிக்கை பொருள் யாது?
4. நேர்முக வரி என்றால் என்ன?
5. நிதித் தொடர்பான குறைபாட்டை சூத்திர வடிவில் எழுதுக.

### III. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஐந்தாறு வரிகளில் விடை எழுதுக.

1. பொதுமக்கள் கடன் பெருக்க மடையக் காரணங்கள் யாவை?
2. அரசு எவ்விதமான வரிகளை விதிக்கிறதுது?
3. மைய அரசின் திட்ட செலவுகளை பட்டியலிடவும்?
4. மைய அரசின் வரியற்ற வருமானத்தின் மூலங்கள் யாவை?

5. நிதிக் குறைபாடு என்றால் என்ன? அதன் நான்கு வகைகளை குறிப்பிடுக.

## IV. செயல்பாடுகள் :

1. உங்களுக்கு அருகிலுள்ள கிராம பஞ்சாயத்து அல்லது தாலுக்கா பஞ்சாயத்துக்குச் சென்று அங்கு சமர்ப்பிக்கப்படும் நிதி நிலை அறிக்கையின் விவரங்களை சேகரிக்கவும்.
2. மைய மற்றும் மாநில அரசுகளின் நிதிநிலை அறிகை சமர்ப்பிதை தொலைக் காட்சியின் மூலமாக பார்க்கவும் அதனைப்பற்றி வகுப்பறையில் விவாதிக்கவும்.
3. நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்த மறுநாள் தினசரி நாளிதழ்களில் வரும் அறிக்கையை சேகரித்து வகுப்பறையில் காட்சிபடுத்துக.
4. உங்கள் வீட்டின் வரவு - செலவைத் தயாரியுங்கள்.
5. பக்கம் 6ல் கொடுக்கப்பட்ட அரசின் நிதிநிலை அறிக்கையின் விவரங்களை ஆயந்து பார்க்கவும்.

©KTBS Not to be republished

* * * *

# அத்தியாயம் - 3
# வணிக உலகமயமாக்கல்

## இவ்வத்தியாயத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்வது :

- **உலகமயமாக்கலின் விளக்கம்**
- **உலகமயமாக்கலில் செறிந்துள்ள காரணிகள்**
- **உலகமயமாக்கலின் முக்கிய தன்மைகள்**
- **உலகமயமாக்கலின் சாதகங்கள்**
- **உலகமயமாக்கலின் பாதகங்கள்**
- **உலக வணிக அமைப்பு (உ.வ.அ) WTO**

வணிகத்தின் உலகமயமாக்கம் தற்போதைய ஒன்றல்ல. இக்கொள்கை 1870 முதல் 1913 வரையிலான காலம் உலகமயமாக்கலின் வளர்ச்சி காலமாகும் ஆனால் 1980க்கு பிறகு உலகமயமாக்கல் வளரும் நாடுகளின் பொருளாதார சீர்த்திருத்தத்தில் இடம்பெற்று சாதனை புரிந்தது அண்மைக்காலமாக பெரும் வணிகத் தொழில் அலகுகள் ஓரிடத்தில் நிலைத்து நின்று எங்கே அமைந்துள்ள தோ அங்கேயே சுருங்கி நிற்காமல் அவை பெரும் வணிக அலகுகளாக உலகம் முழுதும் வியாபித்துள்ளன அதற்கான காரணங்களாக தொழில் நுட்பம், தொலைத்தொடர்பு மற்று இணையத்தொலைத்தொடர்பு அமைப்புகளின் பங்கு மகத்தானது ஆக உள்ளது. இதன் விளைவாக நாடுகளுக்கிடையே மேம்பட்ட உறவும் கூட்டு சார்பும் ஏற்பட்டு அவை வணிகம் மற்றும் சந்தை சார்ந்த அமைப்புகளை உலக அளவிலான குழுக்களாக உருவாக்கி அமையப் பெற்றுள்ளன.

### உலகமயமாக்கலின் விளக்கம் :

சர்வதேச பணவியல் நிதியம் (IMF) இதற்கான விளக்கத்தை அளித்துள்ளது அதன்படி ‘‘வளரும் பொருளாதாரத்தில் கூட்டுச்சார்புடைய நாடுகள் பன்மைத்தொகுப்புகளாக உலக அளவில் பலதரப்பட்ட எல்லைகளுக்கு அப்பாற்பட்டு சர்வதேச நாடுகளை மூதலீட்டை கொண்டு அசுர வளர்ச்சி பெற்று விரவிக்கிடக்கும் தொழில் நுட்பத்தின் மூலம் சரக்குகள் மற்றும் சேவைத்துறையில் பரிமாற்றங்களை செய்து கொள்வதே’’

(**IMF-**has defined Globalisation as “The growing economic inter dependence of countries through increasing volume and variety of cross-border transactions in goods and services and international capital flows and also through the rapid and wide spread deffusion of Technology”.)

### இவ்வரையறை மூலம் தெளிவாக கூற வேண்டுமெனில்,

- உலகமயமாக்கல் சரக்குகள் மற்றும் சேவைகள் எல்லைகளுக்கு அப்பாற்பட்டு இயங்குவது (அ) பரிமாறிக்கொள்வது
- சர்வதேச மூலதனப்பெருக்கம், தகவல் மற்றும் தொழில்நுட்பம்.



©KTBS Not to be republished

- கச்சாபொருட்கள் மற்றும் இன்னபிற ஆதாரங்களை குறைந்த சந்தை விலையில் பெற்று உலக அளவிலான ஒரே சந்தையை உருவாக்குவது.
- குறைந்த செலவில் பொருட்களை உலகில் எப்பகுதியிலும் தயாரிப்பது.

### உலகமயமயக்காலில் உள்ள காரணிகள்

- உலகமயமாக்கல் குறிப்பாக பரந்த உலகில் இயல்பாக அரசியல், பொருளாதார, தொழில் நுட்பம் மற்றும் கலாச்சார பரிவர்த்தனைகளை நவீன தொலைதொடர்பு போக்குவரத்து சட்டத்திற்குட்பட்ட கட்டு கோப்பில் அதே வேளையில் தேர்ந்தெடுத்த அரசியலிருந்து திறந்த எல்லைகளுக்கு அப்பாற்பட்டு சர்வதேச வணிகம் மற்றும் நிதியத்தில் தொடர்பு ஏற்படுத்துவதே.
- உலகமயமாக்கல் நாடுகளுக்கு இடையிலான அரசியல் தடைகளை கடந்து சர்வதேச அளவில் மூலதனம் மற்றும் வணிகத்தை ஊக்கமளிப்பதே.
- உலகமயமாக்கல் சிக்கல் மிகுந்த ஏற்றுமதி இறக்குமதி வரிக்கொள்கைகளை மீறி/அகற்றி தடையற்ற வணிக பகுதி / மண்டலத்தை உருவாக்கும்.
- உலகமயமாக்கல் கப்பல் போக்குவரத்து மூலம் அதன் கொள்கலன்களை பயன்படுத்தி சரக்கை கையாள்கிறது இதன் மூலம் பெரும் போக்குவரத்து செலவு குறைகின்றது.
- உலகமயமாக்கல் மூலதன முதலீடுகளின் மீதுள்ள கட்டுபாடுகளை தளர்த்துகிறது (அ) தடைகளை உடைத்து மூலதனத்தை பெருக்குகின்றது.
- உலகமயமாக்கல் உலகம் முழுவதும் உள்ள வணிக அமைப்புகளுக்கு பல்வேறு ஊக்கமும் சலுகைகளையும் வழங்குகிறது.
- உலகமயமாக்கல் பெரும்பான்மையான நாடுகளின் கட்டுபாடு மிக்க அறிவுசார் சொத்துகளின் மீதான உரிமைகளில் இசைவான இயைந்து செல்லும் சூழலை ஏற்படுத்தி தந்துள்ளது.
- (உதாரணமாக சீனாவின் காப்புரிமை பெற்ற சொத்துகள் அமெரிக்காவின் மேன்மைமிக்க வணிக தொழிலகங்களில் காணலாம்)

### உலகமயமாக்கலின் முக்கியத்தன்மைகள்

- உலகப்பொருளாதாரத்தை சீரான வேகமாக வளர்ச்சி பெறச்செய்ய சர்வதேச வாணிபம் மூலம் அதிகரிக்கசெய்கிறது.
- வெளிநாட்டு முதலீடுகளோடு சர்வதேச மூலதனப்பெருக்கத்தையும் அதிகரிக்க செய்கிறது.
- உலகமயமாக்கல் சர்வதேச அளவிலான ஒப்பந்தங்களை WTO மற்றும் OPEC (கச்சா எண்ணெய் - ஏற்றுமதி நாடுகள்) போன்ற அமைப்புகள் அளவில் இட்டுசென்று உருவாக்குகிறது.
- உலகம் முழுதுமான நிதி அமைப்பு முறையை மேம்படுத்துகிறது.

©KTBS Not to be republished

- சர்வதேச அமைப்புகளை WTO (உலக வணிக அமைப்பு) WIPO (உலக அறிவுசார் சொத்துகள் அமைப்பு) IMF (சர்வதேச பணிவியல் நிதியம்) இன்னபிற இவை சர்வதேச பரிமாற்றங்களில் பெரும்பங்கு புரிகின்றன.
- பன்னாட்டு குழுமங்களின் (கம்பெனிகளின்) வெளி ஒப்படைப்பு வணிகத்தில் பொருளாதார செய்முறைகளை அதிகரிக்கச் செய்கிறது.
- சர்வதேச கலாச்சாரப் பரிமாற்றத்தை உருவாக்குகின்றது.
- பலதரப்பட்ட கலாச்சாரங்களை பரப்பி மற்றும் தனிப்பட்ட தொடர்பை வேறுபட்ட கலாச்சாரத்தில் ஈடுபடுத்துகிறது.
- சர்வதேசப் பயணம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துகிறது.
- சட்டரீதியிலான மற்றும் சட்டத்திற்கு புறம்பான குடியேற்றங்களை ஏற்படுத்துகிறது.
- உணவு பழக்க வழக்கங்களில் பிட்சா மற்றும் இந்திய உணவுகளை பரவச்செய்துள்ளது.
- உலகம் முழுதுமான தொலைத்தொடர்பு அடிப்படைக் கட்டுமான வசதி பெரும் எல்லை (Border) தாண்டும் தரவுகளை உருவாக்குகிறது.
- தகவல் மற்றும் தரவுத் (Exchange data) தொழில் நுட்பம், இணைய தொடர்பு துணைக்கோள்கள் மற்றும் கைப்பேசிகளின் பரிணாம வளர்ச்சி போன்றவற்றில் தாக்கம்.

***உலகமயமாக்கலின் சாதகங்கள் (நேர்மறை விளைவுகள்)* (Positive Impacts of Globalisation)**

- உலகமயமாக்கல் பொருளாதார வளர்ச்சி மற்றும் பரந்த அளவிலான பொருட்கள் மற்றும் சேவைகளை உருவாக்கி ஆதரிக்கின்றது.
- உலகமயமாக்கல் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முற்றிலும் மேம்படுத்து கின்றது.
- உலகமயமாக்கல் ஒரே வகையான மாறுதலற்ற வடிவில் தயாரிப்பு பொருட்களை உலகம் முழுவதும் பெற வழிவகை செய்கிறது.
- உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பெருக்குகின்றது.
- உலகமயமாக்கல் மக்களின் வருமானத்தை உயர்த்தியுள்ளது.
- சரக்குகள் மற்றும் சேவைகளில் நுகர்வோருக்கு தேவைப்பட்ட பொருட்கள் தேர்ந்தெடுக்க வாய்ப்பை உருவாக்கியுள்ளது.
- உலகமயமாக்கலினால் உள்நாட்டு வணிக நிறுவனங்களிடையே போட்டியை ஏற்படுத்தி பொருட்களின் விலை குறைவிற்கு காரணமாகிறது.
- உலகமயமாக்கல் மூலம் நாடுகளுக்கிடையே தரம் மிக்க பொருட்களை தயாரிக்க செய்கிறது தரத்தை உயர்த்துகிறது.

©KTBS Not to be republished

- பொருளாதார கூட்டுச்சார்ப்பு உள்ள நாடுகளுக்கிடையே அரசியல் மற்றும் சமூக உறவுகளை மேம்படுத்துகிறது.

## *உலகமயமாக்கலின் பாதகங்கள் (எதிர்மறை விளைவுகள்)* (Negative Impact of Globalisation)

உலகமயமாக்கல் என்பது உலக அளவில் மற்றும் மக்களிடையே புதிய பரிணாம வளர்ச்சியினால் சுதந்திரமான, பொறுப்பு மிக்க தொழில் ரீதியான தொடர்பை உருவாக்கினாலும் அது ஒரு செங்குத்தான திருப்பமாகும். அதனால் ஏற்படும் சவால்களை பாதிப்புகளை எதிர்மறையானதை பின்வருமாறு காணலாம்.

- உலகின் முன்னேறிய மேம்பட்ட நாடுகளின் நிறுவனங்கள் தங்களின் பணி ஆணைகளையும் உற்பத்தியையும் மூன்றாம் உலக நாடுகளிடம் வெளிஒப்படைப்பு செய்துள்ளது. காரணம் மூன்றாம் உலக நாடுகளில் செலவுகள் மிகக்குறைவே எனவே உலகமயமாக்கல் குழந்தைத் தொழிலாளர்களையும் மற்றும் அடிமைத்தனத்தையும் உருவாக்கி உள்ளது.
- உலகமயமாக்கலின் பெரும் போட்டி மனப்பான்மையினால் முறையற்ற வணிகப் போட்டிகளை உருவாக்கியுள்ளது.
- உலகமயமாக்கல் தீவிரவாதத்தையும் குற்றங்களையும் பெருக உதவியது என நம்பப்படுகிறது.
- உலகமயமாக்கல் பல்வேறு நகரங்களின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் துணை நின்று அவை குப்பை மேடுகளாகவும் மற்றும் தொழிற்சாலை கழிவுகளை குவித்து சுற்றுசூழலில் பெரும் பாதிப்பை உண்டு பண்ணியுள்ளது.
- துரித உணவங்களான Mc Donalds மற்றும் KFC போன்றவைகளையும் பெருகி மக்களிடையே பயனற்ற துரித (Junk food) உணவுப்பழக்கங்களை உண்டு பண்ணியுள்ளது. பாரம்பரிய மிக்க ஊட்டச்சத்து மிகு உணவு பழக்கவழக்கங்கள் கொண்ட குடும்பங்கள் காணாமல் போயின.
- மற்றுமொரு குற்றச்சாட்டாக பணம் படைத்தோர் இன்னும் பணக்காரர்களாகவும் ஏழ்மையிலுள்ளோர் அடுத்தவேளை உணவிற்கு அலைபாய்வதாக நம்பப்படுகிறது.
- அபாயகரமான நோய்களான எய்ட்ஸ் மற்றும் கேன்சர் விஷ ஜீரங்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளது.
- சுற்றுப்புற சூழ்நிலையில் பெரும் பாதிப்பு
- கச்சாப்பொருட்களின் சுரங்கத்தோண்டலினால் (பெருகிவரும் மக்க ள்தொகை / தொழிற்சாலைகளுக்காக) சுற்றுப்புற சூழல் நெருக்கடி எதிர்கால சந்ததியினர்களுக்கு மாற்று இல்லாமல் இன்று மக்கள் வாழ இயலாமல் உள்ளது.
- அடுத்தசவாலாக விலைக்குறைவான பொருட்களின் இறக்குமதியினால் (வளரும் நாடுகளிலிருந்து) வேலைவாய்ப்பின்மையை (முன்னேற்றமடைந்த

©KTBS Not to be republished

நாடுகளில்) ஏற்படுத்துகிறது. ஏனெனின் வளர்ந்த நாடுகளில் தயாரிப்பு செலவினம் அதிகமாகும்.

- மேலும் பெருகிவரும் போட்டியினால் சிறுகுறு தொழிலகங்களில் நெருக்கடி மற்றும் குறைந்த விலையில் பெற்ற சரக்குகளை சில நாடுகளில் மட்டுமே குவித்துக் கொள்வது அதுவே பிற நாடுகளின் தொழில்வாய்ப்பை குறைக்கின்றது.

## உலக வாணிக அமைப்பு (WTO)

**உலக வாணிக அமைப்பு** (World Trade Organisation) உலகின் ஒரே சர்வ தேச அமைப்பாகும் இது உலகநாடுகளுக்கிடையிலான வணிகச் சட்டங்களை நெறிப்படுத்துகிறது. WTOன் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவாவில் அமைந்துள்ளது. 1ஜனவரி 1995ல் ஏற்படுத்தப்பட்டது. தற்போது 149 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த உறுப்பினர்கள் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சந்திக்கின்றனர்.

WTOன் செயல்பாடுகள்

- உலகம் முழுவதிற்குமான வணிக ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்துகிறது.
- உலக வணிக ஒப்பந்தங்களை நிர்வகிப்பதில் இடைத்தரகராக செயல் படுகிறது.
- திறந்த மனதான மற்றும் சுதந்திர வணிகத்தை உலகம் முழுவதும் வலியுறுத்துதல்
- நாடுகளுக்கிகடையிலான வணிகத் தகராறுகளை தடுத்து தீர்வு காண்கிறது.
- சர்வதேச வணிகத்தின் வரிவிதிப்பில் ஏற்படும் சிக்கல்களை நீக்குகிறது.
- சர்வதேச வணிகத்தை சட்டத்திற்குட்பட்ட முறையில் நடத்த விழைவது.
- சர்வதேச வணிகத்தின் வாய்ப்பு வசதிகளை வளர்ச்சியற்ற நாடுகள் பெற துணைபுரிகின்றது.
- ஆதாரங்களை முறையாக பயன்படுத்தி தயாரிப்பு மற்றும் வணிகத்தில் திறமையை மேம்படுத்துவது.

## WTOன் இன்னபிறகுறிக்கோள்கள்

- உறுப்புநாடுகளின் மக்களுக்கான வாழ்க்கைச் செலவினங்களை குறைத்து ஈடுஇணையற்ற வாழ்க்கைத்தரத்தை உண்டாக்கி உதவிபுரிவது.
- உறுப்பு நாடுகளுக்கிடையேயான முரண்பாடுகளை அகற்றி வணிக இறுக்க நிலையை குறைப்பது.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பை தூண்டுவது
- சர்வதேச வணிகத்தில் செலவிளங்களை குறைக்க வழிசெய்வது
- நல்லாட்சிக்கு ஆதரவளிப்பது.
- உறுப்புநாடுகளில் நிலைத்தன்மை மற்றும் அமைதியை பெருக்க தொண்டாற்றுவது.

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

### I. பின்வரும் வினாக்களை குழுவாக விவாதித்து பின் விடையளி.

1. உலகமயமாக்கல் என்பதன் விளக்கம் என்ன?
2. ''உலகமயமாக்கல் என்பது உலகளாவிய பொருளாதார இயக்கம்'' என்பதனை நிருபி?
3. உலகமயமாக்கலின் சாதகங்களைக் கூறு.
4. உலகமயமாக்கலின் தன்மைகளை பட்டியலிடு.
5. உலகமயமாக்கலின் எதிர்மறை கூறுகளை உதாரணங்களுடன் விவரி.
6. உலக வணிக அமைப்பின் குறிக்கோள் எவை?

### II. நடைமுறைப்பயிற்சிகள் :

1. உலகமயமாக்கலின் விளைவாக வெளிவந்த வணிக அமைப்புகள் பட்டியலிடு.
2. உலகமயமாக்கலின் மூலம் விநியோகிக்கப்படும் சரக்குகள் பற்றிய விவரம் தேகரி.

### III. திட்டப□

1. உலகமயமாக்கல் பற்றிய தகவல்களை இணையம் மூலம் படங்களுடன் சேகரி
2. உலகமயமாக்கல் உணவு பழக்கவழக்கங்களை மாற்றி அமைத்துள்ளது'' விவாதிக்க.

* * * *

©KTBS Not to be republished

# அத்தியாயம் - 4
# நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்பு

### பின்வருவன இவவத்தியாயத்தில் கற்பன பற்றி

- **நுகர்வோர் வரிமைகள், சுரண்டல் மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு.**
- **நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் முக்கியத்துவம் பற்றி புரித்துகொள்வது.**
- **சரக்கு மற்றும் சேவைகள் நுகர்வின்போது கடைபிடிக்கப் படவேண்டிய முன்னெச்சரிக்கைகள்.**
- **நுகர்வோர் கல்வியின் தனித்துவம் மற்றும் நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு பதிவுசெய்யும் முறைகள்.**

### நுகர்வோர் மற்றும் வணிகர்

பொதுவாக சேவை அமைப்புகள் சரக்குகள் மற்றும் சேவைகளை பயன்படுத்து வோரை பயன்படுத்துனர் என்று அழைத்தன. பயன்படுத்து நரிடமிருந்து பணம் பெற்று சரக்கு அல்லது சேவைகளை அளிப்பவரை வழங்குநர் எனலாம். நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் பயன்படுத்துநரை நுகர்வோர் என உருவாக்கப்படுத்தப்பட்டுள்ளது துகர் வோரிடமிருந்து பெறும் பணத்திற்கேற்ப சரக்கு மற்றும் சேவைகளை தரமான வகையில் அளிக்க வேண்டியது வழங்குதர் மற்றும் வனிகர்களின் கடமையாகும். இதனை பெறும் உரிமை ஒவ்வொரு நுகர்வோருக்கும் உள்ளது. வனிகர்கள் அல்லது விற்பனை கெப்போர் நுகர்வோரை பலவிதங்களில் இன்னல்படுத்துகின்றனர். இதனை போக்க சில பொதுச் சேவை அனல்புகள் பல போராட்டங்களை தொடங்கி நடத்தினர். நுகர் வோர் பாதுகாப்புக்கான போராட்டங்கள் முதலில் அமெரிக்காவின் ஐக்கிய சபைகளில் தொடங்கியது இந்தியாவில் திட்டஆணையம் இத்தியாவின் நுகர்வோர் அமைப்பை நிறுவ 1956ல் ஒப்புதல் அளித்தது பல காரணங்களினால் இது பயனளிக்கவில்லை. முதன்முதலில் இந்தியாவில் 1965ல் மும்பை மாநகரை சேர்ந்த பெண்மணிகள் ''அவேர்'' (AWARE) (The Association of Women Against Rising Expenses) என்ற அமைப்பை உருவாக்கினர் இந்த இயக்கம் நாட்டின் பல பகுதிகளில் தேசிய அளவில் சேவை அமைப்புகள் தொடங்க காரணமாக அமைந்தது இவற்றில் முக்கியமானதாக உள்ளவை ''தேசிய நுகர்வோர் அமைப்பு'' மற்றும் ''தேசிய நுகர்வோர் பாதுகாப்புச் சபை ஆகியனவாகும்.''

### நுகர்வோர் சுரண்டலுக்கு உள்ளாகும் காரணங்கள்

தயாரிப்பாளர்கள் சரக்குகளை நேரிடையாக நுகர்வோருக்கு வழங்குகிறார்கள் உ.ம்., பால், பழங்கள் காய்கறிகள் போன்றவற்றை இடைத்தரகர்களின் தலையீடு / இடையூறுகளின்றி வழங்கி வந்திருக்கின்றனர் வேளாண்மைத் தொழில் முன் னேறிய பின் சந்தைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. தயாரிப்பாளர் மற்றும் நுகர் வோருக்கான பண்டபரிமாற்றங்கள் தடைப்பட்டு பரஸ்பரம் தொடர்புகள் விலகி சென்றுவிட்டன தயாரித்த பொருட்களின் அல்லது சரக்குகளின் மீதான விலை நிர்ணயிக்கும் உரிமை தயாரிப்பாளர் மற்றும் நுகர்வோரிடமிருந்து இடைத்தரகர்களின்

©KTBS Not to be republished

கைக்கு சென்றுவிட்டன. இதன் காரணமாக நுகர்வோரின் இன்னல்கள் தயாரிப்பாளர்களால் புரிந்து கொள்ள இயலாமல் போய்விட்டது.

தகவல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் காரணமாக நகர்வோர்கள் சரக்குகளை தனது இல்லத்திலிருந்தே தொலைத்தொடர்பு மூலம் வாங்கிப்பெறுவது இயல்பாகவிட்டது.

***டெலிஷாப்பிங் என்றால் என்ன?***

*நுகர்வோர்கள் தங்களின் தேவைக்கேற்ப தொலைதூர விற்பனையகத் திலிருந்து பொருட்களை இணையம் மூலம் தெரிவு செய்து அவற்றினூடே பணம் செலுத்தி பொருட்களை வாங்குவதேயாகும். மேலும் தொலைக்காட்சிகளின் மூலம் விளம்பரங்கள் வெளிவரும்போது கைப்பேசி, வீட்டுத் தொலைப்பேசிகள் மற்றும் இணையம் மூலம் குறுஞ்செய்திகள் அனுப்பியும் அல்லது தொடர்புகொண்டும் பொருட்களை தெரிவுசெய்து பெறுவதே டெலிஷாப்பிங் ஆகும்.*

## நுகர்வோர்

நுகர்வோர் எனும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட கருதிய விலைக்கோ அல்லது ஊதியமாகவோ சரக்குகளை வாங்குவது (அ) சேவைகளை அனுபவத்தில் கொள்வது (அ) பயன்படுத்திகொள்வதே ஆகும். அவ்வாறு பணம் செலுத்தி வாங்கப்பட்ட பொருள் நுகர்வோரின் சொந்த பயன்பாட்டிற்கோ அல்லது மறுவிற்பனைக்கோ அல்லது வேறு வணிகக்குறிக்கோள் (எந்தவித சந்தை நடவடிக்கை அல்லது பரிமாற்றம் இலாபநோக் கோடு இருந்தால் அது வணிகக் குறிக்கோள் ஆகும்) களுக்காக இருக்கலாம் ஒவ்வொரு நுகர்வோருக்கும் குறிப்பிட்ட விருப்பங்கள் இருக்கும் தங்களுடைய விருப்பங்களை பொருட்களை வாங்குவதன் மூலம் திருப்தியடைகிறார்கள். நுகர்வோர்களின் தேவை களை பூர்த்தி செய்வதே ஒவ்வொரு தயாரிப்பாளரின் கடமையாகும். நமது சுதந்திரமான பொருளாதார நிறுவன நடைமுறையாதலால் நுகர்வோர் என்பவர் அரசனைப் போன்றும் மற்றும் மிக உன்னத இடத்தையும் பெறுகிறார் ஆனால் துரதிர்ஷ்டவசமாக நுகர் வோர்கள் தவிர்க்கப்பட்டும், சுரண்டலுக்குட்ப பட்டும் மற்றும் ஏமாற்றப்பட்டு பெரும் நட்டமடைகிறார்கள் பின் இன்னலுக்குள்ளாகின்றனர்.

***நுகர்வோர் பாதுகாப்பு :*** தயாரிப்பாளர்களாலும் மற்றும் வணிகர்களாலும் சுரண்டலுக்குள்ளாகும் நுகர்வோரை பாதுகாப்பதே அவசியம் சுரண்டலுக் கெதிரான இந்நடவடிக்கை தற்போது இன்றியமையாதது நுகர்வோரின் உரிமைகளையும் விருப்பங்களையும் ஆதரித்து அரணாக நின்று அவற்றை காப்பது முதன்மையானதாக உள்ளது.

***நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் :*** முறையற்ற வணிகர்களினால் பாதிக்கப்பட்ட, தொடர்ந்து சுரண்டலினால் அவதியுற்ற சிலரால் தொடங்கப்பட்டது. நுகர்வோர் இயக்கம். இதுபோன்ற இயக்கங்கள் அரசிற்கு அழுத்தம் கொடுத்து தகுந்த பாராளுமன்ற சட்டங்கள் மூலம் நுகர்வோர் விருப்பங்களும் உரிமைகளும் பாதுகாகப்பட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தின. கடந்த ஐம்பது ஆண்டுகளில் 30க்கும் மேற்பட்ட சட்டங்கள் நுகர்வோர் நலன் கருதி இயற்றப்பட்டன. அவற்றில் இன்றியமையா பொருட்கள் சட்டம் (Essential Commodities Act) எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் (Weights and Measures Act) உணவும் பொருட்களில் கலப்படங்களுக்கு எதிரான சட்டம் (Act Agan-

©KTBS Not to be republished

ist Adulteration of Food Articles) etc உதாரணங்களாகும். இதில் பின்வந்த இந்திய அரசாங்கச்சட்டம் 1986 தனித்தன்மை வாய்ந்த படிக்கல் ஆகும்.

## உலக நுகர்வோர்கள் தினம்

உலக நுகர்வோர்களுடைய இயக்கத்தின் வரலாற்றில் மார்ச் 15, 1962. ஒரு முக்கியமான நாள் ஆகும். ஐக்கிய அமெரிக்கா நாட்டின் ஜனாதிபதி ஜான் எஃப் கென்னடியினால் நுகர்வோர் நலனுக்கான நான்கு பெரும் உரிமையின் பிரிவுகளில் சட்டமியற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவை குடிமகனின் பாதுகாப்பு, தகவல், முறையீடு மற்றும் பரிகாரம் இதை அடிப்படையாக கொண்டே ஒவ்வொரு வருடமும் மார்ச் 15ஆம் நாள் உலக நுகர்வோர்களுடைய தினம் என கொண்டாடப்படுகின்றது.

## சட்டத்தின் முக்கிய நோக்கங்கள் :

- பாதுகாப்பிற்கும் மற்றும் தரத்திற்குமான முக்கியத்துவத்தை வழங்குகிறது.
- ஆபத்தான சரக்குகளை தயாரிப்பது மற்றும் விற்பனையை தவிர்ப்பது.
- சந்தையில் வணிக மோசடிகளை தடுப்பது.
- தரம், எடை, அளவை மற்றும் எடையை மேற்பார்வை இடுவது.
- வணிகத்தினால் ஏற்பட்ட பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு நட்டஈடு செய்வது.
- நுகர்வோர் கல்வி முறை மூலம் நுகர்வோருக்கான விழிப்புணர்வு ஏற்படுத்துவது.

ஆக இச்சட்டத்தின் மிகப்பெரும் நோக்கம் என்பது தரமான பொருட்கள் மற்றும் சேவைகள், நியாமான விலை போன்றவற்றை ஆரோக்கியமான போட்டி மூலம் செயல்படுத்துவது.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கங்கள் :

இந்தியாவிலும் அனைத்து பகுதிகளிலும் விரிவாக்கப்பட்டுள்ளது (ஜம்மு காஷ்மீர் நீங்கலாக) அனைத்து சரக்குகள் மற்றும் சேவைகளுக்கும் இது பொருந்துவதாகும் இச்சட்டம் பின்வருமாறு சேவை புரிகின்றது.

- உயிர்களுக்கும் மற்றும் உடைமைகளுக்கும் ஆபத்தை விளைவிக்கும் சரக்குகளை சந்தைபடுத்துவதற்கு எதிரான பாதுகாப்பு உரிமை.
- தகவல் உரிமை : தரம், அளவு, தூய்மை, மேம்பட்ட, தயாரிப்பு முறை : அறியும் உரிமை முறையற்ற வணிக நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு.
- தேர்ந்தெடுக்கும் உரிமை : தங்களுக்கு தேவையானவற்றை பலதரப்பட்ட சரக்குகளை ஒப்பீடு செய்து நியாயமான போட்டி விலையில் பெறுவது.
- கவனம் ஈர்ப்பதன் உரிமை : நுகர்வோர்கள் தங்களுக்கான விருப்பங்களையும், பிரச்சனைகளையும் கூற விழைவதை கவனித்து செவிமடுப்பது கட்டாயமாகும்.
- குறைதீர்க்க கோரும் உரிமை : நியாமற்ற வணிக நடைமுறைகள் (அ)

©KTBS Not to be republished

மோசமான சுரண்டல்களுக்கு எதிரானதாகும்.

- நுகர்வோர் கல்வி உரிமை : நுகர்வோருக்கான உரிமைகள் பற்றி தெரிவித்தல்.
- சுரண்டலுக்கு விரைந்து தடைக்கோரும் உரிமை.
- சுகாதாரமான சுற்றுசூழலுக்கான உரிமை : ஆரோக்கியமான சுற்று சூழல் தரமான வாழ்க்கைத்தரத்தை உருவாக்கும் அதனை பெறும் உரிமை.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க சட்ட அமைப்புகளை உருவாக்கி தந்துள்ளன அதில் மத்திய பாதுகாப்புச்சபை தேசிய அளவிலும் மாநில நுகர்வோர் பாதுகாப்பு மாநில அளவிலும், மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புசபை மாவட்ட அளவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இச்சபைகள் அந்தந்த அமைச்சக அதிகார எல்லக்குட்பட்டது. அதாவது தேசிய நுகர்வோர்சபை மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்களை கவனிக்கும் அமைச்சரை தலைவராக கொண்டுள்ளது. மாநில அளவில் மாநில நுகர்வோர் விவகார அமைச்சரும் மாவட்ட அளவில் மாவட்ட வருவாய் ஆணையர் / அதிகாரி தலைவராக இருப்பார்.

### நுகர்வோர் பிரச்சனைகளுக்கான குறைதீர்க்கும் முகமைகள் :

நுகர்வோரின் பிரச்சனைகளை தீர்த்து வைக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குறைதீர் முகமைகளை அமைத்துள்ளது.

i) ***மாவட்ட அமைப்பு :*** (District Forum)

ii) ***மாநில ஆணையம் :*** (State Commission)

iii) ***தேசிய ஆணையம் :*** (National Commission)

இந்த அமைப்பு அல்லது ஆணையங்களின் செயல்பாடுகள்:

**i) *மாவட்ட அமைப்பு :* (District Forum)** ஒவ்வொரு மாவட்ட அளவிலும் உருவாக்கப் பட்டுள்ளது. தகுதியுள்ள மாவட்ட நீதிபதி இவ்வமைப்பின் தலைவராக மாநில அரசால் நியமிக்கப்படுவார். இருபது லட்சம் ரூபாய் மதிப்புக்கும் குறைவான சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான புகார்களை இந்த அமைப்பு விசாரிக்கும் இந்த அமைப்பில் இரண்டு உறுப்பினர்கள் இருப்பர் அவற்றில் ஒருவர் பெண் ஆவார்.

**ii) *மாநில ஆணையம் :* (State commission) :** உயர்நீதி மன்ற நீதிபதியாக பணியாற்றியவர் இதன் தலைவராக இருப்பார். நுகர்வோர் விவகாரங்களை நன்கு அறிந்த இருவர் உறுப்பினராக இருப்பர் 20 லட்சத்திற்கும் மேலான 1 கோடி ரூபாய் மதிப்புக்கும் குறைவான புகார்களை இது விசாரிக்கும் இரு உறுப்பினர்களில் ஒருவர் பெண்மணி ஆவரா்.

**iii) *தேசிய ஆணையம் :* (National Commission)** உச்சநீதிமன்ற நீதிபதியாக ஒருவர் மத்திய அரசால் நியமிக்கப்படுவார் இதில் 24 உறுப்பினர்கள் இருப்பர் அதில் ஒருவர் பெண்மணி ஆவார். இந்த உறுப்பினர்கள். மிகச்சிறந்த உன்னத இடத்தை பெற்றவர்களாக இருப்பர் ஒரு கோடிக்கும் அதிக மதிப்புள்ள புகார்களை இது விசாரிக்கும்.

©KTBS Not to be republished

நுகர்வோர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் புகார் மனுவில் நிரப்ப வேண்டிய தகவல்கள்.

- புகார் மனு கைப்பட எழுதியோ (அ) தட்டச்சு வடிவிலோ இருத்தல் வேண்டும்.
- புகார் அளிப்பவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் தெளிவாக குறிப்பிடப்படவேண்டும்.
- வணிகர் அல்லது விற்பனையாளர் / வழங்குநர் மீதான புகாரை முழுமையாக தெரிவிக்க வேண்டும்.
- எவ்வகை சரக்கு நட்டம் ஏற்படுத்தியது (அ) மோசடியானது மற்றும் நட்டமடைந்துள்ள தொகை சரியாக குறிப்பிடவேண்டும்.
- நட்டத்திற்கான சரியான பரிகாரத் தொகை அதற்கு சம்பந்தப்பட்ட ரசீது அல்லது பில் இணைக்கப்படவேண்டும்.
- புகாருக்கு எவ்வகை கட்டணமும் அல்லது பதிவு கட்டணமும் இல்லை
- நுகர்வோர் நேரிடையாக தனது புகாரை தலைவர் முன்பு வாதாடலாம், வழக்கறிஞர் தேவை இல்லை.

## பயிற்சிகள்

### I. ஒரு சொல் விடையளி :

1. நுகர்வோர் என அழைக்கப்படுவர் யார்?
2. நுகர்வோர் இயக்கத்தின் முதன்மையான குறிக்கோள் என்ன?
3. ஒவ்வொரு நுகர்வோரின் உரிமை என்பது என்ன?
4. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் இந்தியாவில் எப்போது நடைமுறைக்கு வந்தது?
5. மாவட்ட நுகர்வோர் அமைப்பின் தலைவரை யார் நியமிப்பார்.

### II. பின்வருவனவற்றை இரண்டு, மூன்று வரிகளில் விடையளி.

1. நுகர்வோர் சந்திக்கும் பிரச்சனைகளை கூறுக.
2. நுகர்வோர் மீதான சுரண்டலுக்கான காரணங்களை கூறுக.
3. நுகர்வோர் பாதுகாப்புச்சபையின் நான்கு முக்கிய குறிக்கோள்களை எழுதுக.
4. நுகர்வோர் பாதுகாப்புச்சபையின் நடவடிக்கைகளை விவரி.
5. நுகர்வோர் நீதிமன்றங்களின் அடுக்குமுறையை எழுதுக.


### III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நுகர்வோரின் வேறொரு பெயர் __________
2. சரக்குகள் மற்றும் சேவைகளை பணத்துக்காக விநியோகிப்பவர் அவர் __________ என அழைக்கப்படுவார்.

©KTBS Not to be republished

3. ஒவ்வொரு ஆண்டும் நுகர்வோர் தினம் கடைபிடிக்கப்படும் நாள் __________ ஆகும்.
4. ரூ. 20,00,00 இலட்சத்திற்கும் அதிக மதிப்புள்ள நட்ட ஈடு கோரும் புகார்களை பதிய செய்ய வேண்டிய நுகர்வோர் நீதிமன்ற அமைப்பு __________

## IV. பின்வரும் படத்தை உற்றுநோக்கி தேவையான விடைகளை எழுதுக.




1. மேலே உள்ள பொருளின் கவர் (உறை) மீதான நிறுவனத்தின் பெயர்?
2. அதிகபட்ச விலை அச்சடிக்கப்பட்டுள்ளது அது எவ்வளவு?
3. பொருள் தயாரித்த தினம் என்ன?
4. எந்த தினத்துக்குள் இதனை பயன்படுத்தவேண்டும்?

## V. திட்டவேலை :

நீங்கள் வணிகரால் ஏமாற்றபட்டதாக கற்பனை செய்து புகார் மனுவினை தயாரித்து அதற்கு தேவைப்பட்ட ஆவணங்களை இணைக்கவும்.

## VI. நடவடிக்கைகள் :

1. உங்கள் ஆசிரியருடன் நுகர்வோர் நீதிமன்றம் சென்று விவரங்கள் சேகரி.
2. நுகர்வோர் விழிப்புணர்வுக்கான நான்கு கோட்பாடுகள் தயாரிக்க.
3. உலக நுகர்வோர் தின விழிப்புணர்வு அணி அமைக்க
4. விழிப்புணர்வுக்காக ஆவணங்களை சேகரி.

* * * *

©KTBS Not to be republished